Q6:417
N24
120868

Q6:417
N24

Nihil obstat: A. DANIEL, S.J., cens. dep.




Imprimatur:

✠ AUGUSTINUS, S.J.,
*Ep. Trichinopolit.*

120868



சேசு மரி சூசை.

(7-வருஷம் 7 மண்டலப் பலன். தினந்தோறும் சொல்லி வந்தால் மாதத்துக்கு ஒருதடவை பரிபூரண பலன்.)

✠

சேசு மரி சூசை.

# திருக்குடும்பப் பக்திமாலை.

## அர்ச். சிலுவை மந்திரம்.

அர்ச்சியசிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடத்திலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். எங்கள் சர்வேசுரா, பிதாவுடையவுஞ் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே ஆமென் சேசு.

---

## ஆறு இலக்ஷண மந்திரம்.

1-வது. சர்வேசுரன் தாமாயிருக்கிறார். 2-வது. அநாதியாய் இருக்கிறார். 3-வது. சரீரம் இல்லாமல் இருக்கிறார். 4-வது. அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிறார். 5-வது. எங்கும் வியாபித்திருக்கிறார். 6-வது. எல்லாத்துக்கும் ஆதிகாரணமாயிருக்கிறார். —ஆமென் சேசு.

## பரமண்டல மந்திரம்.

பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலே பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக, அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும். எங்கள் * கடனாளருக்கு நாங்கள் பொறுக்குமாப்போலே எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும், எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும், தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.—ஆமென் சேசு.

---

## பிரியதத்த மந்திரம்.

† பிரியதத்தத்தினாலே பூரணை மரியாயே வாழ்க, கர்த்தர் உம்முடனே, பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப் பட்டவருமாமே, அர்ச்சிய

---

* இதிலே கடன் என்கிறது குற்றமென்று அர்த்தமாகும்.

† பிரியதத்தம் = சர்வேசுரன் தம் பிரியப்படி கொடுத்த இஷ்டப்பிரசாதம்.



சிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்.—ஆமென் சேசு.

---

## விசுவாச மந்திரம்.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் சேசுக்கிறீஸ்துவையும் அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன். இவர் இஸ்பிரீத்து சாந்துவினாலே கர்ப்பமாய் உற்பவித்து அர்ச்சியசிஷ்ட கன்னி மரியாயிடத்திலே நின்று பிறந்து, போஞ்சுபிலாத்தின் கீழே பாடுபட்டுச், சிலுவையிலே அறையுண்டு, மரித்தடக்கப்பட்டார். பாதாளங்களிலே இறங்கி மூன்றாநாள் மரித்தவர்கள் இடத்திலே நின்று உயிர்த்தெழுந்தருளினார், பரமண்டலங்களிலே ஏறிச் சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார். அவ்விடத்திலே நின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவார், இஸ்பிரீத்து

சாந்துவை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன். பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய * சமுதீதப் பிரயோசனத்தையும் விசுவசிக்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன், மாம்ஸ உத்தானத்தை விசுவசிக்கிறேன், † சுதத்மான சீவியத்தை விசுவசிக்கிறேன்.—ஆமென்சேசு.

---

## பத்துக் கற்பனை.

சர்வேசுரன் நமக்கு அருளிச் செய்த வேத கற்பனை பத்து.

1-வது. உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே, நமக்கு முன்பாக வேறே சர்வேசுரன் உனக்கில்லாதே போவதாக.

2-வது. சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாகச் சுவீகரியாதிருப்பாயாக.

3-வது. சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத்தக்கதாக நினைப்பாயாக.

4-வது. பிதாவையும் மாதாவையுஞ் சங்கித்திருப்பாயாக.

* சமுதீதப் பிரயோசனம் = பொதுவான நன்மை = ஞான நன்மைகளில் உடன்பங்கு.

† சுதத்மான சீவியம் = நித்திய சீவியம்.



5-வது. கொலை செய்யாதிருப்பாயாக.

6-வது. மோகம் அசுசியாகமனம் பண்ணாதிருப்பாயாக.

7-வது. களவாணாதிருப்பாயாக.

8-வது. பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

9-வது. பரதாரத்தை அபேட்சியாதிருப்பாயாக.

10-வது. பிறருடைமையை அபேட்சியாதிருப்பாயாக.

இந்தப் பத்துக் கற்பனைகளும் இரண்டு கற்பனையில் அடங்கும். அதின் முதலாவது எல்லாத்தையும் பார்க்கச் சர்வேசுரனைச் சிநேகிக்கிறது.

இரண்டாவது. தன்னைத்தான் சிநேகிக்குமாப்போலே மற்றவர்களையுஞ் சிநேகிக்கிறது.—ஆமென்சேசு.

---

## திருச்சபைக் கற்பனைகள்.

திருச்சபைக் கற்பனைகள் ஆறு.

1-வது. ஞாயிற்றுக்கிழமையிலேயுங், கடன் திருநாட்களிலேயும், முழுப் பூசை காண்கிறது.

2-வது. வருஷத்துக்கு ஒரு விசையாகிலும், நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது.

3-வது. பாஸ்குத் திருநாட்களிலே பாவசங்கீர்த்தனம்பண்ணி, தேவநற்கருணை உட்கொள்ளுகிறது.

4-வது. வெள்ளிக்கிழமைகள், இன்னும் மற்றுமுள்ள சுத்தபோசன நாட்களில், சுத்தபோசனமும், ஒருசந்தி நாட்களில் ஒருசந்தியும் அனுசரிக்கிறது.

5-வது. விலக்கப்பட்ட காலத்திலுங் குறையான பிராயத்திலும், விக்கினமுள்ள உறவின் முறைமையோடுங் கலியாணஞ் செய்யாதிருக்கிறது.

6-வது. நமது ஞான மேய்ப்பர்களுக்கு, நம்மாலான உதவியைச் செய்கிறது.—ஆமென் சேசு.

---

## உத்தம மனஸ்தாப மந்திரம்.

அநந்ததயை சுரூபியாயிருக்கிற என் சர்வேசுரா சுவாமி! தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் நிறைந்தவராயிருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழு மனதோடே சிநேகிக்கிறேன்,



இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேன் என்கிறதினாலே, மிகவு மனநொந்து மெத்தமனஸ்தாபமாயிருக்கிறேன். எனக்கிதுவே மனஸ்தாபமல்லாமல் வேறே மனஸ்தாபமில்லை. எனக்கிதுவே துக்கமல்லாமல் வேறே துக்கமில்லை. இனிமேல் ஒருக்காலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று கெட்டியான மனதுடனே பிரதிக்கினை பண்ணுகிறேன்.

பின்னையும் என் பலம் போதாதென்கிறதினாலே, சேசுநாதசுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து, என் பாவங்களை எல்லாம் பொறுத்து, எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையுந் தந்தருள்வீர் என்று முழு மனதோடு நம்பியிருக்கிறேன்.

திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களையெல்லாந் தேவரீர்தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.—ஆமென்சேசு.

---

## பாவசங்கீர்த்தன மந்திரம்.

சர்வத்துக்கும்வல்ல சர்வேசுரனுடனேயும், எப்பொழுதுங் கன்னியாயிருக்கிற முத்திப்

பேறுபெற்ற மரியாயுடனேயும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலுடனேயும், ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பருடனேயும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச்சியசிஷ்ட இராயப்பருடனேயும், சின்னப்பருடனேயும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனேயும், எனக்குக் குருவாயிருக்கிற உம்முடனேயும் பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொள்ளுகிறேன். அதேதென்றால், என் சிந்தனையினாலேயும், வாக்கினாலேயும், கிரியையினாலேயும் மகா பாவங்களைச் செய்தேனே, என் பாவமே! என் பாவமே! என் பெரும் பாவமே! ஆகையால் எப்பொழுதுங் கன்னியாயிருக்கிற முத்திப்பேறுபெற்ற மரியாயையும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலையும், ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பனையும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச்சியசிஷ்ட இராயப்பனையும், சின்னப்பனையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களையும், எனக்குக் குருவாயிருக்கிற உம்மையும், நம்முடைய கர்த்தராகிய சர்வேசுரனிடத்திலே எனக்காக வேண்டிக்கொள்ளவேணுமென்று மன்றாடுகிறேன்.—ஆமென் சேசு.

# சின்ன குறிப்பிடம்.

## முதல் பிரிவு.

### ஏக திரித்துவ சர்வேசுரன்பேரில்.

குரு. சர்வத்திற்கும் கர்த்தாவாயிருக்கிறவர் யார்?

சீஷன். சர்வேசுரன்.*

கு. எத்தனை சர்வேசுரன்?

சீ. ஒரே சர்வேசுரன்.

கு. அவர் தேவ சுபாவத்திலே ஒருவராயிருந்தாலும், ஆள்வகையிலே எப்படியிருக்கிறார்?

சீ. திரித்துவமாயிருக்கிறார்.

கு. திரித்துவமாயிருக்கிறார் என்பதற்கு அர்த்தமென்ன?

சீ. ஆள்வகையிலே மூவராயிருக்கிறாரென்று அர்த்தமாகும்.

கு. இந்த மூன்றாட்களுக்கும் பெயரென்ன?

சீ. பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து.

* சர்வேசுரன் என்பவர் யார்? —[illegible] சர்வேசுரனும்.

கு. பிதா சர்வேசுரனோ?
சீ. சர்வேசுரன்.

கு. சுதன் சர்வேசுரனோ?
சீ. சர்வேசுரன்.

கு. இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனோ?
சீ. சர்வேசுரன்.

கு. மூவரும் மூன்று சர்வேசுரனோ, ஒரே சர்வேசுரனோ?

சீ. ஒரே சர்வேசுரன்.

கு. எப்படி ஒரே சர்வேசுரன்?

சீ. இந்த மூன்றாட்களுக்கும் ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே தேவசுபாவம் இருக்கிறபடியினாலே மூவரும் ஒரே சர்வேசுரன்தான்.

கு. இவர்களுக்குள்ளே வல்லபம் மகிமை முதலான இலக்ஷணங்களில் வித்தியாசமுண்டோ?

சீ. இல்லை, மூவரும் எல்லாத்திலுஞ் சரிசமானமாயிருக்கிறார்கள்.

கு. இப்படி ஏகமுந் திரித்துவமுமாகிய சர்வேசுரனுக்குப் பிரதான இலக்ஷணங்கள் எத்தனை?

சீ. ஆறு.



கு. ஆறுஞ் சொல்லு?
சீ. 5-ம் பக்கம் காண்க.

## 2-ம் பிரிவு.

### உலக சிருஷ்டிப்பின்பேரிலும், மனுஷனுடைய கேட்டின்பேரிலும்.

கு. சர்வேசுரன் எல்லாத்திற்கும் ஆதி காரணமாயிருக்கிறதெப்படி?

சீ. பரலோகத்தையும் பூலோகத்தையும் அதுகளிலடங்கிய சகலத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றுகிறதினாலே எல்லாத்திற்கும் ஆதிகாரணமாயிருக்கிறார்.

கு. சர்வேசுரன் உண்டாக்கினதுகளில் பிரதான வஸ்துகள் என்ன?

சீ. சரீரமில்லாத சம்மனசுகளும், ஆத்துமமுஞ் சரீரமும் உள்ள மனுஷர்களுந்தான்.

கு. சம்மனசுகள் எல்லாருந் தங்கள் மேன்மையான அந்தஸ்திலே நிலைக்கொண்டார்களோ?

சீ. இல்லை, சிலர் ஆங்காரத்தினாலே மோட்சத்தை இழந்து நரக ஆக்கினைக்கு உள்ளானார்கள்.

கு. இப்படிக் கெட்டுப்போன சம்மனசுகள் பெயரென்ன?

சீ. பசாசுகள்.

கு. சர்வேசுரன் மனுஷர்களை எதுக்காக உண்டாக்கினார்?

சீ. தம்மை அறிந்து சிநேகித்துச் சேவிக்கவும், அதினால் மோட்சத்தை அடையவும் உண்டாக்கினார்.

கு. அவர் எந்த அந்தஸ்திலே ஆதித்தாய் ஆதித்தகப்பனை உண்டாக்கினார்?

சீ. பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்திலே அவர்களை உண்டாக்கினார்.

கு. அவர்கள் அதைப் போக்கடித்ததெப்படி?

சீ. பசாசை நம்பி சர்வேசுரனால் விலக்கப்பட்ட கனியைத் தின்றதினாலே போக்கடித்தார்கள்.

கு. அதினால் அவர்களுக்கும் அவர்கள் சந்ததியாருக்கும் வந்த கேடென்ன?

சீ. பசாசுக்கு அடிமையாகிச் சாவு நரக முதலிய ஆக்கினைகளுக்குப் பாத்திரவான்கள் ஆனார்கள்.

---



## 3-ம் பிரிவு.

### மனுஷனுடைய இரட்சிப்பு.

கு. நம்மை இரட்சிக்கிறதற்காக மனுஷனாய்ப் பிறந்தவர் யார்?

சீ. அர்ச். திரித்துவத்தின் இரண்டாமாளாயிருக்கிற சுதனாகிய சர்வேசுரன்தான்.

கு. அவர் எப்படி உற்பவித்துப்பிறந்தார்?

சீ. இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனாலே கர்ப்பமாய் உற்பவித்து அற்புதமாகப் பிறந்தார்.

கு. யாரிடத்திலே நின்று பிறந்தார்?

சீ. ஒருக்காலும் கன்னிமகிமை கெடாத அர்ச். கன்னிமரியம்மாளிடத்திலே நின்று பிறந்தார்.

கு. சுவாமி பிறந்த எட்டாம் நாள் அவருக்கு என்ன பெயரிட்டார்கள்?

சீ. சேசு என்கிற பெயரிட்டார்கள்.

கு. சேசு என்கிற பெயருக்கு அர்த்தமென்ன?

சீ. நம்மை இரட்சிக்கிறவர்.

கு. ஆகையால் சேசுக்கிறீஸ்துநாதர் யார்?

சீ. நம்மை இரட்சிப்பதற்காக மனுஷனாய்ப் பிறந்த சுதனாகிய சர்வேசுரனேயாம்.

கு. சேசுநாதசுவாமி இவ்வுலகத்திலே எத்தனை வருஷகாலம் இருந்தார்?

சீ. முப்பத்துமூன்று வருஷகாலம் இருந்தார்.

கு. இவ்வுலகத்தில் என்ன செய்துகொண்டு வந்தார்?

சீ. சகல புண்ணியங்களையும் அற்புதங்களையுஞ் செய்து, தம்முடைய திவ்விய வேதத்தைப் போதித்து, அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார்.

கு. சேசுநாத சுவாமிக்கு எத்தனை சுபாவம் உண்டு?

சீ. தேவ சுபாவம் மனுஷ சுபாவம் ஆகிய இரண்டு சுபாவங்கள் உண்டு.

கு. எந்தச் சுபாவத்திலே பாடுபட்டார்?

சீ. மனுஷ சுபாவத்திலே பாடுபட்டார்.

கு. யாருக்காகப் பாடுபட்டார்?

சீ. நமக்காகப் பாடுபட்டார்.

கு. என்ன பாடுபட்டார்?

சீ. போஞ்சுபிலாத்தின் அதிகாரத்திலிருந்த பாடுபட்டுச் சிலுவையிலே அறை



யுண்டு கடினமான மரணத்தை யடைந்து கல்லறையில் அடக்கப்பட்டார்.

கு. அப்போது சுவாமியுடைய திரு ஆத்துமம் எங்கே போச்சுது?

சீ. பாதாளங்களிலே இறங்கி, அங்கே யிருந்த புண்ணிய ஆத்துமாக்களுக்கு மோட்ச பாக்கியங் கொடுக்கப்போச்சுது.

கு. சேசுநாத சுவாமி கல்லறையை விட்டு உயிர்த்து எழுந்தருளினாரோ?

சீ. மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தருளினார்.

கு. உயிர்த்த பிற்பாடு பூலோகத்திலே எத்தனை நாள் தங்கியிருந்தார்?

சீ. நாற்பது நாள் தங்கியிருந்தார்.

கு. அந்த நாற்பது நாளும் என்ன செய்துகொண்டு வந்தார்?

சீ. அநேகம் விசை தம்முடைய சீஷர்களுக்குத் தரிசனையாகத் தம்மைக் காண்பித்து, அவர்களை வேத சத்தியங்களில் ஸ்திரப்படுத்திக்கொண்டு வந்தார்.

கு. நாற்பதாம்நாள் எங்கே எழுந்தருளிப் போனார்?

சீ. பரமண்டலங்களிலே எழுந்தருளிச் சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுர,

னுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.

கு. இப்போது சேசுநாதசுவாமி எங்கே இருக்கிறார்.

சீ. சர்வேசுரனாகியமட்டும் எங்கும் இருக்கிறார், சர்வேசுரனும் மனுஷனுமாகிய மட்டும் பரலோகத்திலுந் திவ்வியநற்கருணையிலும் இருக்கிறார்.

---

## 4-ம் பிரிவு.

### இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனமுந் திருச்சபையும்.

கு. சேசுநாத சுவாமி பரலோகத்திற்கு எழுந்தருளின பத்தாம் நாள் என்னசெய்தார்?

சீ. தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் திடனாக இஸ்பிரீத்துசாந்துவை அனுப்பினார்.

கு. இஸ்பிரீத்துசாந்துவை அடைந்தபின் அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்?

சீ. உலகத்தின் எத்திசையிலும் பிரசங்கித்துத் திருச்சபையை ஸ்தாபித்தார்கள்.

கு. திருச்சபைக்குத் தலைவராயிருக்கிறவர் யார்?



சீ. சேசுநாத சுவாமிதான்.

கு. அவர் தமக்குப் பதிலாகப் பிரத்தியக்ஷ தலைவராக யாரை ஸ்தாபித்தார்.

சீ. அர்ச். இராயப்பரை ஸ்தாபித்தார்.

கு. அர்ச். இராயப்பருக்குப் பதிலாகத் திருச்சபைக்குத் தலைவரா யிருக்கிறவர் யார்?

சீ. பாப்பானவர்.

கு. மற்ற அப்போஸ்தலர்களுக்குப் பதிலாயிருக்கிறவர்கள் யார்?

சீ. மேற்றிராணிமார்கள்.

கு. சேசுநாதரும் அப்போஸ்தலர்களும் எத்தனை திருச்சபையை ஸ்தாபித்தார்கள்?

சீ. கத்தோலிக்கென்கிற ஒரே திருச்சபையை ஸ்தாபித்தார்கள்.

கு. திருச்சபையின் சொற்படி கேளாதவர்களுக்கு மோட்சம் உண்டோ?

சீ. இல்லை.

கு. இல்லையென்கிறதற்குத் திருஷ்டாந்தம் என்ன?

சீ. திருச்சபையின் சொற்படி கேளாதவன் அஞ்ஞானியைப்போலே உனக்கு ஆகக்கடவான் என்று கர்த்தர் திருவுளம்பற்றினார்.

---

## 5-ம் பிரிவு.

### மனுஷனுடைய முடிவுகள்.

கு. பாவத்தின் நிமித்தஞ் சகல மனுஷர்களுக்கும் வருகிற ஆக்கினை என்ன?

சீ. சாவு.

கு. சாவுக்குப்பின் சம்பவிக்கிறதென்ன?

சீ. தனித்தீர்வை.

கு. தனித்தீர்வைக்குப் பிறகு சாவான பாவமுள்ள ஆத்துமாக்கள் எங்கே போகிறார்கள்?

சீ. நரகத்திற்குப் போகிறார்கள்.

கு. பரிசுத்த ஆத்துமாக்கள் எங்கே போகிறார்கள்?

சீ. மோட்சத்துக்குப் போகிறார்கள்.

கு. தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரியாத புண்ணிய ஆத்துமாக்கள் எங்கே போகிறார்கள்?

சீ. உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போகிறார்கள்.

கு. உத்தரிக்கிற ஸ்தலத்திலே என்னமாயிருக்கிறார்கள்?

சீ. தங்கள் பாவங்களுக்குத் தக்க வேதனைப்பட்டு உத்தரிக்கிறார்கள். முழுதும் உத்தரித்த பிறகு மோக்ஷத்தை அடைவார்கள்.



கு. தனித்தீர்வை அல்லாமல் வேறே தீர்வை உண்டோ?

சீ. பொதுத்தீர்வை உண்டு.

கு. பொதுத்தீர்வை எப்போது நடக்கும்?

சீ. உலகத்தின் முடிவிலே நடக்கும்.

கு. உலகம் எப்படி முடியும்?

சீ. உலகமெல்லாம் நெருப்பினாலே வேக மனுஷர் எல்லாருஞ் செத்துப் போவார்கள்.

கு. பின்னும் என்ன சம்பவிக்கும்?

சீ. சேசுநாதசுவாமி மனுஷர் எல்லாரையும் ஆத்தும சரீரத்தோடேகூட எழுப்பி மிகுந்த வல்லபத்தோடே நடுத்தீர்க்க வருவார்.

கு. எப்படி நடுத்தீர்ப்பார்?

சீ. அவனவன் செய்த பாவ புண்ணியங்களை எல்லாம் சகலருக்கு முன்பாக அறியப்பண்ணிப் பாவிகளைச் சபித்து நரகத்திலே தள்ளி நல்லவர்களை ஆசீர்வதித்து மோட்சத்திற்குக் கூட்டிக்கொண்டு போவார்.

கு. பாவிகள் நரகத்திலே படுகிற ஆக்கினை என்ன?

சீ. சர்வேசுரனை ஒருக்காலுங் காணாமல், ஊழியுள்ளகாலம் பசாசுகளோடே நெருப்.

பிலே வெந்து சகல ஆக்கினையும் அனுபவிக்கிறார்கள்.

கு. நல்லவர்கள் மோட்சத்தில் அனுபவிக்கிற பாக்கியம் என்ன?

சீ. சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசித்து எப்போதைக்குஞ் சகல பேரின்ப பாக்கியங்களையும் அனுபவிக்கிறார்கள்.

---

## 6-ம் பிரிவு.

**கற்பனைகளும், பாவமும், புண்ணியமும்.**

கு. மோட்சத்தை அடைகிறதற்கு வேத சத்தியங்களை விசுவசிக்கிறது மாத்திரம் போதுமோ?

சீ. போதாது; சர்வேசுரனுடைய கற்பனைகளையுந் திருச்சபையின் கட்டளைகளையும் அநுசரித்துப் பாவத்தைத் தள்ளிப் புண்ணியத்தைச் செய்யவேண்டியது.

கு. சர்வேசுரனுடைய கற்பனைகள் எத்தனை?

சீ. பத்து.

கு. பத்துஞ் சொல்லு?

சீ. சர்வேசுரன் நமக்கருளிச்செய்த வேத கற்பனை...மற்றதும் 8-ம் பக்கம் காண்க.



கு. திருச்சபையின் பிரதான கட்டளைகள் எத்தனை?

சீ. ஆறு.

கு. ஆறுஞ் சொல்லு.

சீ. 1-வது.—ஞாயிற்றுக்கிழமையிலேயுங் கடன் திருநாட்களிலேயும்...மற்றதும்
9-ம் பக்கம் காண்க.

கு. பாவம் ஆகிறதென்ன?

சீ. தேவகட்டளைகளை மீறுகிறதே பாவம்.

கு. எத்தனைவகைப் பாவம் உண்டு?

சீ. சென்மப் பாவம், கர்மப் பாவம் ஆகிய இரண்டு வகைப் பாவமுண்டு.

கு. சென்மப் பாவம் ஆவதென்ன?

சீ. ஆதித்தாய் ஆதித்தகப்பனாலே உண்டாகி நம்மோடேகூடப் பிறக்கிற பாவம்.

கு. கர்மப் பாவம் ஆவதென்ன?

சீ. அவரவர் புத்தி விபரம் அறிந்த பிற்பாடு மனது பொருந்திச் செய்கிற பாவம்.

கு. கர்மப் பாவம் எத்தனை வகையுண்டு?

சீ. சாவான பாவம் அற்பப் பாவம் ஆகிய இரண்டு வகையுண்டு.

கு. சாவான பாவம் ஆவதென்ன?

சீ. தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்து, நம்மை நரகத்துக்குப் பாத்திரவான்கள் ஆக்குகிற பாவம்.

கு. அற்பப் பாவம் ஆவதென்ன?

சீ. நம்மிடத்தில் தேவ சிநேகத்தைக் குறைத்து சாவான பாவத்துக்கு வழியுமாகி நம்மை உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் பாத்திரவான்களாக்குகிற பாவம்.

கு. தலையான பாவங்கள் எத்தனை?

சீ. ஏழு.

கு. ஏழுஞ் சொல்லு.

சீ. 1-வது.—ஆங்காரம்,
2-வது.—கோபம்,
3-வது.—மோகம்,
4-வது.—லோபித்தனம்,
5-வது.—போசனப்பிரியம்,
6-வது.—காய்மகாரம்,
7-வது.—சோம்பல்.

கு. மூன்று தேவசம்பந்தமான புண்ணியங்கள் எவை?

சீ. விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் ஆகிய இவைகளாம்.

கு. தலையான பாவங்களுக்கு விரோதமான புண்ணியங்கள் எத்தனை?



சீ. ஏழு.

கு. ஏழுஞ் சொல்லு.

சீ. 1-வது.—தாழ்ச்சி,
2-வது.—பொறுமை,
3-வது.—கற்பு,
4-வது.—உதாரம்,
5-வது.—மட்டசனம்,
6-வது.—பிறசிநேகம்,
7-வது.—சுறுசுறுப்பு.

---

## 7-ம் பிரிவு.

### தேவ வரப்பிரசாதமும் செபமும், தேவதிரவிய அநுமானங்களும்.

கு. பாவத்தை விலக்கி மோட்சத்தை அடைகிறதற்கு நம்முடைய சொந்தப் பலம் போதாதோ?

சீ. போதாது: நமக்கு தேவ வரப்பிரசாதத்தின் அநுக்கிரகம் வேண்டியது.

கு. தேவ வரப்பிரசாதம் எத்தனை வகையுண்டு?

சீ. தேவ இஷ்டப்பிரசாதம், உதவி வரப்பிரசாதம் ஆகிய இரண்டு வகையுண்டு.

கு. தேவ வரப்பிரசாதங்களை அடைவது எப்படி?

சி. செபத்தினாலுந் தேவதிரவிய அநுமானங்களாலும் அடையலாம்.

கு. அடிக்கடி செபஞ் செய்ய வேண்டுமோ?

சி. வேண்டுமென்று கர்த்தர் கற்பித்தார்.

கு. தேவதிரவிய அநுமானங்கள் எத்தனை?

சி. ஏழு.

கு. ஏழுஞ் சொல்லு.

சி. 1-வது.—ஞானஸ்நானம்,
2-வது.—உறுதிப்பூசுதல்,
3-வது.—நற்கருணை,
4-வது.—பச்சாத்தாபம்,
5-வது.—அவஸ்தைப்பூசுதல்,
6-வது.—குருத்துவம்,
7-வது.—மெய்விவாகம்.

கு. ஞானஸ்நானம் ஆவதென்ன?

சி. சென்மப் பாவத்தையுங் கர்மப் பாவத்தையும் போக்கி, நம்மைச் சர்வேசுரனுக்குந் திருச்சபைக்கும் பிள்ளைகளாக்குகிற தேவதிரவிய அநுமானம்.

கு. உறுதிப்பூசுதல் ஆவதென்ன?

சி. நம்மைச் சத்திய வேதத்திலே திடப்படுத்துகிறதற்காக இஸ்பிரீத்துசாந்துவை



யும் அவருடைய வரப்பிரசாதங்களையும் நமக்குக் கொடுக்கிற தேவதிரவிய அநுமானம்.

கு. நற்கருணை ஆவதென்ன?

சி. அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும் முந்திரிகைப்பழ இரசத்தின் குணங்களுக்குள்ளேயுஞ் சேசுநாத சுவாமியுடைய திருச் சரீரமுந் திரு இரத்தமும் திரு ஆத்துமமுந் தேவசுபாவமும் அடங்கியிருக்கிற தேவதிரவிய அநுமானம்.

கு. பச்சாத்தாபம் ஆவதென்ன?

சி. ஞானஸ்நானம் பெற்றபிற்பாடு செய்த பாவங்களை எல்லாம் விமோசனமாக்குகிற தேவதிரவிய அநுமானம்.

கு. அவஸ்தைப்பூசுதல் ஆவதென்ன?

சி. வியாதிக்காரரிடத்தில் மீதியாகிய பாவங்களுக்குப் பரிகாரமாகவும் அவர்களுடைய ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் ஆறுதலாகவும் உண்டாக்கப்பட்ட தேவதிரவிய அநுமானம்.

கு. குருத்துவம் ஆவதென்ன?

சி. திவ்விய பூசை பண்ணவுந் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவுஞ் சுதந்தரங்கொடுக்கிற தேவதிரவிய அநுமானம்.

கு. மெய்விவாகம் ஆவதென்ன?

சீ. சமுசாரியாகிறவர்களுக்குத் தேவ ஆசீர்வாதத்தையும் அவர்கள் தர்மவழியாய் நடக்கவுந் தங்கள் பிள்ளைகளைத் தக்க பிரகாரமாய் நடப்பிக்கவும் வேண்டிய தேவசகாயத்தையுங் கொடுக்கிற தேவதிரவிய அநுமானம்.

## தேவதிரவிய அநுமானங்களின் விரித்துரை.

கு. தேவதிரவிய அநுமானம் ஆவதென்ன?

சீ. தேவ வரப்பிரசாதத்துக்கு அடையாளமாகவும், அதனை ஆத்துமத்துக்குக் கொடுத்தருளும்படியாகவுஞ் சேசுநாதசுவாமி ஏற்படுத்தின திருச்சடங்கே தேவதிரவிய அநுமானமாம்.

கு. தேவதிரவிய அநுமானங்களுக்குள்ளே ஒரேவிசை மாத்திரம் பெறக்கூடுமான தேவதிரவிய அநுமானங்கள் எவை?

சீ. ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், குருத்துவம் என்னும் இம்மூன்றுமேயாம்.

கு. இம்மூன்றையும் ஒரேவிசை மாத்திரம் பெறக்கூடும் என்பானேன்?



சீ. ஏனென்றால் அவைகளால் நமது ஆத்துமத்தில் அழியாத ஓர் தெய்வீக அட்சரம் பதியப்படுவதினால்தான்.

கு. தேவதிரவிய அநுமானங்கள் நிறைவேறும்படி எத்தனை காரியங்கள் வேண்டியது?

சீ. அதற்கான பொருளும், மந்திரமும், அவைகளைச் சரியாய் உபயோகித்து அநுசரிக்குங் குருவும் ஆகிய இம்மூன்றுமாம்.

கு. தேவதிரவிய அநுமானங்களைப் பெறுகிறவர்கள் எல்லாரும் அவைகளால் வரவேண்டிய வரப்பிரசாதங்களைப் பெறுகிறார்களா?

சீ. ஆம், அவர்கள் அதற்குத் தடை அல்லது விக்கினஞ் செய்யாதிருக்கும்போதெல்லாம் தேவ வரப்பிரசாதங்களைப் பெறுகிறார்கள்.

கு. வேண்டிய ஆயத்தமில்லாமல் அயோக்கியமாய்த் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றால் என்ன பாவமாயிருக்கும்?

சீ. தேவ துரோகம் என்கிற மகா கனமான பாவமாயிருக்கும்.

## ஞானஸ்நான விபரம்.

கு. ஞானஸ்நானங் கொடுக்கிறதெப்படி?

சீ. 1-வது.—திருச்சபை ஞானஸ்நானங் கொடுக்கிற கருத்தோடே நானும் ஞானஸ்நானம் கொடுக்கிறேனென்று மனதிலே நினைத்துக்கொள்ளுகிறது.

2-வது.—பிள்ளைக்கு இடவேண்டிய பெயரை உச்சரித்து அதின் தலையின் பேரிலே தண்ணீர் வார்க்கிறபோது தான் தானே சொல்லவேண்டியதாவது.

**பிதாவுடையவுஞ் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே நான் உன்னைக் கழுவுகிறேன்.**

கு. அவஸ்தை சமயத்தில் யாராகிலும் ஞானஸ்நானங் கொடுக்கலாமா?

சீ. அப்படிப்பட்ட சமயத்தில் யாராகிலும் கொடுக்கவேண்டியதுதான்.

## உறுதிப்பூசுதலின் விபரம்.

கு. உறுதிப்பூசுதல் பெறச் செய்யவேண்டியதென்ன?

சீ. கூடினமாத்திரம் வேதசத்தியங்களை யறிந்திருக்கவும்; பாவமின்றிப் பத்தியா யிருக்கவும் வேணும்.



கு. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய வரங்களெத்தனை?

சீ. ஏழு, அவையாவன:

1-வது.—ஞானம்,
2-வது.—புத்தி,
3-வது.—விமரிசை,
4-வது.—திடம்,
5-வது.—அறிவு,
6-வது.—பத்தி,
7-வது.—தெய்வபயம்.

கு. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய ஞானக் கனிகளெத்தனை?

சீ. பன்னிரண்டு, அவையாவன:

1-வது.—பிறர்சிநேகம்,
2-வது.—ஞான சந்தோஷம்,
3-வது.—சமாதானம்,
4-வது.—பொறுமை,
5-வது.—தயை,
6-வது.—நன்மைத்தனம்,
7-வது.—ஓறுத்தல்,
8-வது.—சாந்தகுணம்,
9-வது.—விசுவாசம்,
10-வது.—மரியாதை,

11-வது.—இச்சையடக்கம்,
12-வது.—கற்பு.

கு. சாவான பாவத்தோடு இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெறுகிறவர்கள் கட்டிக்கொள்ளுகிற பாவமென்ன?

சீ. தேவ துரோகத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

கு. எத்தனைவிசை உறுதிப்பூசுதல் பெறலாம்?

சீ. ஞானஸ்நானத்தைப்போல ஒரேவிசை மாத்திரம் பெறலாம்

கு. உறுதிப்பூசுதல் கொடுக்கும்போது மேற்றிராணியார் செய்கிற சடங்கென்ன?

சீ. உறுதிப்பூசுதல் பெறுகிறவர்கள் பேரிலே கைகளை விரித்து இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அவர்கள்பேரிலே யிறங்க மன்றாடுகிறார்.

கு. இன்னுமவர் செய்கிற சடங்கென்ன?

சீ. உறுதிப்பூசுதல் பெறுகிறவர்களுடைய நெற்றியிற் பரிமள தயிலத்தைச் சிலுவையடையாளமாகப் பூசிக் கன்னத்திலே தட்டுகிறார்.



கு. எதற்காக நெற்றியிலே சிலுவையடையாளமாகப் பரிமள தயிலத்தைப் பூசுகிறார்?

சீ. உறுதிப்பூசுதல் பெறுகிறவர்கள் இஸ்பிரீத்து சாந்துவினுடைய வரப்பிரசாதத்தைச் சம்பூரணமாய்ப் பெறுகிறவடையாளமாகப் பூசுகிறார்.

கு. எதுக்காக மேற்றிராணியார் கன்னத்திலே தட்டுகிறார்?

சீ. உறுதிப்பூசுதல் பெற்றவர்கள் சேசுக்கிறீஸ்து நாதனைப் பற்றிச் சகலவித நிர்ப்பந்தங்களையும் அநுபவிக்க முஸ்திப்பாயிருக்க வேணுமென்கிற அடையாளமாகப் பூசுகிறார்.

கு. உறுதிப்பூசுதல் பெற்றபின் செய்யவேண்டியதென்ன?

சீ. முதலாவது.—இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் நமக்குக் கொடுத்த பலனை நம்மிடத்தில் உறுதிப்படுத்த அவரை மன்றாடவும்.

2-வது.—எச்சரிக்கையோடே பாவச் சமயத்துக்குத் தப்பித்துக்கொள்ளவும்.

3-வது.—நம்மைச் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவர்களாக்கி நித்திய பாக்கியத்துக்குப்

பாத்திரவான்களாக ஆன புண்ணியங்களைச் செய்யவும் வேணும்.

## தேவநற்கருணை விவரம்.

கு. தேவநற்கருணையிலே எழுந்தருளியிருக்கிறவர் யார்?

சீ. சேசுநாதசுவாமி.

கு. அதிலே எப்படி எழுந்தருளியிருக்கிறார்?

சீ. தம்முடைய சரீரத்தோடேயும், இரத்தத்தோடேயும், ஆத்துமத்தோடேயும், தேவசுபாவத்தோடேயும் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறார்.

கு. ஆகையால் தேவநற்கருணை வாங்குகிறபோது என்ன வாங்குகிறோம்?

சீ. நம்முடைய திவ்விய கர்த்தராகிய சேசுநாதருடைய திருச் சரீரத்தையும் இரத்தத்தையும் ஆத்துமத்தையும் தேவ சுபாவத்தையுந்தானே வாங்குகிறோம்.

கு. அதிலே அப்பம் இலவலேசமாகிலும் உண்டோ?

சீ. அப்பத்தின் உருபம் உருசி முதலான குணங்கள் இருந்தாலும் அப்பம் இல்லை.



கு. அப்பம் என்னமாய்ப் போச்சுது?

சீ. சேசுநாதருடைய திருச் சரீரமாக மாறிப்போச்சுது.

கு. தேவநற்கருணை வாங்குகிறதற்கு எத்தனை வகை ஆயத்தம் வேண்டியது?

சீ. ஆத்தும ஆயத்தம், சரீர ஆயத்தம் ஆகிய இரண்டுவகை ஆயத்தம் வேண்டியது.

கு. ஆத்தும ஆயத்தம் ஆவதென்ன?

சீ. ஆத்துமஞ் சாவான பாவம் இல்லாமல் பரிசுத்தமாயிருக்கத்தக்கதாக நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்திருக்கவேண்டியது.

கு. சரீர ஆயத்தம் ஆவதென்ன?

சீ. நடுச்சாமந் துவக்கி நன்மை வாங்குமட்டும் ஒன்றுஞ் சாப்பிடாமலுங் குடியாமலும் சுத்த உபவாசமாய் இருக்கவேண்டியது.

கு. திவ்விய பூசை ஒப்புக்கொடுப்பதற்கான பிரதான கருத்துகள் எவை?

சீ. 1-வது.—தேவ ஆராதனை,
2-வது.—நன்றியறிந்த தோத்திரம்,
3-வது.—மன்றாட்டு,
4-வது.—பாவப் பரிகாரம் ஆகிய இவைகளாம்.

## பச்சாத்தாபத்தின் விபரம்.

கு. பாவசங்கீர்த்தனம் பண்ண எத்தனை காரியம் வேண்டும்?

சீ. ஐந்து காரியம் வேண்டும்.

கு. அந்த ஐந்து காரியமுஞ் சொல்லு?

சீ. 1-வது.—தான் செய்த பாவங்களை நினைக்கிறது. 2-வது.—தான் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறது. 3-வது.—இனிமேல் ஒருக்காலும் ஒரு பாவத்தையுஞ் செய்வதில்லை என்று கெட்டியான மனதோடே பிரதிக்கினை பண்ணுகிறது. 4-வது.—தன் பாவங்களையெல்லாம் ஒன்றும் ஒளியாமல் குருவுடனே சொல்லுகிறது. 5-வது—குரு கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்க்கிறது.

---

## ஆத்தும சோதனை செய்யும் வகை.

### ஆத்தும சோதனைக்கு முன் ஜெபம்.

இஸ்பிரீத்து சாந்துவே! தேவரீர் எழுந்தருளிவாரும்; உமது திவ்விய பிரகாசத்தின் கதிர்களை என் ஆத்துமத்தில் வரவிட்டு, அதிலுள்ள பாவக்கறைகளையும், அந்தப் பாவங்



கள் உமக்கு வருவிக்கிற அருவருப்பையும் நான் கண்டறியும்படி தயை செய்தருளும். அர்ச். கன்னிமரியாயே! அர்ச். சூசையப்பரே! நான் பேர்கொண்டிருக்கிற அர்ச்சிய சிஷ்டவரே! நான் என் ஆத்துமத்திலுள்ள பாவக் கறைகளையெல்லாங் கண்டு, மனஸ்தாபப்பட்டு, கெட்டியான பிரதிக்கினை செய்து, நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணும்படி எனக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென் சேசு.

### 1.—பத்துக் கற்பனை.

1-வது. மனதுபொருந்தி விசுவாசத்தில் சந்தேகப்பட்டது; காலைச் செபம், இராச் செபம் செய்யத் தவறினது; செய்தாலும் பத்திக்குறைவாய்ச் செய்தது, கோவிலில் மரியாதைக் குறைவாயிருந்தது; பேய்க்குப் படைத்ததை வாங்கினது, சாப்பிட்டது; குருக்கள் தவிர மற்றவர்களைக்கொண்டு மந்திரித்தது; சகுன சாஸ்திரம் பார்த்தது, கேட்டது.

2-வது. பொய்யான காரியத்திற்கும் சந்தேகமான காரியத்திற்கும் சர்வேசுரனைச் சாட்சிக்கு அழைத்தது; சர்வேசுரனைத் தூஷணித்தது; அர்ச்சியசிஷ்டவர்களுக்கு விரோ

நமாய்ப் பேசினது; காற்று, மழை முதலிய வைகளைப்பற்றி முறையிட்டது; சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள், குருக்கள் இவர்களுக்கு விரோதமாய்ப் பேசினது; வேதத்துக்கு விரோதமாய் நினைத்தது, பேசினது; அவநம்பிக்கைப்பட்டது; தன்னையாவது புறத்தியாரையாவது சபித்தது.

3-வது. ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாட்களில் பூசை தவறினது, சரீரப் பிரயாசையான விலக்கப்பட்ட வேலை செய்தது, அல்லது செய்வித்தது.

4-வது. தாய், தகப்பன், உபாத்திமார், புருஷன், குருக்கள் முதலிய பெரியவர்களுக்குக் கீழ்ப்படியாமலிருந்தது; மரியாதை தவறினது, வருத்தம் வருவித்தது.

5-வது. புறத்தியார்பேரில் வர்மம் வைராக்கியமாயிருந்தது; துர்மாதிரிகை காட்டினது; துர்ப்புத்தி சொன்னது.

6-வது. மனதுபொருந்திக் கெட்ட நினைவு நினைத்தது; கெட்ட பேச்சுப் பேசினது, கேட்டது; கெட்ட பாட்டுப் பாடினது, கேட்டது; கெட்ட புஸ்தகங்களை வாசித்தது, கேட்டது; கெட்ட பிள்ளைகளோடு கூடினது; கெட்ட பார்வை பார்த்தது; கெட்ட காரியம் செய்தது; கெட்ட விளையாட்டு விளையாடினது; கெட்ட கருத்துடன் ஆடை ஆபரணங்கள் தரித்தது.



7-வது. திருடினது, திருடினதைத் உத்தரியாமலிருந்தது; திருடின உடைமையை வாங்கினது; புறத்தியாருக்கு நஷ்டம் வருவித்தது, அபகீர்த்தி உண்டாக்கினது.

8-வது. பொய் சொன்னது; அவதூது சொன்னது; கோள் சொன்னது; புறத்தியார்பேரில் குறைவாய் நினைத்தது.

9-வது. கெட்ட ஆசைப்பட்டது.

10-வது. புறத்தியார்சொத்துக்கு ஆசைப்பட்டது.

### 2.—திருச்சபைக் கட்டளை.

வருஷப் பாவசங்கீர்த்தனம் பண்ணாமலிருந்தது; பாஸ்கு காலத்தில் திவ்யநற்கருணை வாங்காமற் போனது; விலக்கப்பட்ட நாட்களில் மாம்ஸம் சாப்பிட்டது.

### 3.—தலையான பாவங்கள்.

1-வது. தன்னைக்குறித்துப் பெருமையாய் நினைத்தது, பேசினது; 2-வது. கோபித்தது; 3-வது. பணத்தின்மேல் மிஞ்சின

ஆசை வைத்தது; பிச்சை கொடாமலிருந்தது; 4-வது. வேண்டியதற்குமேல் சாப்பிட்டது; 5-வது. காய்மகாரப்பட்டது; 6-வது. வீண்காலம் போக்கினது.

## 4.—அந்தஸ்தின் கடமைகள்.

மந்திரங் குறிப்பிடம் படியாமலிருந்தது; ஞான உபதேசத்திற்கு வராமலிருந்தது; பாடங்களைச் சரியாய்ப் படியாமலிருந்தது; வேலைகளைச் சரியாய்ச் செய்யாமற்போனது; குடும்பத்துக்கு சவரட்சணை செய்யாமற் போனது; புருஷன் தன் பெண்ஜாதியையும், பெண்ஜாதி தன் புருஷனையும் சிநேகியாமற் போனது.

## ஆத்தும சோதனைக்குப் பின் ஜெபம்.

சர்வேசுரா சுவாமி! தேவரீர் அடியேனை உண்டாக்கிக் காப்பாற்றிவருகிறதுமல்லாமல், நான் செய்த பாவ அக்கிரமங்களைப் போக்கும்படியாய் உமது ஏக திருக்குமாரன் தானே மானபங்கமாய் மரணமடையும்படி சித்தமானீரே. நான் என் பாவ அக்கிரமங்களையெல்லாம் முழுதும் அருவருத்து, அவைகளை என்றென்றைக்கும் விலக்கும்படி தயவு செய்தருளும். ஆமென் சேசு.



சர்வேசுராசுவாமி! தேவரீர் அளவில்லாத சகல நன்மை நிறைந்தவராயிருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன்; உமக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனென்கிறதினால், மிகவுந் துக்கப்பட்டு மனஸ்தாபப்படுகிறதல்லாமல், தேவரீருடைய உதவியைக்கொண்டு இனி ஒருக்காலும் ஒரு பாவத்தையும் செய்வதில்லையென்றும், இதுவரையிலும் நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம்பண்ணுவேனென்றும் கெட்டியான பிரதிக்கினை செய்கிறேன். ஆமென் சேசு.

## பாவசங்கீர்த்தன முறை.

குருவானவரிடத்திற் போய் முழங்காலிலிருந்து சிலுவை வரைந்து, "சுவாமி நான் பாவியாயிருக்கிறேன், என்னை ஆசீர்வதித்தருளும்" என்றும், கடைசிவிசை எப்போது பாவசங்கீர்த்தனஞ் செய்தது என்றும், அப்போது கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்த்தேன் அல்லது தீர்க்கவில்லை என்றும், முந்தின பாவசங்கீர்த்தனங்களில் எதையாவது மறைத்து அல்லது மறந்திருந்தால் அதையும் சொல்லி, அதன்பின் நீ கட்டிக்கொண்ட பாவங்களை ஒவ்வொன்றும் எத்தனை விசை

யென்று தாழ்ச்சியுடன் சுருக்கமாயும் தெளி வாயும் ஒன்றும் ஒளியாமல் துக்கத்தோடு வெளிப்படுத்தி நான் இப்பொழுது "சொன்ன பாவங்களுக்காகவும், என் ஆயுசுகாலத்தில் நான் செய்த சகல பாவங்களுக்காகவும், விசேஷமாய் (இன்னின்ன) பாவங்களுக்காகவும், மனஸ்தாபப்படுகிறேன். இவைகளை சர்வேசுரன் பொறுக்கவேணுமென்றும், தேவரீர் அபராதமும் பொறுத்தலுந் தந்தருளவேணுமென்றும் மன்றாடுகிறேன்" என்று சொல்லுகிறது. குருவானவர் சொல்லுகிற புத்திமதிகளையும், அவர் கொடுக்கிற அபராதத்தையும் கவனமாய்க் கேட்டு குருவானவர் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதங்கொடுக்கிற போது, செய்த பாவங்களுக்கெல்லாம் துக்கப்பட்டு உத்தம மனஸ்தாப மந்திரஞ் சொல்லி; குருவானவரிடத்தில் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு, இடத்திற்குப்போய், சர்வேசுரன் பாவப்பொறுத்தல் கொடுத்ததற்காக நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, குருவானவர் கொடுத்த அபராதத்தைக் கூடிய மட்டும் உடனே தீர்க்கிறது.



## அவஸ்தைப்பூசுதலின் விவரம்.

கு. அவஸ்தைப்பூசுதல் பெறவேண்டியதார்?

சீ. கடின வியாதிக்காரரே பெறவேண்டும்; ஆனால் மரணத்தறுவாய்மட்டுங் காத்திருத்தலாகாது.

## மெய்விவாகத்தின் விவரம்.

கு. மெய்விவாகத்திற்குப் பிரதான விக்கினங்கள் எவை?

சீ. மூன்றாங்கால் மட்டும் இரத்த உறவு, இரண்டாங்கால் மட்டும் கலியாண சம்பந்தம், ஞான உறவு, குறைந்த வயது, இதர மதம் இவைகளாம்.

கு. திருச்சபை உத்தரவில்லாமல் தாலி கட்டி கலியாணஞ் செய்தால் மெய்விவாகம் ஆகுமோ?

சீ. இல்லை, இப்படிப்பட்ட கலியாணம் வெறும் தாறுமாறு ஆகுமொழிய மெய்விவாகம் ஆகாது.

---

## அதிகாலைச் செபம்.

### சுகிர்த அப்பியாசம்.

### விடியற் கண் விழிக்கும்பொழுது ஓதுதல்.

சேசு மரியாயே சூசை, உங்கள் அடைக்கலத்திலே நான் கண் விழித்துப் பொல்லாப்பைக் காணாமலும், நினையாமலும், செய்யாமலும் இருக்கக்கடவேன்.

---

### எழுந்திருக்கிறபொழுது.

சேசுநாதருடைய திருநாமத்தினாலே எழுந்திருப்பேன்; படுக்கையிலே நின்று எழுந்ததுபோலே பாவத்தைவிட்டு எழுந்து மறுபடியும் நான் பாவத்தில் விழாதபடிக்கு என்னைத் தற்காத்தருளும் சுவாமி.

---

### செப அப்போஸ்தல சபையார் காணிக்கை செபம்.

சேசுவின் திரு இருதயமே! நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாக ஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும், அடியேன் இன்று



செய்யும் செபங்களையும் கிரியைகளையும் படும் துன்ப வருத்தங்களையும், அர்ச். கன்னி மரியாயின் மாசில்லாத இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

இந்த மாதத்துக்கும் இந்த நாளுக்கும் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காக விசேஷமாய் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென் சேசு.

(100-நாட் பலன்.)

சிறுவை மந்திரம் 5-ம் பக்கம் காண்க.

---

### திரிகாலச் செபம்.

ஆண்டவருடைய சம்மனசானது மரியாயியுடனே விசேஷஞ் சொல்லிற்று.—அவள் இஸ்பிரீத்துசாந்துவினாலே கற்பிணியானாள். பிரி.

இதோ ஆண்டவருடைய அடிமையானவள்.—உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது. பிரி.

வார்த்தையானது மாம்சமாகி.—எங்களுடனேகூட வாசமாயிருந்தது. பிரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி, சம்மனசு சொன்னதினாலே உமக்குக் குமாரனாகிய சேசுக்கிறீஸ்து

மனுஷனானதை அறிந்திருக்கிற நாங்கள் அவருடைய பாடுகளினாலேயும் சிலுவையினாலேயும் உத்தானத்தின் மகிமையை அடையத் தக்கதாக, எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளவேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து ஏங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

இந்தச் செபத்தை முழங்காலிலிருந்து வேண்டிக்கொள்ளவேண்டும். ஆனால் சனிக்கிழமை சாயந்திரமும் ஞாயிற்றுக்கிழமையிலும் இதை நின்றுகொண்டு சொல்லவேண்டியது.

பெரிய புதன் சாயங்காலந் துவக்கிப் பெரிய சனி காலமேமட்டுஞ் சொல்லவேண்டிய திரிகாலச் செபம்.

கிறீஸ்துவானவர் நமக்காக மரணமட்டுங் கீழ்ப்படிதலானார்.

மேலுஞ் சிலுவையிலேயே மரித்தார்.

ஆதலால் சர்வேசுரன் அவரை உயர்த்தி எல்லா நாமத்துக்கும் மேலான நாமதேயத்தை அவருக்குத் தந்தருளினார். பரமண்டல.

சர்வேசுராசுவாமி, எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பாவிகளாகிய யூதர்களுடைய கையில் காட்டிக்கொடுக்கப்பட்டுச் சிலுவையின் நிர்ப்பந்தத்தை அநுபவித்து இரட்சித்தருளின இந்தக் குடும்பத்தை திரு



பைக் கண்கொண்டுபாரும். இந்த மன்றாட்டைத் தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக தேவனுமாய்ச் சதாகாலஞ் சீவியருமாய்ப் பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற சேசுநாதரைக் குறித்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

---

## பாஸ்குக்காலத்தின் திரிகாலச் செபம்.

இது பெரிய சனிவாரத்துவக்கி அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள் வரைக்கும் நின்றுகொண்டு சொல்லத்தக்கது.

பரலோகத்துக்கு இராக்கினியே! மனங்களிகூரும். அல்லேலுய்யா.

அதேதெனில் பாக்கியவதியான உமது திரு உதரத்தில் அவதரித்தவர். அல்லே.

திருவுளம்பற்றின வாக்கின்படியே உயிர்த்தெழுந்தருளினார். அல்லே.

எங்களுக்காகச் சர்வேசுரனை மன்றாடும். அ.

மு.—எப்பொழுதும் கன்னிகையான மரியாயே அகமகிழ்ந்து பூரிக்கக்கடவீர். அல்.

து.—அதேதெனில் ஆண்டவர் மெய்யாகவே உத்தானமாயினார். அல்லே.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி, உம்முடைய திருக்குமாரனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற

சேசுக்கிறீஸ்துவின் உத்தானத்தினாலே உலகங்களிக்கச் சித்தமானீரோ. கன்னிமரியாயியாகிய அவருடைய திருத்தாயாராலே நித்திய ஜீவியமான பரலோக வாழ்வை நாங்கள் அடையும்படிக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

---

## தேவ சம்பந்தமான மூன்று புண்ணிய முயற்சிகள்.

### விசுவாச முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி, திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களையெல்லாம் தேவரீர்தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.

ஆமென்சேசு.

### நம்பிக்கை முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி, தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்தபடியினாலே, சேசுநாதர்சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து, என் பாவங்களை



எல்லாம் பொறுத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையும் தந்தருளுவீர் என்று உறுதியாக நம்பியிருக்கிறேன். ஆமென்சேசு.

### தேவசிநேக முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி, தேவரீர் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமாயிருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன். பின்னையும் உம்மைப்பற்றி என்னை நான் சிநேகிக்கிறாப்போலே மற்ற எல்லாரையும் சிநேகிக்கிறேன். ஆமென்சேசு. 3-பிரி.

---

## காலைச் செபம்.

*[illegible]வனானவன் அதிகாலமே எழுந்தவுடனே மிகுந்த பத்தியோடேயும் வணக்கத்தோடேயும் கைகுவித்து முழங்காலிலிருந்து சர்வேசுரனைப் பார்த்துச் சொல்லத்தக்கதாவது:*

தானாய் அநாதியுமாய்ச் சரீரமில்லாதவருமாய், அளவில்லாத சகல நன்மைச் சுரூபியுமாய், ஞானத்தினாலேயும் பலத்தினாலேயும், காரணத்தினாலேயும், எங்கும் வியாபித்திருக்கிறவருமாய், எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமுமாய், யாவர்க்கும் கதியுமாய்ப் பொல்லாத

வர்களை நரகத்திலே தள்ளி, நல்லவர்களுக்கு மோட்சங் கொடுக்கிறவருமாகிய பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து என்னும் மூன்றாட்களாயிருந்தாலும், ஒரே சர்வேசுரனாயிருக்கிற என் ஆண்டவரே, தேவரீர்மாத்திரம் மெய்யான தேவனாயிருக்கிறபடியினாலே உமக்குமாத்திரஞ் செய்யத்தக்க தேவாராதனை உமக்கே பண்ணுகிறேன்.

இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது இருந்த தாழ்ச்சியோடே சஷ்டாங்கமாக விழுந்து முழுமனதோடே சர்வேசுரனை வணங்குகிறது.

அதன்பின்பு எழுந்திருந்து பரிசுத்த தேவமாதாவைப் பார்த்துச் சொல்லத்தக்கதாவது:

சர்வேசுரனாலே உண்டாக்கப்பட்ட புத்தியுடைத்தான வஸ்துக்களுக்குள்ளே மேலானவளாயிருக்கிற அர்ச். மரியாயே, நீர் மோட்சவாசிகள் என்னப்பட்ட யாவரையும் பார்க்க எண்ணப்படாத நன்மைகளினாலே அதிசயித்து, சர்வலோகத்துக்கும் இராக்கினியாயிருக்கிறதினாலேயும், எப்பொழுதும் பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருந்து, மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும் ஒன்றான சேசுநாதருக்குத் திவ்விய மாதாவாயிருக்கிறதினாலேயும், சகலமான அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் செய்யத்தக்க சாதாரண ஆராதனையைப் பார்க்க உமக்கு மாத்திரமே விசேஷ ஆராதனை பண்ணுகிறேன்.



இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது இருந்த தாழ்ச்சியோடே முழந்தாளிட்டு நெற்றித் தரையிலேபட நமஸ்காரம் பண்ணுகிறது.

அதன்பிறகு எழுந்திருந்து சகலமாயிருக்கிற சம்மனசானவர்களையும் பரம வாசிகளையும் சகலமான அர்ச்சியசிஷ்டவர்களையுங் குறித்துச் சொல்லத்தக்கதாவது:

சகல மோட்சவாசிகளே, சர்வேசுரனைப் பிரத்தியட்ச தரிசனமாய்த் தரிசித்துக் கொண்டு, ஆண்டவருக்கு உகந்தவர்களாயிருக்கிறபடியினாலேயும், நன்மையிலே நிலைக்கொண்டவர்களாயிருக்கிறபடியினாலேயும், உங்களுடைய வேண்டுதல் மன்றாட்டுகளினாலே சர்வேசுரன் உங்களைக்கொண்டு எங்களுக்கு அநேக சகாய உபகாரங்களைப்பண்ணிக்கொண்டு வருகிறதினாலேயும், திருச்சபை கட்டளையிட்ட பிரகாரம் உங்களுக்கு ஆராதனை பண்ணுகிறேன்.

இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது இருந்த தாழ்ச்சியோடே தலை குனிந்து தண்டன்பண்ணுகிறது.

இப்படிப்பட்ட ஆராதனைகளெல்லாம் முடிந்தபிற்பாடு சுவாமியைப் பார்த்துச் சொல்லத்தக்கதாவது:

சர்வேசுர சுவாமி, தேவரீர் என் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் ஒன்றுமில்லாதிருக்கையிலே உண்டாக்கி, இந்த ஆத்தும

மூன் சரீரமும் பிழைக்கிறதற்கு எண்ணப்படாத நன்மைகளைத் தந்தருளினதினாலே, சுவாமி உமக்கே தோத்திரமுண்டாகக்கடவது.

பின்னையும் தேவரீர் இந்தப் பூலோகத்திலே எனக்காக வந்து மனுஷாவதாரம் பண்ணிப் பாடுபட்டுச் சிலுவையிலே அறையுண்டு கடினமான மரணத்தை அடைந்ததினாலே, சுவாமி உமக்கே தோத்திரமுண்டாகக்கடவது.

மேலும் உம்முடைய திரு மரணத்தினாலே வந்த அளவில்லாத பலனை எனக்கு ஞானஸ்நானத்தின் வழியாகக் கொடுத்தருளினீரே, சுவாமி உமக்கே தோத்திரமுண்டாகக்கடவது.

ஞானஸ்நானம் பெற்ற பிற்பாடு நான் அநேகமுறை பாவங்களைச் செய்திருக்க, அந்தப் பாவங்களையெல்லாம் பாவசங்கீர்த்தன முகாந்தரமாகப் பொறுத்து, தெய்வீக போசனமாகிற நற்கருணையுங் கொடுத்து, காவலாயிருக்கிற சம்மனசானவரையுங் கட்டளையிட்டு, இவை முதலான எண்ணிக்கைக்குள்ளடங்காத அநேக சகாய உபகாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறதினாலேயும், விசே



ஷமாய் இந்த இராத்திரிகாலத்திலே என் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் யாதொரு பொல்லாப்பில்லாமல் காத்து இரட்சித்ததினாலேயும், என்னால் கூடியமாத்திரம் நன்றியறிந்த மனதோடே தேவரீரை வணங்கித் தோத்திரம் பண்ணுகிறேன், சுவாமி உமக்கே தோத்திரமுண்டாகக்கடவது.

அதற்குப்பின் தன்னை முழுதுஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிற வகையாவது:

சர்வலோகத்துக்கும் ஆண்டவரே! தேவரீர் என் சரீரத்தையும் பஞ்சேந்திரியங்களையும், அதுகளிலே உண்டான தத்துவங்களையும், என் ஆத்துமத்தையும், அதிலேயுள்ள புத்தி, நினைவு, மனதென்கிற மூன்று புலன்களாகிய உள்ளிந்திரியங்களையும் எனக்குக் கொடுத்தருளினீரே. இவையெல்லாம் தேவரீருக்குப் பிரியமாயிருக்கிறதற்குச் சேசுநாதர் பண்ணின, புண்ணியங்களோடேயுஞ் சகல அர்ச்சியஷ்டவர்களுடைய தேவ வசீகிர்தமான காணிக்கைகளோடேயுந் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். ஆனபடியினாலே இப்பொழுது துவக்கி மரணபரியந்தம் நான் செய்யுந் தருமகாரியங்களெல்லாவற்றையுந் தேவரீருக்குத் தோத்திரமாக ஒப்புக்கொடுக்கிறேன்.

அதற்குமேல் சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தைக் கேட்கிற வகையாவது:

சர்வேசுரசுவாமி! தேவரீருக்கு அளவில்லாத பலமும், மட்டில்லாத ஞானமும், அளவறுக்கப்படாத கிருபாகடாட்சமும் உண்டாயிருக்கிறபடியினாலே, சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்து, அடியேனுக்குந் திருச்சபைக்குஞ் சகலமான ஜனங்களுக்கும் வேண்டிய சகாயங்களைப் பண்ணுகிறதுமல்லாமல், விசேஷமாய் நான் இன்று பாவங்களைச் செய்யாமல் புண்ணிய வழியிலே சமுத்திரையாய் நடக்கத்தக்கதாகவும் எனக்கு அநுக்கிரகம் பண்ணியருளும் சுவாமி.

இந்தச் செபம் முடிந்தவுடனே பத்தியோடே பரமண்டல மந்திரமும், பிரியதத்தமந்திரமும், விசுவாசமந்திரமுஞ் சொல்லுகிறது.

பர. பிரி. விச. உத். 6-ம் பக்கம் காண்க.

அதன்மேல் சுவாமியை நோக்கி நல்ல பிரதிக்கினை பண்ணுகிற வகையாவது:

சர்வேசுர சுவாமி! தேவரீர் அருளிச்செய்த வேத கற்பனையின்படியே அடியேன் சமுத்திரையாய் நடக்கத் துணிந்திருக்கிறபடியினாலே, என்னிடத்திலிருக்கிற ஆங்காரம், கோபம் முதலிய விசேஷ துர்க்குணங்களை நீக்கி இன்று அநேக தருமங்களைச் செய்து வாக்கினாலேயுங் கிரியையினாலேயுந்



தாழ்ச்சி, பொறுமை, கற்பு முதலிய புண்ணியங்களை அடையப் பிரயாசப்படுவேன்.

இவையெல்லாம் என்னுடைய பலத்தினாலே கூடாதே, பரிசுத்த தேவமாதாவே! எனக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.

என் காவலான சம்மனசானவரே! என்னைப் புண்ணிய நன்னெறியில் நடப்பித்துக் காத்தருளும்.

நான் பேர்கொண்டிருக்கிற அர்ச்சியசிஷ்டவரே! உம்மைப்போலே நான் இவ்வுலகத்தில் சர்வேசுரனைப் பத்தியோடே சேவிக்கவும், உம்மோடே அவரைப் பரலோகத்திலே தரிசித்துத் துதிக்கவும், தேவ கிருபை எனக்குக் கிடைக்கும்படியாக மன்றாடிக்கொள்ளும். ஆமென்சேசு.

அதன்பின் தன்னால் கூடுமானால் 33 மணிச் செபமாவது, திருவிருதய ஜெபமாலையாவது செய்கிறது உத்தமம்.

---

## சேசுநாதருடைய திரு இருதயத்தின் ஜெபமாலை.

கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே, என்னை அர்ச்சியசிஷ்டவனாகச் செய்தருளும். கிறீஸ்துவினுடைய திரு இருதயமே, உமது தேவ சிநேக அக்கினியால் என்னை எரியப்

பண்ணியருளும். கிறீஸ்துவினுடைய திருச்சரீரமே, என்னை இரட்சித்துக்கொள்ளும். கிறீஸ்துவினுடைய திரு இரத்தமே, எனக்குத் திருப்தி உண்டாகப் பண்ணியருளும். கிறீஸ்துவினுடைய விலாவிலேநின்று ஓடிவிழுந்த திருத் தண்ணீரே, என்னைக் கழுவியருளும். கிறீஸ்துவினுடைய திருப்பாடுகளே, எனக்குத் தேற்றரவு உண்டாகப் பண்ணியருளுங்கள். ஓ நல்ல சேசுவே! நான் கேட்கிறதைத் தந்தருளும். உம்முடைய திருக் காயங்களுக்குள்ளே என்னை மறைத்துக்கொள்ளும். என்னை உம்மைவிட்டுப் பிரியவொட்டாதேயும், துஷ்ட சத்துருக்களிடத்திலேநின்று என்னை இரட்சித்துக் கொள்ளும். என் மரணத்தறுவாயில் நீர் என்னை அழைத்து, உம்முடைய சந்நிதியில் உட்பட்ட சகல அர்ச்சியசிஷ்டவர்களோடு நான் உம்மை ஊழியுள்ளகாலம் தோத்திரம் பண்ணும்படி அடியேன் உம்முடைய சந்நிதியில் வரக் கற்பித்தருளும். ஆமென் சேசு.

பின்னும் பெரிய மணியில்:—இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே! என் இருதயத்தைத் தேவரீருடைய திரு இருதயத்துக்கு ஒத்ததாகப்பண்ணியருளும்.



சிறு மணியில்:—சேசுவினுடைய மதுரமான திரு இருதயமே! என் சிநேகமாயிரும்.

பத்துமணி முடிந்தபின்:—மரியாயின் மதுரமான இருதயமே! என் இரட்சண்யமாயிரும்.

விபரம்:—இம்மூன்று மனவல்லய செபங்களில் ஒவ்வொன்றுக்கும் 300 நாள் பலனுண்டு.

அதின் ஒவ்வொரு பத்துமணிச் செபமும், எந்தக் கருத்துகளுக்காகச் சொல்லவேண்டுமென்றால்,

1-ம் பத்துமணி—அஞ்ஞானிகள், பதிதர் முதலிய வேத விரோதிகளால் அவருக்குண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

2-ம் பத்துமணி—பொல்லாத கிறீஸ்தவர்களால் அவருக்குண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

3-ம் பத்துமணி—நாம்தாமே அவருக்கு உண்டாக்கும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

4-ம் பத்துமணி—சகல மனிதராலும் அவருக்கு உண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகவும், பரிசுத்த தேவமாதா சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய சிநேகப்

பற்றுதலோடு நாமும் நம்முடைய இருதயத்தை ஒப்புக்கொடுப்போம்.

5-ம் பத்துமணி—சேசுவின் திரு இருதயமே! நாங்களும் மற்றவர்களும், உம்மை அதிக்கு அதிகமதிகமாய்ச் சிநேகிக்கும்படிக்கு அநுக்கிரகம் செய்தருளும்.

### ஐம்பதுமணி முடிந்தபின்.

1. சேசுவின் திரு இருதயமே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

2. ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயின் மாசற்ற இருதயமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

8. திரு இருதயத்தின் ஆண்டவளே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

4. சேசுநாதருடைய திரு இருதயமானது எங்கும் சிநேகிக்கப்படுவதாக.

5. என் சேசுவே! இரக்கமாயிரும்.

6. திரு இருதயத்தின் சிநேகிதராகிய அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

---



### சேசுநாதருடைய திரு நாமத்தின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.
பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,
உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,
இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,
அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,
நித்திய பிதாவின் திருச்சுதனாகிய சேசுவே,
பிதாவின் பிரகாசமாயிருக்கிற சேசுவே,
நித்திய ஒளியின் தூய்மையாகிய சேசுவே,
மட்டில்லாத மகிமை உடைத்தான இராஜாவாகிய சேசுவே,
நீதி ஆதித்தனாகிய சேசுவே,

எங்கள் பேரில் இரக்கமாயிரும் சுவாமி.

பரிசுத்த கன்னிமரியாயின் குமாரனாகிய சேசுவே,

மகா அன்புக்குரிய சேசுவே,

ஆச்சரியத்துக்குரிய சேசுவே,

மிகுந்த வல்லபக் கடவுளாயிருக்கிற சேசுவே,

வரப்போகிற பாக்கியங்களுக்குக் காரணராயிருக்கிற சேசுவே,

பரம ஆலோசனைகளின் திவ்விய தூதரான சேசுவே,

மகா சத்தியுடைத்தான சேசுவே,

மகா பொறுமையுள்ள சேசுவே,

மகா சிரவணம் பொருந்திய சேசுவே,

மனத்தாழ்ச்சியையும் மதுர குணத்தையுங் கொண்டிருக்கிற சேசுவே,

கற்பை சிநேகிக்கிற சேசுவே,

எங்கள் அன்பரான சேசுவே,

சமாதான தேவனாகிய சேசுவே,

சீவியத்துக்குக் காரணராயிருக்கிற சேசுவே,

சகல புண்ணியங்களுக்கு மாதிரிகையாயிருக்கிற சேசுவே,

ஆத்துமங்களை இரட்சிக்கிறதிலே மகா அபேட்சையுள்ள சேசுவே,

எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.



எங்கள் தேவனாயிருக்கிற சேசுவே,

எங்களுக்கு அடைக்கலமாயிருக்கிற சேசுவே,

தரித்திரருடைய பிதாவாயிருக்கிற சேசுவே,

விசுவாசிகளுடைய பொக்கிஷமாயிருக்கிற சேசுவே,

நல்ல ஆயராயிருக்கிற சேசுவே,

உண்மையான பிரகாசமாயிருக்கிற சேசுவே,

நித்திய ஞானமாயிருக்கிற சேசுவே,

மட்டில்லாத நன்மைத்தனத்தைக்கொண்டிருக்கிற சேசுவே,

எங்கள் சீவியமும் உண்மையும், வழியுமாயிருக்கிற சேசுவே,

சம்மனசுகளுடைய சந்தோஷமாயிருக்கிற சேசுவே,

பிதாப்பிதாக்களுக்கு இராஜாவாகிய சேசுவே,

தீர்க்கதரிசிகளுக்கு ஞானங் கொடுக்கிற சேசுவே,

அப்போஸ்தலர்களுக்குக் குருவாகிய சேசுவே,

எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

சுவிசேஷகருக்குப் போதகரான சேசுவே,
வேதசாட்சிகளுக்குத் திடனான சேசுவே,
ஸ்துதியருடைய பிரகாசமான சேசுவே,
விரத்தருடைய துப்புரவான சேசுவே,
சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கு முடியான சேசுவே,

ஏ. இ. தயை. இர. சுவாமி.

தயாபரராயிருந்து,—எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமி,
தயாபரராயிருந்து,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ்சுவாமி,

சகல பாவங்களிலே நின்று,
தேவரீருடைய கோபத்திலே நின்று,
பசாசின் தந்திரங்களிலே நின்று,
மோக ஆசையிலே நின்று,
நித்திய மரணத்திலே நின்று,
தேவரீர் தருகிற தரும விசாரங்களை அசட்டைபண்ணுகிற தூர்க்குணத்திலே நின்று,
தேவரீருடைய மனுஷாவதாரத்தின் பரம இரகசியத்தைப் பார்த்து,
தேவரீருடைய பிறப்பைப் பார்த்து,

எங்களை இரட்சித்துக்கொள். தே. சுவாமி.



தேவரீருடைய பாலத்துவத்தைப் பார்த்து,
தேவரீருடைய விருத்தசேதனத்தைப் பார்த்து,
தேவரீருடைய திவ்விய நடக்கையைப் பார்த்து,
தேவரீருடைய பிரயாசத்தையும் பிரயாணங்களையும் பார்த்து,
தேவரீருடைய ஆருட்டத்தையும் இரத்தவேர்வையையும் பார்த்து,
தேவரீருடைய சிலுவையையும் பாடுகளையும் பார்த்து,
தேவரீருடைய உபத்திரவங்களையும் நிர்ப்பந்தங்களையும் பார்த்து,
தேவரீருடைய மரணத்தையும் அடக்கத்தையும் பார்த்து,
தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,
தேவரீருடைய ஆச்சரியமான ஆரோகணத்தைப்பார்த்து,
தேவரீருடைய சந்தோஷத்தையும், மகிமையையும் பார்த்து,
தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தைப் பார்த்து,
நடுத்தீர்க்கிற நாளிலே,

எங்களை இரட்சித்துக்கொள். தே. சுவாமி.

திரிகாலச்செபம். 47-ம் பக்கம் காண்க.

## VENI SANCTE SPIRITUS.

### * இஸ்பிரீத்து சாந்துவின் மந்திரம்.

இஸ்பிரீத்து சாந்துவே! தேவரீர் எழுந்தருளிவாரும், பரலோகத்திலே நின்று உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும், தரித்திரருடைய பிதாவே, கொடைகளைக் கொடுக்கிறவனே, இருதயங்களின் பிரகாசமே எழுந்தருளிவாரும், உத்தம ஆறுதலானவரோ, ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாடியே பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே, பிரயாசத்திற் சுகமே, வெய்யிலிற் குளிர்ச்சியே, அழுகையில் தேற்றரவே, எழுந்தருளிவாரும், வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கிற பிரகாசமே, உமது விசுவாசிகளுடைய இருதயங்களின் உற்பனங்களை நிரப்பும், உம்முடைய தெய்வீக மன்றியே மனிதரிடத்திற் குற்றமில்லாதது ஒன்றுமில்லை, அசுத்தமாயிருக்கிறதைச் சுத்தம்பண்ணும், உலர்ந்ததை நனையும், நோவாயிருக்கிறதைக் குணமாக்கும், வணங்காததை வணங்கப்பண்ணும், குளிரோடிருக்கிறதைக் குளிர்போக்கும், தவறினதைச் செவ்வே நடத்தும், உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழையுங் கொடுத்தருளும். புண்ணியத்தின் பேறுகளையும், நல்ல மரணத்தையும், நித்திய மோட்சானந்த சந்தோஷத்தையும் எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென் சேசு.

* இவ்வரைச் சத்திய இராசாக்கள் தங்களுக்குள் சமாதானமாயிருக்கவேண்டிப் பத்தியோடு செபிக்கும்போது அறுநாட் பலனுண்டு.—(6-ம் பத்திநாதர்.)



### நன்றியறிந்த தோத்திரம்.

சர்வேசுரா சுவாமி, என்னை ஒன்றுமில்லாதிருக்கையிலே ஒரு மனுஷனாக உண்டாக்கினீரோ.—சுவாமி உமக்கே தோத்திர முண்டாகக்கடவது.

நான்செய்த பாவங்களினாலே நரகத்துக்குப் போகக் கடனுண்டாயிற்றே அந்தக் கடனை என்னால் உத்தரிக்கக்கூடாதென்று தேவரீர் மனுஷனாகப் பிறந்து பாடுபட்டு உத்தரித்தீரோ.—சுவாமி உமக்கே தோத்திர முண்டாகக் கடவது.

அந்தப் புண்ணிய பலன்களை யெல்லாம் ஞானஸ்நான முகாந்தரமாக எனக்குத் தந்தருளினீரோ.—சுவாமி உமக்கே.

நான் ஞானஸ்நானம் பெற்ற பிற்பாடு அநேகமுறை பாவங்களைச் செய்தேனே அந்தப் பாவங்களையெல்லாம் பாவசங்கீர்த்தன மூலாந்தரமாகப் பொறுத்து என்னை நரகத்திலே தள்ளாமல் மோட்சத்திற்குப் போகிற வழியிலே நிறுத்திக்கொண்டிருக்கிறீரோ.— சுவாமி உமக்கே.

நீர் இன்றெனக்கு எண்ணிறந்த உபகாரங்களையெல்லாம் செய்ததுமல்லாமலும், பசாசு எனக்கு நினைத்திருந்த அநேக பொல்லாப்புகளையும் விலக்கினீரோ....சுவாமி.

நான் இன்று செய்த பாவங்களெல்லாம் என் நினைவிலே வரவும், அவைகளுக்காக நான் மெய்யான மனஸ்தாபப்படவும் உம்முடைய ஒத்தாசையைக் கட்டளைப் பண்ணியருளுஞ் சுவாமி.

போன ஆத்தும சோதனை தொடங்கி இந்நேரமட்டுஞ் சிந்தனை வாக்குக்கிரியையினாலே செய்த பாவங்களை யெல்லாம் பத்துக்கற்பனைப்பிரகாரமாக நினைக்கத்தக்கதாக பத்துக் கற்பனையும், திருச்சபைக் கட்டளையுஞ் சொல்லவும். 8-ம் பக்கம் காண்க. பின் ஆத்தும சோதனைசெய்து, பாவசங்கீர்த்தன மந்திரஞ்சொல்லவும், 11-ம் பக்கம் காண்க.

---



## மேலான உத்தம மனஸ்தாப மந்திரம்.

பராபர வஸ்துவாயிருக்கிற சர்வேசுர சுவாமி! தேவரீர் ஆண்டவர், நான் நீசனாயிருக்கிற அடிமை; இவ்வடிமை அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிற தேவரீரைச் சட்டைப் பண்ணாமல் தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனே சுவாமி! தேவரீருக் கேற்காத துரோகங்களை நினைத்தேனே சுவாமி, நான் செய்த பாவங்களினாலே சேசுநாதரே, தேவரீரைச் சிலுவையிலே அறைந்தேனே சுவாமி! தேவரீருடைய திருக்காயங்களை நிஷ்டூரமாய் அநேகமுறை நோகப்பண்ணினேனே சுவாமி, தேவரீர் படாதபாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு கடினமான மரணத்தை அடைகிறதற்குப் பாவி நான் காரணமாயிருந்தேனே சுவாமி, நான் செய்த பாவங்களினாலே என் ஆத்துமத்தைக் கெடுத்துப் பசாசுக்கு அடிமையாய்ப்போய் நரகபாதாளத்திலே விழுந்து என்றென்றைக்கும் இப்பொழும் எப்பொழுதும் வழியுள்ளகாலம் ஆறாத நெருப்பில் அவியாதகட்டையாய்க் கிடந்து வேகிறதற்கு என்பேரிலே அளவில்லாத கடனைச்சுமத்திக் கொண்டேனே சுவாமி, இதினாலே நரகத்து

க்குப் போவேன் என்கிற பயத்தைப் பார்க்கவும், மோட்சமிழந்து போவேனென்கிற சேதத்தைப்பார்க்கவும், அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிற தேவரீரைச் சட்டைப் பண்ணாமல் தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேன் என்கிறதினாலேயும், தேவரீருக் கேற்காத துரோகங்களை நினைத்தேன் என்கிறதினாலேயும், மிகவும் மனநொந்து உத்தம மனஸ்தாபமாயிருக்கிறேன்; எனக்கிதுவே மனஸ்தாபமல்லாமல் வேறே மனஸ்தாபமில்லை; இதுவே துக்கமல்லாமல் வேறே துக்கமில்லை. இந்தப் பாவங்களை யெல்லாம் அறிந்து செய்தேன்; என் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமி; அறிந்தே செய்தேன்; என் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ; அறிந்துந் துரோகமாய்ச் செய்தேன் என் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

இனிமேல் ஒருக்காலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்கிறதில்லையென்று கெட்டியான மனதோடே பிரதிக்கினைப் பண்ணுகிறேன். பின்னையும் என் பலன் போதாதென்கிறதினாலே சேசுநாதசுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தத்தின் பலன்களைப் பார்



த்து, என் பாவங்களைப் பொறுத்து எனக்கு மோட்ச பாக்கியந் தந்தருளுவீரென்று முழு மனதோடே நம்பியிருக்கிறேன்.

மூத.—இவைகளெல்லாம் என் பலத்தினாலே கூடாதே, அர்ச். தேவமாதாவே எனக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக் கொள்ளும்.

ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே, உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிறவரே எங்கள் பேரிலே தயையாயிரும்.

இவ்வவர் இப்படி மூன்றுவிசை சொல்லுகிறது.

அதற்குப்பின் ஒரு. பா. பிரி. விசுவாச மந்திரஞ் சொல்லவும்.

---

## சேசுநாதசுவாமி பாடுபட்ட தியானம்.

சர்வேசுரா சுவாமீ, நிகரில்லாத தயையினாலே உலகத்தை மீட்டு இரட்சிக்கிறதற்காகத் தேவரீர் மனுஷனாகப் பிறக்கவும், விருத்தசேதனப்படவும் யூதர்களினாலே புறக்கணிக்கப்படவும், குருத்துரோகியான யூதாசென்பவன் உம்மைக் கன்னத்திலே முத்தஞ் செய்து காட்டிக்கொடுக்கப்படவும், தேவரீர் கயிறுகளினாலே கட்டுண்டு குற்றமில்லாத செம்மறிப்புருவைபோலே பலிக்கேவப்பட

வும், ஆனுசன், கைப்பாசன், பிலாத்தன்,
ஏரோதனென்கிற இவர்களண்டைக்கு அவ
மானமாகக் கூட்டிக்கொண்டுபோய் விடப்ப
டவும், பொய்ச்சாட்சிகளினாலே குற்றஞ்
சாட்டப்படவும், திருக்கன்னத்திற் கைகளினா
லேயும், திருமேனியிற் கசைகளினாலேயும்,
அடிக்கப்படவும், திருமுகத்திலே துப்பப்
படவும், தூஷணங்களினாலே நிந்திக்கப்பட
வும், முண்முடி தரிக்கப்படவும், மூங்கிற்றடி
யால் அடிக்கப்படவும், உம்முடைய திரு
முகம் வஸ்திரத்தினாலே மூடப்படவும், திருத்
தோளின்பேரிற் பாரமான சிலுவை மரத்
தைச் சுமத்திக் கபாலமலைமட்டுக்குங் கூட்
டிக்கொண்டு போகப்படவும், திருச்சட்டை
யுரியப்படவும், இருப்பாணிகளினாலே அறை
யுண்டு இரண்டு கள்ளருக்கு நடுவிற் சிலுவை
யோடு உயர்த்தப்படவும், தாகத்திற்குப் பிச்
சோடே கலந்த காடியைக் குடிக்கக் கொடுக்
கப்படவும் திருவிலாவானது ஈட்டியாற் குத்
தித்திறக்கப்படவும், திருவுளமானீரோ
சுவாமி; பாவியாயிருக்கிற அடியேன் இவை
யெல்லாம் பத்தியோடே தியானிக்க அநுக்
கிரகஞ் செய்தருளும், தேவரீருடைய அர்ச்
சியசிஷ்ட இந்த நிர்ப்பந்தங்களையுஞ் சிலு



வையையும் திருமரணத்தையும்பார்த்து நரக
வேதனையைவிட்டு அகற்றி அடியேனை இரட்
சித்து உம்முடைய வலது பாரிசத்திலிருந்த
பச்சாத்தாபக் கள்ளனுக்குத் தந்தருளின
மோட்சபாக்கியத்தில் அடியேனையும் கூட்
டிக்கொண்டுபோகக் கிருபைபண்ணியருளுஞ்
சுவாமி.

பிதாவோடேயும், இஸ்பிரீத்து சாந்து
வோடேயுஞ்; சதாகாலஞ் சீவியருமாய் இரா
ச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்
கிற ஆண்டவரே.—ஆமென்சேசு.

சேசுக்கிறீஸ்துநாதரேசுவாமி தேவரீர் சிலு
வையிலே அறையுண்டிருக்கிறபொழுது அள
வில்லாத கஸ்தி நோவுகளை அநுபவித்தீரே,
விசேஷமாய்உம்முடைய திருஆத்துமந் திருச்
சரீரத்தை விட்டுப் பிரியும்பொழுது மிகுந்த
துக்கத்தை அடைந்தீரே, அந்தத் துக்கத்தை
ப்பார்த்துப் பாவியாயிருக்கிற அடியேன்
சாகிற தருவாயிலே, உலகம் பசாசு சரீர
மென்கிற சத்துருக்களாலே என் ஆத்துமத்
திற்கு யாதொரு மோசம் வரவொட்டாமற்
கிருபைபண்ணி இரட்சியும் சுவாமீ.—
ஆமென்சேசு.

* பிதாவாகிய சர்வேசுரா, தேவரீருக்கு உகந்த குமாரனுமாய் எங்களுக்குக் கர்த்தருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதர் எங்களுக்காக இத்தனை பாடுகளைப்பட்டாரோ அவருடைய திருமுகத்தைப் பார்த்து எங்கள் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளுஞ் சுவாமீ.

* தினவர் — இப்படி மூன்றுவிசை சொல்லுகிறது.

---

## ஐம்பத்து மூன்றுமணிச் *செபம் துவக்குகிற வகையாவது:

அளவில்லாத சகல நன்மை சுரூபியாயிருக்கிற சர்வேசுராசுவாமி! நீசமனுஷனுமாய் நன்றியறியாத பாவிகளுமாயிருக்கிற அடியோர்கள் மட்டில்லாத மகிமைப் பிரதாபத்தைக் கொண்டிருக்கிற தேவரீருடைய சந்நிதியிலே இருந்து செபம்பண்ணப் மாத்திரம் ஆகாதவர்களாயிருந்தாலும் தேவரீருடைய அளவில்லாத தயையை நம்பிக்கொண்டு, தேவரீருக்கு ஸ்துதி வணக்கமாகவும், அர்ச். தேவமாதாவுக்குத் தோத்திரமாகவும் ஐம்பத்து மூன்றுமணிச் செபம்பண்ண ஆசையாயிருக்கிறோம். இந்தச் செபத்தைப் பத்தியோடே செய்து பராக்கில்லாமல் முடிக்கத் தேவரீருடைய ஒத்தாசை கட்டளைபண்ணியருளுஞ் சுவாமீ.



சகலமான புண்ணியங்களுக்கும் விசுவாசம் என்கிற புண்ணியம் அஸ்திவாரமாயிருக்கிறபடியினாலே முந்த முந்த விசுவாச மந்திரஞ் சொல்லுகிறது.

பின்பு மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதர் சுவாமி படிப்பித்த பரமண்டலமந்திரஞ் சொல்லுகிறது.

* பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருக்கிற தேவமாதாவினுடைய பிரதான மகிமைகளைக் குறித்து மூன்று பிரதான புண்ணியங்களைக் கேட்கிறது.

பிதாவாகிய சர்வேசுரனுக்கு குமாரத்தியாயிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவ விசுவாசம் என்கிற புண்ணியம் உண்டாகிப் பலன் அளிக்கும்படி உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். பிரி.

சுதனாகிய சர்வேசுரனுக்குத் தாயாராயிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவ நம்பிக்கை என்கிற புண்ணியம் உண்டாகி வளரும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். பிரி.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ளவளாயிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவ பத்தி என்கிற புண்ணியமுண்டாகி அதிகரிக்கும்படிக்கு உம்முடைய திருக் குமாரனை வேண்டிக்கொள்ளும். பிரி. திரி. பர.

## சந்தோஷத் தேவ இரகசியங்கள்.

1-வது. கபிரியேல் சம்மனசு தேவமாதாவுக்கு மங்களவார்த்தை சொன்னது.

2-வது. தேவமாதா எலிசபெத்தம்மாளை மினவினது.

3-வது. கர்த்தர் பிறந்தது.

4-வது. சேசுநாதர்சுவாமி கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

5-வது. பன்னிரண்டு வயதில் காணமற்போன கர்த்தரைக் கண்டது.

## துக்கத் தேவ இரகசியங்கள்.

1-வது. சேசுநாதர் பூங்காவனத்தில் இரத்த வேர்வை வேர்த்தது.

2-வது. கர்த்தர் கற்றூணில் கட்டுண்டு அடிபட்டது.

3-வது. சேசுநாதர் முண்முடி சூட்டப்பட்டது.



4-வது. கர்த்தர் சிலுவை சுமந்து கொண்டு போனது.

5-வது. சேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதும், மரித்ததும்.

## மகிமைத் தேவ இரகசியங்கள்.

1-வது. சேசுநாதர்சுவாமி உயிர்த்தெழுந்தது.

2-வது. சேசுநாதர் பரலோகத்துக்கு ஆரோகணமானது.

3-வது. இஸ்பிரீத்துசாந்து தேவமாதாவின்பேரிலும், அப்போஸ்தலர்பேரிலும் எழுந்தருளி வந்தது.

4-வது. தேவமாதா தமது ஆத்தும சரீரத்தோடு பரலோகத்துக்கு எழுந்தருளினது.

5-வது. தேவமாதா இராக்கினியாக முடி சூட்டப்பட்டது.

### முடிக்கிற வகையாவது:

அதிபதியான அர்ச். மிக்கயேலே, தேவ தூதர்களான அர்ச். கபிரியேலே இரபயேலே அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும், நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்து மூன்று மணிச்

செபத்தையும், உங்கள் தோத்திரங்களோடே ஒன்றாகக்கூட்டி அர்ச். தேவமாதாவின் திருப் பாதத்திலே பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர.

---

### அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,
சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,
கன்னியாஸ்திரீகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,
கிறீஸ்துவினுடைய மாதாவே,
தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே,
மகா பரிசுத்த மாதாவே,
அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே,
பழுதற்ற கன்னியாஸ்திரீயாயிருக்கிற மாதாவே,
கன்னிசுத்தங்கெடாத மாதாவே,
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,
ஆச்சரியத்துக்குரிய மாதாவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



நல்ல ஆலோசனை மாதாவே,
சிருஷ்டிகருடைய மாதாவே,
இரட்சகருடைய மாதாவே,
மகா புத்தியுடைத்தான கன்னிகையே,
மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே,
பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே,
சத்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே,
தயையுள்ள கன்னிகையே,
விசுவாசியாயிருக்கிற கன்னிகையே,
தருமத்தினுடைய கண்ணாடியே,
ஞானத்துக்கு இருப்பிடமே,
எங்கள் சந்தோஷத்தினுடைய காரணமே,
ஞான பாத்திரமே,
மகிமைக்குரிய பாத்திரமே,
அத்தியந்த பத்தியுடைத்தான பாத்திரமே,
தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோஜா என்கிற புஷ்பமே,
தாவீதுராஜாவுடைய உப்பரிகையே,
தந்த மயமாயிருக்கிற உப்பரிகையே,
சொர்ணமயமாயிருக்கிற ஆலயமே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

வாக்குத்தத்தத்தின் பெட்டியே,
பரலோகத்தினுடைய வாசலே,
விடியற்காலத்தின் நட்சத்திரமே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பாவிகளுக்கு அடைக்கலமே,
கஸ்திப்படுகிறவர்களுக்கு தேற்றரவே,
கிறீஸ்துவர்களுடைய சகாயமே,
சம்மனசுக்களுடைய இராக்கினியே,
பிதாப்பிதாக்களுடைய இராக்கினியே,
தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,
வேதசாட்சிகளுடைய இராக்கினியே,
ஸ்துதியருடைய இராக்கினியே,
கன்னியாஸ்திரிகளுடைய இராக்கினியே,
சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே,
ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த இராக்கினியே,
திருச்செபமாலையின் இராக்கினியே,
சமாதானத்தின் இராக்கினியே,
உலகத்தின் பாவங்களைப் போக்குகிற....
மற்றதும்,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே! இதோ உம்முடைய சரணமாக ஓடிவந்தோம்; எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பாராமுகமாய் இராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்சம் உடையவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே! சகல ஆபத்துக்களிலேயும் நின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளும்.

முத.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக,

அ.—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சுவாமீ! முழுமனதோடே தெண்டனாகவிழுந்துகிடக்கிற இந்தக் குடும்பத்தைப் பார்த்து எப்பொழுதும் பரிசுத்த கன்னிகையான முத்திப்பேறுபெற்ற மரியாயுடைய வேண்டுதலினாலே, சகல சத்துருக்களின் சறபனையிலே நின்று பிரசன்னராய்த் தயைசெய்து இரட்சியும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திரு முகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

## கிருபைதயாபத்து மந்திரம்.

கிருபைதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே, வாழ்க. எங்கள் சீவமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே, வாழ்க. பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப்பார்த்துக் கூப்பிடுகிறோம். இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது, உம்மையே நோக்கிப் பெருமூச்சுவிடுகிறோம். ஆதலால் எங்களுக்காகவேண்டி மன்றாடுகிற தாயே, உம்முடைய தயாளமுள்ள திருக் கண்களை எங்கள்பேரில் திருப்பியருளும், இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசங் கடந்தபிற்பாடு, உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய சேசுநாதருடைய, பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும், கிருபாகரியே தயாபரியே, பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே,

சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத்தக்கதாக,

சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ சத்தி உடையவருமாய் நித்தியருமாயிருக்கிற சர்வேசுரா! முத்திப்பேறுபெற்ற கன்னித்தாயான மரியாயுடைய ஆத்துமமுஞ் சரீரமும் இஸ்பிரீத்து சாந்துவின் அனுக்கிரகத்தினாலே, தேவரீருடைய திருக்குமாரனுக்கு யோக்கியமான பீடமாயிருக்க ஏற்கனவே நியமித்தருளினீரோ;' அந்தத் திவ்விய தாயை நினைத்து மகிழ்கின்ற நாங்கள் அவளுடைய இரக்கமுள்ள மன்றாட்டினாலே, இவ்வுலகின் சகல பொல்லாப்புகளிலேயும், நித்திய மரணத்திலேயும் நின்று இரட்சிக்கப்படும்படிக்குக் கிருபைகூர்ந்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திரு முகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

## கடைசி வேண்டுதல்.

இடைவிடாமல் ஸ்துதிக்கப்பட யோக்கியமுமாய் யிருந்த மதுரமுள்ள பூசிதமுமாயிருக்கிற பரம திவ்வியநற்கருணைக்கே அநவரதகாலமும் முடியாத ஆராதனையும் ஸ்துதியுந் தோத்திரமும் உண்டாகக்கடவது.

ஜென்மப்பாவமில்லாமற் ஜென்மித்து எப்போதும் பரிசுத்த கன்னியாஸ்திரியுமாய்

நமது ஆண்டவருமாய்க் கொண்டாடப்பட்டவருமாயிருக்கிற அர்ச். தேவமாதாவினுடைய அமலோற்பவத்துக்கும், அர்ச். சூசையப்பருடைய பாக்கியமான மரணத்துக்குமே தோத்திரமுண்டாகக்கடவது.

தேவப்பிரசாதத்தின் தாயே! இரக்கத்துக்கு மாதாவே! அர்ச். மரியாயே! எங்கள் மாற்றானுடைய சோதனையிலேயும், மரண நேரத்திலேயும், உமது திருக்குமாரனை வேண்டி, எங்களைக் காக்கவும், ஆளவுங் கைக்கொண்டு நடத்தவும் வேணுமென்று உமது திருப்பாதம் முத்திசெய்து உம்மை மன்றாடுகிறோம். ஆமென் சேசு.

---

## சயன ஆராதனை.

சர்வேசுரா சுவாமீ! மனுஷர் சயனத்தால் இளைப்பாற இராத்திரிகாலங் கட்டளையிட்டருளினீரே, உமக்கே தோத்திரம் உண்டாகக் கடவது. இன்றெனக்குச்செய்த சகல உபகாரங்களுக்கும் உமக்குத் தோத்திரம்பண்ணி என்னாற் செய்யப்பட்ட பாவங்களை எல்லாம் பொறுத்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். அதுகள் தேவரீருடைய அளவில்லாத மகிமைக்கும் நன்மைத்தனத்துக்கும் விரோதமாயிருக்கிறதினாலே முழுதும் அதுகளை வெறுக்கிறேன். இந்த இராத்திரியிலே சடுதி மரணத்தினாலுந் துர்க்கனவு முதலான பசாசு சோதனைகளாலும் அடியேனுக்கு மோசம் வரவொட்டாமற் காத்துக்கொள்ளும். ஆ என் சேசுவே! என் மரண வேளையிலே இஷ்டப்பிரசாதத்தோடிருந்து உமது சிலுவையை ஆவலோடு தழுவி உயிர் விடவும் உமதிராச்சியத்தில் உம்மோடே நிரந்தரம் அடியேன் இளைப்பாறவுங் கிருபை செய்தருளும். ஆமென் சேசு.

---

## நித்திரை ஒழுக்கம்.

நீ நித்திரை செய்யப் போகையில் உன் படுக்கையைக் கல்லறையாக எண்ணி, நித்திரைச்சாயலாக மரணம் எத்தனை விரைவாய் வரலாமென்றும், அப்போது உலக சுக வெறுமான எண்ணங்களெல்லாம் எவ்விதமென்றுஞ் சிந்திப்பாய். சயன இளைப்பாற்றியால் சுவாமிக்குப் பணிபுரிய அதிக சக்தி உண்டாக உன் சயனத்தை அவர் அமல திருவுளத்துக்குத் தூய மனதோடே ஒப்புக்கொடு. நித்திரையிலே நீ விடுஞ் சுவாசமெல்லாம் நித்திரையற்ற பரம தூதரும் மற்றப் பரலோகவாசிகளும் இடைவிடாது செய்யுந்

தோத்திரத்துக்கு ஒப்பாகவேண்டுமென்று விரும்பி உன் இரட்சகருடைய திருக் கரத்தில் உறங்குவதாக எண்ணுவாய்.

நித்திரைக்குப் போகுமுன் தான் செய்த பாவங்களை சற்றுநேரம் யோசித்து, அந்தப் பாவங்களுக்காக மெய்யான மனஸ்தாபப் பட்டு, உத்தம மனஸ்தாப மந்திரம் சொல்லி நித்திரை செய்வது உசிதம்.

சேசு மரி சூசை என் ஆத்துமத்தையும், சரீரத்தையும் இன்றிரவு உங்களடைக்கலத் தில் ஒப்புக்கொடுக்கிறேன்.

மரித்தவர்களுக்காக 3-பர. பிரி. திரி.

---

# பூசை காணும் வகை.

## பூசைகாணப் போகும் ஒழுங்கு.

நீ பூசைகாணப் போகையில் உன் சிந்தனை பற்பல காரியங்களிற் பலவாறாய்ப் பிரிந்து அலையவொட்டாமல் ஒன்றுபடுத்தி ஒரே நிலையாக நிறுத்த உன்னால் இயன்றமட்டும் முந்த முந்தப் பிரயாசைப்படக்கடவாய். உன் திவ்விய இரட்சகரானவர் தாம் பலியாகப் போகிறதை நீ காணவுந் தம்மோடு நீ ஐக்கியமாகவும் உன்னைக் கூப்பிடும் இனிய சத்தம் உனது காதிற் கேட்கப்படுகிறதாக எண்ணிக்கொள்ளுவாய்.

நீ கோவிலுக்குப் போகும்பொழுது நம்முடைய ஆண்டவர் பட்ட திருப்பாடுகளுக்குந் திரு மரணத்துக்குங் கூட இருக்கத் தேவமாதாவோடும் மற்ற பத்தியுள்ள ஸ்திரீகளோடும் நீயுங் கல்வாரி மலைக்குப் போகிறதாகச் சிந்தனை செய்வாய். இரட்சகர் உன் பாவங்களினிமித்தஞ் சிலுவையின்பேரில் பலியாகிறதற்கு அதை உனக்கு முன்னாலே சுமந்து கொண்டு போகிறாரென்றும், அவருடைய பாடுகளுக்கெல்லாம் உன் பாவங்களே காரணமென்றும் நினைத்து உருகுவாய். நீ

கோவிலுக்குள்ளே பிரவேசிக்கிறபோது அந்தத் தேவாலயத்துக்குக் கர்த்தரான சர்வேசுரனுடைய சந்நிதானத்திலே மகா ஒடுக்க வணக்கத்தோடும் உன்னை மிகவுந் தாழ்த்தக்கடவாய். அங்கே திவ்வியநற்கருணை ஸ்தாபகம் பண்ணியிருந்தால் முழந்தாளிட்டு உன் இரட்சகருக்கு மகா பயபத்தியோடே ஆராதனை செய்வாய். தீர்த்தத்தைத் தொட்டுச் சிலுவை வரைந்துகொள்ளுகையில் உன் பாவங்களுக்குப் பொறுத்தல் அடையவுந் திவ்விய செம்மறிப்புருவையாகிய சேசுக்கிறீஸ்துநாதர் இரத்தத்தால் நீ உன் பாவங்களிலே நின்று கழுவப்பட்டுச் சுத்தமாகவும் மகா தாழ்ச்சியோடு வேண்டிக்கொண்டு அற்ப விக்கினமின்றி நீ தியானம்பண்ணத் தகுமான இடந்தேடி முழந்தாளிலேயிரு. அங்கே சுவாமி பிரத்தியக்ஷமாய் இருக்கிறாரென்று உறுதியாக விசுவசித்து இந்தப் பரம பூசித பயங்கரமான பலியை நீ தக்க நற்கருத்தோடே கண்டு ஒப்புக்கொடுக்க ஆண்டவர் இரங்கித் தயைபுரிய வேணுமென்று வேண்டிக் கொள்ளுவாயாக.

---



## பூசைக்குமுன் ஆயத்தச் செபம்.

கருணை நிறைந்த பிதாவே! இரக்கம் நிறைந்த கர்த்தாவே, பாவத்தால் கெட்டழிந்த மனுஷ சந்ததியை மீட்டு இரட்சிக்கும்படி உம்முடைய ஏகசுதன் முன்னாலே கொடிய வேதனைப்பட்டுச் சிலுவையில் உயிர்விடத் திருவுளமானதுமல்லாமல் அவர் அப்போது சிலுவையில் உமக்கு ஒப்புக்கொடுத்த பலி தேவரீருக்கு என்றென்றைக்குஞ் செலுத்தப்பட்டிருக்கவும், நாங்கள் அதினால் அடைய வேண்டிய பலனை இடைவிடாதடையவும் இந்தப் பூசைப் பலி எந்நாளுந் திருச்சபையில் நிறைவேறும்படிக்குச் சித்தமானீரே. உமது மட்டற்ற வல்லபமும் அளவற்ற ஞானமுங் குறையற்ற நன்மைத்தனமும் விளங்குகிற ஆச்சரியமான இந்தப் பூசையில் அடியோர் சாவதானத்தோடும், பயபத்தியோடும் இருக்கவும், உதிரஞ் சிந்தாத இந்தப் பலியைக்கொண்டு சிலுவையில் செலுத்திய உதிரப்பலியின் பேறுகளைக் குறை இல்லாமற் கைக்கொள்ளவும் அநுக்கிரகம் பண்ணியருள வேணுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

என் திவ்விய சேசுவே! தேவரீருடைய இனிய கருணையைப் பெற என் இருதயத்தை

தக்கதாக்கி என்னுடைய பொறிகளை நன்னெறியிலே நிறுத்திப் பாவியான அடியேனுடைய பாவங்களை உமது திருவுதிரத்தாற் போக்கி என் ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்தியருளும்.

தயாபரரான சர்வேசுரா! தேவரீர் அடியேனுடைய பாவங்களைப் பாராட்டாதேயும், தேவரீருக்குப் பொருந்தாதென்கிறதினாலே அதுகளை முழுதும் வெறுத்துத் தள்ளுகிறேன். ஆராகிலும் எனக்குப் பொல்லாப்பு செய்திருந்தால் அவர்களுடைய குற்றங்களை நான் நல்லமனதோடு பொறுத்துக்கொண்டு தேவரீரும் அடியேனுடைய பாவங்களைப் பொறுத்தருளவேணுமென்று மகா தாழ்ச்சியுடனே வேண்டிக்கொள்ளுகிறேன்.

என் மதுர சேசுவே, தேவரீர் அடியேனுக்காக முழுதும் உம்மைப் பலியாகத் தந்தீரே. அவ்வண்ணமாய்த் தேவரீருடைய திருவுளத்தோடு என் கருத்தையும் ஒன்றுபடுத்தி அடியேனை முழுதும் உமக்குப் பலியாகக் கொடுக்கிறேன்.—ஆமென்சேசு.

### பூசை ஆரம்பிக்கிறபோது.

ஆராதனைக்குப் பாத்திரமான ஏக திரித்துவமே! நீசப்பாவியாயிருக்கிற அடியேன்



தேவரீருடைய உந்நத மகிமைப் பிரதாபசோபனத்துக்குச் செய்யவேண்டிய பணிவிடை நமஸ்காரங்களைச் செய்யவேணும் என்கிற சுத்த கருத்துடனே உமது திருநாமத்தைக் குறித்து இந்த உந்நத பரமபூசையைக் காண்கிறேன். என் திவ்விய இரட்சகர் என் ஈடேற்றத்துக்காகக் கொடுக்கப்படுகிற இந்த மாட்சிமை பொருந்திய பலியைச் செலுத்துகிற குருவுடனே கூட நானும் என் கருத்தினாலே ஏகரித்து இந்தப் பலியை ஒப்புக்கொடுக்க எனக்கு விடை கொடுத்தருளும். என் பாவங்களுக்காகத் தேவரீர் கபால மலைமேல் சிலுவையில் அறையுண்டு செலுத்தின இரத்தப் பலியை நான் கண்ணாற் கண்டால் என் இருதயத்தில் எத்தன்மையான தேவ பற்றுதல் உண்டாகத் தகுமோ, அத்தன்மையான உத்தம கருத்தை இரத்தஞ்சிந்தாத பலியாகிய இந்தப் பூசை நேரத்திலும் என் இருதயத்திற் பிறப்பித்தருளுஞ் சுவாமீ.

### குரு பாவசங்கீர்த்தன மந்திரஞ் சொல்லுகிறபோது.

என் சர்வேசுரா, நான் தேவரீருக்குச் செய்த பாவதுரோகங்களை எல்லாந் தேவரீருடைய திருச் சமுகத்திலே சங்கீர்த்தனம்

பண்ணுகிறேன். நான் என் சிந்தனை வாக்குக் கிரியைகளினால் அநேக பாவ தோஷங்களைக் கட்டிக்கொண்டபடியினாலே கன்னியர் எல்லாரிலுந் தூய்மையான பரிசுத்த கன்னியாஸ்திரியாகிய அர்ச். மரியாயி சகல அர்ச்சியசிஷ்டவர்கள், சமஸ்த விசுவாசிகள் இவர்கள் முன்பாக நான் பாவி என்று வெளிப்படுத்துகிறேன். என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே. ஆகையால் எப்போதுங் கன்னிகையாகிய அர்ச். மரியாயையுஞ் சகல அர்ச்சியசிஷ்டவர்களையும் எனக்காக ஆண்டவரை வேண்டிக்கொள்ளவேணுமென்று மன்றாடுகிறேன். என் ஆண்டவரே, தயையோடே என் மன்றாட்டைக் கேட்டுக்கொண்டு எனக்குப் பாவ விமோசனமும் பொறுத்தலும் இஷ்டப்பிரசாதமுந் தந்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன் சுவாமீ.—ஆமென்சேசு.

## குரு சுவாமீ கிருபையாயிரும் என்கிற மந்திரஞ் சொல்லுகிறபோது.

எங்கள் ஆத்தும சிருஷ்டிகரான கர்த்தாவே, உம்மாலே படைக்கப்பட்ட எங்கள் ஆத்துமங்கள்பேரில் இரக்கமாயிரும். தயாள சம்பூரணரான பிதாவே! உம்முடைய பிள்ளை



கள் பேரில் தயையாயிரும். எங்கள் இரட்சணியத்தின் காரணருமாய் எங்களுக்காகப் பலியானவருமாயிருக்கிற கர்த்தாவே, உமது திரு இரத்தத்தினாலுந் திரு மரணத்தினாலும் வந்த பலன்களை எங்களுக்குக் கட்டளையிட்டருளும். மகா நேசத்துக்குரிய மதுர சேசுவே, எங்கள் நிர்ப்பாக்கியத்தைக் கண்டு இரங்கி எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

## குரு சம்மனசுகள் பாடின தேவஸ்துதி சொல்லுகிறபோது.

உந்நத பரமண்டலத்திற் சர்வேசுரனுக்குத் தோத்திரமும் பூலோகத்திற் சுத்த மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது, ஆண்டவரே, இராசாக்களுக்கு அதிபதி இராசாவே, உந்நத பரம கடவுளே, மெய்யான தேவனே, சர்வ வல்லபமுள்ள பிதாவே, தேவரீரை வாழ்த்தி ஸ்துதித்து ஆராதித்து வணங்கி நமஸ்கரித்து மிகுந்த தாழ்ச்சி விநயத்துடனே உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறோம். ஆராதனைக்குப் பாத்திரமான சேசுநாதா, பிதாவின் ஏக குமாரா, சர்வ சுயம்பர கர்த்தரான சர்வேசுரா, உலகத்தினுடைய பாவங்களைப்

போக்க வந்த சர்வேசுரனுடைய திவ்விய செம்மதிப்புருவையே, எங்கள்பேரில் இரக்கமாயிரும். பரமண்டலத்தில் உம்முடைய பிதாவோடு கூட இராச்சியபாரம் பண்ணுகிற நீர் எங்கள்பேரிலே உமது கருணைக் கண்ணைத் திருப்பும். எங்கள் கர்த்தரான சேசுவே, தேவரீர் ஒருவர் மாத்திரமே பிதாவினுடைய மகிமைச் சோபனத்தில் இஸ்பிரீத்துசாந்துவோடேகூட முடிவற்ற தோத்திரத்துக்குப் பாத்திரமானவருமாய் மட்டற்ற பரிசுத்தருமாய் அளவற்ற வல்லபமுள்ளவருமாய் இருக்கையில் தேவரீர் ஒருவர் மாத்திரமே எங்களை இரட்சிக்கக்கூடும் என்கிறதினாலே எங்களை இரட்சித்தருளும்.

ரேபம்.

என் ஆண்டவரே, அர்ச். தேவமாதாவினுடைய மன்றாட்டையும், நாங்கள் கொண்டாடுகிற அர்ச்சியசிஷ்டவர்களுடைய மன்றாட்டையுந் தேவரீர் ஏற்றுக்கொண்டு குருவானவர் தமக்காகவும் எங்களுக்காகவுஞ் செய்யும் வேண்டுதலையும் நான் ஆராருக்காக வேண்டிக்கொள்ள வேண்டியிருக்குமோ அவர்கள் கேட்கிற மன்றாட்டையுங் கட்டளைப் பண்ணியருளும். பின்னும் என் ஆண்டவரே, நானும்



அவர்களும் மோட்சக் கரை சேர எங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களை எல்லாருஞ் சேசுக்கிறிஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்துத் தந்தருளும்.

என் சர்வேசுரா, உமது சத்திய வேதத்தை அறியாத அநேகமாயிரம் பேர்களுக்குள்ளே அடியேனைத் தெரிந்தெடுத்துக்கொண்டு உமது திருவேதத்தை நான் அறியக் கிருபை செய்தீர்: இந்தத் திவ்விய வேதத்தை நான் முழுமனதோடே கைக்கொண்டு தீர்க்கதரிசிகளைக் கொண்டு தேவரீர் அறிவித்த சத்தியங்களை எல்லாம் மிகுந்த பூச்சியத்துடனே செவிகொடுத்துக் கேட்கிறதுமல்லாமல் அவைகள் தேவ வசனங்களாகையால் மிகவும் பணிந்த மனதோடு அதுகளை வர்த்தித்து மனமகிழ்ச்சியோடே அந்த வசனங்கள் நிறைவேறுகின்றதைக் கண்டு களிகூருகிறேன்.

தரு நிருபம் வாசிக்கிறபோது.

என் சர்வேசுரா, பூர்வ வேதத்தில் இருந்த அர்ச்சியசிஷ்டவர்களைப்போலே நானும் பரிசுத்த இருதயங் கொண்டிருந்தால் அல்லோ தாயினை. நான் பிதாப்பிதாக்களைப்போலே உம்மை அபேட்சித்துத் தீர்க்கதரிசிகளைப் போல் உம்மை அறிந்து நமஸ்கரித்து அப்

போஸ்தலர்களைப்போல் உம்மைச் சிநேகித்து முழுதும் உமது பாரிசமாய் இருக்கக்கடவேனாக.

### திரு சுவிசேஷம் வாசிக்கிறபோது.

என் சர்வேசுரா, இனி நான் நடக்கவேண்டிய வழியை அப்போஸ்தலருந் தீர்க்கதரிசிகளும் அல்ல, உம்முடைய ஏகசுதன் தானே எனக்குப் படிப்பிப்பவர். அவருடைய திரு வசனங்களைத்தானே கேட்கப்போகிறேன். ஆனால் ஐயையோ என் ஆண்டவராகிய சேசுவே, இந்த வசனங்கள் உம்முடைய திரு வசனங்களென்று விசுவசித்தும் என் விசுவாசத்துக்கொத்த பிரகாரம் நடவாமற் போவேனேயாகில் எனக்கென்ன பிரயோசனம்? உமது திருச் சமுகத்தில் தேவ சிநேகமும், நற்கிரியையும் இல்லாமல் விசுவாச மாத்திரம் இருந்தால் எனக்கு வரும் பலன் என்ன? நான் விசுவசித்தாலும் விசுவசியாதவனைப்போலவும் ஒன்றில் உமது சுவிசேஷத்துக்கு விரோதமான மற்றொன்றை விசுவசிக்கிறவனைப்போலவும் நடந்துவருகிறேன். என் சர்வேசுரா, உமது போதனைக்கும் எனது நடத்தைக்கும் உண்டாயிருக்கிற மாறுத விரோதத்துக்குத் தக்கபடி என்னைத் தீர்வை



இடாதேயும். என் ஆண்டவரே, நான் முழு மனதோடு உமது சத்தியத்தை விசுவசிக்கிறேன், என் விசுவாசத்துக்கு ஒத்தவண்ணம் நான் நடக்க எனக்கு வேண்டிய தைரியமும் பலமுங் கட்டளை பண்ணியருளும். ஆண்டவரே அதினால் உமக்கே ஸ்துதியுந் தோத்திரமும் உண்டாகும்.

### திரு விசுவாச மந்திரஞ் சொல்லுகிறபோது.

சகலத்தையும் படைத்தவருமாய்ச் சர்வ வல்[illegible]யுள்ள பிதாவுமாயிருக்கிற ஏக சர்வேசுர[illegible]சுவசிக்கிறேன். அர்ச்சியசிஷ்ட த[illegible]ம் வல்லபத்திலும் நித்தியத்துவத்திலும் தேவத்துவத்திலும் பிதாவுக்குச் சரிசமானமான ஏக சுதனுமாய் நம்முடைய ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதரையும் விசுவசிக்கிறேன். இவர் மனுஷாவதாரம் எடுத்துக் கடின பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தருளி மோட்சத்துக்கு ஆரோகணமானார் என்றும், இனி மனுஷரை நடுக் கேட்க எழுந்தருளி வருவாரென்றும், பிற்பாடு நித்திய காலம் முடிவற்ற பாக்கியமான இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருப்பார் என்றும் உறுதியாக விசுவசிக்கிறேன். பிதா

வுக்குஞ் சுதனுக்குஞ் சரிசமான தேவனுமாய்
அவர்களிடத்திலே நின்று புறப்பட்டு அவர்
களோடு ஒத்த மகிமையையும் அர்ச்சனையை
யும் உடையவருமாய் நித்திய சீவியத்தின்
ஊறணியுமாய் மனுஷரை அர்ச்சிக்குங் கார
ணருமாய்த் தீர்க்கதரிசிகளுக்கு ஞானங்
கொடுக்கிறவருமாயிருக்கிற இஸ்பிரீத்துசாந்
துவையும் விசுவசிக்கிறேன். அப்போஸ்த
லர்களாலே போதிக்கப்பட்ட ஏக கத்தோ
லிக்குத் திருச்சபையையும் பாவப் பொறுத்
தலுக்கான ஞானஸ்நானத்தையும் விசுவசிக்
கிறேன். சர்வேசுரனுடைய கிருபையினால்
மரித்தவர்களிடத்திலே நின்று எழுந்து நித்
திய சீவியத்தை அடைவேனென்று திடமு
மனதோடே நம்பிக்கொண்டிருக்கிறேன்.—
ஆமென்சேசு.

### குரு அப்பத்தைக் கையில் ஏந்திக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறபோது.

மட்டற்ற வல்லபத்தையும் அளவற்ற பரி
சுத்தத் தன்மையையுங் கொண்டிருக்கிற நித்
திய சர்வேசுரா, நான் உமது திருச் சமுகத்
திலே நிற்க எவ்வளவு அபாத்திரனாயிருந்தா
லும் என்னுடைய இரட்சகராகிய சேசுக்கி



றீஸ்துவானவர் இந்தப பலியை உண்டுபண்
ணினபோதும் எனக்காக இந்தப் பீடத்தின்
பேரில் இன்னம் பலியாகப்போகிற இந்தத்
தருணத்திலும் அவருக்குள்ள கருத்துடனே
என் கருத்தையும் ஒன்றாகக் கூட்டிக் குருவின்
கைங்கிரியத்தைக் கொண்டு உமக்கு இந்தப்
பலியை ஒப்புக்கொடுக்கிறேன். அடியேன்
பேறுஞ் சர்வ படைப்பு[illegible]க்கள்
பேரிலுந் தேவரீருக்குள்ள மேலான கர்[illegible]
துவத்தை அறிந்து நமஸ்கரிக்கவும் என்
பாவங்களுக்குப் பொறுத்தல் அடையவும்
எனக்கு நீர் செய்த எண்ணிறந்த உபகாரங்
களுக்கெல்லாம் நன்றியறிந்த தோத்திரமாக
வுந் தேவரீருக்கு இந்தப் பலியை ஒப்புக்
கொடுக்கிறேன் சுவாமீ.

உடையாய் என் சர்வேசுரா! சகல பாவ
பொறுத்தலுக்காகப் பலியானவருமாய் எல்
லாத்திலும் பரிசுத்தருமாயிருக்கிற உம்மு
டைய ஏக சுதனுடைய புண்ணியத்தைக்
குறித்துப் பாவிகளுக்காகத் [illegible]ப்பட்ட
இரட்சணியத்தின் இஷ்டப்பிரசாதப் பலன்
களை அடியேனும் என் தாய் தந்தை உறவின்
முறையார் உபகாரிகள் சிநேகிதர் பகைவர்
எல்லோரும் அடையும்படிக்கும் இந்தத் திவ்

விய பலியைத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

பின்னும் அடியேன் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தப் பூசையின் பலனை அர்ச்சியசிஷ்ட பாப்பு மேற்றிராணிமார் குருக்கள் இராஜாக்கள் பிரபுக்கள் சகலமான கிறீஸ்துவர்களும் அடையப்பண்ணியருளும்.

என் ஆண்டவ்ரோ, உம்முடைய திருக்குமாரன் பேறுபெற்ற பலன்களைப் பார்த்து, உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிற ஆத்துமாக்கள்மேல் இரங்கி அவர்களுக்கு இளைப்பாற்றியும் பிரகாசமும் சமாதானமும் உள்ள இடத்தைக் கட்டளையிட்டருளும்.

என் சர்வேசுரா, உம்முடைய சத்துராதிகளுக்கும் என் விரோதிகளுக்குந் தயை புரிந்தருளும், அஞ்ஞானிகள் பதிதர் பொல்லாத கிறீஸ்துவர்கள்பேரில் இரக்கமாயிரும். என்னை உபத்திரவப்படுத்துகிறவர்களை ஆசீர்வதித்தருளும். அவர்கள் எனக்குச் செய்கிற குற்றங்களை நான் நல்ல மனதோடு பொறுத்துக்கொள்ளுகிறதுபோலே அடியேன் தேவரீருக்குச் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்தருளும்.



பலிக்கு ஆயத்தமான ஜெபத்தைக் குருவானவர் சொல்லுகிறபோது.

சம்மனசுகளுக்கும் மனுஷருக்கும் அதிபதி இராசாவானவர் இதோ இந்தப் பீடத்தின்மேல் எழுந்தருளி வரப்போகிறார். உலக காரியங்களின்மேல் என் சிந்தை கவிழ்ந்து உழலாமல் உம்மை மாத்திரமே நாடியிருக்க, ஆண்டவரோ எனக்கு உமது ஞானத்தை நிரம்பத் தந்தருளும். பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் பரம கர்த்தருமாய்ச் சர்வ வல்லபமுள்ளவருமாயிருக்கிற நித்திய பிதாவே, நான் எக்காலத்திலும் எவ்விடத்திலும் உம்மை வாழ்த்தி ஸ்துதித்துக்கொண்டு வர எனக்குக் கடனுண்டே. அவ்விதமாகத் தேவரீரை இடைவிடாமல் ஆராதித்துக்கொண்டு வரும்படிக்குச் சேசுக்கிறீஸ்துநாதரோடே ஐக்கியப்படுவதைவிட நீதமும் உத்தமமுமானது ஒன்றுங் காணேன் சுவாமீ. சகல முத்திப்பேறு பெற்றவர்களும் அவரைக் கொண்டு தேவரீருக்கு அர்ச்சனை பண்ணுகிறார்கள். சகல சம்மனசுகளும் பூசித அச்சத்தோடு நடுக்கமுற்றுத் தங்களில் ஒருமித்து அவரைக்கொண்டு தேவரீரை ஸ்துதித்துப் புகழுகிறார்கள். ஆண்டவரோ, எங்

கள் அற்பப் புகழை அந்தச் சம்மனசுகளுடைய திருப்புகழோடு ஒன்றாகக் கூட்டித் தேவரீருக்குக் காணிக்கையாய் வைக்க எங்களுக்கு உத்தாரந்தந்தருளும்.—ஆமென்சேசு.

### தூய பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்னுந் திருப்புகழ் கூறுகிறபோது.

நாங்கள் சந்தோஷத்தினால் அகமகிழ்ந்து பிரமித்துத் தளத்துக்குக் கர்த்தனாகிய தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்றும் அவருடைய மகிமைப் பிரதாபம் உலகமெங்கும் நிறைந்திருக்கிறதென்றுஞ் சம்மனசுக்களும் முத்திப்பேறுபெற்றவர்களும் அவரைப் பரலோகத்தில் ஸ்துதிக்கிறது போலே நாங்களும் அவரைப் புகழக்கடவோமாக. பிதாவுக்குச் சரிசமான தேவனுமிருந்தும் பிதாவினால் அனுப்பப்பட்டுப் பூலோகத்தில் எழுந்தருளி வருகிறவருக்கு மாறாத தோத்திரம் உண்டாகக்கடவதென்னுந் தேவ ஸ்துதியைக் கூறுவோமாக.

### பரிசுத்தர் என்கிற மந்திரஞ் சொன்ன பிறகு.

மட்டற்ற தயை நிறைந்த பிதாவே, தேவரீருக்கு ஏக சுதனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து நாங்கள் தேவரீருக்குச்



செலுத்துகிற இந்தக் காணிக்கையைக் கையேற்றுக்கொண்டு சத்திய சாதாரண சபையாகிய கத்தோலிக்குத் திருச்சபையையும் அதற்குப் பிரத்தியக்ஷ தலைவராகிய அர்ச். பாப்பானவரையும், மேற்றிராணிமார்களையும் சகல விசுவாசிகளையும் ஆண்டளித்துக் காத்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

பின்னும் எங்கள் தந்தை தாய் உறவின்முறையார் சிநேகிதர் உபகாரிகள் பகையாளிகளுக்கும் இந்தத் திவ்விய பூசையைக் காண்கிறவர்களுக்கும் விசேஷமாய் (இன்னார் இன்னாருக்கும்) வேண்டிய உதவி சகாயங்களைக் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ. நாங்கள் கேட்கிற மன்றாட்டுத் தேவரீருக்குமிக பிரியமாகும்படிக்கு அர்ச். தேவமாதா அப்போஸ்தலர் வேதசாட்சிகள் இவர்களுடைய மன்றாட்டுகளுடனே எங்கள் மன்றாட்டுகளையுங் கூட்டித் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்கிறோம்.

முன்னாள் பிதாப்பிதாக்கள் உலக இரட்சகர் எப்போது வருவாரோவென்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்ததுபோலே இப்போது நாமும் அவர் இந்தப் பீடத்தின்மேல்

எப்போது எழுந்தருளி வருவாரோவென்று மிகுந்த பத்தி ஆசையோடே காத்திராமல் இருப்பேனே? அவர்களிடத்திலே விளங்கின விசுவாசமும் தேவ சிநேகமும் என்னிடத்திலேயும் விளங்காதிருக்குமோ?

ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே, உலோக பாவங்களைப் போக்குகிறவரே, எழுந்தருளி வாரும்; உம்முடைய அற்புதங்களில் மேலான அற்புதமாகிய இந்தப் பரம இரகசியத்தை நிறைவேற்ற வாரும். இதோ உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப்புருவையானவர் எழுந்தருளி வருகிறார். என்னை உண்டாக்கி இரட்சித்த கர்த்தர் உன்னத மோட்சத்தில் நின்று என்னைப்பற்றிப் பலியாய் இறங்கி வருகிறார். என் ஆத்துமமே, பத்தியோடே அவரை ஸ்துதித்து ஆராதிப்பாயாக.

### ௩௩ தேவநற்கருணை எழுந்தருளப் பண்ணுகிற போது.

அவதரித்த வார்த்தையே, திவ்விய சேசுவே, மெய்யான தேவனும் மெய்யான மனுஷனும் ஒன்றானவரே, தேவரீர் இந்தப் பீடத்தின் பேரிலே மெய்யாகவே எழுந்தருளி வந்



திருக்கிறீர் என்று உறுதியாக விசுவசித்து மிகுந்த தாழ்ச்சியோடு வணங்கி ஆராதித்து முழுமனதோடு உம்மை அபேட்சித்து நேசிக்கிறேன். என்மேல் வைத்த நிகரில்லாத அன்பினால் தேவரீர் இந்தப் பீடத்தின்மேல் எழுந்தருளி வந்தமையால் என்னை முழுதும் உமக்குத் தேவ வசீகரம் பண்ணுகிறேன் சுவாமி.

சகல மனுஷருக்காகத் தேவரீர் சிந்தின இந்த விலைமதியாத திரு இரத்தத்தை ஆராதனை பண்ணுகிறேன். என் சர்வேசுரா, எனக்காகச் சிந்தின இந்தத் திரு இரத்தம் வீண்போகாதென்று நம்புகிறேன். உமது திரு இரத்தத்தின் பலன்களை நான் அடையும்பொருட்டாக அநுக்கிரகம் பண்ணியருளும். மகா அன்புக்குரிய என் திவ்விய சேசுவே, எனக்காக உம்முடைய இந்தத் திரு இரத்தத்தைச் சிந்த உண்டாயிருந்த அளவில்லாத உமது சிநேகத்துக்கு நன்றியறிந்த தோத்திரமாக நானும் என் இரத்தத்தையெல்லாந் தேவரீருக்கு முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

## தேவநற்கருணை எழுந்தருளப் பண்ணின பின்பு.

என் ஆண்டவரே, தேவரீர் செய்த இவ்வற்புதத்தை நான் கண்ணாற் கண்டிருந்தும் தேவரீருக்கு எருத துரோகங்களைச் செய்யத் துணிந்தேனாகில் என் அக்கிரமமும் நன்றி கெட்டத் தன்மையும் இவ்வளவென்று சொல்லி முடியுமோ? இந்தப் பூசிதமான பலிச் சடங்குகளைக் கொண்டு தேவரீர் எனக்குக் காட்டுகிற உம்முடைய பாடுகளின் கடின வேதனைகளையும், உத்தானத்தின் ஒட்டோலகத்தையும் நான் ஒருபோதும் மறப்பதில்லை சுவாமி. அடிகளாற் கிழிந்து தெறிபட்ட உமது திருச் சரீரமும் எங்களுக்காகச் சிந்தின திரு இரத்தமும் இதோ என் கண்முன்பாக இந்தப் பீடத்தின்மேற் பிரத்தியட்சமாய் எழுந்தருளி இருக்கிறதாமே. நித்திய ஆனந்த மகிமைப் பிரதாபமுள்ள பிதாவே, இதோ தேவரீர் சித்தமிரங்கி அடியோர்களுக்குத் தந்தருளின மாசற்ற செம்மறிப்புருவையைத் தேவரீருக்கு மெய்யாகவே பலியாக ஒப்புக்கொடுக்கிறோம்.

முன்னாள் அபேல் அபிராம் மெல்கிசெதேக் என்கிற மகாத்துமாக்கள் செலுத்தின



பலியெல்லாம் இந்த மெய்யான பலியின் குறிப்பாயிருந்ததொழிய வேறல்ல. உமது நித்திய நேசரான சுதனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்து ஒருவர் மாத்திரமே உமது பீடத்துக்கு யோக்கியமான பலியாயிருக்கிறார். நாங்கள் அவரைத்தானே தேவரீருக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறோம்.

இந்த உந்நத பலியில் தங்கள் தங்கள் மனமொழிகளால் ஒன்றித்திருக்கிறவர்கள் எல்லாரும் அதினால் வரும் பலனை அடையக்கடவார்கள்.

என் ஆண்டவரே! திருச்சபையில் மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்துமங்களுக்கும் இந்தத் திவ்விய பலியின் பலன் பங்குண்டா யிருக்கக்கடவது. விசேஷமாய் இந்தத் திவ்விய பலியைப் பார்த்து (இன்னார் இன்னாருடைய) ஆத்துமங்களின் வேதனையை நீக்கி அவர்களுக்கு இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

அநந்த காருண்ணியரான பிதாவே, இனி ஒருநாள் எங்களுக்கும் இந்த உபகாரத்தைக் கட்டளையிட்டு நித்திய காலம் நாங்கள் அப்போஸ்தலர் வேதசாட்சிகள் சகல அர்ச்சிய

சிஷ்டவர்களுடனே கூடத் தேவரீரைச் சிநே
கித்து ஸ்துதித்துத் தோத்தரித்துக் கொண்
டிருக்கும்படியாய் எங்களுக்கு அநுக்கிரகம்
பண்ணியருளும்.

### துரு பரமண்டல மந்திரஞ் சொல்லுகிற போது.

என் சர்வேசுரா, தேவரீர் எனக்குப் பிதா
வாயிருக்கிறபடியால் எனக்கு எத்தனையோ
பாக்கியம். தேவரீர் வீற்றிருக்கிற மோக்ஷ
விராச்சியமே ஒருநாள் என் குடியிருப்பாகு
மென்று நினைக்கும்போது எனக்கு எத்தனை
யோ அகமகிழ்ச்சி. உமது திருநாமம் உலக
மெங்கும் ஸ்துதிபெறக்கடவது. சகல மனு
ஷர் இருதயத்திலும் நினைவிலும் ஏகாதிபதி
யாய் நின்று ஆண்டருளும். உமது பிள்ளை
களுக்கு வேண்டிய ஆத்தும சரீர உணவுகள்
குறைபடவொட்டாதேயும். புறத்தியாரு
டைய குற்றங்களை நாங்கள் முழுமனதோடு
பொறுத்துக்கொள்ளுகிறோம். தேவரீரும்
எங்கள் குற்றங்களைப் பொறுத்தருளும்.
இந்த நிர்ப்பாக்கியம் நிறைந்த உலகத்தில்
நாங்கள் சீவித்திருக்குமட்டும் எங்களை அடர்
ந்துவருஞ் சோதனையில் நாங்கள் அகப்பட்டு
மோசம் போகவொட்டாதேயும். சகல கேட்



டிலுங் கொடிய கேடாகிய பாவத்தில் எங்
களை விழவொட்டாமற் காத்திரட்சியும்.
ஆமென்சேசு.

### துரு உலோக பாவங்களைப் போக்கிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே என்கிற மந்திரஞ் சொல்லிப் பிழை தட்டிக் கொள்ளுகிறபோது.

எனக்காகப் பலியான சர்வேசுரனுடைய
திவ்விய செம்மறிப்புருவையே, என்மேல்
இரக்கமாயிரும். என் இரக்ஷண்ணியத்துக்
காக ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆராதிஷ்டப்
பலியே, என்னை இரட்சித்துக்கொள்ளும்.
பிதாவினிடத்தில் எனக்காக மனுப்பேசும்.
பரம கர்த்தரே, உம்முடைய பிதாவினிடத்
தில் எனக்கு வேண்டிய இஷ்டப்பிரசாதத்
தை நான் அடையச் செய்து உமது சமாதா
னத்தை எனக்குத் தந்தருளும்.

### துரு தேவநற்கருணை உட்கொள்ளுகிறபோது.

என் ஆத்தும நேசரான இரட்சகரே, சுத்த
இருதயமும் உருக்கமுள்ள பத்தியுமேலிட்
டதினால் நாள்தோறுந் தேவரீருடைய திவ்
விய நற்கருணையை உட்கொள்ளுகிற பாக்கிய
வான்களிலே நானும் ஒருவனாயிருந்தா
லல்லோ எனக்கு இனிய ஆனந்தமாகும். இத்

தருணத்தில் உம்மை என் இருதயத்தில் அடைந்து வணங்கி நமஸ்கரித்து என் அவசரங்களை எல்லாம் உமக்கு வெளியாக்கி மெய்யாகவே தேவரீரை உட்கொள்ளுகிற பாக்கியவான்களுக்குத் தேவரீர் கொடுத்தருளுகிற இஷ்டப்பிரசாதங்களுக்கு நானும் பங்காளியானால் எனக்கு எத்தனையோ நன்மை. ஆனால் என் கர்த்தரே, நான் முழுதும் அபாத்திரனாயிருக்கிறபடியினாலே என் ஆத்துமத்தின் குறைகளைத் தீர்த்தருளும். நான் செய்த பாவதோஷங்களை எல்லாம் பொறுத்தருளும். தேவரீருக்குப் பொருந்தாதென்கிறதினால் அதுகளை அருவருத்துத் தள்ளுகிறேன். நான் உம்மோடு ஐக்கியமாக வேணுமென்று மிகவும் அபேட்சிக்கிற உண்மையான என் ஆசையைக் கையேற்றுக்கொள்ளும். என்னை உமது கடைக்கண்ணாற் பார்த்துச் சுத்திகரித்தருளும். தாமதமின்றியே உம்மை நான் உரியமுறையோடு உட்கொள்ள என்னை ஆயத்தப்படுத்தும். அந்தப் பாக்கியமான நாள் வருகிறதுக்குள்ளாகக் குருவானவர் தேவநற்கருணையை உட்கொண்டதினால் இந்தத் திவ்விய பூசையைக் காண்கிற சகல விசுவாசிகளுக்கும் வரவேண்டிய பலன் அடியேனுக்கும் பங்குண்டாயிருக்கக் கிருபை செய்



தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். இந்தத் தேவதிரவிய அநுமானத்தின் பலத்தினால் என் விசுவாசத்தை வளரப்பண்ணும். என்னிடத்திலுள்ள அன்பைச் சுத்தமாக்கும். நான் உம்மையே நாடி உமக்காகவே ஜீவித்திருக்கும்படி உமது அன்பை எனக்கு நிறையக் கொடுத்தருளும்.

### குரு கடைசிச் செபஞ் சொல்லுகிறபோது.

என் கர்த்தரே, தேவரீர் என்னுடைய இரட்சணியத்துக்காக பலியானதினால் என்னை முழுதும் உமது தோத்திரத்துக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறேன். உமக்குப் பலியான என்னை உமது சித்தத்துக்கு ஒத்த வண்ணமாய் நடத்தும், நான் அநுபவிக்கவேணுமென்று தேவரீர் சித்தமாயிருக்கிற துன்பதுரிதங்களை முழுமனதோடு அங்கீகரிக்கிறேன். அதுகள் தேவரீர் கையிலிருந்து வருகிறபடியினாலே அதுகளை வாழ்த்திக் கையேற்றுக்கொண்டு தேவரீருடைய துன்ப துரிதங்களோடே ஒன்றாகக்கூட்டி உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

இந்தத் திவ்விய பூசையின் பலனால் என்னைச் சுத்திகரித்தருளும். இனி அற்பப் பாவங்களையும் அருவருத்துத் தள்ளுவேன்.

விசேஷமாய் என்னிடத்தில் இருக்கிற பிரதான துர்க்குணத்தினால் மேற்கொள்ளுகிற பாவத்திலே விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்பேன். உம்முடைய திருக் கற்பனைகளின்படியே பிரமாணிக்கமாய் நடக்க வருந்துவேன். உம்முடைய திருக் கற்பனைகளை மீறுகிறதைவிடச் சகல துன்பதுரிதங்களையும் அநுபவிக்கவும் உயிரை முதலாய் இழக்கவுந் துணிந்திருக்கிறேன் சுவாமீ.

## குரு ஆசீர்வாதங் கொடுக்கிறபோது.

என் சர்வேசுரா, நான் பண்ணின இந்த நல்ல பிரதிக்கினைகளை ஆசீர்வதித்தருளும். பின்னையும் உம்முடைய ஸ்தானாபதியாகிய குருவின் கையால் எங்களை ஆசீர்வதித்தருளும். அந்த ஆசீர்வாதத்தின் பலன் நிரந்தரம் எங்கள்மேல் குடிகொண்டிருக்கக்கடவது. பிதாவுடையவுஞ் *சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே.—ஆமென்சேசு.

## குரு கடைசி சுவிசேஷம் வாசிக்கிறபோது.

திவ்விய வார்த்தையுமாய்ப் பிதாவினுடைய ஏக குமாரனுமாய் மோட்ச வழியை அடியோர்களுக்குக் காண்பிக்கப் பரலோகத்



திலேநின்று எழுந்தருளிவந்து இவ்வுலகத்துக்குப் பிரகாசமுமாயிருக்கிற சேசுவே, தேவரீர் பிதாவினால் அனுப்பப்பட்டீரென்று ஏற்றுக்கொள்ளாமற் பிறக்கணித்துத் தள்ளிவிட்டு நித்திய கேட்டுக்குள்ளான அவிசுவாசிகளைப்போலே நான் ஆகாதபடிக்குக் காத்தருளும். தேவரீர் தந்தருளவந்த சர்வேசுரனுடைய பிள்ளைகள் என்கிற மகிமையான சுவீகாரத்துக்குப் பங்காளிகளாகிறதைப் பார்க்கிலும் பசாசின் அடிமைகளாகிறது தாவிளையென்று எண்ணின அந்த நிர்ப்பாக்கியருடைய குருட்டாட்டத்திலே நானும் விழாதபடிக்குக் காப்பாற்றி இரட்சியுஞ் சுவாமீ.

அவதரித்த வார்த்தையே, உம்மை மகா தாழ்ச்சி விநயத்துடனே வணங்கி நமஸ்கரிக்கிறேன். நீர் என்னுடைய கர்த்தாவுமாய்ச் சகல மனுஷரையும் இரட்சிக்க மனுஷனான தேவனுமாயிருக்கிறதினாலே நான் அர்ச்சியசிஷ்டவனாகவும் உம்மை நிரந்தரம் பரலோகத்தில் தெரிசித்திருக்கவும் வேண்டிய வரப்பிரசாதங்களைக் கட்டளையிடுவீரென்று உறுதியாக விசுவசித்து உம்முடையபேரில் என் நம்பிக்கை யாவும் வைத்திருக்கிறேன் சுவாமீ.—ஆமென்சேசு.

## பூசை முடிந்தபின்
## செபம்.

ஆண்டவரே, இந்தப் பூசை காண்கிற பாக்கியம் அநேகம் பேர்களுக்குக் கிடையாமலிருக்க அடியேனுக்குக் கிடைக்கத் தயைபுரிந்ததினாலே உமக்கு நன்றியறிந்த தோத்திரம்பண்ணுகிறேன். உம்முடைய திருச்சமுகத்தில் என்னுடைய அசட்டையினாலேயும் பராக்கினாலேயுஞ் செய்த தப்பிதங்களையும் அநாசாரங்களையும் பொறுத்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். சர்வேசுரா சுவாமீ! நான் செய்த பாவங்களுக்குப் பொறுத்தலும் இனி அதுகளில் விழாதபடிக்கு இஷ்டப்பிரசாதமும் பலமும் இந்தத் திவ்விய பலியினால் எனக்குத் தந்தருளும். இதோ தேவரீரை நம்பிக்கொண்டு உம்முடைய சித்தத்தின்படியே நடக்கப் பிரதிக்கினை பண்ணுகிறேன். நீர் எனக்கு இப்போது செய்த உபகாரத்தை நான் இந்த நாள் முழுதும் நினைத்துக்கொண்டு வருவதன்றியே நான் இப்போது அடைந்த பூசையின் பலனை இழந்துபோகப் பண்ணக்கூடுமான அற்ப துராசைக்கும் நினைவுக்கும் வார்த்தைக்கும் இடங்கொடாமல் இருக்க உமது திவ்விய



அனுக்கிரக உதவியால் தீர்மானித்திருக்கிறேன் சுவாமீ.—ஆமென்சேசு.

¶ பூசை இல்லாத இடங்களில் ஞாயிற்றுக்கிழமைகளிலேயுங் கடன் திருநாட்களிலேயுந் திவ்விய பூசையைக் காண ஆசையோடுஞ் சுத்த கருத்தோடும் மேற்சொல்லிய மந்திரங்களைச் செபித்துக்கொள்வீர்களாக.

---

# திவ்விய பூசை காணச் சுருக்கமான வகை.

### பூசை ஆரம்பமுதல் சுவிசேஷம் வாசிக்கிற வரையில்.

என் சர்வேசுரா சுவாமி! தேவரீர் என் ஆத்துமத்தின் காரணக் கர்த்தாவாகவும் எஜமானாகவும் இருக்கிறீரென்று நான் அங்கீகரித்து தேவரீரை ஆராதனை பண்ணுகிறேன். என் உயிர் ஸ்திதியனைத்தும், மற்றெனக்குள்ள யாவும், தேவரீராலேயே எனக்குக் கிடைத்தது. ஆகையால் தேவரீருடைய உன்னத மகத்துவத்துக்குரிய அளவற்ற ஆராதனை வணக்க தோத்திரங்களை நான் செலு

த்தவேண்டியவனாயிருந்தாலும், இப்பேர்ப்பட்ட பெரிய கடமையை நிறைவேற்ற நீசப் பாவியாகிய என்னாலே எவ்வளவேனும் கூடாதாயிருக்கின்றது. எனது திவ்விய இரட்சகர்தானே இத்திருப்பீடத்தில் எழுந்தருளி வந்து தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற தமது தாழ்மை நிந்தை அவமானங்களையும், ஆராதனை நமஸ்காரங்களையும் நானும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

எனது திவ்விய இரட்சகர் செய்வதையே நானும் அவரோடு ஒன்றித்துச்செய்ய ஆசைப்படுகிறேன். தேவரீருடைய திவ்விய மகிமைப்பிரதாப சந்நிதியில் அடியேன் சாஷ்டாங்கமாக விழுந்து தாழ்ச்சியோடு தேவரீரை ஆராதிக்கிறேன். திவ்விய கர்த்தருடைய நிந்தை அவமானமுள்ள பாடுகளோடு ஒன்றித்து தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறேன். எனது திவ்விய கர்த்தர் எனக்குப் பதிலாய் அளவற்ற ஆராதனை வணக்கஸ்தோத்திரங்களை தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறதைப் பார்த்து நான் மனமகிழ்ந்து அக்களிக்கிறேன். என் சர்வேசுராசுவாமி! தேவரீருடைய திவ்விய மகத்துவ சந்நிதானத்திற்கு இத்திருப்பலி பூசை அளவில்லாத



ஆராதனையாயிருப்பதைப் பார்த்து உண்மையாகவே நான் களிகூருகிறேன். என்றால் இயன்றமட்டும் இந்தப் பூசைப்பலியைக் கண்டு சந்தோஷித்து, தேவரீரை வாழ்த்தி ஸ்துதிக்கிறேன்.

### சுவிசேஷம் வாசித்ததுமுதல் திவ்விய சற்பிரசாத எழுந்தேற்றம் வரையில்.

என் சர்வேசுரா சுவாமி! தேவரீருக்கு விரோதமாய் இத்தனைவிசை துரோகஞ் செய்த பாவி நான், இதோ வந்தேன்! இப்போது என் முழு இருதயத்தோடும், துக்க மனஸ்தாபத்தோடும் என் பாவ அக்கிரமங்களையெல்லாம் வெறுத்துத் தள்ளுகிறேன். அவைகளுக்குப் பரிகாரமாக திவ்விய கர்த்தரானவர் இத்திருப் பீடத்தில் தேவரீருக்குச் செலுத்தும் பரிகாரங்களையே நானும் ஒப்புக் கொடுக்கிறேன். சேசுக்கிறீஸ்துவினுடைய திருப் பேறு பலன்களையும் அவருடைய திரு இரத்தத்தையும் இன்னம் எனக்காக திரும்பவும் பலியாகும் மனுஷாவதாரமான திவ்விய கர்த்தரைத்தானே நானும் ஒப்புக்கொடுக்கிறேன். இத்திருப்பீடத்தில் அவர் தமது விலையேறப்பெற்ற திரு இரத்தத்தைக்

கொண்டு எனது மத்தியஸ்தருமாய், மனுப் பேசுகிறவருமாய் அமைந்திருந்து எனக்காகப் பொறுத்தலை இரந்து மன்றாடுகிறபடியால், அந்த நேச திரு இரத்தத்தின் பேரொலியோடு நானும் ஒன்றித்து எனது தோஷத் துரோகங்களுக்கெல்லாம் பொறுத்தலை இரந்து மன்றாடுகிறேன்.

திவ்விய கர்த்தருடைய திரு இரத்தமானது இரக்கத்தின் பொருட்டுத் தேவரீரை நோக்கிக் கூப்பிடுகின்றது. மனஸ்தாபப்படும் என் உள்ளமும் இரக்கத்திற்காகவே தேவரீரை நோக்கி அபயமிடுகின்றது. ஆ! எனது அன்பரான தேவனே! என் கண்ணீர்களைக் கண்டு தேவரீர் இரங்காவிட்டாலும், என் திவ்விய இரட்சகருடைய பெருமூச்சுகளைக் கேட்டாவது என்மேல் இரக்கமாயிரும். அவர் சிலுவை மரத்தில் சகல மனுக்குலத்திற்காகவும் பேறுபெற்றடைந்த இரக்கத்தை இத்திருப் பீடத்தில் அவர் எனக்கு வருவிக்கக்கூடாதிருப்பதெப்படி? அந்த விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தின் பேறுபலன்களைக்கொண்டு தேவரீர் என் பாவங்களையெல்லாம் பொறுத்தருளுவீரென்று நம்பியிருக்கிறேன். எனது சீவியகாலக் கடைசி



நிமிஷம் வரையிலும் நான் அவைகளுக்காகத் துக்கித்து அழுவேன்.

எனது அன்புக்குரிய இரட்சகரே, அர்ச். இராயப்பருடைய கண்ணீரையும், மரியமதலேனாளுடைய மனஸ்தாபத்தையும் எனக்குத் தந்தருளும். இன்னும் பாவச் சீவியத்தில் நின்று உண்மையாய் மனந்திரும்பின புண்ணியவாளருடைய துயர மனஸ்தாபத்தை எனக்குத் தந்து இந்தத் திருப் பலி பூசை நேரத்தில் என் சகல பாவங்களுக்கும் முழுப்பொறுத்தலடையக் கிருபை செய்தருளும் சுவாமி.

## திவ்விய சற்பிரசாத எழுந்தேற்ற முதல் அதை உட்கொள்ளும் நேரம் வரையில்.

என் அன்பரான சேசுவே! இதோ தேவரீர் அடியேனுக்குக் கட்டளையிட்ட பொதுவானதும் விசேஷித்ததுமான நன்மை வரப்பிரசாதங்களாலே நிறையலானேன். இன்னம் இம்மை மறுமையிலும் தேவரீர் எனக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிற நன்மைகளையுங் கண்டுணர்ந்தேன். அடியேன்மேல் தேவரீர் கொண்டிருக்கும் இரக்கம் மட்டற்றதாயிருந்தவண்ணமே இன்னமும் இருக்கிறதென்று நம்பியிருக்கிறேன். அதற்காகவே

தேவரீர்மட்டில் எனக்குள்ள கடமையெல்லாம் கடைசிமட்டும் சரிவர நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறேன். ஆகையால் இதற்கு நன்றியறிதலாகவும் உத்தரிப்புப் பலியாகவும், குருவானவருடைய கைங்கரியத்தைக் கொண்டு நான் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற மாசற்ற பலி இதோ! திவ்விய கர்த்தருடைய விலையறப்பெற்ற திரு இரத்தம் இதோ! தேவரீர் எனக்குக் கட்டளையிட்ட நன்மை வரப்பிரசாதங்களுக்கெல்லாம் நான் இப்போது ஒப்புக்கொடுக்கிற இந்தத் திருப் பூசைப் பலியானது போதுமான பிரதிதானமாம். அளவில்லாத விலைபொருந்திய இந்தப் பிரதிதானமானது, தேவரீரிடத்தில் நான் பெற்றுக்கொண்டதும், இன்னும் பெறக்கூடியதுமான சகல நன்மைகளுக்கும் யோக்கியப் பெறுமதியாமே.

ஓ பரிசுத்த சம்மனசுக்களே! மோக்ஷவாசிகளே! சர்வேசுரன் எனக்குத் தந்தருளின சகல நன்மைகளுக்கும் நான் நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்ய எனக்கு ஒத்தாசை செய்யுங்கள். இதைப்பற்றியே, இந்தத் திருப் பூசைமாத்திரமல்ல, இன்னம் பூலோகமெங்கும் இப்போது நடக்கும் சகல



பூசைப்பலிகளையும் நான் நன்றியறிந்த ஸ்தோத்திரமாய் ஒப்புக்கொடுக்க அடியேனுக்கு உதவி செய்யுங்கள். இப்படியாய் அன்புக்குரிய தயாள சம்பன்னராகிய சர்வேசுரன் எனக்குத் தந்தருளினதும், இன்னம் எப்போதும் அவர் தந்தருளுவதுமான சகல உபகாரங்களுக்கும் இதுவே பிரதிதானமாகும். ஓ! என் அன்புக்குரிய அர்ச்சியசிஷ்டவர்களே! பாதுகாவலானவர்களே! நான் நன்றிகெட்டவனாய் வாழ்ந்து மரணமடையாதபடிக்கு, நன்மைத்தனமுள்ள தேவனுக்கு நீங்கள் எனக்குப் பதிலாய் இந்த நன்றியறிந்த ஸ்தோத்திரத்தைச் செலுத்தத் தயை செய்யுங்கள். அவர் என் நன்மனதைக் கையேற்றுக்கொண்டு, எனக்காக திவ்விய கர்த்தர் இந்தத் திருப் பூசைபலியில் ஒப்புக்கொடுக்கும் பட்சமுள்ள நன்றியறிதலான முயற்சிகளைக் கிருபையாய்க் கேட்டருளவேண்டுமென்றும் மன்றாடுங்கள்.

## திவ்விய சற்பிரசாதம் உட்கொண்ட நேரமுதல் பூசை முடியுமட்டும்.

என் அன்பான சர்வேசுரா! தேவரீருடைய நன்மை உபகாரங்களுக்கு நான் முழுதும் அபாத்திரவானென்று ஏற்றுக்கொள்ளு

கிறேன். இப்பேர்ப்பட்ட எனது முற்றும் அபாத்திரமான தன்மையைச் சங்கீர்த்தனமாய் வெளிப்படுத்துகிறேன். என்னுடைய பாவ துரோகங்களைப்பற்றி தேவரீர் சமுகத்தில் என் விண்ணப்பம் அனுகூலமடைய அபாத்திரமானதாயினும் இத்திருப்பீடத்தில் எழுந்தருளிவந்து எனக்காகத் தமது திரு உயிரைப் பலியிட்டுப் பிரார்த்திக்கும் உமது திவ்விய குமாரனுக்குத் தேவரீர் செவிகொடாதிருக்கக்கூடுமோ?

என் அன்பின் தேவனே! இந்த உன்னத பரிபாலகரின் செபத்தைக் கேட்டருளி எனது இரட்சணிய அலுவலை நிறைவேற்ற அவசரமான வரப்பிரசாதங்களையெல்லாம் அவருடைய திரு முகத்தைக் குறித்து எனக்குத்தந்து கடைசிமட்டும் இஷ்டப்பிரசாதத்தில் நிலைத்திருக்கத்தக்க வரத்தை எனக்குக் கட்டளையிட்டருளத் தேவரீரை இரந்து மன்றாடுகிறேன். என் சர்வேசுரசுவாமி! திவ்விய கர்த்தருடைய மன்றாட்டை நம்பிக்கொண்டு நான் அர்ச்சியசிஷ்டவனாய்ச் ஜீவிக்கத்தக்க உறுதியான சகல புண்ணியங்களையும் பலமான ஒத்தாசையையும் தந்தருள மன்றாடுகிறேன் சுவாமி.



இதன்றியே சகல பாவிகளும் அவிசுவாசிகளும், விசேஷமாய் ஆத்தும சம்பந்தத்தாலாவது இரத்தக் கலப்பினாலாவது என்னோடு ஐக்கியப்பட்டிருக்கிற யாவரும் மனந்திரும்பிச் ஜீவிக்க வரந்தந்தருளுஞ் சுவாமி. உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள சகல ஆத்துமங்களும் வேதனை குறைந்து மீட்சியடையத் தயை செய்தருளும். இந்தத் திவ்விய பூசைப் பலியின் பேறுபலன்களைக்கொண்டு அந்த உத்தரிப்பு ஸ்தலச் சிறையினின்று அவர்கள் எல்லோரையும் மீட்டருளும். சகல ஜீவியர்களும் சத்தியவேத நெறி தவறாமல் நடக்க அவர்களை மனந்திருப்பியருளும். இப்படியாய் இந்த நிர்ப்பாக்கியமான பூலோகம் தேவரீருக்கு இனிய ஆனந்த ஸ்தலமாகக்கடவது! இதிலே தேவரீரைச் சகலரும் சிநேகித்து வணங்கி ஸ்தோத்தரித்தபின், நித்திய காலத்திற்கும் தேவரீரை நாங்கள் வாழ்த்தி ஸ்துதிக்க மறுமையில் வந்து சேரக்கடவோமாக.

ஆமென்சேசு.

மூன்று பிரியதத்த மந்திரமும் திருவைபதயாபத்து மந்திரமும் சொல்லவும்.

84-ம் பக்கம் காண்க.

---

## ஞாயிற்றுக்கிழமைகளிலேயும் கடன் திருநாட்களிலேயும் பூசையில்லாத இடங்களில் சொல்லுகிற

# பூசை மந்திரம்

பூசையிலே சேசுநாதர்சுவாமி எழுந்தருளுகிறார். அவருடைய சந்நிதியிலே நானிருந்து பூசைத்தியானம் பண்ணப் பாத்திரமாகாதவனாயிருந்தாலும், அவருடைய அளவில்லாத தயையை நம்பிக்கொண்டு பத்தியோடு செபஞ் செபிக்கப்போகிறேன்.

பூசையிலே அர்ச். தமதிரித்துவத்திற்குத் தோத்திரம், சம்மனசுக்களுக்கு ஆனந்த சந்தோஷம், பாவிகளுக்குப் பாவப் பொறுத்தல், புண்ணியவான்களுக்கு இஷ்டப்பிரசாதம், உத்தரிப்பு ஸ்தலத்திலே வேதனைப்படுகிறவர்களுக்கு ஆறுதல், திருச்சபைக்குச் சேசுக்கிறீஸ்துவினால் விசேஷ உதவி, பூசை பண்ணுகிற குருவானவருக்கு ஞான அவுழ்தமும், பரம சஞ்சீவியுமாயிருக்கிறதுமல்லாமல் தேவநற்கருணையை உட்கொள்ளுகிறதினால் பாவப்பொறுத்தலும், ஆசாபாசக் கட்டவிழ்த்தலும், ஞானத் தெளிவும், ஆத்தும சம்பூரணமும், புண்ணியத்தைச் செய்ய திடமும், பசாசின் சோதனையை ஜெயிக்க உதவியும், விசுவாசத்தில் உறுதியும், நம்பிக்கையில் நாட்டமும், சிநேகத்திற் சுறுக்கும், பத்தியில் அபிவிர்த்தியும் அடைந்து, சேசுக்கிறீஸ்துவோடும் திருச்சபையோடும் ஒன்றுபட்டிருக்கலாம்;



முந்த முந்தப் பூசையிலே சேசுநாதர்சுவாமி தம்மைத்தாமே நம்முடைய பாவங்களுக்காக அநாதி பிதாவுக்கு பலியாக ஒப்புக்கொடுத்தாரென்று அறிந்து, பூசை பண்ணுகிற குருவினிடத்தில் அவர் இருக்கிறதாகச் சிந்தித்து: மகா பத்தி நம்பிக்கையோடு பூசை காண்போம்.

அதிகமான பலனோடு பூசை காணத்தக்கதாகப் பூசை கிருத்தியங்களும் பரம அர்த்தங்களும் அவைகளுக்காக வேண்டுதல்களும் வருமாறு.

### குரு முந்தி ஒரு சிறு வஸ்திரத்தை தமது சிரசின் மேற் போடுகிறபொழுது.

சுவாமியுடைய திருமுகத்திலே யூதர்கள் வஸ்திரத்தைக் கட்டி, அடித்து, உன்னை அடித்தவனாரென்று கேட்டார்களென்று விசாரித்துக்கொள். சுவாமி! நாங்கள் இந்த உலகத்தின் வெகுமானத்தைப் பாராமல் பரலோகத்திலே தேவரீர் உம்முடையவர்களுக்குப் பண்ணுகிற வெகுமானத்தை விசாரிக்க எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

### குரு வெள்ளைச் சட்டையைத் தொடுத்துக் கொள்ளுகிறபொழுது.

ஏரோதன் என்கிற இராஜாவானவன் சுவாமியைப் பைத்தியக்காரனென்று விசாரித்து

பைத்தியக்காரனுக்கு அடையாளமாக வெள்ளை அரைச்சட்டையைத் தொடுத்து, மீளவும் போஞ்சுபிலாத்தன் அண்டைக்கு அனுப்பினானென்று விசாரித்துக்கொள். சுவாமி! நாங்கள் தர்மகாரியஞ் செய்கிறதினாலே உலகத்தார் எங்களைப் பைத்தியங் கொண்டவர்கள் என்று விசாரித்து நிந்தித்தால், அவைகளை நாங்கள் பொறுமையோடு சகிக்க எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

தரு சூத்திரத்தை இடையிலே கட்டிக்கொண்டு. இடது கையிலும் கழுத்திலும் நீடிய பட்டு களை அணிந்துகொள்ளுகிறபொழுது.

யூதர்கள் சுவாமியை அரையிலேயும், கைகளிலேயும், கழுத்திலேயும் கயிறுகளாற் கட்டித் தோட்டத்தினின்று இழுத்துக்கொண்டு போனார்களென்று விசாரித்துக்கொள். சுவாமி! ஆசாபாசம் என்கிற கட்டுகளினாலே பசாசு எங்களைக் கட்டி நரகத்தில் இழுத்துக் கொண்டு போகாதபடி தேவரீர் கட்டுண்டு எங்களை மீட்டிரட்சித்தீர் என்கிறதினால், உமக்கே தோத்திரம் உண்டாகக்கடவதென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.



தரு பெரிய பட்டு தரித்துக்கொள்ளுகிற பொழுது.

யூதர்கள் சுவாமியைப் பரிகாச இராஜாவாக ஸ்தாபித்து, அவர்மேல் செகப்புப் பட்டைத் தரித்தார்களென்று விசாரித்துக் கொள். சுவாமி! உலகத்தாராலே வருகிற வெகுமானம் விளையாட்டு வெகுமானமென்று எண்ணி, அதை நாங்கள் ஆசைப்படாதபடிக்கு எங்களுக்கு நல்ல புத்தி தந்தருளவேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

தரு பீடத்தின் முன்பாக நாலைந்து அடியிலே நிற்கிறபொழுதும், பீடத்தின் கிட்டப்போய் இடது பக்கத்தில் ஒரு சின்ன செபம் செபிக்கிறபொழுதும், பீடத்தின் நடுவிலே நின்று சுவாமி கிருபையாயிரும், கிறீஸ்துவே கிருபையாயிரும் என்கிற மந்திரத்தைச் சொல்லுகிற பொழுதும்.

ஆதித்தகப்பன் பாவம் பண்ணின பிற்பாடு சர்வேசுரனை அறிந்த புண்ணியாத்துமாக்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபமாயிருந்து, சர்வேசுரன் தங்களைப் பொறுக்க உலக இரட்சகரை அனுப்பவேண்டுமென்று வேண்

டிக்கொண்டார்களென்று விசாரித்து, நாமுஞ் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபமாயிருந்து, பாவசங்கீர்த்தன மந்திரத்தைச் சொல்லுவோம்.

சுவாமி கிருபையாயிரும் 3 விசை
கிறீஸ்துவே கிருபையாயிரும் ,,
சுவாமி தயவாயிரும் ,,

### குரு பீடத்தின் நடுவிலே நின்று சம்மனசுக்கள் பாடின தேவஸ்துதி சொல்லுகிறபொழுது.

சுவாமி பிறந்தாரென்றும், சம்மனசுக்கள் வந்து பாடினார்களென்றும் விசாரித்துக் கொள். சுவாமி! உமது மட்டற்ற கிருபையால் எங்களை மீட்டிரட்சிக்க வேண்டுமென்று மனிதாவதாரமெடுத்து இவ்வுலகில் எழுந்தருளிவரத் திருவுளமானீரோ, உமக்கே தோத்திரமுண்டாகக்கடவதென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். பர. பிரி.

### குரு பீடத்தின் வலது பக்கத்திலே நிருபம் வாசிக்கிறபொழுது.

தீர்க்கதரிசிகளைக்கொண்டும், விசேஷமாய் ஸ்நாபக அருளப்பரைக்கொண்டும், சர்வேசுரன் உலகத்திற்குச் சத்தியவேதத்தை



அறிவித்தாரென்று விசாரித்துக்கொள். சுவாமி! தேவரீர் அறிவித்த சத்தியங்களை நாங்கள் உறுதியாக விசுவசிக்கவும், தேவரீர் கற்பித்த நெறிவழியிற் சமுத்திரையாக நடக்கவும் அநுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.—

பத்துக்கற்பனை மந்திரம் சொல்லவும் 8-ம் பக்கம் காண்க.

### குரு பீடத்தின் இடது பக்கத்திலே சுவிசேஷம் வாசிக்கிறபொழுது.

சுவிசேஷ போதனையைச் சேசுநாதர் உலகத்திற்கு அறிவிக்கத் திருவுளமானாரென்று விசாரித்துக்கொள். சுவாமி! உமக்கு உகந்த பிள்ளையாகிற சேசுக்கிறீஸ்துவின் திருவசனங்களைக் கேட்கச் சொல்லி தபோர் என்ற மலையில் மூன்று சீஷர்களுக்கு அற்புதமாக உமது திவ்விய சத்தத்தால் அறிவிக்கத் திருவுளமானீரோ, அப்படிப்பட்ட உம்முடைய ஏகசுதன் போதனையை நாங்கள் விருவோடு கேட்கும்படி எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## குரு பீடத்தின் நடுவிலே நின்று விசுவாச மந்திரஞ் சொல்லுகிறபொழுது.

சேசுநாதருடைய சீஷர்கள் உலகமெங்கும் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தைப் போதிக்க, அதைக்கேட்ட அநேகாயிரம் பிரஜைகள் பசாசின் ஆராதனையை விட்டுச் சத்திய வேதத்தை விசுவசித்தார்கள் என்று விசாரித்துக் கொள். நாமும் பத்தியோடு விசுவாச மந்திரத்தைச் சொல்லுவோம். சுவாமி! பாவிகளாயிருக்கிற அடியோர்கள்பேரில் உமது கிருபையைத்தானே பாராட்டி. அடியோர்களுக்கு உமது சத்தியவேதத்தை அறிவிக்கத் திருவுளமானீரல்லோ? நாங்கள் அப்படிப் பட்ட சத்திய வேதத்தை விசுவாசம், நம்பிக்கை, பத்தியோடு கைக்கொண்டு, அதின்படியே சுமுத்திரையாய் நடந்து, மோட்சத்தை அடையக் கிருபை செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

## குரு கோதும்பை அப்பத்தையும், திராட்ச கனிரசத்தையும் ஒப்புக்கொடுக்கிறபொழுது.

யூதர்கள் சுவாமியைப் பிடிக்க உத்தியோகமாயிருந்த சமயத்திலே சுவாமி ஜெருசலே



மென்கிற பட்டணத்தைவிட்டு மறைந்து வேறே ஊர்களிற் சஞ்சரித்தாரென்று விசாரித்துக்கொள். சுவாமி! எங்களாலே தேவரீருக்குப் பூசையும் தோத்திரமும் உண்டாகிற நாளளவும், பொல்லாதவர்கள் எங்களை உபாதித்து உம்முடைய பூசைக்கும் தோத்திரத்திற்கும், விக்கினஞ் செய்யவொட்டாதபடி காத்தருளவேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

## குரு பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் : என்கிற மந்திரஞ் சொல்லுகிறபொழுது.

சேசுநாதர்சுவாமி நமக்காகப் பாடுபட வேண்டுமென்று மிகுந்த தாழ்ச்சி பொறுமையுள்ள இராஜாவாக நீச வாகனத்தின் மீதில் எழுந்தருளி ஜெருசலேம் என்கிற பட்டணத்திற் பிரவேசிக்கும்பொழுது, அந்தப் பட்டணத்து ஜனங்கள் சுவாமிக்கு எதிராகப்போய் மரத்தின் கொப்புகளை ஒடித்துப்போட்டு, வழியை அலங்கரித்து சுவாமிக்கு முன்னும் பின்னுமாகப் புகழ் கூறிக்கொண்டு போகும் பொழுது, அந்தப் பட்டணத்து ஜனங்கள் இனி செய்யும் கொடிய பாவத்தில் அவர்கள் அனுபவிக்கும் கடினமான நிர்ப்பந்தங்களை

நினைத்து சுவாமி மனமிரங்கி அழுதுகொண்டு போனாரென்று விசாரித்துக்கொள். சுவாமி! எங்களுக்குச் சந்தோஷம் வந்தால் அதினாலே நாங்கள் ஆங்காரிகளாகாமல், எங்கள் சந்தோஷத்தில் தேவரீரை தோத்திரஞ் செய்யும்படி எங்களுக்கு அனுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## ௩௫ இரகசியத்திலே சற்றுநேரம் ஒரு சின்ன செபஞ் செபிக்கிறபோழுது.

சேசுநாதர் தம்முடைய சீஷர்களோடு கூடப் பூங்காவனத்தில் பிரவேசித்து, நம்முடைய நிமித்தமாகக் கடினமான துக்கங்களை அநுபவித்தாரென்றும், தீர்க்க ஜெபஞ்செய்து தாம் அநுபவிக்கிற மனோவியாகுல முதலான துக்க துயரங்களை மனிதர் பாவங்களுக்குச் செல்லுங் கொடிதான ஆக்கினைக்கு உத்தரிப்பாக ஒப்புக்கொடுத்தாரென்றும், தாம் அநுபவிக்கப்போகிற மகா கொடிதான வேதனைகளை மாற்றவேண்டுமானாலும், மாற்றாமல் இருக்கவேண்டுமானாலும், பிதாவே! உம்முடைய சித்தம், என் மனதின்படி வேண்டாமென்று வேண்டிக்கொண்டார் என்றும் விசா



ரித்துக்கொள். சுவாமி! எங்களுக்குக் கஸ்தி, துக்கம் வரும்பொழுது நாங்கள் அதிகமாய்ச் செபஞ் செய்யவும், எங்கள் சத்துருக்கள் கையில் அகப்பட்டு நாங்கள் மோசம்போகாமல் இருக்கவுங் கிருபை செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். பரமண்டல மந்திரஞ் சொல்லவும்.

## ௩௫ நற்கருணையை உயர எழுந்தருளச் செய்கிறபொழுது.

சிலுவையில் அறையுண்ட சேசுநாதர் நமது பாவங்களுக்காக தம்மை அநாதிபிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தாரென்று விசாரித்துக்கொள். சுவாமி! அளவில்லாத விலையேறப்பெற்ற அந்தப் பலியைப் பார்த்துப் பாவிகளாயிருக்கிற எங்களுக்குத் தயைசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! தேவரீருடைய திருச் சிலுவையினால் உலகத்தை மீட்டிரட்சித்தீர் என்கிறதினாலே தேவரீரை வணங்கி தோத்திரம் செய்கிறோம்.

எங்களுக்காகக் கொடுக்கப்பட்ட சேசுநாதருடைய திருச் சரீரமே, உமக்கே நமஸ்காரம், அர்ச்சியசிஷ்ட பாடுகளைக்கொண்டு

எங்களை இரட்சித்த சேசுநாதரே, உமக்கே தோத்திரம் உண்டாகக்கடவது.

## திரு பாத்திரத்தை உயர எழுந்தருளப் பண்ணுகிறபொழுது.

மிகவும் மிகுந்த மதுரமான சேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தமே, மனிதர் செய்த பாவங்களுக்காகச் சிலுவை மரத்திலே நின்று சிதறப்பட்ட உமக்கே நமஸ்காரம். பாவ விமோசனத்திற்காகச் சிந்தப்பட்ட திரு இரத்தமே, எங்கள் பாவங்களைப் போக்கியருளும். சேசுநாதருடைய திருக் காயங்களிலே நின்று ஓடிவிழுந்த திரு இரத்தமே, உமக்கே நமஸ்காரமும் தோத்திரமும் உண்டாகக்கடவது.

வர்ணம், வாசனை, உருசி, பிரமாணம் முதலான குணங்களில் மெய்யாகவே மறைந்திருக்குந் தேவத்துவமே! உம்மை வணங்கி நமஸ்கரிக்கிறேன். உம்மை யோசிக்கிறதில் என் இருதயம் முழுதும் அயர்ந்துபோகிறதினால் என் சித்தம் முழுதும் உமக்கே கீழ்ப்படிந்திருக்கிறது; சத்தம், ஸ்பரிசம், ரூபம், கந்தம், உருசி, தோற்றப்படாமல் கேள்வித்தனத்தால்மாத்திரமே விசுவசிக்கவேண்டி



யிருக்கிறது. சத்திய வார்த்தையான தேவசுதன் வார்த்தையைவிடச் சத்தியமானது ஒன்றுமில்லை என்கிறதினாலே, அவர் திருவுளம்பற்றின எல்லாவற்றையும் உறுதியாக விசுவசிக்கிறேன். தேவத்துவமாத்திரமே சிலுவையில் மறைந்திருந்தது. இதிலோவென்றால் தேவத்துவமும் மனுஷத்துவமுங் கூட மறைந்திருக்கிறது. தேவநற்கருணையிலே தேவசுபாவமும், மனுஷ சுபாவமுங் கூட இருக்கிறதென்று விசுவசித்துச் சங்கீர்த்தனம் பண்ணிப், பச்சாத்தாபக் கள்ளன் கேட்ட வரத்தை நானும் கேட்கிறேன். அர்ச். தோமையாரைப்போலே முறிவுகளைக் காணேனென்றாலும், உம்மை என் தேவனென்று பிரசித்தமாகச் சொல்லுகிறேன். நான் உம்மிலே எப்பொழுதும் அதிகமதிகமாய் விசுவசம், நம்பிக்கை, பத்தியாயிருக்கக் கிருபை செய்தருளும்.

நாதன் மரணத்தை ஞாபகப்படுத்தி மனிதனுக்கு உயிர் அளிக்குஞ் ஜீவனுள்ள அப்பமே! என் ஆத்துமம் உம்மிலே ஜீவிக்கவும், எக்காலமும் நீர் அதற்கு மதுரமாயிருக்கவுங் கிருபை செய்யும். குறையற்ற கருணையுள்ள பெலிக்கானே சேசுவே! பாவத்தினாலே

அசுத்தனாயிருக்கிற அடியேனை உம்முடைய திரு இரத்தத்தால் சுத்தனாகச் செய்தருளும். உமது திரு இரத்தத்தின் ஒரு துளி சகல உலக பாவங்களையும் கழுவித் துடைக்க வல்லதாகையால் மிகுந்த அசுத்தனாயிருக்கிற என்னை உமது இரத்தத்தினாற் சுத்திகரித்தருளும். சேசுவே, இப்பொழுது மறைவில் உம்மைத் தரிசிக்கிற நான், இனி மறைவின்றி தரிசிக்கவும், அபேட்சிக்கிற உமது ஆனந்த தரிசனையால் பாக்கியவானாகும்படிக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

மிகுந்த வியாகுலக் காரணத்தினாற் சரீரத்தில் நின்று வெயர்வையாகப் புறப்பட்டு நிலத்திற் சிந்தப்பட்ட சேசுவின் விலைமதியாத திரு இரத்தமே! இர்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து என் பாவத்தால் எனக்கு வந்த ஒழியாத துக்கத்தை நீக்குவீராக. கற்றூணோடு கட்டப்பட்டு, ஆண்டவர் வெகுவாய் அடிபட, அடியின் வழியாய்ப் புறப்பட்டு அவருடைய திவ்விய அங்க நிறத்தைப் பேதிப்பித்தர் திரு மேனியில் நின்று விழுந்து பூமியை நனைத்த சேசுவின் விலைமதி



யாத திரு இரத்தமே! இந்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப்பார்த்து என் பாவத்தின் கட்டறுத்துப் பாவ ரூபத்தைத் தள்ளி இஷ்டப்பிரசாதத்தால் என்னை அழகுள்ளவனாகச் செய்வீராக.

முள்ளாலே முடி செய்து நாதருடைய திருச் சிரசிலே வைத்து அடித்ததினால் முள்ளுக்கள் தைத்த காயங்கள் வழியாய் வடிந்த விலைமதியாத திரு இரத்தமே! இந்தப் பாத்திரத்தில் உம்மை வுணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து பாவ கர்வத்தால் எனக்கு வந்த அஞ்ஞான இருளை நீக்குவீராக.

பாவத்தில் நின்று என்னை மீட்டிரட்சிக்கப் பார ஆணிகளாற் சிலுவையில் அறையுண்டு பலியான கைகால்களின் துவாரங்களில் நின்று புறப்பட்டுப் பேய்க்கு அடிமையாயிருந்த என்னை மீட்கக் கிரயமான என் சேசுவின் விலைமதியாத திரு இரத்தமே! இந்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். உம்மோடுகூட நான் மோட்ச, இராச்சியத்திற்கு எழுந்தருளும்படி கிருபையுடைத்தான சேசு

ளையப்பார்த்து என்னை அவர் திருப் பாதத்திற் சேர்த்தருளுவீராக.

நாதன் திரு விலாவை நிஷ்டூரன் ஒருவன் ஈட்டியினாற் குத்தித் திறக்க அதிலே நின்று அற்புதமாகத் தண்ணீரோடுகூடப் புறப்பட்டு ஞான அபிஷேகத்தினாலே பாவிகளை ஞான முறைமையின் நற்பிறப்பை அடையச் செய்து நாதனுடைய காயத்தால் ஞானத்திலே வளருகிறோமென்பதற்குச் சந்தேகமற்ற இலக்ஷணமாயிருக்கிற என் சேசுவின் விலைமதியாத திரு இரத்தமே! இந்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப்பார்த்து, உம்மால் மீட்டிரட்சிக்கப்பட்ட என்னை முழுதும் உமது கைவசப்படுத்தினால், உம்மையல்லாமல் மற்றப் பொருளென்னப்பட்ட யாவையும் மறப்பேன் சுவாமி.

### திரு பரமண்டல மந்திரம் சொல்லுகிற பொழுது.

மிகவும் மிகுந்த மதுரமான அர்ச்சிக்கப்பட்ட தேவநற்கருணையே! எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

(இப்படி மூன்றுவிசை சொல்லவும்.)



### திரு தேவநற்கருணையைப் பெற்கிறபொழுது.

சுவாமியினுடைய திரு ஆத்துமம் திருச் சரீரத்தைவிட்டுப் பிரிந்ததென்று விசாரித்துக்கொள். பிதாவாகிய சர்வேசுரா! உமக்கு மிகவும் பிரியமுள்ள திருக்குமாரன் மகா நிர்ப்பந்தத்தோடு கற்றூணிற் கட்டுண்டு வெகுவாய் அடிபட்டதையும், கூர்மையுள்ள முண்முடியைத் திருச் சிரசில் அழுத்தி முள்ளுகள் உருவின காயங்களால் திரு முகம் வீங்கி இருந்ததையும், அந்தக் காயங்களின் வழியாகப் புறப்பட்ட இரத்தத்தால் திரு முக அழகு மங்கி இருந்ததையும், திருக் கன்னத்தில் அநேகமுறை பட்ட அடியால் திருக் கன்னம் வீங்கிக் கன்றிக் கறுத்திருந்ததையும், கொட்டக்காரருடைய அசுத்த உமிழ்நீர்களினால் திரு முகம் அழுக்கடைந்திருந்ததையும், திருச் சரீரத்திற்பட்ட அடிகளால் அவர் திருச்சதை கிழிந்து துண்டு துண்டாய் விழுந்ததையும், திருப் பாதந்துவக்கி திருச் சிரசுபரியந்தம் பட்ட காயங்களாற் சர்வாங்கமும் நொந்திருக்கிறவர் பாரமான சிலுவையைத் திருத்தோளிற் சுமந்ததையும், இரண்டு கள்ளருக்கு நடுவிலே நிஷ்டூரமாய் அறையப்பட்டுச் சிலுவையில் தொங்கி இருந்

ததையும், பலபல தூஷண அவமான நிந்தையைக் கேட்டதையும், பேரொலியாகக் கூப்பிட்டுத் திருச் சிரசு குனிந்து, திருக் கண் பஞ்சடைந்து, திரு வாய் திறந்து மரித்ததையுங் குறித்து, இப்படியே தயை வருத்துவிக்கிற உம்முடைய திருக் குமாரனுடைய திரு முகத்தைப் பார்த்துத் தயை செய்தருளும்.

ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே, உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிறவரே, எங்கள்பேரில் இரக்கமாயிரும்.

(மூன்று விசை.)

எங்களுக்குப் பொல்லாப்புச் செய்கிறவர்களுக்கு நன்மை செய்து அவர்களை இரட்சியும், அஞ்ஞானிகள் உம்முடைய சத்திய வேதத்திற் பிரவேசிக்கச் செய்யுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

### குரு நற்கருணையைக் கையில் எடுத்து மூன்றுமுறை பிழை தட்டிக்கொள்ளுகிற பொழுது.

சேசுநாதர் ஏழரைநாழிகை சிலுவையில் உயிரோடிருந்து, மனிதர் மோட்ச கரை சேர வேண்டிய ஞான உபதேசத்தைப் போதித்து,



மனிதர் இரட்சணியத்திற்காகத் தலை குனிந்து மரணம் அடைந்தாரென்று விசாரித்துக் கொள். சுவாமி! நாங்கள் மரணம் அடையுமுன் செய்யத்தக்க தருமங்களையெல்லாங் குறையறச் செய்துமுடித்து மரணம் அடையச்செய்யத் தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

### குரு தேவநற்கருணையை உட்கொள்ளுகிற பொழுது.

அநாதிபிதாவுக்கு ஏக சுதனுமாய் நமது ஆண்டவருமாயிருக்கிற சேசுநாதர் மனுஷாவதாரம் எடுத்து மனிதரை இரட்சிக்கும் பொருட்டாய்ச் சிலுவையில் அறையுண்டு கடின மரணத்தை அடைந்து கல்லறையில் அடக்கப்பட்டார் என்று விசாரித்துக்கொள். சுவாமி! நாங்கள் இவ்வுலகத்திற்குச் செத்தவர்களாய் உமக்குமாத்திரம் சீவித்திருக்கக் கிருபை செய்ய வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

### திருச்சபை மந்திரம்.

கிறீஸ்துவின் மரணத்தை நினைப்பூட்டுதலுமாய்க் கிறீஸ்துவைத்தானே போசனமாகக் கொள்ளுதலுமாய், இஷ்டப்பிரசா

தத்தை ஆத்துமத்திற்குத் தந்தருளுஞ் சம்பூரணமுமாய், இனி அடையப்படும் மோட்ச சம்பாவனையின் அச்சாரமுமாய் இருக்கிற அர்ச்சிக்கப்பட்ட விருந்தே! உமக்கே நமஸ்காரம். இதோ உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறியாட்டின்குட்டி, ஆண்டவரே, அடியேன் கூரைக்குள்ளே தேவரீர் எழுந்தருள நான் பேறுபெற்றவனல்ல, தேவரீர் ஒரு வார்த்தைமாத்திரம் திருவுளம்பற்ற என் ஆத்துமம் வியாதியில் நின்று விடப்பட்டு, ஆரோக்கியத்தையடையும்.

கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே...... 57-ம் பக்கம் காண்க.

### குரு நற்கருணையை உட்கொண்டபின் ஆசீர்வாதங் கொடுக்கிற பொழுது.

சேசுநாதர் எழுந்தருளின காலந்துவக்கி நடுத்தீர்க்கிற காலமட்டும் கிறீஸ்தவர்கள் சர்வேசுரனைத் தோத்திரஞ் செய்கிறதை விசாரித்துக்கொள். சுவாமீ, தேவரீர்பேரில் பத்தியாயிருக்கிற இத்தனை ஆயிரம்பேர்களைக் கண்ட நாங்களும் தேவரீர்பேரில் பத்தியாயிருந்து, தேவரீரைத் தோத்திரஞ்



செய்யக் கிருபை செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

### குரு பூசைமுடிந்து ஆசீர்வாதங் கொடுக்கிற பொழுது.

உலகம் முடிந்தபின் மரித்தவர்கள் எல்லாரையும், அவரவர் ஆத்தும சரீரத்தோடுகூட எழுப்பிப் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்குஞ் சுதனாகிய சர்வேசுரன் மகா மகிமைப் பிரதாபத்தோடு எழுந்தருளி வந்து, அவரவர் செய்த பாவ புண்ணியங்களை அவரவர்களுக்கு அறியச்செய்து அளவற்ற நீதியால் தமது இடதுபாரிசத்திலிருக்கிற பொல்லாதவர்களைச் சபித்து, ஆத்தும சரீரத்தோடு நரகத்தில் தள்ளி மட்டற்ற தயவால் தமது வலதுபாரிசத்தில் இருக்கிற நல்லவர்களுக்கு ஆசீர்வாதங் கொடுத்து, ஆத்தும சரீரத்தோடு அவர்களை மோட்ச இராச்சியத்துக்குக் கூட்டிக்கொண்டு போவாரென்று விசாரித்துக்கொள். சுவாமி, தேவரீரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் நாங்களும் ஒருவராயிருந்து தேவரீருடைய பரிபூரண ஆசீர்வாதம் அடைந்து, நித்தியகாலமும் உம்மைப்

போற்றிப் புகழ்ந்து, இறைஞ்சித் தொழுது, தோத்திரஞ்செய்ய எங்களுக்கு அநுக்கிரகந் தந்தருளுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்சேசு.

☞ 1884-ஆம் ஜனவரி-மீ 6-உ 13-ம் சிங்கராயர் என்கிற நாமதேயமுள்ள அர்ச். பாப்பானவர் கட்டளையிட்ட உத்தரவுப்படி இதற்கடியில் வரும் செபங்களை முழங்காலிலிருந்து பூசைக்குப்பிறகு குருவுடனே வேண்டிக்கொள்ளுகிறவர்கள் 300 நாள் பலன் அடையலாம்.

மூன்று பிரியதத்த மந்திரம் வேண்டிக்கொண்டபின் கிருபைதயாபத்து மந்திரம் சொல்லவும். (84-ம் பக்கம் காண்க.)

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் அடைக்கலமும் பலமுமாகிய சர்வேசுரா! உம்மை நோக்கிக் கூப்பிடுகிற ஜனங்களின்பேரில் கிருபாநோக்கம் பாவித்தருளும். அன்றியும் மகத்துவம் பொருந்திய அமலோற்பவ கன்னியும் தேவ தாயாருமாகிய அர்ச். மரியம்மாள், அவளுடைய பத்தாவாகிய முத்திப்பேறுபெற்ற அர்ச். சூசையப்பர், உமது அப்போஸ்தலராகிய முத்திப்பேறுபெற்ற அர்ச். இராயப்பர், சின்னப்பர் முதலிய சகல அர்ச்சியசிஷ்டவர்க



ளுடைய மன்றாட்டுகளுக்குத் தேவரீர் திருவுளமிரங்கி, பாவிகள் மனந்திரும்புவதற்காகவும் நமது தாயாகிய திருச்சபை சுவாதீனம் பெற்றுத் தழைத்தோங்குவதற்காகவும் நாங்கள் செய்துவருகிற ஜெபங்களைக் கிருபைதயாபத்தோடே கேட்டருளும் சுவாமி. இந்த மன்றாட்டுக்களை எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

### பிறகு வேண்டிக்கொள்ளவேண்டியதாவது.

அதிதூதரான அர்ச்சியசிஷ்ட மிக்கேலே, எங்கள் போராட்டத்தில் எங்களைத் தற்காத்தருளும். பசாசின் துர்க்கருத்தையும் அதின் சற்பனைகளையும் அகற்றி எங்களுக்குத் துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக் கேட்டு சர்வேசுரன் பசாசுக்குக் கற்பிப்பாராக. நீரும் மோட்ச சேனைக்குத் தலைமையானவரே! ஆத்துமங்களை அழிக்கிறதற்கு உலகத்தில் சுற்றித் திரியும் பேயையும் மற்றத் துஷ்ட அரூபிகளையும் தேவ வல்லமையின் பலத்தால் நரகத்தில் தள்ளுவீராக. ஆமென்சேசு.

"சேசுவின் திரு இருதயமே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்."

இச்சிறு ஜெபத்தை திவ்விய பூசை முடிவில் சொல்லும் குருக்களுக்கும், கிறீஸ்துவர்களுக்கும், நமது ஞானத்தந்தையாகிய 10-ம் பத்திநாதர் 7 வருஷமும் 7 மண்டலப் பலனும் அளிக்கச் சித்தமானார்.

---

## திவ்வியநற்கருணை வாங்க ஆயத்தம்.

நீ நன்மை வாங்குகிறதற்கு முன் ஆத்தும ஒறுத்தல் சரீர ஒறுத்தல் செய்து, யோக்கியமாகச் சுவாமியை உட்கொள்ளும்படிக்கு அவர்தாமே உன் இருதயத்தைச் சுத்தஞ்செய்து தேவப்பிரசாதங்களினால் உன் ஆத்துமத்தை அலங்கரிக்க வேண்டுமென்று மன்றாடு. தேவமாதாவையும், காவலான சம்மனசுவையும், உனக்குப் பத்தி காரணமாயிருக்கிற அர்ச்சியசிஷ்டவர்களையும் வேண்டிக்கொள். தேவநற்கருணை வாங்குகிறபொழுது அந்த அர்ச்சியசிஷ்டவர்களுக்கு உண்டாயிருந்த பத்தி உனக்கும் எவ்வளவாகிலும் வர உதவி செய்ய வேண்டுமென்று மன்றாடு.



அந்த நினைவோடு நித்திரை செய்து விழித்தவுடனே, உன்னிடத்தில் சேசுநாதர்சுவாமி எழுந்தருளி வரப்போகிறாரென்று, அதினால் உனக்கு எத்தனை பாக்கியமும் நன்மையும் வருகிறதென்றும் நினைத்து, அந்த நினைவோடு கோவிலுக்கு ஒடுக்க வணக்கத்துடன் சென்று, விசுவாசம், ஆராதனை, இவை முதலான பிரகரணங்களை மனதோடும் வாக்கோடுஞ் செய்வாயாக.

பின்பு நன்மை வாங்குந் தருணத்தில் நீ எழுந்திருந்து கிராதிக்குச் சமீபத்தில் ஒடுக்க வணக்கத்துடனே போய் முழங்காலிலேயிருந்து பூசைக்கு உதவிசெய்யும் பிள்ளைகளோடு நீயும் பாவசங்கீர்த்தன மந்திரத்தைச் சொல்லி சுவாமி உன் பாவங்களைப் பொறுக்க வேண்டுமென்று அவரை மன்றாடி, குருவானவர் திரும்பி உனக்கு பாவப்பொறுத்தல் ஆசீர்வாதங்கொடுக்கும்போது நீ மிகுந்த ஆசைப்பற்றுதலோடும், வணக்கத்தோடும், தலைகுனிந்து அதை பெற்றுக்கொண்டு, குரு மறுபடியும் தேவநற்கருணையில் ஒன்றைத் தம்முடைய கையில் எடுத்துக்கொண்டு ஒரு மந்திரத்தை மூன்று விசை சொல்லும்போது நீயும், சுவாமி உனக்காகப்பட்ட பாடுகளைத்

தியானித்துக்கொண்டு, "இதோ உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறியாட்டின் குட்டி. ஆண்டவரே! அடியேன் துச்சுக்குள்ளே தேவரீர் எழுந்தருளி வர நான் பேறுபெற்றவன் அல்ல, தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரம் திருவுளம்பற்ற, என் ஆத்துமம் வியாதியில் நின்று விடப்பட்டு ஆரோக்கியம் அடையும்" என்று அவரோடும் நீயும் மூன்று விசை சொல்லி வெகு வணக்கத்தோடும், இருதய நேசத்தோடும், சற்பிரசாதத்தை உட்கொண்டு, வெகு மேரை மரியாதையோடும், தாழ்ச்சி பத்தியோடும், அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, முன்னிருந்த இடத்துக்குத் திரும்பி, தாழ்ச்சி, பயம், நம்பிக்கை முதலிய பிரகரணங்களைச் செய்யக்கடவாய். அந்த நாளில் மற்ற நாளைப் பார்க்கிலும் அதிக ஒடுக்க வணக்கமாயிருந்து ஞான புஸ்தகங்களை வாசித்து, சாயுங்காலம் கோவிலுக்குப் போய்த் தேவநற்கருணையைச் சந்தித்துவணங்கி தாழ்ச்சி, சிநேகம், ஆசை முதலான பிரகரணங்களைச் செய்யக்கடவாய்.

---



## திவ்வியநற்கருணை வாங்குமுன் செய்யத்தக்க முயற்சிகள்.

### விசுவாச முயற்சி.

என் ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! அடியேன் தேவநற்கருணை உட்கொள்ளும்போது, தேவரீர் திருச் சரீரத்தோடேயும், திரு இரத்தத்தோடேயும், ஆத்துமத்தோடேயும் எழுந்தருளி, என்னிடத்தில் வருகிறீர் என்று உறுதியாக விசுவசிக்கிறேன். தேவரீர்தாமே இதை அறிவித்தபடியினாலே நான் முழுமனதோடு இதை விசுவசிக்கிறேன். சுவாமி, இது சத்தியமான காரியமென்று ஒப்பிக்கிறதற்கு என் சீவனை இழக்க வேண்டியிருந்தாலும் நல்ல மனதோடு இழக்க ஆயத்தமாயிருக்கிறேன்.

### தாழ்ச்சி முயற்சி.

என் அன்புக்குரிய திவ்விய இரட்சகரே! எத்தனையோ விசை தேவரீருக்குத் துரோகஞ் செய்து துக்கம் வருவித்தேன்! இப்படிப்பட்ட நீசப் பாவியாகிய நானோ, தேவரீரை உட்கொள்ளத் துணிகிறது! ஆ! சுவாமி!

மெய்யாகவே தேவரீர் என்னிருதயத்தில் எழுந்தருளநான் பேறுபெற்றவனல்ல. தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரம் திருவுளம்பற்றுவீரானால்,என் ஆத்துமம் வியாதியினின்று விடப்பட்டு ஆரோக்கியத்தையடையும்.

### மனஸ்தாப முயற்சி.

என் சர்வேசுரா, அளவில்லாத நன்மைத்தனமுள்ளவரும், மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமானவருமாயிருக்கிற தேவரீருக்கு, என் பாவ துரோகங்கள் எவ்வளவோ அருவருப்புள்ளதாயிருக்கின்றது. ஆண்டவரே! தேவரீருக்கு மனம் நோகப்பண்ணினதினாலே மிகவும் மனநொந்து உத்தம மனஸ்தாபமாயிருக்கிறேன். இனிமேலாகிலும் தேவரீருடைய அனுக்கிரகத்தைக்கொண்டு நான் செய்த பாவங்களுக்குத் தபசுபண்ணி, அவைகளுக்கு ஏதுவான சமயங்கள் யாவையும் விட்டு, ஒருபோதும் பாவஞ் செய்வதில்லையென்று கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிறேன்., என் பிரதிக்கினையை உறுதிப்படுத்தியருளும்.



### சிநேக முயற்சி.

ஆ! என் திவ்விய சேசுவே! தேவரீர் என்னை மீட்டிரட்சிக்கிறதற்கு உமது உயிரைக் கொடுத்து, எனக்கு போஜனமாக உமது திருச்சரீரத்தைத் தந்து எவ்வளவோ அன்போடு என்னைச் சிநேகித்துவருகிறீர். தேவரீரை என் முழு இருதயத்தோடு சிநேகிக்கிறேன். உமது சிநேகத்துக்காக மாத்திரமே ஜீவித்து, உமக்காகவே மரிக்க ஆசையாயிருக்கிறேன் சுவாமி.

### ஆசை முயற்சி.

ஆ! என் அன்பே! எழுந்தருளிவாரும். என் இருதயத்தைக் கைப்பற்றியருள எழுந்தருளிவாரும். என் ஆத்துமம் தேவரீரை மிகுந்த ஆவலுடனே தேடுகின்றது, வெகு ஆசையோடு தேவரீரை நோக்கித் தாவுகின்றது. என் ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! எழுந்தருளி வாரும் சுவாமி, எழுந்தருளி வாரும்.

# திவ்வியநற்கருணை வாங்கினபின் செய்யத்தக்க முயற்சிகள்.

## ஆராதனை முயற்சி.

ஆ! என் ஆண்டவரே! என் சர்வேசுரா! சாம்பலும் தூசியுமாயிருக்கிற என்னிடத்தில் தேவரீர் எழுந்தருளிவர எப்படி மனந்துணிந்தீர். அடியேன் உமது திருச் சமுகத்திலே மகா தாழ்ச்சி, வணக்கத்துடனே சாஷ்டாங்கமாக விழுந்து, தேவரீரை ஆராதித்து வணங்கி நமஸ்கரிக்கிறேன்.

## சிநேக முயற்சி.

என் ஆண்டவராயிருக்கிற சர்வேசுரா! தேவரீர் அன்போடு என்னைச் சிநேகித்து, உம்மை முழுதும் எனக்குக் கொடுத்ததற்கு என்ன பிரதிநன்றி செய்வேன்? சிநேகத்துக்கு சிநேகம் காண்பிக்கிறேன். ஆ! என் மதுர சேசுவே! தேவரீரை என் முழுமனதோடு சிநேகிக்கிறேன். என் ஜீவியகாலமெல்லாம் தேவரீரைச் சிநேகிக்க ஆசையாயிருக்கிறேன். அர்ச். மரியாயே! அர்ச். சூசையப்பரே! நான் சேசுவைச் சிநேகிக்க உங்க



ளுடைய சிநேகத்தை எனக்குத் தந்தருளும்படி மன்றாடுகிறேன்.

## நன்றியறிந்த முயற்சி.

என் ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! தேவரீர் எனக்கு அளித்தருளிய எண்ணிக்கையில்லாத நன்மை உபகாரங்களுக்காகவும், விசேஷமாய் இன்று நான் உம்மோடு ஐக்கியமாகக் கிருபை செய்ததற்காகவும், முழுமனதோடு தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறேன், தகுந்த விதமாய்த் தேவரீருக்கு நன்றியறிந்திருக்க என்னாலே கூடாதென்கிறதினாலே என் இருதயத்தில் வீற்றிருக்கும் தேவரீருடைய இருதயத்தைத்தானே, தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரமாக ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

## காணிக்கை முயற்சி.

ஆ! என் திவ்விய இரட்சகரே! என் சரீரத்தையும் அதின் இந்திரியங்களையும், என் ஆத்துமத்தையும் அதின் புலன்களையும், என் இருதயத்தையும் அதின் உணர்ச்சிகளையும், தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். என் சிந்தனை ஆசை, வாக்குக் கிரிகைகள் முதலிய சகலமும் இனி உமக்கே

சொந்தம். தேவரீர் உம்மை முழுதும் எனக்குக் கொடுத்ததுபோல, நானும் தேவரீருக்கு என்னை முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

### மன்றாட்டு முயற்சி.

சகல நன்மைக்கும் ஊறணியான சர்வேசுரா! தேவரீர் உம்மை முழுமையும் எனக்குக் கொடுத்திருக்க, இன்னம் ஏதாகிலும் எனக்குக் கொடுக்காமல் இருக்கக்கூடுமோ? ஆ! என் திவ்விய சேசுவே! அடியேன் தேவரீரை முழு இருதயத்தோடு எப்போதும் சிநேகித்துவரக் கிருபை செய்தருளும். என் பாவங்களை அருவருத்து, அவைகளை இனி செய்யாதபடி என் பிரதிக்கினையை ஆசீர்வதித்தருளும். உத்தரிக்கிறஸ்தலத்திலேயிருக்கிற ஆத்துமாக்கள் நித்திய இளைப்பாற்றியடையத் தயைபுரியும். பரிசுத்த திருச்சபைக்கும், எங்கள் ஞானப் பிதாவாகிய அர்ச். பாப்பானவருக்கும், அவசியமான இஷ்டப்பிரசாதங்களைச் சம்பூரணமாய்க் கொடுத்தருளும். எங்கள் தாய், தந்தை, பெரியோர்கள், சிநேகிதர்கள், சத்துராதிகள் இவர்கள்பேரிலும் தயவாயிருந்து, இவர்களுடைய அவசர சமயங்



களில் உதவியாயிருக்கும்படி தேவரீரை மன்றாடுகிறேன். ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி, ஆமென் சேசு.

---

### அநுதினம் திவ்வியநன்மை வாங்கும் பத்தியை மூட்ட கன்னிமரியாயினிடம் வேண்டும் ஜெபம்.

ஓ! கன்னிமரியாயே, மகா பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தின் எங்கள் ஆண்டவளே, திருச்சபையின் சந்தோஷமே, உலகத்தின் இரட்சண்யமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். விசுவாசிகள் அனைவரும் அநுதினம் திவ்விய நன்மை வாங்கப் பாத்திரவான்களாகத்தக்கதாக அவர்களிடத்தில் பரிசுத்த தேவநற்கருணையின்பேரில் பத்தியை மூட்டுவீராக. 300-நாள் பலன்.

10-ம் பத்திநாதர்.

கிறீஸ்துவினுடைய...57-ம் பக்கம் காண்க.

---



இவ்வியாகற்கருணை வாங்கினபின்
பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்து
ஜெபிக்கும்

## பரிபூரண பலனுள்ள செபம்.

மகா மதுரம்பொருந்திய நல்ல சேசுவே! அடியேன் தேவரீருடைய திருச் சமுகத்தில் முழந்தாளிலிருந்து சாஷ்டாங்கமாக விழுந்து, என் கைகளையும் என் கால்களையுந் துளைத்தார்கள், என்னெலும்புகளெல்லாம் எண்ணினார்களென்று தேவரீரைப்பற்றி முன்னர் தாவீதென்கிற தீர்க்கதரிசி உமது வாயின் வாக்கியமாக வசனித்ததை என்



கண்முன்பாகக் கண்டு, தேவரீருடைய ஐந்து காயங்களையும் மிகுந்த மன உருக்கத்தோடுந் துக்கத்தோடும் என்னுள்ளத்தில் விசாரித்து, நினைவில் தியானிக்கிற இந்நேரத்தில் திடனான விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமென்கிற சுகிர்த கருத்துகளையும், என் அக்கிரமங்களின்மேல் மெய்யான மனஸ்தாபத்தையும், அதுகளைத் திருத்த மெத்த உறுதியான பிரதிக்கினையையும் என் இருதயத்தில் பதியச்செய்தருளவேணுமென்று, என் நல்ல சேசுவே! தேவரீரை என் ஆத்துமத்தின் மேலான ஆசை ஆவலோடிரந்து, மன்றாடிப் பிரார்த்திக்கிறேன். ஆமென்சேசு.

பரிபூரண பலனடைய சேசுக்கிறீஸ்துநாதருடைய ஐந்து திருக்காயங்களைக் குறித்தும், அர்ச். பாப்பானவருடைய சுகிர்த கருத்துகள் அனுகூலமாகவும் 5 பர. பிரி. திரி. மந்திரஞ் சொல்லவும்.

## செபம்.

என் தேவனாகிய ஆண்டவரே! எவ்வகையான மரணத்தை எனக்கு அனுப்ப உமக்குச் சித்தமோ, அம்மரணத்தை அதைச் சேர்ந்த சகல துக்க துயரம் வேதனை நோக்காடுகளோடுகூட, இதோ இக்ஷணமே, உமது கரத்திலிருந்து சமாதான அமரிக்கையோடும்

முழுமன சம்மதத்தோடும் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மை வாங்கிய பின், சர்வேசுரன்மேல் மெய்யான சிநேகப் பற்றுதலோடு மேற்சொல்லிய செபத்தை தங்கள் ஆயுசுகாலத்தில் எப்போதாகிலும் ஒரு தடவை செபிப்பவர்கள் மரண சமயத்தில் சாவான பாவமின்றி தேவ இஷ்டப்பிரசாதமுடையவர்களாயிருப்பார்களேயாகில் வேறெதுவும் செய்யத் தேவையின்றி, அவர்களுடைய ஆத்துமம் சரீரத்தை விட்டுப் பிரியும் வேளையில் அவர்களுக்கு ஒரு பரிபூரண பலன் உண்டு.

---

## SUSCIPE DOMINE.

### அர்ச். இஞ்ஞாசியார் செய்த செபம்.

ஆண்டவரே! எனக்கிருக்கும் சுவாதீனம் முழுதும் தேவரீர் எடுத்துக்கொள்வீராக. என் ஞாபகம், புத்தி, மனசு முழுவதும் கையேற்றுக்கொள்ளும். என்னிடத்தில் எதெது உண்டோ, எனக்கு எதெது சொந்தமோ அவையெல்லாம் தேவரீர்தாமே எனக்குத் தந்தருளினீர். இவை யாவையும் உமக்குத் திரும்பவும் நான் கொடுத்துவிடுகிறேன். இவைகளை உமது பூரண சித்தப்பிரகாரம்



முற்றும் நடத்துவீராக. உமது சிநேகம் ஒன்றுமாத்திரம் உமது இஷ்டப்பிரசாதத்தோடுகூட எனக்குத் தருவீராக. நானு போதுமானமட்டும் ஆஸ்திவந்தனாய் இருப்பேன். இதைத்தவிர வேறு யாதொன்றும் உம்மிடத்தில் நான் கேட்கவேமாட்டேன்.

ஆமென் சேசு.

மனஸ்தாப இருதயத்தோடு சொல்லுகிறவர்களுக்கு ஒரு நாளைக்கு 300-நாட் பலன்.






## திவ்வியநற்கருணை ஸ்தாபித்திருக்கும்பொழுது சொல்லும் தேவ ஸ்துதிகள்.

சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக:

அவருடைய பரிசுத்த நாமம் ஸ்துதிக்கப்படுவதாக:

மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனிதனுமான சேசுக்கிறீஸ்துநாதர் ஸ்துதிக்கப்படுவாராக:



சேசுவின் திருநாமம் ஸ்துதிக்கப்படுவதாக:

அவருடைய மிகவும் அர்ச்சிதமான இருதயம் ஸ்துதிக்கப்படுவதாக:

பீடத்தின் மிகவும் பரிசுத்த தேவதிரவிய அனுமானத்தில் சேசுநாதர் ஸ்துதிக்கப்படுவாராக:

சர்வேசுரனுடைய தாயாராகிய அதியரிசுத்த மரியம்மாள் ஸ்துதிக்கப்படுவாளாக:

அவளுடைய அர்ச்சியசிஷ்ட மாசில்லாத உற்பவம் ஸ்துதிக்கப்படுவதாக:

கன்னிகையும் தாயுமான மரியம்மாளின் நாமம் ஸ்துதிக்கப்படுவதாக:

தம்முடைய சம்மனசுக்களிடத்திலும், அர்ச்சியசிஷ்டவர்களிடத்திலும் சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக:—ஆமென்சேசு.

---

## திவ்வியநற்கருணையிலே சேசுநாதருக்கு மனுமக்களால் செய்யப்படுகிற சகல நிந்தைகளுக்குப் பரிகாரமாக 24 ஆராதனைப் பிரகரணம்.

1. சதாகாலமும் ஆராதனைக்குரிய சர்வேசுரனும் என் ஆண்டவருமாகிய சேசுவே!

பூமண்டலத்தில் தேவரீருடைய மட்டற்ற
மகிமைக்கு வேண்டிய ஆராதனை வணக்க
மும், உமது அத்தியந்த பற்றுதலுள்ள அன்
புக்குத் தக்க பிரதியன்பும் செலுத்தப்படாத
எவ்விடத்திலுள்ள தேவாலயங்களிலும்
அடியேனிருந்து தேவரீரை ஆராதிக்க ஆசைப்
படுகிறேன். ஆனால் இத்தனை ஸ்தலங்களி
லிருக்க என்னாலே கூடாமையால், அவசங்
கைப்பட்ட அந்தத் தேவாலயங்களில் நினை
வின் வழியாயாவது பிரவேசித்து, யூதர், பதி
தர், பொல்லாத கிறீஸ்தவர்களால் எப்போ
தாகிலும் தேவரீருக்குச் செய்யப்பட்ட நிந்
தை அவமானங்களுக்குப் பரிகாரமாக, உம்
முடைய நேச பரிசுத்த மாதாவின் அன்பை
யும், ஆராதனையையும் உமது பலிபீடத்தின்
மேல் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன்
சுவாமி.

நித்திய ஸ்துதிக்குரிய தேவநற்கருணைக்
குச் சதாகாலமும் ஆராதனையும் ஸ்தோத்திர
மும் நமஸ்காரமும் உண்டாகக்கடவது.

2. சாதாரண திருச்சபையை விளக்கி
உம்முடைய ஊழியர்களின் இருதயங்களிலே
தேவ பத்தியாகிய சுவாலையைச் சொலிப்பிக்
கிற சத்திய சூரியனாகிய சேசுவே! தேவரீரை



ஸ்துதித்து ஆராதிக்கிறேன். உம்முடைய
திருப் பணிவிடைக்குள்ளாகி தேவரீர் வீசுகிற
தேவ சிநேகக் கதிரொளியை அடைந்திருந்
தும், உஷ்ணமும் பற்றுதலும் அசைவுமின்
றிக் குளிர்ந்தவர்களாய் நிற்கின்ற அநேக
ருடைய சோம்பல், அசதி அசட்டைத்தனத்
துக்குப் பரிகாரமாக, பத்திசுவாலகருடைய
விருப்பப் பற்றுதலுள்ள நமஸ்காரங்களை உம
க்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

3. பூவாசிகளுக்குச் சத்தியத்தைத் தெளி
விக்கிற நித்திய ஞானமாகிய சேசுவே! அத்
தியந்த தாழ்ச்சி விநயத்துடனே தேவரீரை
ஆராதிக்கிறேன். அடியோர்கள் தேவரீருக்
குத் துரோகம் செய்ததற்கு காரணமான
மனம் பொருந்த மூடத்தனமுள்ள அறியா
மைக்குப் பரிகாரமாக தேவரீரிடத்தில் மிகு
ந்த ஞானப்பிரகாசம் பெற்ற ஞானிகளோன்
றும் சம்மனசுக்கள் தேவரீரைப் புகழ்கிற
மேலான தியானத்தை உமக்கு ஒப்புக்கொடுக்
கிறேன் சுவாமி. நித்திய...

4. அளவில்லாத கிருபையும் பொறுமை
யுமுடைத்தான சர்வேசுரனாகிய சேசுவே!
மிகுந்த பத்தி சிரவணத்துடனே தேவரீரை
ஆராதிக்கிறேன். தேவரீருக்கு மிகவும் அரு

வருப்பான எங்கள் கோபம், வர்மம், பழி முதலிய சகல அக்கிரமங்களுக்கும் பரிகாரமாக, பத்திராசனருடைய மாறாத சமாதானத்தையும், சாது அமரிக்கையையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

5. பரிசுத்த சிநேகத்தின் தேவதிரவிய அநுமானமாகிய நற்கருணையில் வீற்றிருக்கிற திவ்விய சேசுவே! என் முழுமன நேசத்துடனே தேவரீரை ஆராதிக்கிறேன். பாவிகள் தேவரீருடைய பலிபீட சன்னிதானத்தில் முதலாய் நினைக்கத் துணிகிற சகல அசுசியான நினைவுகளுக்கும், வெட்கத்துக்குரிய துராசைகளுக்கும் பரிகாரமாக, நாதகிருத்தியருடைய பரிசுத்த ஆசைப் பற்றுதலையும், அவர்கள் தேவரீரைச் சிநேகிக்கும் அத்தியந்த நேசத்தையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

6. உலகத்தின் பாவங்களைப் போக்குகிற மாசற்ற செம்மறிப்புருவையாகிய சேசுவே! அனந்த பக்தி வணக்கத்துடனே தேவரீரை ஆராதிக்கிறேன். திவ்விய பூசைநேரத்திலும் உமது திருச் சமுகத்திலே பாவிகளாற் சம்பவிக்கும் அநாசாரம், தகாத பார்வை, மரியாதையில்லாத நடத்தை. முதலிய சங்கைக்



குறைகளுக்குப் பரிகாரமாக, சத்துவகளொன்னும் சம்மனசுக்கள் தேவரீரை வணங்குகிற அத்தியந்த தாழ்ச்சி பொருந்தின நமஸ்காரங்களை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

7. மாசற்ற சர்வ பரிசுத்தத்தனத்துக்கு ஊறணியும் மூலமுமாகிய சேசுவே! என்னாலியன்றமட்டும் ஒடுக்க வணக்கத்துடனே தேவரீரை ஆராதிக்கிறேன். யூதாசென்கிற துரோகிக்கிணையாய் நெறிகெட்ட சில குருக்கள் கனமான பாவதோஷமுள்ள ஆத்துமத்தோடே தேவரீரைப் பலியிட்டுத் திவ்விய நற்கருணைவழியாக உம்மை உட்கொள்ளும் அக்கிரம துரோகங்களுக்குப் பரிகாரமாக, பலவத்தருடைய பரிசுத்த தன்மையையும், அவர்கள் தேவரீரை ஆராதிக்கிற அனந்த பத்தியுள்ள ஆராதனைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

8. பரமண்டலத்திலும் பூமண்டலத்திலும் சகலராலும் முழந்தாளிட்டு சர்வ ஆராதனை நமஸ்காரம் செய்யப்படத்தக்கவராகிய சகல லோகாதிகாரண கர்த்தாவே! மிகுந்த வணக்கத்துடனே தேவரீரை ஆராதிக்கிறேன். தேவரீருக்கு நிந்தையாகச் சொல்லப்பட்ட

சகல தூஷணங்களுக்கும் பரிகாரமாக, பிரா
தமிகர் உமக்குச் செலுத்துகிற அனந்த புகழ்
ச்சி தோத்திரங்களைத் தேவரீருக்கு ஒப்புக்
கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

9. அத்தியந்த பிரமாணிக்கத்துடனே
சேவித்து சர்வ மகிமை தோத்திரமும் செலு
த்தப்படுவதற்குரியவராகிய உலக இரக்ஷ
கரே! தேவரீரை ஆராதித்து வணங்குகிறேன்.
அநேகர் பாவதோஷமுள்ள ஆத்துமத்தோடு
திவ்விய நற்கருணையை வாங்குகிற தேவ
துரோகத்துக்கும், தங்கள் மனச்சாட்சியை
விபரீதப்படுத்தித் தங்களை மோசம் போக்கு
கிற குருட்டாட்டத்துக்கும், பிறருக்குச் செய்
கிற சதிமார்க்கங்களுக்கும் பரிகாரமாக, அதி
தூதர்களுடைய சுறுசுறுப்புள்ள பிரமாணிக்க
மனப்பற்றுதலைத் தேவரீருக்கு ஒப்புக்
கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

10. பரலோகத்துக்கும் பூலோகத்துக்
கும் ஆனந்தமாகிய திவ்விய சேசுவே! என்
முழு இருதயத்தோடு தேவரீரை அபேட்
சித்து ஆராதிக்கிறேன். தேவநற்கருணை மூல
மாக உம்மோடு அனந்த இன்பமுள்ள ஐக்கிய
மாவதற்குத். தேவரீர் மனுமக்களை
அழைக்கிற அன்புள்ள தயவை அநேகர் புறக்



கணித்து அசட்டைபண்ணுகிற அவமானத்
துக்குப் பரிகாரமாக, தேவதூதர்களுடைய
தீவிரமான கீழ்ப்படிதலையும், அவர்கள் உமது
கிருபையைப் பாராட்டுகிற நன்றியறிந்த
தோத்திரங்களையும் தேவரீருக்கு ஒப்புக்
கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

11. குறையாத கருணா சமுத்திரமாகிய
திவ்விய சேசுவே! அடியேன் மிகவும் பாவி
யாயிருந்தாலும், உம்முடைய தயாளத்தை
நம்பி உமது கிருபைச் சிம்மாசனத்தை அண்
டித் தேவரீரை ஆராதிக்கிறேன். உமது திரு
இருதயத்துக்கு ஏற்காத துரோகமாக உம
தன்புள்ள தயவின்பேரில் ஐயப்பட்ட சில
பாவிகளுடைய குருட்டாட்டமுள்ள அவநம்
பிக்கைக்குப் பரிகாரமாக, அடியேன் பரிசுத்த
பிதாப்பிதாக்கள் தேவரீருடைய வாக்குத்
தத்தங்களில் வைத்திருந்த திடனான நம்பிக்
கையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்
சுவாமி. நித்திய...

12. அனந்த நேசத்துக்குரிய சேசுவே!
உமது திரு வாக்கினால் வெளிப்படுத்தவும்,
சாதாரண திருச்சபையால் படிப்பிக்கவும்,
எண்ணிறந்த அற்புதங்களால் நிச்சயிக்கவும்
பட்ட தேவ இரகசியமாகிய திவ்விய நற்கரு

னையில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று உறுதியாக விசுவசித்து, தேவரீரை அத்தியந்த வணக்கத்துடனே ஆராதிக்கிறேன். இந்தப் பரம தேவதிரவிய அநுமானத்தில் தேவரீர் உண்மையாய் வீற்றிருக்கிறீரென்கிற சத்தியத்தின்பேரில் அவிசுவாசிகள் கொண்ட அநியாய சந்தேகங்களுக்குப் பரிகாரமாக, அடியேன் தீர்க்கதரிசிகள் தங்களுக்குத் தோன்றிய தேவ காட்சிகளையுந் தேவ திருவுளம் தங்களுக்கு ஏவின திருவாக்கியங்களையும் ஏற்றுக்கொண்ட பத்தியுள்ள சிரவணத்தையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

நித்திய...

13. சகல தகப்பன்மார்களிலும் அன்புள்ளவரும், அன்புக்குரியவருமாகிய திவ்விய சேசுவே! உம்மை மிகுந்த நேசத்துடனே ஆராதிக்கிறேன். தேவரீர் அநந்த பட்சத்தோடு பிள்ளைகளாக ஏற்றுக்கொண்ட மனுமக்களின் அவிசுவாசத்துக்கும் நன்றிகெட்ட பாவ துரோகங்களுக்கும் பரிகாரமாக, உம்முடைய அப்போஸ்தலர்களின் திடனுள்ள விசுவாசத்தையும், நன்றியறிந்த நேசத்தையும் தர்ம நடபடிக்கைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

நித்திய...



14. அத்தியந்த நேசமுள்ள நல்ல ஆயராகிய சேசுவே! உண்மையான சிநேகத்தின் திவ்விய மாதிரிகையே, மிகுந்த சிரவணத்துடனே தேவரீரை ஆராதிக்கிறேன். உம்முடைய கட்டளைகளுக்கு விரோதமாய் நினைக்கப்பட்ட பழிக்கான கருத்துகளுக்கும், மனதிற்கொண்ட பொருமைக்கும் பரிகாரமாக, வேதசாட்சிகளின் பொறுமையையும், அவர்கள் தங்களை வாதித்தவர்களுக்காகச் செய்த மன்றாட்டுகளையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

நித்திய...

15. சர்வ நன்மைகளின் பூரண பொக்கிஷமாகிய திவ்விய சேசுவே! எல்லாத்தையும் பார்க்கத் தேவரீரை அத்தியந்த பத்தி ஆசையோடு அபேட்சித்து ஆராதிக்கிறேன். நெறிகெட்ட அக்கிரமிகளால் தேவரீருடைய சகல தேவாலயங்களில் செய்யப்பட்ட திருட்டுகளுக்கும் பரிகாரமாக, அடியேன் உம்முடைய பிரமாணிக்கமுள்ள ஊழியர் உமக்குத் தோத்திரமாகச் செலுத்திய உதாரமான திரவிய தானங்களையும், பத்தியுள்ள காணிக்கைகளையும் அல்லாமல், என்னைமுழுதுந் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

நித்திய...

16. பரம தேவ பிதாவினிடத்தில் அடியோர்களுக்காக மிகவும் மனுப்பேசுகிற மத்தியஸ்தராகிய திவ்விய சேசுவே! மிகுந்த நன்றியறிந்த மனதுடனே தேவரீரை ஆராதிக்கிறேன். திருச்சபையில் யாதோர் அதிகாரம் பெற்றவர்கள் உம்முடைய தேவாலயங்களில் தேவரீருக்குச் செய்யப்பட்ட சங்கையீனமான அநாசாரங்களைத் திருத்தாமலும், கண்டியாமலும் விட்ட அசூசி அசட்டைத்தனத்துக்குப் பரிகாரமாக, அடியேன், பரிசுத்த மேற்றிராணிமார்களும், சிரேஷ்ட குருக்களும், தேவரீருடைய ஊழியத்திற் கொண்ட நுணுநுணுக்கமான கவனத்தையும், சுறுசுறுப்புள்ள விசாரம் பத்தியையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்...

17. அளவில்லாத மகிமையுடைத்தான கடவுளாகிய சேசுவே! உம்முடைய பிரதாப மகத்துவத்துக்குச் சரியான ஆராதனை நமஸ்காரத்தைத் தேவரீருக்குச் செலுத்த மனுமக்களாற் கூடாதாயினும், என்னால் இயன்றமட்டும் மிகுந்த பயபத்தியோடே தேவரீரை ஆராதிக்கிறேன். தேவரீருடைய திருநாமத்தைக்கொண்டு இடப்பட்ட பொய்யாணை பொய்ச் சத்தியங்களுக்குப் பரிகார



மாக, அடியேன் வேதபாரகரும் மற்ற சத்திய சாஸ்திரிகளும் உமக்குத் தோத்திரமாகச் செய்த அமிர்த பிரசங்கங்களையும், எழுதிய பத்தி நிறைந்த ஸ்துதிகளையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

18. தாழ்ச்சியால் மறைந்திருக்கிற தெய்வீகமாகிய சேசுவே! தேவரீர் உமது பிரதாப சோதிக் கதிர்களை மறைக்கிற திவ்விய நற்கருணையில் உம்மை அத்தியந்த விசுவாசத்துடனே ஆராதிக்கிறேன். தேவரீருக்கு ஏற்காத துரோகங்களாகிய சண்டை சச்சரவுகளுக்கும் பெருமை சலாக்கியத்தின் பேரிலுள்ள பொறாமை சச்சலை காய்மகாரத்துக்கும், சகல துர்மாதிரிகைகளுக்கும் பரிகாரமாக, பரிசுத்த ஸ்துதியர்களின் தாழ்ச்சி ஒடுக்க சிரவணத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

19. அடியோர்களுக்காக உம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கிறதிலே பிரியப்படுகிற நித்திய குருவே! நன்றியறிந்த மனதுடனே தேவரீரை ஆராதிக்கிறேன். தேவரீருடைய திருமறைக் குருக்களுக்கும், சந்நியாசிகள், முனிவர், தபோதனர்களுக்கும், கன்னியர்களுக்கும் செய்யப்பட்ட நிந்தை அவமானங்

சனுக்குப் பரிகாரமாக, உமது மாறாத பொறுமையையும், சத்திய வேத போதகர் அனைவரிலும் அப்போஸ்தொலிக்கு சற்குருக்களிலும் விளங்கிய உண்மையான பத்தியுள்ள தைரியப் பற்றுதலையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

20. சம்மனசுகளின் திவ்விய அப்பமென்னப்பட்ட சேசுவே! தேவரீர் மனுமக்களுக்கு திவ்விய போசனமாக உம்மைத் தந்தருளினதைப்பற்றி நன்றியறிந்த மனதோடே தேவரீரை ஸ்துதித்து ஆராதிக்கிறேன். தேவரீர் கற்பித்த ஒருசந்தி சுத்த போசனக் கட்டளைகளுக்கு விரோதமாய் மனிதர் கட்டிக்கொள்ளுகிற போசனப்பிரியம், லாகிரி முதலிய பாவங்களுக்குப் பரிகாரமாக, உம்முடைய பரிசுத்த முனிவர் தபோதனர்களின் ஒருசந்தி உபவாசங்களையும், பத்தியுள்ளவர்களின் மட்டசனத்தையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

21. பூரண பரிசுத்த கடவுளாகிய சேசுவே! அத்தியந்த பயபக்தியுடனே தேவரீரை ஆராதிக்கிறேன். தேவரீருக்கு மிகவும் பிரிய சுகந்த புண்ணியமாகிய கற்



புக்கு விரோதமாய் மனுமக்களால் இதுவரைக்கும் செய்யப்பட்ட சகல பாவதோஷ துரோகங்களுக்குப் பரிகாரமாக, சந்நியாசிகளுடைய மாறாத தவ விரதத்தையும், பரிசுத்த கன்னியாஸ்திரிகளுடைய மேரை மரியாதை ஒடுக்க வணக்கத்தையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

22. எங்கள் ஆத்துமங்களின் அன்புக்குரிய பத்தாவாகிய சேசுவே! தேவநற்கருணையை வாங்குகிற சமயத்திலே முதலாய் தேவரீர்பேரில் அநேகரிடத்தில் தோன்றிய பத்திக்குறைவு, அசத்தி, அசட்டைத்தனத்துக்குப் பரிகாரமாக, அடியேன் பத்திமிகுதியாற் பரவசமான திருக்கன்னியரின் பற்றுதலுள்ள செபத்தியானங்களையும், அத்தியந்த நேசத்தையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

23. சகல சம்மனசுகளாலும் மனிதர்களாலும் அனந்த பத்தியுடனே சிநேகிக்கப்படுவதற்குரிய திவ்விய சேசுவே! தேவரீரை என் முழு இருதயத்தோடே சிநேகித்து ஸ்துதித்து ஆராதிக்கிறேன். துஷ்ட கலாபக்காரரும் கொலைக்காரரும் உம்முடைய தேவாலயங்களுக்கு அஞ்சாமல், அவைகளின்

சத்திகரத்துக்குக் கேடாக அலைகளில் தானே நீதிமான்களின் மாசற்ற இரத்தத்தைச் சிந்தின குரூரத்துக்கும், தேவரீர் உம்முடைய கோவில்களில் வறுமை தரித்திரமாய் மனுஷரால் நடத்தப்பட்ட அசட்டைத்தனத்துக்கும் பரிகாரமாக, முத்திப்பேறு பெற்ற சகல அர்ச்சியசிஷ்டவர்களின் நேச பத்தியுள்ள ஆராதனையையும், வேதகலாபங்களில் உம்முடைய பிரியமுள்ள ஊழியர் சந்தோஷத்துடனே பட்ட வாதை, சிறுமை, தரித்திர துன்பங்களையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. நித்திய...

24. நித்திய மகிமைக்காஸ்பதமான கன்னித்தாயின் திருக்குமாரனாகிய சேசுவே! அத்தியந்த பத்தி வணக்கத்துடனே தேவரீரை ஆராதிக்கிறேன். ஆராதனைக்குரிய பரம தேவதிரவிய அனுமானமாகிய தேவநற்கருணையைத் தேவரீர் உண்டாக்கின நாள் முதற்கொண்டு அதிலே மனுமக்களால் தேவரீருக்குச் செய்யப்பட்ட சகல நிந்தை அவமான துரோகங்களுக்கும் இயன்றமட்டும் பொதுப் பரிகாரம் செய்யும்பொருட்டு, அடியேன் சகல பாவிகளுக்குத் திடமான அடைக்கலமும் தேவரீருக்குப்பிறகு அவர்களுக்குப் பிர



தான நம்பிக்கை ஆதாரவுமாகிற உம்முடைய திரு மாதாவின் உதவி அனுக்கிரகத்தை இரந்து கேட்கிறேன் சுவாமி.

மனுக்குலத்தின் நம்பிக்கையும், பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இராக்கினியும், உம்முடைய திருக்குமாரனை இடைவிடாது ஆராதிக்கிறவளுமாகிய அன்புள்ள தேவதாயே! நீர் அன்போடே ஏற்றுக்கொண்ட பிள்ளைகளில் அடியேன் ஒருவனாயிருக்க மகிமைப் பாக்கியம் பெற்றவனாகையால், அனந்த பத்தி நம்பிக்கை நேசத்துடனே உம்முடைய பாதத்திலே விழுந்து பாவிகளாகிய எங்களுக்கு நீதித்தீர்வையிடும்; நித்திய கர்த்தாவினிடத்தில் நீரே மனுப்பேசி, எங்களுக்காகவும் எங்கள் பேராலேயும் உம்முடைய புண்ணிய பலன்களால் உத்தரிக்கவும், எங்களாற் செலுத்தமுடியாத அனந்த நமஸ்காரக் கடமைகளைத் தீர்த்து நிறைவேற்றவும் வேணுமென்று உம்மை மன்றாடுகிறேன் ஆண்டவளே, ஆமென் சேசு.

நித்திய ஸ்துதிக்குரிய தேவநற்கருணைக்குச் சதாகாலமும் ஆராதனையும் ஸ்தோத்திரமும் நமஸ்காரமும் உண்டாகக்கடவது.

## அனுதின நிந்தைப்பரிகாரச் செபம்.

சேசுவின் திவ்விய இருதயமே! உமது அன்பின் தேவதிரவிய அநுமானமாகிய ஆராதனைக்குரிய சற்பிரசாதத்தில் விசேஷமாய் தேவரீருக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக என்னை முழுதும் தேவரீருக்கு வசீகரமாக்கி இன்று என் நினைவு, வாக்கு, கிரியைகளையும், படும் துன்ப வருத்தங்களையும் எல்லாம் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். இனி நான் பாவத்தில் விழாதிருக்கவும், எல்லாத்தையும் பார்க்க தேவரீரை மாத்திரம் நான் சிநேகிக்கவும் இவ்விதமாய்த் தேவரீருக்கு ஆறுதல் வருவிக்கவும் கிருபை செய்தருளும் சுவாமி. ஆமென்சேசு.

## தேவநற்கருணையின் சந்நிதியில் வேண்டுதல்.

நிகரில்லாத பரம அன்பின் மிகுதியினாலே தேவநற்கருணையில் எழுந்தருளி, எங்கள் பீடங்களின்மேல் நிலையாயிருக்கத் தயை புரிந்த மதுர சேசுவே! அன்புக்குரிய இரக்ஷகரே! தேவரீர் பரம கர்த்தரென்றும், சர்வத்துக்கும் அதிபதியான கடவுளாகிய என் தெய்வமென்றும் விசுவசித்து நம்பி, இதிலே



உம்மை மிகுந்த தாழ்ச்சி வணக்கத்துடனே ஆராதிக்கிறேன். பரம திவ்விய நற்கருணையில் இருக்கிற உமக்குப் பாவிகள் செய்கிற துரோகங்களைத் தேவரீர் பாராட்டாமல், அடியோர்கள் பேரிலே காண்பிக்கிற மட்டில்லாத பட்சத்தைப்பற்றி முழுமனதோடு உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறேன். எங்கள் நன்றிகெட்டதனத்தின்பேரில் மிகுந்த விசனப்பட்ட அனந்த மகிமையுள்ள பரம தேவனே! ஆராதனைக்குரிய இந்தத் தேவதிரவிய அநுமானத்தில் இருக்கிற உமக்குச் செய்யப்பட்டதும், இனி செய்யப்படுவதுமாகிய துரோகங்களுக்கும், அவமானங்களுக்கும், நிந்தைகளுக்கும் பரிகாரமாக, என்னால் இயன்றமட்டும் பத்தி வணக்கத்தோடும், என் இருதயத்திலுள்ள முழுப் பட்சத்தோடும், உமக்கு நமஸ்காரம் செய்ய வருகிறேன். ஆ! என் திவ்விய கர்த்தாவே! முன்னால் நானே அநேகவிசை உம்முடைய சந்நிதியில் வணக்கக் குறைச்சலாய் நடந்ததற்கும், தேவபத்தி சிநேகமில்லாமல் அசட்டையாய் உம்மை வாங்கிக்கொண்டதற்கும் அடியேன் படுகிற மிகுதியான வியாகுலத்தை தேவரீருக்கு எவ்விதமாய்ச் சொல்லப்போகிறேன்.

தயையுள்ள கர்த்தாவே! அடியோர்களுடைய பாவதுரோகங்களைப் பொறுத்து, உம்முடைய அளவில்லாத கிருபையை மாத்திரம் நினைத்தருளும் சுவாமி. தேவரீருடைய மட்டற்ற அன்பு விளங்குகிற இந்தத் தேவதிரவிய அநுமானத்தில் உம்மை வணங்கவும், எல்லாருடைய வணக்கத்தையும் உமக்கு வருவிக்கவும், எனக்குள்ள பெரும் ஆசையை ஏற்றுக்கொள்ளும் சுவாமி. மெய்யாகவே சம்மனசுக்களும், அர்ச்சியசிஷ்டவர்களும் இதிலே உம்மைச் சிநேகித்து ஸ்துதித்து ஆராதிக்கிறதுபோல, நானும் என் முழுமனதோடு உம்மை நேசித்து தோத்தரித்து வந்தித்து வணங்க அபேட்சிக்கிறேன். மேலும் நான் சாஷ்டாங்கமாக விழுந்து ஆராதிக்கிற உமது இந்தத் திருச் சரீரத்தையும், விலைமதியாத இரத்தத்தையும்பற்றி, நான் இனி தேவநற்கருணையில் உம்மைப் பயபத்தி வணக்கத்துடனே நமஸ்கரிக்கிறதினாலும், அதைத் தகுந்த ஆயத்தத்தோடு வாங்கிக்கொள்ளுகிறதினாலும், உம்முடைய கிருபையை அடைந்து என் மரணத்துக்குப்பின் சகல மோட்சவாசிகளோடேகூடப் பேரின்ப பாக்கியத்தில் நித்தியமாய் உம்மைத் தரிசித்து ஸ்துதிக்கிற



தற்குப் பாத்திரவானாகும்படியாக எனக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமி.

ஆமென்சேசு.

சர்வேசுராசுவாமி! உம்முடைய திவ்விய குமாரனுமாய் எங்கள் பரம குருவுமாய் இருக்கிற சேசுநாதர், அடியோர்கள் செய்த பாவங்களின் பரிகாரமாக உமக்குச் செலுத்துகிற பரிசுத்த பலியை உம்முடைய தேவாலயத்தில் நின்றும், தேவரீர் பரமண்டலங்களில் வீற்றிருக்கிற உன்னத ஸ்தலத்திலே நின்றும் பார்த்து, எங்கள் எண்ணிறந்த அக்கிரமங்களைப் பொறுத்தருளும். சிலுவையினின்று எங்கள் திவ்விய இரட்சகரும், மனுஷாவதாரத்தால் எங்கள் சகோதரருமாகிய சேசுவினுடைய திரு இரத்தத்தின் சத்தம் உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றது. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி. சுவாமி! உம்முடைய கோபத்தை அமர்த்தியருளும். எங்கள் மேல் உம்முடைய கிருபாகடாட்சம் வைத்து நன்மைபுரியும். என் கர்த்தாவே! அதிக தாமதஞ் செய்யாதேயும், இவ்வூரின் மேலும் இச்சனத்தின்மேலும் தேவரீர் தயவாயிருக்கும்படிக்கு உம்முடைய திரு நாமம் பிரார்த்திக்கப்பட்டபடியினாலே உமக்குத்

தோத்திரமாகத்தானே எங்களுக்கு கிருபை செய்தருளும். ஆமென்சேசு.

* பரிசுத்த பாம திவ்விய நற்கருணைக்கு எந்நேரமும் ஸ்தோத்திரமும் ஸ்துதியும் நமஸ்காரமும் உண்டாகக்கடவது.

* இப்படி மும்முறை சொல்லவும்.

---

## திவ்விய சற்பிரசாதக் காதல்.

1. ஓ! மதுரம்பொருந்திய சேசுவே, தேவரீருடைய திருப் பீடத்திற்கு முன் என் இருதயம் நேசச் சுடர்விட்டெரியும் ஓர் தீப மாகக்கடவது.

2. ஓ! மிகவும் பிரிய சேசுவே, நான் உம்மை முகமுகமாய்க் கண்டு தெரிசித்து சதாகாலத்திற்கும் உமது மடியிலிருந்து இளைப்பாறுவதெப்போ?

3. மிகவும் ஆசை நேசம் அமைந்த ஆண்டவரே, உமது அன்பின் தேவதிரவிய அநுமானச் சங்கிலியால் என்னைப் பந்தனமாக்கி யருளும்.

4. மாடப்புறாவின் இறக்கைகள் எனக்கு இருக்குமாகில் ஓ எவ்வளவு சந்தோஷமாய்



நான் பறந்தோடிச்சென்று என் சேசுவின் திரு இருதயத்தில் சதாகாலத்திற்கும் இளைப் பாறுவேன்.

5. நேச சங்கிலியால் பந்தனமாகிச் சிறைப்பட்டிருக்கும் திவ்விய சேசுவே, நிர் பாக்கியமான என் இருதயத்தை உமது திருப் பீடத்தடியில் சேர்த்துக் கட்டி உமது சிநேக பந்தனமாக்கியருளும்.

6. மிகவும் பிரிய சேசுவே, உமக்காகவே தேவரீர் என் இருதயத்தை சிருஷ்டித்திருக் கிறபடியால், திருப் பெட்டகத்திலுள்ள உமது திவ்விய இருதயத்தோடு அதை வைத்து மறைத்துக்கொள்ளும்.

7. சிறந்த குணாதிசயங்கள் அமைந்த திவ் விய கர்த்தரே, என் இருதயம் மெலிந்து அயர்ந்துபோனபடியால், உமது திரு இரு தயத்திற்குள் அது பிரவேசித்து இளைப்பாற உத்தாரம் தந்தருளும்.

8. சேசுவே, அந்தரங்கமான உமது சிநேக இரகசியங்களை எனக்குப் படிப்பித் தருளும்.

9. திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக் கும் சேசுவை உலகம் நன்றாய் அறியுமாகில்,

இப்பூலோகம் அதிகப் பிரகாசமாகவும் மறு லோகம் அதிக சமீபமாகவும் விளங்குமாம்.

10. மிகவும் பரிசுத்த திவ்விய நற்கருணைக்கு எந்நேரமும் ஸ்துதியும் நன்றியறிந்த தோத்திரமும் செலுத்தப்படக்கடவது.

---

## திவ்விய சற்பிரசாதச் சந்நிதியில் கால்மணித் தியானம்.

**சேசுநாதர்:** "ஆத்துமமே, நீ நமக்குப் பிரியப்படத்தக்கதாக அநேக காரியங்களை அறிந்திருப்பது அவசரமல்ல. நம்மை உருக்கமாய்ச் சிநேகிப்பதே போதும். உன் பிரிய சிநேகிதனோடே சம்பாஷிப்பதுபோல இப்போது நம்மோடே பேசுவாயாக.

யாரைப்பற்றியாவது நம்மிடத்தில் மனுப் பேசவேண்டியதுண்டா? உன் உற்றார், உறமுறையார், சகோதரர் சகோதரிகளுடைய பேரென்ன?...அவர்களில் ஒவ்வொருவருக்கும் நாம் என்ன செய்யவேணுமென்கிறாய்?... அவர்களுக்கு வேண்டிய காரியங்களையெல்லாம் நம்மிடத்தில் கேள். ஏனென்றால் தங்கள் சுயநலத்தைத்தானே மறந்து பிறத்தியாருடைய நன்மையை நாடியிருக்கிற தயாள



சற்குணமுள்ள ஆத்துமங்கள் நமக்கு மிகவும் பிரியம்...எந்த ஏழைக்கு நாம் இரக்கஞ் செய்யவேணுமென்கிறாய்? அங்கே ஒரு வியாதிஸ்தன் மிகவுந் துன்பப்படுகிறதாக நீ பார்த்தாயே, அவனோ? எந்தப் பாவியின் மனது திரும்பவேணுமென்று கேட்கிறாய்?... யாரோடே சிலகாலம் மனஸ்தாபமாய் இருந்தபின், இப்போது நீ சமாதானமாய்ப் போகவேணுமென்கிறாய்?...அவர்களுக்காக இப்போது சற்றுநேரம் பத்தியோடே வேண்டிக்கொள்...இருதயப் பற்றுதலோடே செபிக்கப்படும் ஜெபங்களையெல்லாம் கேட்டருளுவோமென்று நாம் வாக்குறுதியாகத் திருவுளம்பற்றியிருக்கிறோமே. அப்படியே சிநேகிதர் ஒருவரொருவருக்காக ஒப்புக்கொடுக்கிற ஜெபம், இருதய உருக்கம் அமைந்த ஜெபமல்லவோ? இதற்கு நாம் இரங்காதிருப்போமா?

உனக்காக ஏதாவது நன்மை வரப்பிரசாதம் நீ கேட்கவேண்டியதில்லையா?...உனக்குப் பிரியமானால் உன் ஆத்துமத்திலுள்ள குறைகளையெல்லாம் எழுதிக்கொண்டுவந்து நமது சமூகத்தில் வாசித்துக்காட்டு...ஆசாபாசம், அகந்தை, பொருளாசை, சுயபட்சம்,

கோழைத்தனம், சோம்பல் முதலிய துர்க்
குணங்கள்மட்டில் நீ எவ்வளவு மனச்சார்
புள்ளவனாய் இருக்கிறாய்?...இந்தத் துர்க்
குணங்களையெல்லாம் நீ ஜெயித்தடக்கத்
தக்கதாக, நாம் உன்னிடத்தில் எழுந்தருளி
வந்து உனக்கு உதவி செய்யவேணுமென்று
மன்றாடக்கடவாய்...நிர்ப்பாக்கியமான ஆத்
துமமே, வெட்கப்படாதே; ஏனென்றால்
முதலில் இப்பேர்ப்பட்ட துர்க்குணங்களுக்
குள்ளாயிருந்த அநேகர் உருக்கமாய் மன்றா
டிக் கேட்டுக்கொண்டபடியால், நமது உதவி
யைக்கொண்டு அவர்கள் அந்தக் குற்றங்
களைக் கொஞ்சங்கொஞ்சமாய் ஜெயித்து
ஜெயசீலராகி, இப்போது முத்தி முடிதரித்த
அர்ச்சியசிஷ்டவர்களாக மோக்ஷ பேரின்பத்
தில் விளங்கி வீற்றிருக்கிறார்கள். புத்தி,
ஞாபகம், தேர்ச்சி, க்ஷேமம் முதலிய பிர
பஞ்ச நன்மைகளையும் நம்மிடத்தில் கேட்க
நீ கூச்சப்படாதே. அவைகளையெல்லாம்
நாம் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம்.
அவைகளால் உன் ஆத்துமம் அதிக பரிசுத்த
மாகக் கூடுமானால் அவைகளை உனக்குக் கட்
டளையிட்டருளுவோம். ஆத்துமமே, இன்
றைக்கு உனக்கு என்னென்ன வேணும்...



உனக்கு நன்மை செய்ய நாம் எவ்வளவோ
ஆசைப்படுகிறோம்!...

உனக்கு ஓயாத கவலையை உண்டுபண்ணு
கிற அலுவல் ஏதாவது உண்டா? அதை நம
க்கு விபரமாய்ச் சொல்...அந்த அலுவலைப்
பற்றி நீ என்ன நினைக்கிறாய்?...அதில் என்
னென்ன பிரயோஜனம் வருமென்று நம்பி
யிருக்கிறாய்?...உன் உற்றார், உறமுறையார்,
பெற்றார், பெரியோருக்குப் பிரியப்படுகிற
தற்காக அதைச் செய்கிறாய்?...அதினால்
அவர்களுக்கு என்ன நன்மை செய்யலா
மென்று எண்ணியிருக்கிறாய்? நமக்காக நீ
ஏதாகிலும் செய்யமாட்டாயா? உன் உற
முறையார் சிநேகிதர் நம்மை மறந்துபோகி
றார்களே! அவர்களுடைய ஆத்துமங்களுக்கு
வேண்டிய நன்மை செய்ய உனக்கு மனசில்
லையா? எந்த விஷயத்தில் அதிக அக்கறை
யாய் அல்லது கரிசனத்தோடே உழைத்து
வேலைசெய்கிறாய்? எந்தெந்த முகாந்தரத்
தைப்பற்றி நீ அதிலே ஓயாத சிந்தனையா
யிருக்கிறாய்? அதற்காக நீ பிரயோகித்துக்
கொள்ள நினைக்கும் உபாயங்கள் என்ன?
உனது க்ஷேமாதிக்ஷேமம், சலிப்புச் சஞ்சலங்
களையும் நமக்குச் சொல்லிக்காட்டு. அவற்

தின் காரணத்தை உனக்கு விளக்கிக் காண்பிப்போம். உன் ஏற்பாடு பிரயத்தனங்களில் யாராருடைய உதவியை நீ கோரியிருக்கிறாய்?...சகல இருதயங்களுக்கும் எஜமான் நாம் அல்லவா? நமது இஷ்டம்போல் அவைகளைப் படிப்படியாய் இளக்கி வசப்படுத்துவோம். உன் கோரிக்கை பிரயத்தனங்களுக்கு உதவியான பேர்வழிகளை உன் கிட்டக் கொண்டுவந்துவிடுவோம்.

ஆத்துமமே! உனக்கு ஏதாவது தொல்லை தொந்தரவுகள் உண்டா? அதன் விபரத்தை நமக்கு வெளிப்படுத்து. நீ ஏன் சலிப்பாய் இருக்கிறாய்?...உனக்கு கஸ்தி வருவித்ததார்?.. உன்னை நிந்தித்து அவமானப்படுத்தினதார்?...உன் அகர்தையைக் குத்திக் காயப்படுத்தினதார்? அப்படிப்பட்டவர்கள் எல்லாருக்கும் நீ பொறுத்தல் கொடுக்கிறாயென்றும், அந்தக் குறைகளை முழுதும் மறந்துவிடுவாயென்றும் உறுதியாய்ச் சொல்லி அவர்களுக்காக வேண்டிக்கொள். நாமும் உன்னை ஆசீர்வதிப்போம். உனக்கு கலக்கம் வருவிக்கிற தந்திர சோதனைகள் ஏதாவது உண்டா? காரணமில்லாத பயம் சிலவிசை உன் இருதயத்தைக் கலக்கடிக்கிறதாக்கும்...



ஆத்துமமே, பயப்படாதே. நமதுபேரில் நம்பிக்கையாயிரு...நாம் உன்னிருதயத்தில் வாசம் பண்ணுகிறோம். அங்கே நடக்கிற விசேஷங்களையெல்லாம் நாம் அறிந்திருக்கிறோம். நாம் உனக்கு உதவி செய்வோம். தைரியமாயிரு...உன் சிநேகிதனென்று வெறும்பேர் படைத்து இச்சகம் பேசி உனக்கு வஞ்சனை செய்கிறவர்களுண்டா?...அவர்களுக்காகவும் வேண்டிக்கொள். உன் மன ஆறுதலுக்கு அவசரமாகில் அவர்கள் மனசைத் திருப்பி எதார்த்தவாதிகளாக்குவோம்.

நமக்குச் சொல்லத்தகும் சந்தோஷ விசேஷம் ஒன்றுமில்லையா?...உன்னோடே நாமும் மகிழத்தக்கதாக அந்த விசேஷங்களை நமக்குச்சொல்லலாகாதா? நேற்றையத்தினமுதல் உனக்கு நேரிட்ட சந்தோஷ விசேஷங்களை நமக்கு வெளிப்படுத்து. நீ நினையாத சமயத்தில் உன்னைச் சந்திக்கவந்த ஒரு சிநேகிதரால் நீ அடைந்த சந்தோஷமும், உனக்கிருந்த அச்சம் சலிப்புகள் நீங்கி ஆறுதலுண்டான அகமகிழ்ச்சியும், சிநேக மேரையாய் உனக்குக் கிடைத்த கடிதமும், சந்திப்புச் சாமான்களால்வந்த அக்களிப்பும், இவைகளெல்லாம் நம்மாலேதான் உனக்கு அனுப்

பப்பட்டன. ஆத்துமமே! இவைகளுக்காக ஏன் நீ நன்றியறிதல் காண்பிக்கிறதில்லை? "சுவாமி, நன்றியறிந்திருக்கிறேன், உமது திரு நாமம் வாழ்த்தப்படக்கடவது" என்று ஏன் சொல்லுகிறதில்லை? நன்றியறிதல் அதிகமான நன்மையை விளைவிக்குமே. உபகாரம் மறக்கப்படாதிருப்பதைக் காண்பது உபகாரிக்கு அதிக உதாரகுணத்தை வருவிக்குமல்லவா?...

நமக்கு நீ செய்ய விரும்பும் வாக்குத்தத்தங்கள் ஏதாவது உண்டா? உன் இருதய அந்தரங்கமெல்லாம் நமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. பிறரை நீ ஏய்த்துப்போட்டாலும், உன் ஆண்டவராகிய நம்மை ஏய்க்கமுடியாது. ஆகையால், ஆத்துமமே! உண்மை எதார்த்தத்துடன் நமது சமுகத்தில் சஞ்சரிப்பாயாக. அந்தந்தப் பாவ சமயத்தை விலக்கிவிட தீர்மானித்திருக்கிறாயா? உன் ஆத்துமத்துக்குப் பொல்லாப்பாயிருக்கிற அந்தப் பொருளை விட்டு விடுவாயா? உன் மன ரூபிகரத்தை வீணாய்க் குளப்பிக்கொண்டிருக்கிற அந்தக் கெட்டப் புத்தகத்தை இனி வாசியாமல் தள்ளிப்போடுவாயா! உன் ஆத்தும சமாதானத்துக்கு விக்கினமாயிருக்



கிற இன்னின்னாருடைய சகவாசத்தை விட்டு விடுவாயா? உனக்குப் பொல்லாப்புச் செய்தவர்களுக்கு எப்படித் தயை சாந்தகுணம் காண்பிக்க வேணுமென்று நம்மிடத்தில் கற்றறிந்துகொள்.

ஆத்துமமே, உனக்கு ஆசீர்வாதம். இப்போது நீ போய் உன் வேலைகளைச் செய். ஒழுங்குபோல் மௌனமாயிரு. அடக்க ஒடுக்கமாயிரு. கீழ்ப்படிதல் உள்ளவனாயிரு. பிறர்நேசமுள்ளவனாயிரு. அமலோற்பவ மாதாவை அதிமிக அன்போடு நேசித்திரு. நாளைக்கு திரும்பவா. வரும்போது உன் இருதயம் அதிகப் பத்தி பற்றுதல் அமைந்ததாய் இருக்கும்படி பார்த்துக்கொள். இனி உன் இருதயம் நன்மையில் சார்ந்ததுமாய், நன்மைசெய்ய அதிக உறுதியான தீர்மானமுள்ளதுமாயிருக்கவேண்டும். நாளைக்குச் சில புது வரப்பிரசாதங்களையும் நன்மைகளையும் உனக்குக் கட்டளையிடச் சித்தமாயிருக்கிறோம்.

(குறிப்பு)...புள்ளியிட்ட இடங்களில் சற்று நேரம் நின்று அவ்விடத்துக்குரிய மன உச்சாரணம் செய்யவேண்டும்.

## திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் காலைச் செபம்.

ஓ! அதியுன்னத மதுரம் பொருந்திய சேசுவே! அடியேன் உமது கிருபாசனத் தண்டையில் இப்படி திரும்ப வந்து சேருமளவும், இந்நேரமட்டும், இருண்ட இந்த இராநேரமுழுதும், எனக்காகப் பொறுமையாய்க் காத்திருந்தீரோ! என் அன்புக்குரிய சேசுவே! இப்போது இதோ நான் உமது சன்னிதியில் வந்து சேர்ந்தேன். கடந்த இராநேரமுழுதும் தேவரீர் எனக்காகக் காத்திருந்ததும் போதாமல், இந்நாள் ஜீவியத்தையும் எனக்குக் கட்டளையிட்டு உமது தோத்திரத்துக்காகவும் என் ஆத்தும இரட்சணியத்துக்காகவும் உழைத்து பேறுபலனைச் சம்பாதிக்க ஆயுளைத் தந்தருளினீரோ. இப்பேர்ப்பட்ட நன்மைகளுக்காக நான் என் முழு இருதய நன்றியறிதலோடே தேவரீருடைய திருப்பாதத்தில் ஓடிவந்து என்னை முழுதும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். இன்று தாழ்ச்சி சிரவணமுள்ளவனாகவும், சின்னஞ் சிறுவர்க்குரிய கபடற்றதனமுள்ளவனாகவும் என்னைப் புதுப்பித்து உமது திருச் சித்தத்துக்கு முழு



தும் அமைந்து நடக்க வரப்பிரசாதம் தந்தருளும். கடைசியாய் உம்மை உண்மை உருக்கமாய்ச் சிநேகித்துச் சேவிக்கிறவர்களுக்குத் தேவரீர்தாமே வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிற நித்திய சம்பாவனைக்கு அடியேனும் பாத்திரவானாகத் தயை செய்தருளும் சுவாமி. ஆமென் சேசு.

---

## திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் மாலைச் செபம்.

திவ்விய சேசுவே, தெரிசிப்பாரின்றியும், பூசிப்பாரின்றியும் எத்தனையோ திருப்பேழைகளில் இராமுழுதும் தனிவாசமானீர். அன்பு அமைந்த என் இருதயத்தை தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். அதின் ஒவ்வொரு அசைவு ஆட்டமும் தேவரீரை நோக்கிய சிநேகப் பிரார்த்தனையாயிருக்கக்கடவது. திவ்விய சற்பிரசாதத்தில் மறைந்திருந்து எங்களுக்காகத் தேவரீர் எப்பொழுதும் விழித்துக் காத்துக்கொண்டிருக்கிறீர். தேவரீர் உமது நேசப்பெருக்கத்தால் ஒருபொழுதும் சோர்ந்து அயர்ந்துபோவதில்லையே. பாவிகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கும்

அலுவலில் தேவரீர் ஒருபொழுதும் சலிப்பதுமில்லையே.

அன்புக்குரிய சேசுவே! தனிவாசமாகிய ஆண்டவரே! என் இருதயம் தேவரீருக்காக சுடர்விட்டெரியும் ஓர் தீபமாகக்கடவது. திவ்வியநற்கருணையில் வீற்றிருக்கும் காவல் தீரனே, எங்கள் க்ஷேம லாபத்தினிமித்தம் விழித்திருக்கலானீர்.

---

## திவ்விய சற்பிரசாதத்திற்கு நிந்தைப் பரிகாரச் செபம்.

என் சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய சேசுவே! மெய்யான தேவனும் மனிதனுமாகிய ஆண்டவரே! என் முழு இருதயத்தோடே தேவரீரைச் சிநேகித்து வணங்கி ஆராதிக்கிறேன். திருப்பீடத்தில் மறைந்து வசிக்கும் தேவனாகிய உமக்கு விரோதமாய், நான் நன்றிகாணமின்றிக் கட்டிக்கொண்ட தோஷ துரோக அநாசாரங்களுக்கு உத்தரிப்புப் பலியாகவும், மற்றும் மனுக்குலத்தோரால் செய்யப்பட்டதும் இனி செய்யப்படுவதுமாகிய பாவ அக்கிரமங்களுக்குப் பரிகாரமாகவும் அடியேனுடைய ஆராதனை வணக்க தோத்திரங்களைக் கையேற்றுக்கொள்ளக் கிருபை



புரிந்தருளும். தேவரீருக்கு அடியேன் செலுத்தவேண்டிய ஆராதனை தோத்திரங்களை உமது மகிமைப்பிரதாபத்துக்கு யோக்கியமான பிரகாரமாய் நான் செய்யக்கூடாதிருந்தாலும், என்னாலியன்ற தாழ்ச்சி நேசப் பற்றுதலோடே அவைகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இதன்றியே புத்தியுடைத்தான ஜீவஜெந்துக்களின் இருதய கமலங்களில் எவ்வளவான சிநேகப் பெருக்கம் அடங்கக்கூடுமோ, அவ்வளவான பூரண அன்பு ஐக்கியத்தோடே தேவரீரைச் சிநேகிக்க ஆசைப்படுகிறேன். தேவரீரை அறியாமலும் சிநேகித்துச் சேவியாமலும் இருக்கிற கத்தோலிக்கிறீஸ்தவர்களுடைய குற்றங் குறைகளைப் பரிகரிக்கவும், பாவிகள், பதிதர், பிரிவினைக்காரர், அஞ்ஞானிகள், யூதர், துலுக்கர், நாஸ்திகர், தேவ தூஷணிகள், மந்திரவாதிகள் முதலிய அவிசுவாசிகள் எல்லோரும் மனந்திரும்பிவரவும் நான் ஆசைப்படுகிறேன்.

என் நேச சேசுவே! தேவரீருடைய தெய்வீகம் இப்பூலோகமெங்கும் பிரபலியமாய் ஆராதிக்கப்படவும், திவ்விய சற்பிரசாதத்தில் தேவரீருக்கு இடைவிடாத தோத்திரம் செலுத்தப்படவும் கடவதாக. ஆமென்சேசு. (200-நாட் பலன்)




## சேசுநாதர்சுவாமி தமது திவ்விய இருதயத்தின்பேரில் பத்தியுள்ளவர்களுக்காக முத். மார்கரீத் மரியம்மாளுக்கு கொடுத்த வார்த்தைப் பாடுகள்.

1. தங்கள் அந்தஸ்தின் கடமைகளையெல்லாம் சுமுத்திரையாய் நிறைவேற்றவேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் அளித்தருளுவோம்.

2. அவர்களுடைய குடும்பங்களில் சமாதானத்தை விளைவிப்போம்.

3. அவர்களுடைய சகல துன்பங்களிலும் ஆறுதலாயிருப்போம்.

4. அவர்கள் உயிரோடிருக்கும்போதும் விசேஷமாய் அவர்களுடைய மரண சமயத்



திலும் அவர்களுக்குத் தவறாத அடைக்கலமாயிருப்போம்.

5. அவர்கள் தொடங்குகிற சகல காரியங்களும் அனுகூலமாகும்படி திரளான வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளுவோம்.

6. நமது இருதயமானது பாவிகளுக்கு தயாளத்தின் ஊற்றும் கரைகாணாத சமுத்திரமுமாயிருக்கும்.

7. புண்ணியத்தின் வழியில் சுறுசுறுப்பற்ற ஆத்துமாக்கள் சுறுசுறுப்பை அடைவார்கள்.

8. புண்ணியத்தின் வழியில் சுறுசுறுப்புள்ள ஆத்துமாக்கள் அதிசீக்கிரமாய் மேலான உத்தமதனத்தை அடைவார்கள்.

9. எந்தெந்த வீடுகளில் நமது திரு இருதயப்படத்தை ஸ்தாபித்து சங்கிப்பார்களோ அந்த வீடுகளைமுதலாய் நாம் ஆசீர்வதிப்போம்.

10. பாவத்தில் முதிர்ந்து அதில் நிலைக்கொண்ட ஆத்துமாக்களை திருப்புகிறதற்கான வரத்தைக் குருக்களுக்குத் தந்தருளுவோம்.

11. நமது இருதயத்தின்பேரில் பத்தி மற்றவர்களிடத்திலும் உண்டாகப் பிரயாசப்படுகிறவர்களின் நாமங்களை நமது இருதயத்

தில் ஒருக்காலும் அழிக்கப்படாதவிதமாய் அச்சுப்போலப் பதிப்பிப்போம்.

12. மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் ஒன்பது கிழமைகள் விடாமல் நன்மை வாங்குகிறவர்கள், சாகும்போது பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டுச் சாகும்வரம், அளவில்லாத பெலனுள்ள நமது இருதயத்தின் சிநேகம் கொடுக்குமென்று அவ்விருதயத்திலுள்ள இரக்க மிகுதியால் வார்த்தைப்பாடு கொடுக்கிறோம். இப்படிச் செய்பவர்கள் நமது சத்துருக்களாயாவது தேவதிரவிய அநுமானங்களின்றியாவது சாகவே மாட்டார்கள். அவர்கள் சாகும்வேளையில் நமது திரு இருதயம் அவர்களுக்கு நிச்சயமான அடைக்கலமாயிருக்கும்.

---

## சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கும் ஜெபம்.

(அர்ச். மார்கரீத் மரியம்மாள்.)

சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு அடியேன் (இன்னான்) என்னை முழுதும் கையளித்து ஒப்புக்கொடுக்கிறேன். என்னிலுள்ளதும் எனக்குள்ளதுமான சகலமும் அத்திரு



இருதயத்தையே சிநேகித்து ஸ்துதித்து வணங்கும்படியாக என்னையும் என் ஜீவன் உயிரையும் என் கிரியைகள்முதல் எனக்கு வரும் துன்பவருத்தங்கள் சகலமும் அத்திரு இருதயத்துக்குப் பாதகாணிக்கையாக வைக்கிறேன். திவ்விய இருதயத்துக்கு முழுதும் சொந்தமாயிருப்பதும் அதற்கு மனத்தாங்கல் வருவிக்கக்கூடிய சகலத்தையும் என் முழுமனதோடு அருவருத்துத் தள்ளி, அத்திரு இருதயத்தின்மட்டில் எனக்குள்ள சிநேகத்தைக் காண்பிக்கச் சகலமும் செய்வேனென்பதும் இதுவே சற்றும் மாறாத என் தீர்மானமாமே.

ஓ! மதுரமான சேசுவின் திரு இருதயமே! இனிமேலாக நீரே, என் சிநேகத்துக்கெல்லாம் முற்றும் உரியவர். நீரே, என் உயிரின் ஏக காவல். எனது இரட்சணியத்தின் தளராத நம்பிக்கை நீரே. நீரே, என் பலவீனத்தைத் தாங்கும் அவுழ்தம். என் ஜீவியநாட்களில் நான் செய்த குற்றங் குறைகளைப் பரிகரிப்பவர் நீரே. நீரே, என் உயிர் பிரியும் வேளையில் எனக்கு ஸ்திரமான அடைக்கலம். ஓ தயாளம் நிறைந்த சேசுவின் திரு இருதயமே! உமது பிதாவின் சமுகத்தில் நீரே

எனக்காக மன்றாடி அவருடைய நீதியின் கோபாக்கினை என்மேல் விழாதபடி தடுத்தருளும். ஓ! சிநேகப் பிரளயமான சேசுவின் திரு இருதயமே! என் பலவீனத்தைப் பார்க்கையில் எனக்கு முற்றும் பயமும், உமது தயாளத்தை நினைக்கையில் எனக்கு முழு நம்பிக்கையும் வருவதினாலே என் நம்பிக்கை யாவும்'உமதுபேரில் வைக்கிறேன்.

ஆனதினால் உமக்குப் பிரியமற்றதும் விரோதமுமானது எதுவும் என்னிடத்திலிருந்தால் அதை உமது சிநேக அக்கினியினால் சுட்டெரித்தருளும். நான் உம்மை என்றும் மறவாமலும், உம்மைவிட்டு என்றும் பிரியாமலும் இருக்கும்படி உமது தூய சிநேகத்தை என் இருதயத்தில் பதிப்பித்தருளும். நான் உமது சொந்த அடிமையாகச் சீவிப்பதும் சாவதுமே என் சர்வபாக்கியமாகச் செய்ய ஆசிப்பதினாலே என் பெயரை உமது திரு இருதயத்தில் எழுதி வைத்தருளுவீரென்று உமது தயாள இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறேன் சுவாமி—ஆமென்சேசு.

(300-நாள் பலன்.)

---



## சேசுநாதருடைய திரு இருதயத்துக்குத் தங்கள் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கிற ஜெபம்.

சேசுவின் திரு இருதயமே! கிறீஸ்துவக் குடும்பங்களுக்குத் தேவரீர் செய்துவருஞ் சகல உபகாரங்களையும், சொல்லமுடியாத உமது நன்மைத் தனத்தையும் நினைத்து நன்றியறிந்த பக்ஷத்தோடு உமது திருப் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறோம்.

நேசமுள்ள' சேசுவே! எங்கள் குடும்பங்களிலுள்ள சகலரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தேவரீர் எங்களை ஆசீர்வதித்து, இப்போதும் எப்போதும் உமது திரு இருதய நிழலில் நாங்கள் இளைப்பாறச் செய்தருளும்.

தவறி எங்களில் எவனாவது உமது திரு இருதயத்தை நோகச் செய்திருந்தால், அவன் குற்றத்துக்கு நாங்களே நிந்தைப் பரிகாரஞ் செய்கிறோம். உமது திரு இருதயத்தைப் பார்த்து எங்கள் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு அவனுக்குக் கிருபை செய்தருளும்.

இதுவுமன்றி உலகத்திலிருக்கும் சகல குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். பலவீனர்களுக்குப் பலமும், விருத்

தாம்பியருக்கு ஊன்றுகோலும், விதவைகளுக்கு ஆதரவும், அநாதப் பிள்ளைகளுக்குத் தஞ்சமுமாயிருக்கத் தயைபுரியும். ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள், அவஸ்தைப்படுகிறவர்கள் தலைமாட்டில் தேவரீர்தாமே விழித்துக் காத்திருப்பீராக.

சேசுவின் இரக்கமுள்ள திரு இருதயமே! சிறு பிள்ளைகளை நீர் எவ்வளவோ பட்சத்தோடு நேசித்தீரே. இந்த விசாரணையிலுள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை ஆசீர்வதியும். அவர்களுடைய இருதயத்தில் விசுவாசத்தையும் தெய்வ பயத்தையும் வளரச்செய்யும். சிறியகாலத்தில் அவர்களுக்கு அடைக்கலமாகவும், மரண சமயத்தில் ஆறுதலாகவும் இருக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

திவ்விய சேசுவே! முறைமுறையாய் உமது திருச் சிநேகத்தில் ஜீவித்து மரித்து நித்திய காலமும் எங்கள் குடும்பமுழுதும் உம்மோடு இளைப்பாறக் கிருபைபுரிந்தருளும்.

ஆமென் சேசு.



## சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு உலக முழுவதையும் ஒப்புக்கொடுக்கும்படி அர்ச். பாப்பு ஏற்படுத்திய ஜெபம்.

ஓ! மிகவும் மதுரம் நிறைந்த சேசுவே! மனுக்குலத்தின் இரட்சகரே! உமது பீடத்தின் முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து கிடக்கும் அடியோர்கள்மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும் சுவாமி! நாங்கள் தேவரீருக்குச் சொந்தமானவர்கள். உமக்குச் சொந்தமாகவே நாங்களிருக்கும்படி ஆசையாயிருக்கிறோம். தேவரீரோடு இன்னும் அதிக ஸ்திரமாய் நாங்கள் ஒன்றித்திருக்கத் தக்கதாக, நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் மனசார, எங்களை முழுதும் இன்றைக்கு உம்முடைய இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம் சுவாமி.

சுவாமி மனிதர்களுக்குள்ளே பெரும்பங்கான அநேகம்பேர்கள் தேவரீரை ஒருபோதும் அறிந்ததேயில்லை. வேறே அநேகம் பேர்கள் உம்முடைய கற்பனைகளை நிந்தித்து உம்மைப் பழித்து வேண்டாமென்று தள்ளிப் போட்டார்கள். ஓ! மகா தயாளம் நிறைந்த சேசுவே! உம்மை அறியாதவர்கள் பேரிலும்,

உம்மை அறிந்தும் நிந்திக்கிறவர்கள்பேரிலும் இரக்கமாயிரும். இவர்கள் எல்லாரையும் உமது திரு இருதயத்தின் கிட்ட நெருங்க பந்தனங்களால் இழுத்தருளும் சுவாமி.

ஆண்டவரே! உம்மைவிட்டு ஒருபோதும் பிரியாமல் என்றும் பிரமாணிக்கமாயிருக்கும் விசுவாசிகளான கிறீஸ்தவர்கள்பேரில் தயவாயிரும். விசேஷமாய் உம்மை விரோதித்துப்போன ஊதாரிப்பிள்ளைகள்பேரிலும் இரக்கமாயிரும். இவர்கள் எல்லாரும் பசியாலும் துன்பத்தாலும் வருந்திக் கெட்டுப்போகாதபடி, தங்கள் தகப்பன்வீட்டுக்குச் சீக்கிரத்தில் வந்து சேரும்படி கிருபைசெய்வீராக.

அபத்தப் பொய்களால் வழிதப்பிப் பிசகிப் போயிருக்கிறவர்களுக்கும் விரோதத்தால் பிரிந்திருக்கிறவர்களுக்கும் தேவரீர் இராஜாவாய் இருப்பீராக. இவர்கள் எல்லாரையும் சத்தியத்தின் துறைமுகத்திற்கும், விசுவாசத்தின் ஒற்றுமைக்கும் அழைத்துக் கூட்டிச் சேர்த்தருளும் சுவாமி. அப்போது எல்லாருக்கும் ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும். கடைசியாய் அஞ்ஞானத்தின் முதிர்ந்த குருட்டாட்டத்தில் அமிழ்ந்தியிருக்கும் ஜனங்களுக்கும் தேவரீர் இராஜா



வாய் இருப்பீராக. இவர்கள் எல்லாரையும் இருளின் மயக்கத்திலிருந்து தேவ பிரகாசத்துக்கும், சர்வேசுரனுடைய இராச்சியத்துக்கும் அழைத்தருளும் சுவாமி.

ஆண்டவரே! உமது பரிசுத்த சபைக்கு இரட்சண்யமாயிரும். அமரிக்கையும் சுவாதீனமும் அதற்குக் கொடுத்தருளும். சகல ஜனங்கள் மத்தியில் ஒழுங்கும் சமாதானமும் உண்டாகும்படி செய்யும். இப்பூமியில் ஒரு கோடி மூலைமுதல் மறுகோடி மூலை மட்டும் ஒரே குரல் சத்தமாய், நமக்கு இரட்சண்யம் கொண்டுவந்த இருதயத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக! மகிமையும் வணக்கமும் திரு இருதயத்துக்கு சதாகாலம் உண்டாவதாக என்று விடாது சத்தித்தொலிக்கக்கடவது.

ஆமென்சேசு.

## மரண அவஸ்தைப்பட்ட சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத்துக்குச் செலுத்தத்தகும் பலனுள்ள ஜெபம்.

கருணாம்பர சேசுவே! ஆத்துமங்களை நேசிக்கிறவரே, தேவரீருடைய திவ்விய இரு

தூயமானது பூங்காவனத்திலுஞ் சிலுவையி லேயும் பட்ட அவஸ்தையையும், தேவரீருடைய மாசில்லாத திருத் தாயானவள் அநுபவித்த வியாகுலங்களையும் பார்த்து இன்று தானே பூமியிலெங்கும் அவஸ்தையாய்க் கிடந்து சாகப்போகிற பாவிகளைத் தேவரீருடைய திரு இரத்தத்தினால் சுத்திபண்ணியருளும்.

*அவஸ்தைப்பட்ட சேசுவின் திவ்விய இருதயமே! மரிக்கிறவர்களின்பேரில் இரக்கமாயிரும். ஆமென்சேசு.

(100-நாள் பலன். 9-ம் பத்திராதர்.)

*அடையாளமிட்ட ஜெபத்திற்கு அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயச் சபையாருக்கு 300-நாள் பலன். 10-ம் பத்திராதர்.

---

## அர்ச். பாப்பானவரால் அங்கீகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதயத்தின் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.



1. நித்திய பிதாவின் சுதனாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

2. பரிசுத்த கன்னித்தாயின் உதரத்திலே இஸ்பிரீத்து சாந்துவினால் உருவான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

3. தேவ வார்த்தையான சுதனோடு ஒரே பொருளாய் ஒன்றித்திருக்கும் சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

4. அளவற்ற மகத்துவ பிரதாபநிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

5. சர்வேசுரனுடைய அர்ச்சிக்கப்பட்ட ஆலயமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

6. அதி உந்நத ஆண்டவரின் வாசஸ்தலமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்.

7. சர்வேசுரனுடைய வீடும், மோட்சத்தின் வாசலுமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

8. சிநேக அக்கினி சுவாலித்தெரியும் சூளையான சேசுவின் திவ்விய இருதயமே,—

9. நீதியும் சிநேகமும் தங்கியிருக்கும் இல்லிடமான சேசுவின் திவ்விய இருதயமே,—

10. தயாளமும் சிநேகமும் நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

11. சகல புண்ணியங்களும் சம்பூரணமாய் நிறையப்பெற்ற சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

12. எவ்வித ஸ்துதி புகழ்ச்சிக்கும் முற்றும் உரிய சேசுவின் திவ்விய இருதயமே,—

13. இருதயங்களுக்கெல்லாம் அரசும், அவைகளின் மத்திய ஸ்தானமுமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

14. ஞானமும் அறிவும் நிறைந்த பூரண பொக்கிஷமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

15. தெய்வத்துவ சம்பூரணம் தங்கி வாசஞ்செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

16. உமது பிதாவுக்கு உகந்த பிரிய நேசமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,—எங்.

17. உம்மிடத்தில் நிறைந்திருக்கும் நன்மைகளை நாங்கள் அனைவோரும் பெற்று மகிழச்செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...



18. நித்திய சிகரங்களின் ஆசையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

19. பொறுமையும் மிகுந்த தயாளமுமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,-எங்..

20. உம்மை மன்றாடிப் பிரார்த்திக்கும் சகலருக்கும் சம்பூரணங்கொடுக்குந் தாராளமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,-எங்..

21. ஜீவியத்துக்கும் அர்ச்சியசிஷ்டதனத்துக்கும் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

22. எங்கள் பாவங்களின் மன்னிப்புக்கேற்ற பரிகாரமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

23. நிந்தை அவமானங்களால் நிறைந்து மிகுந்த சேசுவின் திவ்விய இருதயமே,-எங்.

24. எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நொந்து வருந்தின சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

25. மரணமட்டும் கீழ்ப்படிந்திருந்த சேசுவின் திவ்விய இருதயமே,—எங்...

26. ஈட்டியால் குத்தி ஊடுருவப்பட்ட சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

27. சர்வ ஆறுதலின் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

28. எங்கள் சீவனும் உத்தானமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

29. எங்கள் சமாதானமும் ஒற்றுமைப் பந்தனமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

30. பாவங்களின் பலியான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

31. உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு இரட்சணியமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

32. உம்மிடம் மரிக்கிறவர்களின் நம்பிக்கையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—

33. சகல அர்ச்சியசிஷ்டவர்களின் ஆனந்தமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,-எங்.

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

மு.—இருதயத்தில் தாழ்ச்சியுஞ் சாந்தமுமுள்ள சேசுவே!

அ.—எங்கள் இருதயம் உமது இருதயத்தைப்போலாகும்படி கிருபை செய்யும்.



### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா! உமக்கு மிகவும் பிரிய குமாரனுடைய இருதயத்தையும், அவர் பாவிகள்பேரால் உமக்குச் செலுத்தின பரிகாரத்தையும், ஸ்துதி புகழ்ச்சியையும் கிருபையாய்ப் பார்த்தருளுஞ் சுவாமி. உமது இரக்கத்தை மன்றாடிக் கேட்பவர்களுக்குத் தேவரீர் இரங்கி மன்னிப்புக் கொடுத்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சுயஞ் சீவியராய் சதாகாலமும் இராச்சிய பரிபாலனஞ்செய்யும் உமது திவ்விய குமாரன் சேசுக்கிறீஸ்துநாதர் பேரால் எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி.

ஆமென்சேசு.

1899-ம் வருஷம் எப்பிரல்-மீ 2-உ பதின்மூன்றாம் சிங்கராயரென்னும், அர்ச். பாப்பானவர், இந்தப் பிரார்த்தனையைப் பத்தியோடு சொல்லுகிற ஒவ்வொருவிசைக்கும் 300-நாட்பலனைக் கட்டளையிட்டிருக்கிறார்.



# சுருக்கமான
# சிலுவைப்பாதை.

## பீடத்துக்கு முன்பாகச் சொல்லத்தகும் செபம்.

### உத்தம மனஸ்தாப மந்திரம்.

திவ்விய சேசுவே! எங்களுக்காகவும் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்களுக்காகவும் சிலுவைப்பாதையைச் சேவிக்கிறவர்களுக்கு அளிக்கப்பட்ட பலன்களை அடைய விரும்பித் தேவரீருடைய இரக்கத்தைக் கேட்டு மன்றாடுகிறோம்.

அர்ச். மரியாயே! வியாகுலமாதாவே! உம்மோடுகூடச் சிலுவைப்பாதையைச் சேவிக்க விரும்புகிற நாங்கள் அதினுடைய சுகிர்த பலன்களை அடையும்படிக்கு எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



## முதல் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம்பண்ணுகிறோம்.

துணைவர்.—அதேனென்றால் உம்முடைய அர்ச். சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### சேசுநாதரை சாவுக்குத் தீர்வை இடுகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையிலே அறையுண்டு மரணத்தை அடையத் தீர்வையிடப்பட்டதைத் தியானித்து, நாங்கள் தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறோம். அகோரத் தீர்வையிலே நின்று எங்களை இரட்சித்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

மு.—எங்கள்பேரில் தயையாயிரும் சுவாமி தயையாயிரும்.

து.—எங்கள்பேரில்.....மற்றதும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

து.—ஆமென்சேசு.

### இரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

*சேசுநாதர் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.*

திவ்விய சேசுவே! தேவரீர் பாரமான சிலுவையைச் சுமந்துபோனதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். எங்களுக்கு இவ்வுலகில் வருகிற கஸ்தி பொல்லாப்புகளைப் பொறுமையோடே அநுபவிக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்.........மற்றதும்.

### மூன்றாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

*சேசுநாதர் சிலுவையின் பாரத்தால் கீழே விழுகிறார்.*

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே முதல் விசை குப்புறவிழுந்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் செய்கிற பாவங்களிலே மூர்க்கராய் நிலைக்கொள்ளாமல், உடனே அவைகளை விட்டு எழுந்திருக்க அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்......மற்றதும்.



### நான்காம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

*சேசுநாதர் தமது பரிசுத்த தாயாரைச் சந்திக்கிறார்.*

திவ்விய சேசுவே! தேவரீருடைய பரிசுத்த மாதா உமக்கு எதிர்கொண்டு வருகிறதைக் கண்டு நீர் சொல்லிலடங்காத கஸ்தியை அநுபவித்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாகும் வேளையில் வியாகுல மாதாவின் அடைக்கலத்தை அடைய அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமி. ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்......மற்றதும்.

### ஐந்தாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

*சிரேனென் சீமோன் சேசுநாதர் தமது சிலுவையைச் சுமக்கும்படி உதவி செய்கிறார்.*

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவை சுமந்துபோகிறதற்குச் சிரேனென்கிற சீமோன் உதவி செய்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். எங்களுக்கு நியமித்திருக்கிற சிலுவையாகிய துன்பங்களை

உம்மோடுகூட நாங்கள் சுமக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.
எங்கள்பேரில்......மற்றதும்.

### ஆறாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே...மற்றதும்.

இரத்தக்கறைபிடித்த சேசுநாதருடைய
திருமுகத்தை ஓர் பெண்பிள்ளை
துடைக்கிறாள்.

திவ்விய சேசுவே! வெரோணிக்கம்மாள் தேவரீருடைய திரு முகத்தைத் துடைத்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் முகதாக்ஷணியத்தைப் பாராமல், புண்ணிய நெறியில் உறுதியாய் நடக்க அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி. எங்கள்பேரில்......மற்றதும்.

### ஏழாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதர் சிலுவையின் பாரத்தால்
இரண்டாம் விசை தரையில் விழுகிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே இரண்டாம்விசை குப்புற விழுந்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்



கள் எந்தப் பாவத்திலும் திரும்ப விழாதபடிக்குக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.
எங்கள்பேரில்......மற்றதும்.

### எட்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே...மற்றதும்.

சேசுநாதர் தமது பின்னால் அழுதுகொண்டு
வந்த பூத ஸ்திரீகளுக்கு ஆறுதல்
சொல்லுகிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் உம்மை நோக்கி அழுத ஜெருசலேம் பட்டணத்து ஸ்திரீகளுக்கு ஆறுதல்சொன்னதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் பண்ணின பாவதுரோகங்களுக்குத் துயரப்பட்டு, அவைகளுக்காக எப்போதும் அழுது கொண்டிருக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.
எங்கள்பேரில்......மற்றதும்.

### ஒன்பதாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதர் மூன்றாம் விசை கீழே விழுகிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே மூன்றாம் விசை குப்புற விழுந்ததைத்

தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாவான பாவத்தோடே செத்து, நித்திய நரகத்திலே விழாதபடிக்குக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள் பேரில்......மற்றதும்.

### பத்தாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதருடைய வஸ்திரங்களை உரிகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீர் வஸ்திரங்கள் உரியப்பட்டதையும் தேவரீருக்குக் கசப்பான காடியைக் குடிக்கக் கொடுத்ததையுந் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சகலத்திலும் தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிந்து, பொறுமையோடு நடக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்......மற்றதும்.

### பதினோராம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதரை சிலுவையில் அறைகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையில் அறையுப்பட்டதைத் தியானித்து, உம்மை



ஆராதிக்கிறோம். நாங்கள் இவ்வுலக செல்வங்களை வெறுத்து, பரலோகத்தைமாத்திரமே நாடக் கிருபைசெய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்......மற்றதும்.

### பன்னிரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதர் சிலுவையில் மரிக்கிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவைமரத்தில் உயிர்விட்டதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் உம்மைமாத்திரமே நேசித்து, இஷ்டப்பிரசாதத்தோடே மரித்து பரகதியில் உம்மோடே வீற்றிருக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்......மற்றதும்.

### பதின்மூன்றாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

மரித்த சுவாமியை அவர் தாயார் மடியில் வளர்த்துகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய திருச்சரீரத்தைச் சிலுவையினின்று இறக்கி வியாகுலமாதாவின் மடியிலே வளர்த்தப்பட்ட

தைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். எங்களுடைய இருதயத்திலே தேவரீருடைய திருக்காயங்களும், பரிசுத்த மாதாவின் வியாகுலங்களும் பதிந்திருக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்......மற்றதும்.

## பதிநான்காம் ஸ்தலம்.

மூத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

*சேசுநாதரைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.*

திவ்விய சேசுவே! தேவரீருடைய திருச்சரீரம் அடக்கம்பண்ணப்பட்டதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் மரணபரியந்தம் தேவரீரை நேசிக்கவும், தேவரீருடைய பேரின்ப இராச்சியத்துக்குச் சேரவுங் கிருபை செய்தருளும் சுவாமி.—ஒரு பர. பிரி. திரி.

எங்கள்பேரில்......மற்றதும்.

சேசுக்கிறீஸ்துநாதருடைய ஐந்து திருக்காயங்களைக் குறித்து ஐந்து பர. பிரி. திரித்துவமும், அர்ச். பாப்பானவருடைய சுகிர்த



கருத்துகள் நிறைவேற ஒரு பர. பிரி. திரி. மந்திரமும் சொல்லுகிறது.

சிலுவைப்பாதை—இந்த உத்தம புண்ணியக் கிரிகையைச் செய்கிறவர்கள், ஜெருசலேம் பட்டணத்துக்குப்போய் திருஸ்தலங்களைச் சேவிப்பதினாலே அடையக்கூடுமான பரிபூரண பலன்களையும், தனிப்பலன்களையும் அடையலாம். சிலுவைப்பாதை செய்வதினால் ஏராளமான பலன்கள் அடைகிறது மன்றி, சேசுநாதருடைய திருப்பாடுகளின்மீது பத்தி அதிகரிக்கிறதென்கிறபடியால், நாம் எல்லோரும் கூடுமானபோதெல்லாம் இதைச் செய்யப் பிரயாசப்படவேண்டும். 12-ம் சாந்தப்பர்.

இப்பலன்களை அடைவதற்குச் செய்யவேண்டியதென்னவெனில், இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்கிறதுமன்றி ஒவ்வொரு ஸ்தலத்தையும் ஒன்றாக்குப்பின் ஒன்றாய்ச் சந்தித்து, ஆண்டவருடைய பாடுகளைப்பற்றி தியானிப்பதேயாம். வாய்ச்செபங்கள் அவசியமில்லை.

# பெரிய சிலுவைப்பாதை.*

எக்காலத்திலும் விசேஷமாய்த் தபசு காலத்திலுஞ் செய்யத்தக்கது.

## பீடத்துக்கு முன்பாகச் சொல்லத்தக்க ஆயத்த செபம்.

திவ்விய சேசுவே! எங்கள் நேசத்துக்குரிய இரட்சகரே! இதோ அடியோர்கள் எங்களுக்காகவும், மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்களுக்காகவும் உமது திவ்விய இரக்

* இதைப் பத்தியோடே ஜெபிப்பவர்கள் அர்ச். பாப்புகளாலே சேசுநாதர் பாடுபட்ட ஸ்தலமாகிய ஜெருசலேம் பட்டணத்தைத் தரிசித்துச் சந்திப்பவர்களுக்கு முன் அளிக்கப்பட்ட பூரணப் பலன்களை எல்லாம் அடைவார்கள். ஆனால் இந்தப் பதினாலு ஸ்தலங்களையும் ஒரே இடத்திலிருந்து சொல்லலாகாது. கொஞ்சமாகிலும் நடந்து பதினாலு ஸ்தலங்களையுஞ் சேசுநாதர் பட்ட பாடுகளை நினைத்து உருகிக்கொண்டே சொல்லவும்.



கத்தைக் கேட்டு மன்றாடும்படிக்குத் தாழ்ச்சி வணக்கத்துடனே உமது திருப்பாதத்திலே விழுந்து கிடக்கிறோம். உம்முடைய திருப்பாடுகளைத் தியானிக்கப்போகிற அடியோர்களெல்லோருக்கும் அதுகளின் அளவில்லாப் பேறுபலன்களைத் தந்தருளுஞ் சுவாமீ. அழுகைப் பிரலாபத்துக்குரிய உமது திருச்சிலுவையின் பாதையை அநுசரிக்கையில் நாங்கள் முழுதும் மனந்திரும்பி மெய்யான துக்க மனஸ்தாபப்பட்டு இவ்வுலகத்தின் துன்பம், பீடை, கஸ்தி அவமானங்களைச் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொள்ளும்படியாக அநுக்கிரகஞ் செய்தருளும்.

ஆ! திவ்விய மாதாவே, அர்ச். மரியாயே! சிலுவையின் பாதையிலே எங்களுக்கு முந்தி நடந்ததினால் அதை எங்களுக்குக் காட்டிப் படிப்பித்தவள் நீரே; பத்தியுள்ள இந்த முயற்சியை அநுசரிக்கும் இந்நேரத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவர் எங்கள் இருதயத்தில் வருவிக்கும் நல்ல மனஸ்தாபத்தையுந் தேவசிநேகத்தின் பற்றுதலையும் அர்ச். திரித்துவமாகிய சர்வேசுரனானவர் தமக்குச் செய்யப்பட்ட நிந்தைகளுக்குப் பரிகாரமாக ஏற்றுக்கொள்ளும்படிக்கு நீரே மன்றாடவேணு

மென்று உம்மை நோக்கி நம்பிக்கையோடே பிரார்த்திக்கிறோம்.—பின் ஒரு பர. பிரி.

### முதல் ஸ்தலம்.

முதலோதி.—திவ்விய சேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறோம்.

அனைவர்.—ஏதேனென்றால் உம்முடைய அர்ச். சிலுவையைக்கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

### சேசுநாதர் மரணத்துக்குத் தீர்வையிடப்படுகிறார்.

பிலாத்தென்கிற துரை விதித்த இந்த அநியாயமான மரணத்தீர்வைக்கு இயல்பாயுட்பட்டதினாலே திவ்விய கர்த்தரிடத்தில் விளங்கின ஆச்சரியமான பொறுமை சிரவணத்தைத் தியானிப்போமாக: ஆனால் அவருக்கு மரணத் தீர்வையிட்டது பிலாத்தென்கிறவன் மாத்திரமல்ல, இவ்விடத்திலிருக்கிற நாமுஞ் சகல பாவிகளும் அவரைக் கொலைப்படுத்த வேண்டி நம்முடைய பாவங்களாலே ஏற்பட்டோமென்று நன்றாய் யோசித்து அறியக்கடவோம். நம்முடைய அக்கிரமங்கள்தான் அவருடைய மரணத்தீர்வைக்குக் காரணமாச்



சுது, ஆகையால் மெய்யான துக்கத்தோடே பிரலாபித்தழுது அவருடைய பாதத்தில் விழுந்து அவருடைய பொறுத்தலையடைய அவரை நோக்கி மன்றாடுவோமாக.

செபம்.—ஆ! திவ்விய கர்த்தாவே! மாசில்லாத சேசுவே! எங்கள் பாவதோஷ அக்கிரமமே உம்மை மரணத் தீர்வைக்குட்படுத்தினபடியினாலே நாங்கள் மனநொந்துமிருந்த மனஸ்தாபப்பட்டு எங்கள் பாவங்களையெல்லாம் அருவருத்துவிட்டு எங்கள் பிரலாபத்தினாலுந் தபசினாலும் உம்முடைய இரக்கத்துக்கும் பொறுத்தலுக்கும் பாத்திரவான்களாகும்படிக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமீ.—ஒரு பர. பிரி. திரி.

முதலோதி.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ.

அனைவர்.—எங்கள் பேரில் தயவாயிரும்.

முதலோதி.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினாற் சமாதானத்திலே இளைப்பாறக்கடவது.

அனைவர்.—ஆமென்சேசு.

## இரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதர் சிலுவை சுமத்தப்படுகிறார்.

நம்முடைய திவ்விய போதகருமாய்ப் பரம குருவுமாயிருக்கிற சேசுநாதர் கசைகள் முதலிய ஆயுதங்களினாலே அடியுங் காயமும் பட்டு நொறுங்கி இரத்தக்கறை பிடித்த தமது திருத்தோளின்பேரில் தம்முடைய நிர்ப்பந்தமுள்ள சாவின் பயங்கரமான எத்தனமாகிய சிலுவையை எம்மாத்திரம் பிரியத்தோடும், மதுர குணத்தோடுஞ் சுமந்து கொண்டாரென்று யோசிப்போமாக. சர்வேசுரனாலேயாவது படைப்புண்ட வஸ்துக்களாலேயாவது நமக்கு வருகிற ஆக்கினை, கஸ்தி, துன்பங்களை மிகுந்த பொறுமையோடே ஏற்றுக்கொண்டு நமது சிலுவையாகிய அதுகளை நாம் சுமக்கத்தக்க விதத்தை நம்முடைய திவ்விய கர்த்தர் இப்படியாய் நமக்குப் படிப்பிக்கச் சித்தமானார்.

செபம்.—ஆ, மதுரசேசுவே! தேவரீர் முழுதும் மாசற்றவராயிருக்கையால் இந்தப் பாரமான சிலுவை உமதுபேரிலல்ல சகல அக்கிரமங்களும் நிறைந்த நிர்ப்பாக்கியபாவி



களாகிய எங்கள் பேரிலே சுமத்தப்பட வேண்டியதாயிருந்தது. ஆகையால் உம்முடைய நீதிக்கு உத்தரிக்கவும் பரலோக இராச்சியத்திற் சேரவும் வழியாக உம்முடைய சித்தம் எங்களுக்கு நியமித்திருக்கிற பிரபஞ்ச துன்பதுரித பொல்லா புகளை உம்முடைய திவ்விய மாதிரிகையின்படியே நாங்கள் முறையிடாமற் பொறுமையோடே அநுபவிக்க மனத்திடனைக் கொடுத்தருளுஞ்சுவாமீ.

—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்......மற்றதும்.

## மூன்றாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதர் முதல்விசை தமது பாரமான சிலுவையோடு குப்புற விழுகிறார்.

நம்முடைய இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துநாதர் கபாலமலையின் வழியில் மிகுந்த வருத்தத்தோடு நடந்துபோகிறதை யோசிப்போமாக. அவர் பூங்காவனத்தில் இரத்தவேர்வை விட்டபோதும், சாட்டை, கசை, வார்களினாலே அடிபட்டபோதும், முண்முடி தரிக்கப்பட்டபோதும், தமது திரு இரத்தத்தை

மிகுதியாய்ச் சிந்தினதினாலே மெத்த பலவீனமடைந்ததைப்பற்றித் தமது சிலுவையின் பாரத்தைத் தாங்கமாட்டாமற் குப்புற விழுகிறார். உடனே தம்மை நிஷ்டூரச் சேவகர் தூஷணித்தடித்தாலும் அவர் எவ்வளவுங் கோபிக்காமல் மறுபடி எழுந்து சிலுவை சுமக்கத் திருவுளமாகிறார். இப்படி நம்முடைய பாவ அக்கிரமங்களைப் பரிகரிக்கவும் யாதொரு பாவத்தில் விழுகிற நிர்ப்பாக்கியம் நமக்கு நேரிட்ட பின்பு உடனே தகுந்த தபசினாலெழுந்திருக்க வேணுமென்று காண்பிக்கவுங் கிருபை செய்தருளினார்.

செபம்.—ஆ, நல்ல சேசுவே! எப்பக்கத்திலும் எங்களுக்கு நேரிடுகிற இன்மை ஆபத்துக்களிலே நின்று எங்களைக் கைதூக்கி இரட்சியும். புண்ணிய நெறியில் மெத்த பலவீனரான அடியோர்களைத் திடப்படுத்தி நாங்கள் தைரியமாய்க் கபாலமலை மட்டுக்குந் தேவரீரைப் பின்சென்று சீவியங்கொடுக்கிற விருட்சமாகிய சிலுவையின் இன்பமான பலனை அடையவுந் தேவரீரோடேகூடப் பரகதியிலே நித்திய ஆனந்தத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவுந் தயைபுரியுஞ் சுவாமீ.—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்!—மற்றதும்.



## நான்காம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.....மற்றதும்.

சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய
பரிசுத்த மாதா எதிர்கொண்டு
வருகிறதைக் காண்கிறார்.

திவ்விய கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய பிரிய தாயாரை இம்மாத்திரங் கொடிய குரூரமான வேளையிற் காண்கிறதினாலும் தேவமாதா தம்முடைய நேச குமாரன் எண்ணிறந்த ஜனங்களால் சூழவும் நிந்திக்கவும் தூஷணிக்கவும்பட்டு வெகு நிஷ்டூரச் சேவகர் படைகளால் மானபங்கமாகக் கொலைக்களத்துக்கு நடத்திக்கொண்டு போகப்படுகிறதைப் பார்க்கிறதினாலும் இருவருமநுபவித்த கஸ்தி வியாகுலம் எம்மாத்திரமென்று யோசிப்போமாக. சேசுநாதர் படுகிற கொடூர நிர்ப்பந்தங்களைப்பார்த்து இரக்கமுள்ள மாதாவினிருதயம் ஆயிரம் அம்புகளினால் ஊடுருவப்பட்டு துக்கசாகரத்தில் அமிழ்ந்தினாற்போலாயிற்று. தம்முடைய பிரிய குமாரனைக் கொலைப்பாதகருடைய கையில்நின்று விடுவித்து மீட்க மகா

ஆசையாயிருந்தாள். ஆனால் நமது இரட்சண்ணியம் இப்படி நிறைவேறவேணுமென்றறிந்து நம்முடைய திவ்விய திருக்குமாரனுடைய பலியோடே கூடத் தமதன்னையும் பலியாக ஒப்புக்கொடுத்து அவருடைய சகல கஸ்தி துன்ப வாதைகளுக்கும் பங்காளியாகத் தன் சாவுக்கே அஞ்சாமல் அவரைக் கடைசிபரியந்தம் பின்செல்லுகிறாள்.

செபம்.—வியாகுலமாதாவே! துக்கம் நிறைந்த மரியாயே! பரிசுத்த பருவதமாகிய கபாலமலைமட்டுஞ் சேசுக்கிறீஸ்துவைப் பின்செல்லுகையில் நீர் கொண்டிருந்த மிகுந்த அன்பின் பற்றுதலையுஞ் சிலுவையினடியிலே உம்மிடத்தில் விளங்கின மனத்திடனையும் அடியோர்கள் கண்டுபாவித்து உம்மோடு கூடத் தைரியமாய்ச் சிலுவையடியிலே நிலைக்கொண்டு ஒருக்காலும் அதைவிட்டுப் பிரியாதிருக்கும்படிக்கு எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்.—மற்றதும்.



## ஐந்தாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.....மற்றதும்.

சேசுக்கிறீஸ்துநாதர் தமது சிலுவையைச் சுமந்து போகிறதற்குச் சிரேனேன் என்கிற சிமோன் உதவி செய்கிறார்.

நம்முடைய திவ்விய இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு நமதுபேரிலுள்ள மட்டில்லாத அன்பையோசிப்போமாக. அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துபோகிறதற்குப் புறத்தியுதவியை ஏற்றுக்கொண்டதற்கு முகாந்தரமென்ன? அவரிடத்தில் பலத்தின் குறைவோ? அல்லவே. அவர்தான் சர்வலோகத்தையும் தாங்கி நடத்துகிறவர். ஆனால் நம்முடைய பீடை, கஸ்தி முதலான துன்பங்களை அவர் பட்ட நிர்ப்பந்தங்களோடே ஒன்றாய்க்கூட்டி அவருடைய கசப்பான பாத்திரமாகிய பாடுகளுக்கு நம்மைப் பங்காளிகளாக்கவேணுமென்று அவ்விதமாய் நமக்குப் படிப்பிக்கச் சித்தமானார்.

செபம்.—ஆ! எங்கள் திவ்விய உபாத்தியாயராகிய சேசுவே! பாடுகளின் பாத்திரத்திலே அதிகக் கசப்பாயிருந்ததெல்லாவற்றை

யுந் தேவரீர்தாமே உட்கொண்டு அதிலே கொஞ்சமாத்திரம் எங்களுக்கு மீதி வைக்கக் கிருபை செய்தீரோ, தேவரீர் உம்முடைய பாடுகளின் பாத்திரத்திலே எங்களுக்கு நியமித்த சொற்பமான பங்கு எங்களுக்கு வேண்டாமென்று நாங்களே எங்களுக்குச் சத்துராதிகளாய்த் தள்ளாமல் மனப்பற்றுதலாய் அதை ஏற்றுக்கொண்டு தேவரீர் நித்திய பேரின்ப இராச்சியத்தில் முத்திப்பேறு பெற்றவர்களுக்குத் திருப்தியாய்த் தந்தருளுகிற சொல்லிலடங்காத ஆநந்தத்துக்கும் அடியோர்கள் பங்காளிகளாகும்படிக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமீ.— ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்......மற்றதும்.

## ஆறும் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

பத்தியுள்ள ஒரு ஸ்திரீயானவள் சேசுநாதருடைய திருமுகத்தைத் துடைக்கிறாள்.

அந்தப் பரிசுத்த ஸ்திரீயானவள் தன் திவ்விய கர்த்தரைத் தரிசிக்கத்தக்கதாக நிஷ்டூரச் சேவகர்களுடைய நெருங்கின படை நடுவே உட்புகுந்து போனதினாலே காண்



பித்த அதிசயமான தைரியத்தை ஆச்சரியத்தோடே யோசிப்போமாக. சேசுநாதருடைய திருமுகமானது உமிழ்நீர், தூசி, வேர்வை, இரத்தத்தினால் மிகவுங் கறைபிடித்திருக்கிறதை அவள் கண்டு மெத்தவும் மனதிரங்கி யழுது பிரலாபிக்கிறாள். சகல அர்ச்சியசிஷ்டவர்களையும் ஆனந்தத்தினால் பரவசமாக்கிறதுமாய்ச் சம்மனசுகள் தானே அதின் சோதிப்பிரகாசத்தை நிமிர்ந்து பார்க்கக்கூடாமல் தங்களுடைய இறக்கைகளினாலே தங்களை முறைத்துக்கொள்ளும்படியாய் அவர்களுக்குப் பிரமிப்பை வருவிக்கிறதுமாயிருக்கிற இந்தத் திருமுகம் இப்படி வேற்றுருவாயிருக்கிறதின்மேற் சலித்துத் தேவஸ்நேகத்தின் மிகுதியினாலே ஒன்றுக்கும் பயப்படாமல் சேசுநாதருடைய திருப்பாதத்தை யண்டி வணக்கத்துடனே அவருடைய திரு முகத்தைத் துடைக்கிறாள். உடனே அந்தத் திருமுகத்தின் மகிமையுள்ள சாயல் அதைத் துடைத்த வஸ்திரத்திற் பதிந்ததினால் அவளுடைய விசுவாசத்திற்குப் பலனாயிற்று.

செபம்.—சகல மனுமக்களிலும் அதிக சுப சௌந்தரியமுள்ள சேசுவே! தேவரீருக்கு

எங்கள்பேரிலுள்ள பட்சமிகுதியானது தேவரீரை எந்தக் கோலமாக்கிப்போட்டது! மெய்யாகவே இப்போது விசேஷமாய் எங்கள் ஆராதனைகளுக்கும் ஸ்துதிகளுக்கும் மிகவும் பாத்திரமாயிருக்கிறீர். ஆகையால் தேவரீருடைய திருச்சமுகத்தில் நாங்கள் சாஷ்டாங்கமாக விழுந்து தேவரீரை ஆராதித்து அடியோர்கள் உமக்குச்செய்த துரோகங்களை மன்னிக்கவும், எங்களுடைய ஆத்துமம் பாவத்தினாலே இழந்துபோன தன் சுப சௌந்தரியத்தை அதற்கு மறுபடி தந்தருளவும் வேணுமென்று தேவரீரைப் பத்தி வணக்கத்தோடே மன்றாடுகிறோம் சுவாமீ.—இரு பரா. பிரி. திரி.

மூத.—எங்கள்......மற்றதும்.

### ஏழாம் ஸ்தலம்.

மூத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுக்கிறீஸ்துநாதர் இரண்டாம்விசை குப்புற விழுகிறார்.

அவதரித்த தேவனாகிய சேசுநாதர் மறுபடி இளைத்துக் களைத்து விழுகிறதை யோசிப்போமாக. பலியாகப்போகிற அந்தத் திவ்



விய கர்த்தர் தம்முடைய பலியின் பயங்கரமுள்ள எத்தனமாகிய பாரமான சிலுவைமரத்தின்கீழே சோர்ந்துகிடக்கிறதையுந் தம்மைக் கொலைப்படுத்தப்போகிற நிஷ்டூரச் சேவகர்களாலே மறுபடி கொடூரமாய் அடிபடுகிறதையும் விசாரிப்போமாக. வணக்கத்துக்குரிய இரட்சகர் நமதுபேரில் வைத்த அளவில்லாத பட்சத்துக்கு அத்தாட்சி காண்பிக்கத்தக்கதாக இப்படி இரண்டாமுறை தரையிலேவிழச் சித்தமானார். ஏனெனில் நாம் அடிக்கடி பற்பல குற்றங்களில் விழுந்தாலும் தைரியமற்று அவநம்பிக்கைப்படாமல் தம்முடைய தயவை நம்பிக்கொண்டு மறுபடி உறுதியான பிரதிக்கினையோடே எழுந்திருக்க வேணுமென்றுஞ் சகல துன்ப சோதனைகளில் அகப்பட்டிருந்தாலும் மனத்திடனைக் கைவிடலாகாதென்றும் பரகதியின் வழி முள்ளு முறடும் நிறைந்ததாயிருக்குதென்றும் பரலோக மகிமைப்பிரதாபத்தை அடையத்தக்கதாகச் செம்பொன் உலையிற் சுத்தமாகிறதுபோலே உபத்திரவங்களின்வழியாய்ப் பரிசுத்தமாகவேணுமென்றும் அவ்விதமாய் நமக்குப் படிப்பிக்கத் திருவுளமானார்.

செபம்.—ஆ! எங்களுக்குப் பலமாகிய சேசுவே! அடியோர்களெந்தப் பாவத்திலுந் திரும்ப விழாதபடிக்கு எங்களைத் தற்காத் தருளும். தேவரீர் நித்திய நரகத்திலே நின்று எங்களை மீட்கத்தக்கதாக அநுபவித்த இளைப்புத் தவிப்பு வருத்தங்களை அடியோர்கள் வீணாக்கி முடிவில்லாத கேட்டுக்கும் நிர்ப்பாக்கியத்துக்கும் உள்ளாகாதபடிக்கு எங்களைக் காப்பாற்றி இரட்சியுஞ் சுவாமீ.—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்......மற்றதும்.

## எட்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

சேசுநாதர் தம்மைப் பின்சென்று புலம்புகிற ஜெருசலேமென்கிற பட்டணத்தின் புண்ணிய ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.

இவ்விடத்தில் நம்முடைய திவ்விய இரட்சகருடைய நிகரில்லாத தயாளத்தின் இரக்கத்தைப் பார்த்து ஆச்சரியப்படக்கடவோம். பிரலாபத்துக்குரிய அவருடைய கஸ்தி உபத்திரவங்களைக் கண்டு அழுது புலம்புகிற புண்



ணிய ஸ்திரீகளுடைய வியாகுலப் பிரலாபத்தின்பேரில் மனமிரங்கித் தாமே அநுபவிக்கிற நோக்காடுகளை மறந்தாப்போலே அவர்களுடைய மிகுதியான துக்கத்துக்கு வேண்டிய ஆறுதல்களைச் சொல்லுகிறதற்கு மாத்திரம் நினைவாயிருக்கிறார். தம்மைப்பற்றி அழாமல் தங்களையுந் தங்கள் பிள்ளைகளையுந் தேவ துரோகிகளான தங்கள் தேசத்தாரையும்பற்றி அழுது புலம்பவேணுமென்று கற்பித்ததினாலே தமதுபேரில் நாம் இரக்கமாயிருக்கிறதுபோதாமல், தம்முடைய உபாதைகளுக்குக் காரணமாயிருக்கிற நம்முடைய பாவங்களினிமித்தம் அழுது மனஸ்தாபப்பட்டு, அதுகளினாலே நமக்கு வருகிற பயங்கரமான ஆக்கினைகளைத் தபசினாலே நிவர்த்தி பண்ண வேணுமென்று படிப்பித்தருளினார்.

செபம்.—ஆ! நேசத்துக்குரிய சேசுவே! துன்பப்படுகிற ஆத்துமாக்களுக்கு மெய்யான ஆறுதல்தருங் கர்த்தாவே! இரக்கமுள்ள உமது கிருபாகடாட்சத்தால் எங்களை நோக்கியருளும். ஜெருசலேம் பட்டணத்தின் பத்தியுள்ள ஸ்திரீகளைப்போலே சிலுவையின் திருப்பாதையிலே மனத்திடனாய் உம்மைப்

பின்சென்று அவர்களைப்போலே உமது திரு வாயில் நின்று ஞான சீவியந்தரும் வார்த்தைகளைக் கேட்டுக்கொள்ளவுஞ் சொல்லிலடங்காத ஆநந்தமுள்ள உமது தயாளத்தின் ஆறுதலை அநுபவிக்கவும் அடியோர்களுக்குக் கிருபைசெய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். ஒரு பர. பிரி. திரி.

மூத.—எங்கள்......மற்றதும்.

## ஒன்பதாம் ஸ்தலம்.

மூத.—திவ்விய சேசுவே......மற்றதும்.

### சேசுக்கிறீஸ்துநாதர் மூன்றாமுறை தரையிலே விழுகிறார்.

ஆராதனைக்குரிய சேசுநாதர் மிகுந்த பிரயாசத்தோடே கபாலமலையின் உச்சியிலே சேருகிறதை யோசிப்போமாக. அவ்விடத்தில்நின்று கொடிய பாவிகளின் கையால் தாம் பலியாகப்போகிற ஸ்தலத்தைநோக்கிப் பார்க்கிறார். உடனே அவருக்குண்டாகிற துயரமான கவலையென்னவென்றால், தம்முடைய திரு இரத்தத்தின் பலனைத் தங்களுக்கு வியர்த்தமாக்கி, நரகத்தில் விழும் எண்ணிறந்த பாவிகளுடைய நித்தியக் கேட்



டையும் நம்முடைய இடைவிடாத பாவ அக்கிரமங்களையும் நினைத்து விசனப்படுகிறார். அவர் இன்னும் அநுபவிக்கப்போகிற சகல நிர்ப்பந்தங்களையும்விட அந்தத் துயரமான நினைவு அவருடைய இரக்கமுள்ள இருதயத்தைக் கஸ்திப்படுத்தி வாதிக்கிறது. அதைப் பற்றி அவருடைய திரு ஆத்துமம் துக்கசாகரத்தில் அமிழ்ந்தினதினாலே, அவர் பலனற்றுத் தயங்கிக் களைத்துப் பூங்காவனத்திலே மரண அவஸ்தைப்பட்டதுபோலே இங்கேயும் அயர்ந்து தரையில் குப்புற விழுகிறார்.

செபம்.—ஆ! சிநேகப்பலியான சேசுவே! இங்கேயோ மனிதருடைய இரட்சண்ணியத்துக்காக உம்முடைய பிராணனைக் கொடுக்கப் போகிறீர்? ஆண்டவரே! அடியோர்கள் பரலோகத்தில் எங்கள் புகழ்ச்சியின் பலியை நித்திய காலமும் உமக்கு ஒப்புக்கொடுக்கப் பாத்திரவான்களாகும்படிக்கு உம்முடைய திரு இரத்தப் பலியின் பேறுகளை எங்களுக்குத் தந்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.—ஒரு பர. பிரி. திரி.

மூத.—எங்கள்......மற்றதும்.

## பத்தாம் ஸ்தலம்.

*முத.*—திவ்விய சேசுவே......மற்றதும்.

### சேசுநாதருடைய வஸ்திரங்களை உரிந்து கொள்ளுகிறார்கள்.

எண்ணிக்கையில்லாத ஜனங்களுக்கு முன்பாகக் கொலைக்காரர் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவஸ்திரங்களை நிஷ்டூரத்தோடும் மானபங்கத்தோடும் உரிந்தபோது நம்முடைய திவ்விய இரட்சகர் அனுபவித்த துக்கமும் வேதனையும் எம்மாத்திரமென்று யோசிப்போமாக. அவர் சர்வாங்கத்திலும் பட்ட காயங்களோடே அவருடைய வஸ்திரங்கள் ஒட்டிக் காய்ந்திருந்தபடியினாலே அதுகள் உரியப்பட்டபோது அவருடைய காயங்களெல்லாந் திரும்பவுந் திறந்துபோக அவருடைய திருச்சதை எப்பக்கத்திலுங் கிழிய இரத்தம் வெள்ளமாயோடக் கசைகள் முதலிய ஆயுதங்களால் அடிபட்டதினாலே அவருக்குண்டான கொடூர வேதனைகளையெல்லாம் மறுபடி ஒருமிக்க அநுபவித்தார். மனிதருடைய அசுசியான சுகங்களையுந் துர்மார்க்க அக்கிரமங்களையும்பற்றி உத்தரிக்கிறதற்கு



ஆண்டவருடைய திருச்சரீரத்தில் உண்டான கொடூர நோக்காடுகளைப்பார்த்துச், சகல பாவங்களையும் வெறுத்துவிடாதிருக்கலாமோ?

செபம்.—ஆ! மதுர சேசுவே! திவ்விய ஆட்டுக்குட்டியே! பலியாகிறதற்குக் கொலைக்களத்துக்கு வந்துசேர்ந்தீர். ஐயோ! தேவரீர் முறையிடுகிறதற்கு வாய் திறவாமல் எவ்வளவோ பொறுமையாயிருக்கிறீர். தேவரீருடைய மவுனம் மகா திடமுள்ள பிரசங்கம்போல் கஸ்தியில் எங்கள் பொறுக்காமையையும் முறைப்பாடுகளையும் நாங்கள் அடக்கவேணுமென்று எத்தனையோ உறுதியாகக் கற்பிக்கின்றது. மேலும் உமது இஷ்டப்பிரசாதமாகிய விலைமதிக்கப்படாத வரத்தை நாங்கள் இழந்த நிர்ப்பாக்கியத்துக்குப் பரிகாரமாக உம்முடைய வஸ்திரங்கள் உரியப்படச் சித்தமானீரோ! ஆகையால் ஆராதனைக்குரிய இரட்சகரோ! நாங்கள் எங்களிடத்திலுள்ள பழைய துர்க்குணங்களை உரிந்துபோட்டு, உம்முடைய தேவ இஷ்டப்பிரசாதமாகிய திவ்விய ஆடையைத் தரித்துக்கொண்டு உம்முடைய திருவிருதயத்தின் சற்

குணங்களை அநுசரிக்கும்படி எங்களுக்குக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்.....மற்றதும்.

## பதினோராம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

### சேசுக்கிறீஸ்துநாதரைச் சிலுவையில் அறைகிறார்கள்.

நம்முடைய திவ்விய இரட்சகராகிய சேசுநாதர் சிலுவையிலே அறையப்படுகிறதுக்காக இயல்பாய்க் கொலைக்காரருக்குத் தம்மைக் கையளித்துச் சிலுவை மரத்திலே தம்முடைய கைகால்களை நீட்டி விரித்துக் கொடுக்கிறதை யோசிப்போமாக. அவருடைய திருக்கை கால்களிலே கொடியபாதகர் பெரும் இருப்பாணிகளை வைத்துச் சுத்தியாலே அடித்துத் துளைக்கிறபோது அவர் அநுபவித்த வேதனை நிர்ப்பந்தம் இவ்வளவென்று சொல்லக்கூடுமோ? அப்போது அவருடைய திருச்சதைகிழிய, எலும்புகளின் மூட்டுகள் பிசக, நரம்புகள் தெறிக்க, இரத்தத்தாரைகள் அறுந்துபோக, உதிரம் வெள்ளமாயோட,



அவர் தவித்து அயர்ந்து மெத்த பலவீனப்பட்டதல்லாமலும் இத்தனைக் கடின நிர்ப்பந்தங்களோடேகூட மகா கொடூரத் தாகத்தின் உபத்திரவத்தையும் அநுபவித்தார்.

செபம்.—ஓ! பாவமே, ஓ! சபிக்கப்பட்ட பாவமே, எங்கள் இரட்சண்ணியத்தின் பலியாகிய திவ்விய கர்த்தரைச் சொல்லிடங்காத இத்தனை நிஷ்டூர ஆக்கினைக்குள்ளாகித் துக்க சாகரத்தில் அமிழ்த்தினது நீயே. ஆ! கிறீஸ்துவர்களே நமதுபேரில் இரட்சகரிடத்தில் எவ்வளவோ மிகுதியான அன்பு! எவ்வளவோ அதிசயமான நேசம்! அதைப் பார்த்து நம்முடைய நெஞ்சம் பிளந்து தேவ சிநேகத்தின் அக்கினியாற் பற்றியெரியக்கடவது, நம்முடைய ஆத்துமம் இவ்வுலகத்தின் சுக செல்வங்களையெல்லாம் வெறுத்துவிடக்கடவது. நம்முடைய இருதயம் சேசுநாதருடைய திரு இருதயத்தோடுகூட எப்போதைக்கும் சிலுவையில் அறையப்படவும், நம்முடைய கண்கள் இரவும் பகலும் பிரளயமாய்க் கண்ணீர்விட்டழவுங்கடவது.—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்.....மற்றதும்.

## பன்னிரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.....மற்றதும்.

### சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் உயிர்விடுகிறார்.

எல்லாப் பரிசுத்தத்தனத்தையும் உடையவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் இரண்டு பாதகர் நடுவிலே சிலுவையில் உயிர்விடுகிறதைப் பார்த்து அவருடைய அன்பின் மிகுதியையும், மதுரத்தன்மையையும் யோசித்து ஆச்சரியப்படுவோமாக. அவர் தம்முடைய பிதாவை நோக்கித் தம்மைக் கொலைப்படுத்துகிறவர்களுக்காகப் பொறுத்தலைக் கேட்கிறார். நல்ல கள்ளனைப்பார்த்து இன்றுதானே நம்மோடேகூடப் பரகதியிலிருப்பாயென்று திருவுளம்பற்றுகிறார். தம்முடைய பிரிய சீஷனுக்குத் தம்முடைய திருத்தாயாரை மாதாவாக ஒப்புக்கொடுக்கிறார். தம்முடைய பிதாவின் கையில் தமது ஆத்துமத்தை ஒப்பித்து, எல்லாம் நிறைவேறிற்றென்று உரைத்து, நமக்காக உயிர்விடுகிறார். உடனே படைப்புண்ட வஸ்துக்களெல்லாம் அவருடைய தேவதத்துவத்தைப் பிரசித்தப்படுத்துகிறது சூரியன் மங்கி நிற்கப், பூமியதிரக், கற்பாறை



கள் பிளந்துபோக, உலகமெல்லாந் தன்னைச் சிருஷ்டித்தவர் மரிக்கிறதைப்பார்த்துத் துக்கத்தினால் அழிந்துபோக விரும்புகிறதாகத் தோன்றுகிறது.

ஓ! பாவிகளே, இப்படிப்பட்ட பிரலாபத்துக்குரிய சமயத்தில் நீங்கள் மாத்திரம் மனமிளகாமலிருப்பீர்களோ? மரிக்கிற உங்கள் திவ்விய இரட்சகரை நோக்கிப்பாருங்கள், உங்கள் பாவங்கள், எம்மாத்திரம் நிர்ப்பந்தமான அந்தஸ்தில் அவரை வைத்ததென்று கண்டறியுங்கள். ஆகிலும் நீங்கள் உங்கள் பாவங்களை வெறுத்து மெய்யான மனஸ்தாபப்பட்டால் உங்களுக்குப் பொறுத்தலைத் தந்தருளச் சித்தமாயிருக்கிறார். இதோ உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறதற்கு அவருடைய திருப்பாதங் கட்டுண்டிருக்கிறது. உங்களைத் தயவோடு அணைத்துக்கொள்ளுகிறதற்குத் தம்முடைய திருக்கரங்களை விரித்துக்கொண்டிருக்கிறார். உங்கள்பேரில் தம்முடைய வரப்பிரசாதங்களைத் திரளாய்ச் சொரிய விடுகிறதுக்கு அவருடைய திருவிலாத் திறக்கவும் அவருடைய திரு இருதயம் ஊடுருவவும்பட்டிருக்கிறது. உங்களுக்குச் சமாதானமும் ஆறுதலுங் கொடுக்கிற

நம்கு அநந்த பட்சத்தின் குறிப்பாக அவருடைய திருச்சிரசு உங்கள் முகமாகச் சாய்ந்திருக்கிறது. ஆகையால் நாமெல்லாரும் அவருடைய திருச்சிலுவையடியிலே ஓடி நின்று அவர் நமக்காகத் தம்முடைய உயிரைத் தந்தபடியினாலே நமது உயிரை அவருக்கு என்றென்றைக்கும் ஒப்புக்கொடுப்போமாக.— ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள் —மற்றதும்.

## பதின்மூன்றாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

சேசுநாதருடைய திருச்சரீரத்தைச் சிலுவை
யில் நின்று இறக்கி அவருடைய திருத்
தாயார் மடிமேல் வளர்த்துகிறார்கள்.

உருக்கம் நிறைந்த தேவமாதா தம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதருடைய மரணத்துக்குப்பின் அநுபவித்த சொல்லிலடங்காத துயரத்தை யோசிப்போமாக. அவருடைய சீஷர்கள் அவருடைய திருச்சரீரத்தைச் சிலுவையில் நின்று இறக்குகிறபோது வியாகுல மாதா எவ்வளவோ துக்கத் துயரத்தோடே அதைத் தம்முடைய கைகளிலேந்தி மடி



மேல் வளர்த்திக்கொண்டழுகிறாள். அவளுடைய திருமுகம் வெளுத்து வேற்றுருவாகி இரத்தக்கறை பிடித்திருக்கிறதையுங் கண்விழி பஞ்சடைந்து மங்கியிருக்கிறதையுந் திருவாய் மூடியிருக்கிறதையுந் திருவிலா திறக்கப்பட்டிருக்கிறதையுங் கைகால் ஊடுருவப்பட்டிருக்கிறதையும் பார்த்துத் துக்கசாகரத்தில் அமிழ்ந்திப் பரதவிக்கிறாள். அந்தப் பார்வையானது தேவமாதாவுக்குத் தன் சாவைவிட மகா கொடிய நிர்ப்பந்தமாயிருக்கிறது. அவளுடைய வியாகுலத்தின் மிகுதியும் பேறுபலனுஞ் சர்வேசுரனுக்கு மாத்திரந் தெரியக்கூடும்.

செபம்.—ஆ! வியாகுலமுள்ள மரியாயே, உம்முடைய துக்க துயரத்துக்குக் காரணம் நாங்கள்தானல்லவோ? உம்முடைய நேசக் குமாரனாகிய சேசுநாதரைச் சிலுவையில் அறைந்ததினால் உம்முடைய திரு இருதயத்தைக் குத்தி ஊடுருவினது எங்கள் பாவமென்கிறவாள்தானே. ஆ! தயாபமுள்ள தாயே, அடியோர்களுக்காக மன்றாடிப் பொறுத்தலை அடைந்தருளும். சிலுவையில் மரித்த எங்கள் அன்பரை உம்முடைய திருக் கரங்களில் ஆராதிக்க உத்தாரங் கட்டளை

யிடும்படி சிலுவையின் அடியிலே நீர் அநுப வித்த நிகரில்லா வியாகுல துக்கத்தை அடியோர்கள் ஒருக்காலும் மறவாதபடிக்கு அதை எங்கள் இருதயங்களில் உறுதியாய்ப் பதியப்பண்ணியருள வேணுமென்று உம்முடைய பாதத்திலே விழுந்து மன்றாடுகிறோம்.—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்.—மற்றதும்.

பதினான்காம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

சேசுநாதருடைய திருச்சரீரம் அடக்கஞ் செய்யப்படுகிறது.

செபம்—திவ்விய சேசுவே! எங்களுக்கு மிகவும் பிரியமுள்ள இரட்சகரே! எங்கள் இரட்சண்ணியத்தின் திவ்விய பிணையுமாய் ஆராதனைக்குப் பாத்திரமுமாயிருக்கிற உமது திருச்சரீரம் இதோ ஒரு கல்லறையில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறதே எங்களை மீட்டிரட்சிக்கத் தக்கதாகத் தேவரீர் அநுபவித்த கடின நிர்ப்பந்தங்களையும் அடைந்த அவமானமுள்ள மரணத்தையும் அடிக்கடி நினைத்துத் தியானிக்கிறதே இந்தக் கண்ணீர்க் கணவாயிலே எங்களுக்கு மிகவும் ஆறுதலாயிருக்



கும்படியாகத் தயைபுரியும். தேவரீருடைய அன்பின் தேவதிரவிய அநுமானமாகிய தேவநற்கருணை வழியாய் உம்மை உட்கொள்ளுகிறதுக்கு நாங்கள் புது இருதயத்தோடே அண்டி வரவேணுமென்று கற்பிக்கத் தக்கதாகத் தேவரீர் ஒரு புதுக்கல்லறையில் அடக்கஞ் செய்யப்படச் சித்தமானீரே, ஆகையால் தேவரீர் எங்கள் பாவ அழுக்கெல்லாம் போக்கி எங்களைச் சுத்திகரித்துத் தேவநற்கருணையாகிய உமது திருப்பந்திக்கு நாங்கள் அடிக்கடி பங்காளிகளாயிருக்கிறதற்கு எங்களைப் பாத்திரவான்களாகச் செய்தருளும். இந்தக் கல்லறையிலே தானே அடியோர்களுடைய சகல அக்கிரமங்களையும் ஆசாபாசங்களையும் புதைத்து, நாங்கள் எங்கள் பாவங்களுக்கும் பிரபஞ்ச சகல காரியங்களுக்கும் மரித்தவர்களாய் உம்மோடுகூட மறைவுள்ள சீவியமாய்ச் சீவித்துப் பாக்கியமான மரணத்தை அடையவும் உமது மகிமைப் பிரதாபத்திலே வெளியரங்கமாய்த் தேவரீரைத் தரிசிக்கவும் நாங்கள் பேறுபெற்றவர்களாகும்படிக்குக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு பர. பிரி. திரி.

முத.—எங்கள்......மற்றதும்.

## பீடத்துக்கு முன்பாக.

முத.—திவ்விய.—மற்றதும்.

முத.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் திரு
வாக்குத் தத்தங்களுக்குப் பாத்திரவான்க
ளாகத் தக்கதாக.

துணை.—மிகவும் வியாகுலமுள்ள கன்னி
கையே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத.—ஆண்டவரே! எங்கள் இரட்சண்ணி
யத்தின் அடையாளங்களை.

துணை.—தேவரீருடைய திருவூழியனாகிய
அர்ச். பிராஞ்சீஸ்குவினிடத்திற் பதியச்
செய்தீர்.

முத.—நமக்கு அதிசிரேஷ்ட மேற்றிராணி
யாராகிய அர்ச்சியசிஷ்ட பாப்பானவருக்காக
வேண்டிக்கொள்ளுவோமாக.

துணை.—கர்த்தர் அவரை ஆதரித்துக் காப்
பாற்றி இவ்வுலகத்திற் பாக்கியவானாக்கி அவ
ருடைய சத்துராதிகளிடத்தில் அவரைக்
கையளிக்காமல் இரட்சித்துக் கொள்ளு
வாராக.

முத.—மரித்த விசுவாசிகளுக்காக வேண்
டிக்கொள்ளுவோமாக.



துணை.—நித்திய இளைப்பாற்றியை அவர்
களுக்குத் தந்தருளுஞ் சுவாமி, முடிவில்லாத
ஒளி அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி! எங்கள் ஆண்டவரா
கிய சேசுக்கிறீஸ்துநாதர் பாவிகளாகிய யூதர்
களுடைய கையிற் காட்டிக்கொடுக்கப்பட்டுச்
சிலுவையின் நிர்ப்பந்தத்தை அநுபவித்து
இரட்சித்தருளின இந்தக் குடும்பத்தைக்
கிருபை கண்கொண்டு பாரும்.

நித்திய சீவியமுள்ள கடவுளின் குமாரனா
கிய சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! தேவரீர்
உலகத்தின் இரட்சண்ணியத்துக்காக மத்தி
யான வேளையிற் சிலுவை மரத்தில் அறையப்
பட்டு உயர்த்தப்பட்டு எங்கள் பாவங்களுக்கு
விமோசனமாக உம்முடைய விலைமதியாத
திரு இரத்தத்தைச் சிந்தினீரே, அடியோர்
கள் மரித்த பிற்பாடு மோட்ச இராச்சியத்
திற் பிரவேசித்து நித்திய ஆனந்த மகிமைப்
பிரதாபத்தை அடையத் தக்கதாக அநுக்கிர
கஞ் செய்தருள வேணுமென்று தேவரீரைத்
தாழ்ச்சி வணக்கத்துடனே மன்றாடுகிறோம்

திவ்விய சேசுவே, தேவரீர் பாடுபட்ட நேரத்தில் வியாகுல மென்கிற வாளினால் ஆத்துமத்திலே ஊடுருவப்பட்ட உம்முடைய திரு மாதாவாகிய அர்ச். கன்னிமரியம்மாள் உம்முடைய தயாளமுள்ள சந்நிதியில் எங்களுக்காக இப்போதைக்கும் எங்கள் மரண நேரத்திலும் மனுப்பேசத் தேவரீர் தயைபுரிய வேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோஞ் சுவாமி.

எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே! உலகத்தில் பத்தியானது குளிருகிறதாயிருந்த காலத்திலே உம்முடைய திவ்விய ஸ்நேகத்தின் அக்கினியினாலே எங்கள் இருதயத்தைப் பற்றி எரியச்செய்யும்படிக்கு அர்ச். பிராஞ்சீஸ்குவின் சரீரத்தில் உம்முடைய பாடுகளின் திரு அடையாளங்களைப் புதுமையாகப் பதியச் செய்தீரே, அவருடைய மன்றாட்டுகளையும் பேறுபலன்களையுங் குறித்து அடியோர்கள் எங்கள் சிலுவையை எப்போதைக்குஞ் சுமந்து கொள்ளவும் நல்ல தபசின் கனிகளைத் தரவும் தயாபரராய் அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமி.

சர்வ வல்லவருமாய் நித்தியருமாயிருக்கிற சர்வேசுரா! உம்முடைய திரு ஊழியனா



யிருக்கிற எங்கள் அதிசிரேஷ்ட மேற்றிராணியாராகிய * 11-ம் பத்திநாதர் என்கிற பாப்பானவர்மேல் தயவாயிரும். அவர் உம்முடைய வரப்பிரசாதத்தைக்கொண்டு தேவரீருக்குப் பிரியமுள்ளவைகளை விரும்பித் தம்மால் இயன்றமட்டும் அவைகளை நிறைவேற்றும் படிக்கு நித்திய ஈடேற்றத்தின் நெறியில் அவரை உம்முடைய தயாளத்தின் படியே நடப்பித்துக்கொள்ளுஞ் சுவாமி.

பொறுத்தலைத் தந்தருள விரும்புகிறவருமாய் மனுக்களின் இரட்சண்ணியத்தை அபேட்சிக்கிறவருமாயிருக்கிற சர்வேசுரா சுவாமி! எப்பொழுதுங் கன்னிகையாயிருக்கிற அர்ச். மரியம்மாளுடைய மன்றாட்டையும் உம்முடைய சகல அர்ச்சியசிஷ்டவர்களின் வேண்டுதல்களையுங் கேட்டுத் தேவரீர் இப்பரதேசத்தினின்று மறுலோகத்திற் சேர்ந்த எங்கள் சபைக்கூட்டத்தார், சகோதரர், உறவின் முறையார், உபகாரிகளை நித்திய ஆநந்தப் பாக்கியத்துக்குப் பங்காளிகளாக்கக் கிருபை செய்தருள வேணுமென்று உம்முடைய தயாளத்தை நோக்கி மன்றாடுகிறோம்.

---

* அந்தந்தக் காலத்தின் அர்ச். பாப்புவினுடைய பேரைச் சொல்லவும்.

இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவருமாய்த் தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏகதேவனுமாய்ச் சதாகாலஞ் சீவியருமாய்ப் பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளுஞ் சுவாமி — ஆமென்சேசு.

---

### சுவாமி பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்துத் தியானிக்குஞ் செபம்.

என் ஆசைக்குரிய சேசு மரித்தாரோ? ஒருநாளும் மரிக்கக்கூடாதவர் மரித்தாரோ? சகல மனுஷர் உயிரைக் கடந்த மேலான உயிருள்ளவர் உயிர் விட்டாரோ? எல்லாவர்க்கும் உயிரளிப்பவர் உயிர்விட்டாரோ? மனுமக்களுக்காகத் தேவசுதனிறந்தாரோ? ஆண்டவர் அடிமைகளுக்காக இறந்தாரோ? பாவிகளுக்காகப் பரிசுத்தர் உயிரிழந்தாரோ? நாய்களுக்காகச் செம்மறிப்புருவை மாய்ந்ததோ? என் சேசுவே! நீரோ இந்தச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது? எல்லவர்க்கும் ஆவியளிக்கும் நீரோ ஆவியிழந்து சுவாசம் அடைபட்டிருக்கிறது? சீவன் பிரிந்து உடல் விறைத்திருக்கும் உம்மையே சிநேகித்து ஆராதித்துப் போற்றிப் புகழ்ந்து



வாழ்த்தி ஸ்துதித்து வணங்கி நமஸ்கரிக்கிறேன் சுவாமி.

சம்மனசுக்களால் ஆராதிக்கப்படுந் தேவசிரசே! மனிதருக்காகக் கல்லிலும் புல்லிலுஞ் சயனித்ததுமாய், காற்றிலும் மழையிலும் அடிபட்டதுமாய், முண்முடி அழுத்தின காயத்தால் ஒழுகி வடிந்த திரு இரத்தத்தில் தோய்ந்து மூச்சடைந்து உயிர்விட்டுக் கவிழ்ந்திருக்கும் என் சேசுவின் திருச்சிரசே! இந்தச் சிலுவையில் உன்னை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து, நீர் மனிதருக்காகப் பட்ட அவமானத்தையும், அடைந்த நிந்தையையுங் குறித்து என் அகங்கார கர்வத்தைப் போக்கித் தாழ்ச்சி உள்ளவனாகச் செய்வாயாக.

சம்மனசுக்களுக்கு ஆனந்த சந்தோஷங் கொடுக்கிறதுமாய், சூரியனை மங்கபடிக்குஞ் சோதிப்பிரகாச சுந்தர ஒளியுள்ளதுமாய், மனுமக்களில் உருபலாவர்ண்ணிய அலங்காரம் உள்ளதுமாய் இருக்கிற சேசுவின் திருமுகமே! மனிதரின் அசுத்த உமிழ் நீரால் அழுக்கடைந்து அடிகளாற் கன்றிச் சிரசின் காயத்தில் நின்று ஓடிவிழும் இரத்தத்தாற் சிவந்து உயிர் பிரிந்ததினால் வெளுத்திருக்கும்.

என் சேசுவின் திரு முகமே! இந்தச் சிலுவையில் உன்னை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து, நீ மனுஷருக்காக வேறுபட்டு வேற்றுருவானதைக் குறித்துப் பாவத்தால் நான் கொண்ட அவலட்சண சொரூபத்தை மாற்றி இஷ்டப்பிரசாதத்தால் அழகுள்ளவனாகச் செய்வாயாக.

எங்கள் பாவத்திற்காக அழுது சிலுவை முதலான உபத்திரவங்களைச் சந்தோஷமாகத் தரிசித்துக் கிருபாகடாட்சத்தோடு எங்களை நோக்கி எங்கள் குற்றங்களைப் பார்க்கச் சகிக்கமாட்டாமல் மூடியிருக்கும் என் சேசுவின் திரு விழிகளே! இந்தச் சிலுவையில் உங்களை வணங்குகிறேன், கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து, நீங்கள் எனக்காகச் சிந்தின கண்ணீரின் பலனை நான் இழந்து போகாதபடி உங்கள் கண்ணீரோடு என் கண்ணீரையும் ஒருமிக்கச் சேர்க்க எனக்கு வேண்டிய மனஸ்தாபத்தைத் தந்தருளுவீர்களாக.

அமிர்தப் பிரசங்கங்களைச் சொல்லி அரிதான தருமங்களை எளிதாகச் செய்யப் போதித்து, அனைவருக்கும் மோட்ச வழியைப் படிப்பித்து, அருந்தாகத்திற்குப் பிச்சம் புளித்த திராட்சப்பழ இரசத்தையுஞ் சுவை



பார்த்த என் சேசுவின் திரு நாவே! இந்தச் சிலுவையில் உன்னை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து, நீர் போதித்த நெறி வழியில் வழுவாமல் நடந்து என் சேசுவின் திருநாமம் ஒன்றே என்னாவுக்கு இனிதாயிருக்கும்படி உலக காரியமெல்லாம் எனக்குக் கசப்பாயிருக்கச் செய்வாயாக.

பரலோக பூலோக பாதாளத்தைப் படைத்துப் பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் உறவுகட்டிப் பரகதிவாசலைத் திறந்து பாவிகளுக்குத் தஞ்சமாக விரித்துப் பார ஆணிகளாற் சிலுவையில் அறையுண்ட என் சேசுவின் திருக்கரங்களே! இந்தச் சிலுவையில் உங்களை வணங்கி நமஸ்கரிக்கிறேன். கிருபையுடைத்தான சேசுவைப்பார்த்து, எனக்காக விரிக்கப்பட்ட உங்கள் கொடுங்கையில் என்னைச் சேர்த்து நான் ஒருபோதும் என் சேசுவை விட்டுப் பிரியாதபடி நேச ஆணிகளால் என்னையும் உங்களோடு சேர்த்து அறைவீர்களாக. கல்லிலும் முள்ளிலுங் காட்டிலும் மேட்டிலுஞ் சுற்றித் திரிந்து என்னைத்தேடி அலைந்து பாவத்தால் என் காலில் விழுந்த தளையை அறுக்கச் சிலுவையில் அறைபட்ட

என் சேசுவின் திருப்பாதங்களே! இந்தச் சிலுவையில் உங்களை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து, இனி நான் அவரைவிட்டு அகலாதபடி என்னை உங்கள் அருகிற் சேர்த்துக்கொள்வீர்களாக.

நிஷ்டூரன் ஈட்டியின் வலுமையினாற் குத்துண்டு காயப்பட்டதைவிட எங்கள்பேரில் வைத்த நேசப் பெருக்கத்தால் அதிகக் காயப்பட்டு இரத்தமெல்லாஞ் சிந்தி சிநேக அக்கினிமயமாய்ப் பற்றி எரியும் என் சேசுவின் திரு இருதயமே! இந்தச் சிலுவையில் உன்னை வணங்கி நமஸ்கரிக்கிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்து சேசுவின் சிநேகம் என்னிடத்திற் குடிகொண்டு இருக்கும்படி குத்துண்டு திறந்த திருவிலாக் காயத்தால் என்னிடத்தில் எழுந்தருளிவந்து, உனக்குப் பதிலாக என் இருதயத்தைச் சேசுவின் இடத்தில் வைப்பாயாக. ஆ, என் சேசுவே! ஆசைக்குரிய சேசுவே! சிநேக தேவனான சேசுவே! உம்மை இத்தனை நிஷ்டூரமாய் உபாதித்தார்? கொடிய நெஞ்சுள்ள யூதரும் துஷ்டகுணமுள்ள சேவகருமோ உம்மை இப்படி வதைத்தார்கள்? உம்மைத் தேவனென்றுந் தேவசுதனென்றும்



மனுஷரை மீட்டு இரட்சிக்கவந்த இரட்சகரென்றும் விசுவசியாத அந்தக் குருடர் அல்லவே உம்மை வதைத்தவர்கள், உம்மைத் தேவனென்றும் இரட்சகரென்றும் அங்கீகரிக்கிற நானல்லவோ வெட்கமுஞ் சிக்கும் ஈவும் இரக்கமும் இல்லாமல் உமது திருமுகத்திற் துப்பினேன்? நான் அல்லவோ உமது தசை கிழிய அடித்து முண்முடியைச் சிரசிற் பதித்தேன்? நான் அல்லவோ உம்மை ஆகடியஞ் செய்து உமது தாகத்திற்குப் பிச்சைக் கலந்து கொடுத்தேன்? நான் அல்லவோ உமது கை கால்களையும் விலாவையுங் குத்தித் திறந்தேன்? பரலோகமும் பூலோகமும் சாட்சியாயிருக்க நான் அல்லவோ உம்மைக் கொன்று கொலைப்படுத்தினேன்? ஐயோ! என் ஆண்டவரே, நான் செய்த கொடுமைக்கு இனி என்செய்வேன்! நான் இத்தனை நிஷ்டூரங்களைச் செய்தும் இன்னம் என்மேற் தயை பாராட்டி என் உயிரைப் பறியாமல் எனக்கு உமது இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிற என் நல்ல சேசுவே, நீர் படும் உபாதைகளைக் கண்டு கருங்கல்லும் பாறையும் வாய்விட்டழுகிறது போற் பிளந்திருக்கக் கல்லிலும் ஈரமற்ற

என் இருதயம் ஒன்றோ கலங்காது நிற்கிறது? நீர் படும் உபாதைகளையும் அந்த உபாதைகளுக்குக் காரணமான உமது சிநேகப் பெருக்கத்தையுங் கண்டு என் இருதயந் தணலில் விழுந்த மெழுகுபோல் இளகுகிறது. இந்த மட்டும் நான் உமக்குச் செய்த நிஷ்டூரம் போதும்; இனியாகிலும் நான் உமக்குத் துரோகஞ் செய்யாதிருக்க எனக்கு வேண்டிய இஷ்டப்பிரசாதத்தைத் தந்தருளும்.

தயாபரரான சேசுவே! நீர் என்னைப்பற்றியும் என்னாலுந்தானே, இத்தனை உபாதைப்பட்டும் இன்னம் உமதுபேரில் இரங்காதிருப்பேனோ? ஆண்டவரே! உம்மை மிகவும் சிநேகித்து உமது திருப்பாடுகளின்மேல் இரங்கி, இடைவிடாதழுது அங்கலாய்த்தவர்களோடு நானும் ஒருவனாகச் சேர்ந்து அங்கலாய்க்கிறேன். அர்ச். மரியாயே! சேசுநாதர் பாடுபடும்பொழுதுஞ் சிலுவையிற்றொங்கிச் சீவன் விடும்பொழுதுஞ் சீவன் பிரிந்த திருச்சரீரத்தை உமது திருமடியில் வைத்திருக்கும்பொழுதும் நீர் அனுபவித்த சொல்லிலடங்காத துக்க வியாகுலம் இப்பொழுது உமக்கொன்றும் அவசரமில்லாததினால், அந்தத் துக்க வியாகுலமெல்லாம் எனக்குத் தந்தருளும்.



என்மேல் வைத்த இரக்கத்தால் உயிர்விட்ட அவரைக்கண்டு நானும் அவர்மேல் இரக்கத்தால் உயிர்விடக்கடவேனாக.

சேசுவே! என் உடலைவிட்டு இன்னம் உயிர்பிரியத் தேவரீர் திருவுளமாகாததினால் என் தோஷ துரோகத்தைக் கண்டு கூச்சநாச்சப்பட்டு மனஸ்தாப மிகுதியால் உமது பாதத்தில் விழுந்து இடைவிடாது கண்ணீர் சொரிய அநுக்கிரகஞ் செய்தருளும். ஆண்டவரே! மனஸ்தாப மிகுதியால் அநேக மகாத்துமாக்கள் இருதயம் பொடிப்பொடியாய் நொறுங்கினாற்போல, என் இருதயமும், பொடிப்பொடியாகவும், என் கண்கள் இரண்டும் ஓயாமற் கண்ணீர் சொரியும் ஊற்றுகளாகவும், என் கண்ணீர் இரத்தக்கண்ணீராகவுஞ் செய்தருளும். உமது பாடுகளின்மேலுள்ள உருக்கத்தாலும், என் பாவங்களுக்காகப் படும் மனஸ்தாப மிகுதியினாலும் என் உயிர் பிரிய உமக்குச் சித்தமில்லாவிட்டாலும் என் பாவங்களுக்குப் பொறுத்தலாவது கட்டளையிட்டருளும்.

ஆயிரம் பதினாயிரம் முறை நரகத்திற்குப் பாத்திரமான என் பாவங்களைப் பொறுத்தருள நியாயமில்லையென்றாலும், உமது நன்

மைத்தன்த்தை மறந்து உம்மை மறுதலித்த இராயப்பருக்கும் உம்மைப் பொறுத்தல் கேட்ட நல்ல கள்ளனுக்கும் பாவப் பொறுத்தல் கட்டளையிட்டீரென்கிறதினால் நான் உமது தயையை நம்பி என் பாவங்களுக்குப் பொறுத்தல் கேட்கிறேன். உம்மை வதைத்த கொடிய சத்துருக்களுக்காக உமது திவ்விய பிதாவை இரந்துகொண்டதினாலும், உமது கொலைக்காரரில் ஒருவனாகிற எனக்கும் அந்த மன்றாட்டின் பலன் கிடைக்கவேண்டியதல்லோ? என் பாவங்களைப் பொறுத்தருளவேண்டுமென்று உம்மை நான் மன்றாடும் மன்றாட்டுத்தானே உமது மன்றாட்டின் பலன் அல்லாமல் என் சத்துவமல்ல என்கிறதினால் உமது மன்றாட்டும் ஒருமிக்க வீண்போகாதபடி நீர் துவக்கினதை நீரே முடித்தருளும்.

உமது பிதாவானவர் இப்பொழுது உம்மைச் சகல படைப்புண்ட வஸ்துக்களுக்கும் அதிபதி கர்த்தாவாகவும், சகல சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் மத்தியஸ்தராகவும் ஸ்தாபித்திருக்கிறதினால், அப்பொழுது நீர் அவரைக் கேட்டுக்கொண்ட மன்றாட்டை இப்பொழுது நீர்தாமே கட்டளையிட வல்ல



வராயிருக்கிறதினால், அப்போது நீர் ஆசைப்பட்டுக் கேட்ட எங்கள் பாவப் பொறுத்தலை இப்பொழுது நீரே எங்களுக்குக் கட்டளையிட்டருளும்.

ஆண்டவரே! நீர் விருத்தசேதனஞ் செய்துகொண்டபொழுதும், பூங்காவனத்தில் அவஸ்தைப்பட்டபொழுதும், கற்றூணிற் கட்டி அடிபட்டபொழுதும், முண்முடி தரிக்கப்பட்டபொழுதும், இரத்தத்தோடு ஒட்டியிருந்த உமது வஸ்திரத்தை உரிந்தபொழுதும், உமது கை. கால்களில் ஆணி அறைந்தபொழுதும், திருவிலாவைக் குத்தித் திறந்தபொழுதும், ஒழுகி வடிந்த உமது திரு உதிரத்தைப் பார்த்து, என் பாவங்களையும் இன்னம் மற்றுமுண்டான மனிதருடைய பாவங்களையும், நான் யர்ருக்காக மன்றாட வேண்டியிருக்குமோ அவர்களுடைய பாவங்களையும், என் தப்பிதத்தினாற் பாவத்தைக் கட்டிக்கொண்டவர்களுடைய பாவங்களையும் பொறுத்தருளும். எங்கள் கையால் எங்களுக்காகச் சிந்தப்பட்ட திரு இரத்தத்தைக் குறித்து எங்கள்பேரில் கிருபையாயிருக்க மன்றாடுகிறோம். எங்களைப் பழிவாங்கக் கேளாமல் எங்களுக்கு இரக்கஞ்செய்ய அபய

யீடேர் திரு இரத்தத்தைக் குறித்து எங்கள் மேல் இரக்கமாயிருக்க மன்றாடுகிறோம். எங்கள் தோஷ துரோகங்களை மிகவுங் கடந்த பேறுள்ள திரு இரத்தத்தைக் குறித்து, எங்கள்மேற் கருணையாயிருக்க மன்றாடுகிறோம். எங்களுக்காக மனுப்பேசுந் திரு இரத்தத்தைக்கொண்டு தானே தயையுள்ள சேசுவே! தயையாயிருஞ் சுவாமீ தயையாயிரும் என்று அலறி அழுகிறோம். அந்தத் திரு உதிரத்தில் ஒரு துளி எங்கள் இருதயத்திற் தெளித்தருளினால் எங்கள் பாவதோஷங்களெல்லாம் நிர்மூலமாய்ப் போகும்.

ஆண்டவரே! எங்கள் மன்றாட்டுக்கு இரங்கி எங்கள் பாவங்களைப் பொறுத்தருளினால் இத்தனைத் துரோகங்களைச் செய்தபின், எங்கள் நன்றிகெட்ட தன்மையைப் பாராமல் இன்னமும் உமது கிருபையைத்தானே குறித்துத் தயைபுரிந்தீரென்று நினைத்து உமது மேல் அதிக நன்றிபாராட்டி எங்கள் குற்றங்களுக்காக அதிக மனஸ்தாபப்படுவோம். ஆ, என் நல்ல சேசுவே! எங்கள் நன்றிகெட்ட தன்மை கரைகாணாததாயிருந்தாலும் உமது நன்மைத் தன்மை அதிலும் கரைகாணாத கருணைக்கடலாயிருக்கிறது. சேசு



வே! என் பாவப் பெருக்கத்தையும் உமது நன்மையின் விசாலத்தையும் நீர் அநுபவித்த வேதனை நோவுகளின் அகோரத்தையும் உமது அன்பின் பூரிப்பையுங் காணும்பொழுது என்னிடத்திற் பிறக்கும் விம்மல் தேம்பல் பெருமூச்சினால் என் இருதயம் வெடித்து நாவடைத்துப் போகிறது. இனி உமது திருப் பாதத்தைக் கட்டி அணைத்துக்கொண்டு ஆ, சேசுவே! ஆ, பாவமே! ஆ, கொடுமையே! ஆ, நன்மையே! ஆ, சிநேகமே! ஆ, அன்பே! அன்பே! என்று சொல்லுவேன்.—ஆமென் சேசு.

---

## சிலுவையில் அறையுண்டிருக்கும் கர்த்தரை நோக்கிச் செபம்.

திவ்விய சேசுவே! பூலோக இரட்சண்யத்தினிமித்தம் தேவரீர் மனுஷாவதாரமெடுத்துப் பிறந்தீர்; விருத்தசேதனப்பட்டீர்; யூதர்களாலே பிறக்கணிக்கப்பட்டீர்; துரோகியான யூதாசினால் முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்கப்பட்டீர். சங்கிலிகளால் கட்டுண்டு, மாசற்ற செம்மறிப் புருவையைப்போலக் கொலைக்களத்துக்கு நடத்திக்கொண்டு போகப்பட்டீர். ஆனாஸ், கைப்பாஸ், பிலாத்துஸ்,

ஏரோதேஸ் இவர்கள் சமூகத்தில் அவமானமாய் நிறுத்தப்பட்டார். பொய்சாட்சிகளால் குற்றஞ் சாட்டப்பட்டார். சாட்டை, கசை, வார்களினால் அடிக்கப்பட்டார்; நிந்தை கோரணியாய்த் திருக் கண்கள் மூடிக் குட்டப்பட்டார்; திரு முகத்தில் துப்பப்பட்டார்; முள் முடி சூட்டப்பட்டு, மூங்கிற்றடியால் அடிக்கப்பட்டார்; திருச்சட்டைகள் உரியப்பட்டார்; ஆணிகளால் சிலுவையில் அறையுண்டு உயர்த்தப்பட்டார்; கள்ளர்களில் ஒருவனாய் எண்ணப்பட்டார்; பிச்சுக்கலந்த புளித்த காடி குடிக்கக் கொடுக்கப்பட்டார். ஈட்டியால் குத்தப்பட்டார். என் ஆண்டவரே சுவாமி! அடியேன் எவ்வளவு பாவியாயிருந்தாலும் நான் இப்போது தியானித்துப் பூசிக்கும் உமது திருப் பாடுகளைக்கொண்டும் உமது திருச்சிலுவை மரணத்தைக்கொண்டும் என்னை நரக ஆக்கினையினின்று மீட்டு இரட்சித்து உமது வலது பாரிசக் கள்ளனுக்குக் கட்டளையிட்ட மோக்ஷபாக்கியத்தில் அடியேனையும் சேர்க்கத் தயைபுரியும். பிதாவோடேயும் இஸ்பிரீத்துசாந்துவோடேயும் சதாகாலம் சுயஞ்சீவியராய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவராயிருக்கிற ஆண்டவரே, ஆமென்சேசு.



## கர்த்தருடைய ஐந்துகாய மந்திரம்.

சேசுக்கிறீஸ்துநாதர் பாடுபட்ட சிலுவையடியிலே தேவமாதா கூட நிற்கிறதுபோலேயும், அவருடைய திருக்காயங்களையும், அக்காயங்களிலே நின்று வடிந்தோடும் திரு இரத்தத்தையும் கண்ணினாற் காண்கிறது போலேயும் தியானித்து விசுவாசமாயிருக்கிறது. அதாவது:—

என் கர்த்தனே! தேவரீர் மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும் ஒன்றாயிருந்து, அடியோர்களுக்காகப் படாத பாடுபட்டுச் சிலுவையிலே அறையுண்டு மரணத்தை அடைந்தீரென்கிறதினாலே, தேவரீரை வணங்கித் தோத்திரம்பண்ணுகிறோம். தேவரீர் இத்தனை சகாய உபகாரங்களை அடியோர்களுக்குக் கட்டளைபண்ணினதினாலே, சகல சம்மனசுக்கள் முதலிய மோட்சவாசிகளோடே தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். அப்படியே தேவரீருடைய திருக்காயங்கள் ஐந்தையும் வணங்குகிறோம்.

1. சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! தேவரீருடைய இடதுபாதத்தின் திருக்காயத்தை வணங்கி நமஸ்கரித்து முத்திசெய்து ஆரா

தனை பண்ணுகிறோம். திவ்விய சேசுவே! இந்தத் திருக் காயத்தையும் தேவரீருடைய திரு மாதாவின் அத்தியந்த வியாகுலத்தையுங் குறித்து, நாங்கள் செய்த பாவமெல்லாம் எங்கள் நினைவிலே வரவும், அதுகளுடைய இன்மைத்தனத்தைக் கண்டுபிடித்து அதுகளை முழுமனதோடே வெறுக்கவும், தேவரீர் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

2. சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! தேவரீருடைய வலது பாதத்தின் திருக்காயத்தை வணங்கி நமஸ்கரித்து முத்திசெய்து ஆராதனை பண்ணுகிறோம். இனிய சேசுவே! இந்தத் திருக்காயத்தையும் தேவரீருடைய திவ்விய மாதாவின் அத்தியந்த வியாகுலத்தையுங் குறித்து, நாங்கள் செய்த பாவங்களுக்கு மெய்யான மனஸ்தாபம் உண்டாகத் தக்கதாக தேவரீர் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

3. சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! தேவரீருடைய இடது கரத்தின் திருக்காயத்தை வணங்கி நமஸ்கரித்து முத்திசெய்து ஆராதனை பண்ணுகிறோம். நேச சேசுவே! இந்



தத் திருக்காயத்தையும் தேவரீருடைய பரிசுத்த மாதாவின் அத்தியந்த வியாகுலத்தையுங் குறித்து, நாங்கள் இனிமேல் ஒருக்காலும் பாவங்களைச் செய்யாதிருக்க வேண்டிய ஒத்தாசை செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

4. சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! தேவரீருடைய வலது கரத்தின் திருக்காயத்தை வணங்கி நமஸ்கரித்து முத்திசெய்து ஆராதனை பண்ணுகிறோம். உன்னத சேசுவே! இந்தத் திருக் காயத்தையும் தேவரீருடைய நேச மாதாவின் அத்தியந்த வியாகுலத்தையுங் குறித்து, நாங்கள் பாவப்பொறுத்தல் அடைந்து இஷ்டப்பிரசாதத்தோடே மரித்து மோட்சபாக்கியத்தை அடையத்தக்கதாக தேவரீர் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

5. சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! தேவரீருடைய திரு விலாவின் திருக்காயத்தை வணங்கி நமஸ்கரித்து முத்திசெய்து ஆராதனை பண்ணுகிறோம். அன்புக்குரிய சேசுவே! இந்தத் திருக் காயத்தையும் தேவரீருடைய திவ்விய மாதாவின் அத்தியந்த

வியாகுலத்தையுங் குறித்து, தேவரீருடைய மட்டற்ற சிநேகத்தை எங்களுக்குக் கட்டளை பண்ணவும், கடைசியாய் நாங்கள் சாகிற தருணத்திலே தேவரீருடைய திருக்காயங்களுக்குள்ளே மறைந்தவர்களாய் நல்ல மரணமடையவும், தேவரீர் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

அதன்பின் பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிற வகையாவது :—

பிதாவாகிய சர்வேசுரா சுவாமி! தேவரீருக்குகந்த குமாரனுமாய் எங்களுக்குக் கர்த்தருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதர் எங்களுக்காக இத்தனை பாடுகள் பட்டாரோ, அவருடைய பாடுகளையும் பீடையையும் சிலுவையையும் மரணத்தையும் அடக்கத்தையும் துக்கத்தையும் அவருடைய திருக் காயங்களையும் திருக் காயங்களிலே நின்று வடிந்தோடும் திரு இரத்தத்தையும் பார்த்துப் பாவிகளாகிய அடியோர்கள் கேட்கிற இந்த ஐந்து மன்றாட்டுக்களையும் அவருடைய ஐந்து திருக் காயங்களையுங் குறித்து கட்டளைபண்ணியருளும் சுவாமி. ஆமென்சேசு. பர.

---



# ஏழுதவச் சங்கீதம்.

¶ தாவீதனென்கிற இராசா பாடின தேவாகமமான நூற்றைம்பது சங்கீதங்களில் ஏழு சங்கீதங்களைத் திருச்சபை தெரிந்தெடுத்துத் தவசெபமாக நியமித்ததினால், பாவத்தினிமித்தம் துக்கமனஸ்தாப முயற்சியாகிய அதுகளை உரைத்து வேண்டிக்கொள்வது பூர்வீகர் துவக்கி நடக்கின்ற நல்ல முறைமையாமே.

## DOMINE, NE IN FURORE.

## முதலாவது. 6-ம் சங்கீதம்.

¶ வியாதியஸ்தன் வைத்தியனை மன்றாடுகிறது போலே, பாவத்தினால் மெலிந்து கலங்கின ஆத்துமமானது சர்வேசுரனைப் பிரார்த்தித்து அவருடைய சந்நிதியிலே அழுது பிரலாபிக்கிறதைக் குறித்தும், ஆண்டவரந்தப் பிரலாபத்தைக் கேட்பதைக் குறித்தும் பாடியிருக்கின்றது.

சுவாமீ! தேவரீர் கோபமாயிருக்கும்போது என்னைத் தண்டியாதேயும், உமது கோபாக்கினி வேளையில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும், நானோ வெகு பலவீனன், என்மேல் இரக்கமாயிரும்—என் எலும்புகள் நெக்குவிட்டிருப்பதால் எனக்கு ஆரோக்கியங் கொடுத்தருளும்.—என் ஆத்துமமோ

வெகுவாய்க் கலங்கியிருக்கிறது, ஆனால் சுவாமீ நீர் எந்தமட்டும் எனக்கு உதவி செய்யாமல் இருப்பீர்?—சுவாமீ, தேவரீர் எனது முகமாய்த் திரும்பி என் ஆத்துமத்தை ஈடேற்றி உமது கிருபையைக்குறித்து என்னை இரட்சித்தருளும்.—ஏனென்றால் மரணத்தன்மையில் உம்மை யாரும் நினைப்பாரில்லை, நரகத்தில் உம்மை ஸ்துதிக்கிறவனார்?—பிரலாபப்பட்டு மிகவும் மெலிந்தேன். இராத்திரிதோறும் என் கண்ணீரால் என் கட்டிலைக் கழுவி, என் கண்ணீரால் என் படுக்கையை நனைத்துக்கொண்டு வருகின்றேன். கோபாக்கினியால் என் கண் கலங்கிச் சிவந்தது, என் சகல சத்துருக்கள் நடுவில் வெகு நாளாய் அகப்பட்டுத் தளர்ந்தேன்.—ஆண்டவர் என் அழுகைக் குரலைக் கேட்டருளினார்; ஆகையால் அக்கிரமங்களைச் செய்கிற நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்று போங்கள்.—ஆண்டவர் என் வேண்டுதலைக் கேட்டெனது விண்ணப்பத்தைக் கையேற்றுக்கொண்டார்.—என் சத்துருக்களெல்லாரும் வெட்கி மிகவுங் கலங்கக்கடவார்கள். அதி சீக்கிரத்தில் வெட்கமும் ஈனமுமூடிப் பின்னிட்டுப் போகக்கடவார்கள்.—ஒரு திரி.



BEATI QUORUM.

## 2-வது. 31-ம் சங்கீதம்.

*¶ நல்ல மனதோடு பாவத்தை விட்டுச் சர்வேசுரனைச் சேருவதின்மேலும், ஆண்டவர் நமது இக்கட்டில் அடைக்கலமுமாய், நல்லோர்க்கு இன்பமுமாய்ப் புல்லோர்க்குத் துன்ப ஆக்கினை இடுபவருமாய் இருக்கிறார் என்றதின்மேலும் பாடியிருக்கிறது.*

எவரெவர் பாவம் பொறுக்கப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவரெவர் பாவம் மறைக்கப்பட்டதோ, அவர்களும் பாக்கியவான்கள். ஆண்டவர் எவனுடைய பாவத்தை அவன்மேல் சாட்டாமல் இருக்கிறாரோ, அவன் பாக்கியவான்.—எவனுடைய மனதில் கபடமில்லையோ, அவனும் பாக்கியவான்.—நான் என் பாவத்தை வெளிப்படுத்தாமல் மவுனமாகி, நாளெல்லாங் கூக்குரலிட்டதினால் என் எலும்புகள் தளர்ந்துபோயிற்று.—ஏனென்றால் உமது கைப்பாரம் அல்லும் பகலும் என்மேற் சுமந்ததினால் முள்ளானது தைத்திறங்கினாற்போலக் கடின துயரப்பட்டு ஆருட்டமாய்ப் புரண்டு கிடந்தேன், என் பாவத்தை உமக்கு அறிக்கையிட்டேன்; என் அநீதத்தை உமக்கு மறைத்தேனில்லை.—

நான் எனக்கு விரோதமாக என் அக்கிரமத்தை ஆண்டவரிடத்தில் சங்கீர்த்தனஞ் செய்வேனென்று சொல்லவே நீர் என் பாவக்கேட்டைப் பரிகரித்தருளினீர்.—இதைப்பற்றித் தர்மாத்துமாக்களெல்லாரும் தக்க சமயம் பார்த்து உம்மை மன்றாடுவார்கள்.—இத்தன்மையாய் வெள்ளநீர் எப்படி புரண்டு வந்தாலும் அவர்கள் மட்டும் ஏறுது.—என்னைச் சூழ்ந்திருக்கிற துன்பங்களில் எனக்கடைக்கலமும் நீரே; என் சந்தோஷமாகிய கர்த்தாவே, என்னை வளைந்துகொண்டிருக்கிறவர்களிடத்தில் நின்றென்னைக் காத்தருளும்.—நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் கற்பித்து, உனக்கு உணர்வைத்தந்து உன்மேல் நமது பார்வையை நிறுத்துவோம்.—ஞானமில்லாத குதிரை கோவேறு கழுதைகளைப் போல் இராதேயுங்கள்.—உமதருகிற் சேராத அந்த மிருகங்களின் வாயை வாரினாலுங் கடிவாளங்களினாலும் இறுக்கிப் பந்தனஞ் செய்யுங்கள்.—பொல்லாதவர்களுக்கு அநேகம் ஆக்கினைகள் உண்டு. ஆனால் ஆண்டவர்பேரில் பத்தி நம்பிக்கையாய் இருக்கிறவர்களைத் தேவகிருபை சூழ்ந்திருக்கும்.—நீதிமான்களே, ஆண்டவரிடத்தில் அகமகிழ்ந்து சந்



தோஷப்படுங்கள். செவ்விய இருதயத்தோரே, நீங்கள் எல்லாரும் அவரிடத்தில் உங்கள் மேன்மையைப் பாராட்டுங்கள்.—ஒரு திரி.

## DOMINE, NE IN FURORE.

## 3-வது. 37-ம் சங்கீதம்.

¶ பாவத்தால் ஆத்துமத்தில் பட்ட புண்களைத் தெளிவிக்கிறதின்மேலும், நல்லோர் துன்பப்படுகையில் சிநேகிதராலுங் கைவிடப்படுகிறதின்மேலும், தபசுக்குட்பட்ட ஆத்துமமானது சர்வேசுரனுடைய நீதிக்கு உத்தரிப்பதற்கான வழிபாடாக இலௌகிகத் துன்பங்களைக் கையேற்றுக்கொண்டு அநுபவிக்க, எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கிறதின்மேலும் பாடியிருக்கின்றது.

சுவாமீ, தேவரீர் கோபமாயிருக்கும்போது என்னைத் தண்டியாதேயும்.—உமது கோபாக்கினி வேளையில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும்.—ஏனெனில் நீர் விட்ட அம்புகள் என்னை உருவிப்பாய்ந்தது; உமது கையின் பாரம் என்மேல் சுமந்தது.—உமது கோபத்தின் முகத்தே எனது மாம்ஸத்திற் சுகமற்றுப் போயிற்று; என் பாவங்களின் முகத்தே என் எலும்புகள் உறவற்றுக் கலகலத்துப்போயிற்று.—ஏனென்றால், என் அக்கிரமங்கள் என் தலைக்கு மிஞ்சி என்னை மூழ்

கடித்தும் வெகு பாரச்சுமையாக என்னை இருத்தியும் போட்டது; என் மதியீனத்தினால் என்னுடைய காயங்கள் புழுத்து நாறிப் போயிற்று.—நான் மிகவுந் தரித்திரனாய் உடல் கூனிப்போய் நாள் முழுதுந் துக்கத்தால் முகம்வாடித் திரிகிறேன்.—ஏனெனில், என் இடுப்பானது அக்கினிப்பிரவேசமாய்ப் பற்றியெரிகிறது; என் சரீரத்தில் நல்லசதை எங்குமில்லை.—நான் வெகுவேதனைக்கும் ஈனத்துக்கும் உள்ளானேன். என்னிருதயத்தின் அங்கலாய்ப்பினால் புலம்புகிறேன்; என் ஆண்டவரே, என் ஆசைகளெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கிறது, என் பிரலாபம் உமக்கு மறைந்திருக்கவில்லை.—என் இருதயங் கலங்கினது சத்துவம் என்னைக் கைவிடுகிறது. என் கண்ணொளிவு மங்கிப்போகிறது. என்னைச் சேர்ந்தார் சிநேகிதரும் என்மேல் எதிர்த்து நெருங்கி விரோதமாக நின்றார்கள்.—என் அருகில் இருந்தவர்கள் அகலப்போனார்கள். என் உயிர்பறிக்க எண்ணினவர்கள் எனக்கு வெகு கொடுமை செய்தார்கள்.—எனக்குப் பொல்லாங்கு தேடினவர்கள் என்னோடு வீண்வார்த்தை பேசி, நாள் முழுதும் என்னை மோசம்போக்கும் விதத்தை யோசி



த்தார்கள்.—நானோவென்றால் காதுகேளாதச் செவிடனைப்போலவும், வாய்திறவாத ஊமையைப்போலவும் இருந்தேன். நான் கேட்கச் செவியில்லாதவனும், மறுத்துச் சொல்ல நாவில்லாதவனும் ஆனேன்.—சுவாமீ, உம்மை நம்பியிருக்கிறேன்; என் சர்வேசுரா சுவாமி, என் மன்றாட்டைக் கேட்டருளும். என் கால் தடுமாறும்போது என்மேல் இடும்பு பேசின என் சத்துருக்கள் இன்னம் என்னைக்கொண்டு மனமகிழாதபடி உம்மைக் கேட்டுக்கொண்டேன். ஆகிலும், நான் தண்டனைப்பட ஆயத்தமாயிருக்கிறேன்; என் சஞ்சலம் எந்நேரமும் என் முன்பாக நிற்கிறது.—ஏனெனில் என் அக்கிரமங்களைச் சொல்லிக் காட்டுவேன்.—என் பாவங்களை நினைத்துச் சிந்தைப்படுவேன்; ஆனால் என் சத்துருக்கள் உயிரோடிருந்து என்னிலும் பலமானார்கள்; நியாயமில்லாதென்னைப் பகைக்கிறவர்கள் பலுகிப்போனார்கள்.—நான் நன்மையைப் பின்சென்றதால் நன்மைக்கு பதில் தின்மைசெய்கிறவர்கள் என்னைத் தூற்றுகிறார்கள்.—என் சர்வேசுரா சுவாமி, என்னைக் கைவிடாதேயும்; என்னைவிட்டு அகலாதேயும். எனக்கு இரட்சண்ணியமா

யிருக்கிற சர்வேசுரா சுவாமீ, தீவிரத்தில் வந்து எனக்கு உதவிசெய்தருளும்.—ஒரு திரி.

## MISERERE MEI, DEUS.

### 4-வது. 50-ம் சங்கீதம்.

¶ தாவீது என்கிறவர் தமது கண்முன்பாக எப்பொழுதும் இருக்கிற தமது பாவங்களைக் குறித்துச் சர்வேசுரனை நோக்கிப் பிரலாபித்துப் பாவத்தில் நின்று அதிகமதிகமாய்த் தம்மைப் பரிசுத்தமாக்கித் தமக்கு வரப்பிரசாதங்களையும் புதிதான இருதயத்தையுங் கொடுத்தருளவேணுமென்று சர்வேசுரனை மன்றாடினதும், தாழ்ச்சியும், மனஸ்தாபமுமுள்ள இருதயமே சர்வேசுரனுக்குப் பிரிய பலி என்கிறதுமாகப் பாடியிருக்கின்றது.

சர்வேசுரா சுவாமீ, உமது தயையின் விசாலத்திற்குச் சரியானபடி என்மேல் இரக்கமாயிரும்.—உமது இரக்கப் பெருக்கத்திற்கு ஒத்தபடி என் அக்கிரமங்களை நிர்மூலமாக்கும்.—இன்னம் அதிகமாய் என் குற்றங்களில் நின்று என்னைக் கழுவி என் பாவங்களில் நின்று என்னை விடுவித்துப் பரிசுத்தப்படுத்தும்.—நானோ எனது அக்கிரமங்களை அறிந்திருக்கிறேன்; என் பாவம் எந்நேரமும் என் கண்முன்னே நிற்கிறது.—உமக்கு மாத்திரமே குற்றஞ்செய்தேன்; உம்மு



டைய சந்நிதிக்குமுன்னே தீங்குபுரிந்தேன்; நீர் உமது வாக்குத்தத்தத்திற் பிரமாணிக்கராய் இருக்கிறீரென்றும், உமது தீர்வையிலே நீதிபரனாயிருக்கிறீரென்றும் விளங்கும்படி என் குற்றங்களைப் பொறுத்தருளும். நானோவென்றால் அக்கிரமத்திற் சனித்தேன்; என் தாயார் பாவத்தில் என்னைக் கர்ப்பந்தரித்தாள்.—நீர் சத்தியத்தை நேசித்து, உமது பரம ஞானத்தின் மறைவுள்ள இரகசியங்களை எனக்கு விளங்கச்செய்தருளினீர். நீர் ஈசோப்பென்கிற புல்லினால் என்மேல் தெளித்தருளுவீர்; நானுஞ் சுத்தமாவேன்.—நீர் என்னைக் கழுவுவீர், வெண்பனிக்கட்டியிலுந் தூய்மையாவேன்.—என் செவிகளுக்கு இன்பத்தையுஞ் சந்தோஷத்தையுந் தந்தருளுவீர்; தளர்ந்துபோன என் எலும்புகள் திடன்கொண்டு எழுந்து அக்களிக்கும். என் பாவங்களைப் பாராமல் உமது முகத்தைத் திருப்பிக்கொண்டு, என் அக்கிரமங்களையெல்லாம் போக்கியருளும்.—சர்வேசுரா, என்னிடத்தில் சுத்தமான இருதயத்தை உண்டாக்கி என் உள்ளத்தில் நீதிமுறைமையுள்ள புத்தியைப் புதிப்பித்தருளும்.—உமது சந்நிதியில் நின்று என்னைத் தள்

ளாதேயும்; உம்முடைய இஸ்பிரீத்துசாந்துவை என்னிடத்தில் நின்று மறுபடி வாங்கிக் கொள்ளாதேயும். உமது இரட்சணியத்தின் ஆநந்தத்தை மறுபடி எனக்குத் தந்தருளும்; உமது மேலான ஞானத்தால் என்னை உறுதிப்படுத்தும்.—அநீதருக்கு உமது மார்க்கத்தைப் போதிப்பேன். துஷ்டர் உம்மிடத்தில் திரும்புவார்கள்.—சர்வேசுரா, என் இரட்சகரான சர்வேசுரா, இரத்தப் பழிகளில் நின்று என்னை மீட்டு விடுதலையாக்கியருளும்; அப்போது என் நாவானது உமது நீதியைப் புகழ்ந்தேற்றும்.—ஆண்டவரே, என் இதழ்களைத் திறந்தருளும், என் வாய் உம்முடைய தோத்திரங்களைக் கூறும்.—ஆண்டவரே! உமக்குப் பலி வேண்டியிருந்தால் மெய்யாகவே பலி கொடுப்பேன்; ஆனால் சர்வாங்க தகனப்பலிகள் உமக்குப் பிரியமாய் இருக்கிறதில்லை.—துக்கப்படுகிற உள்ளமே ஆண்டவருக்குப் பிரியமானபலி, மனஸ்தாபத்தினாலே நொறுங்கித் தாழ்ச்சியுள்ள இருதயத்தைப் புறக்கணிக்கமாட்டீரோ சுவாமீ.—ஆண்டவரே! உமது நன்மைத் தன்மையில் சீயோன் என்ற பருவதத்தின்மேல் கிருபையாயிரும்; ஜெருசலேமென்கிற



பட்டணத்தின் மதில்கள் எடுக்கப்படத் தயை செய்தருளும்.—அப்பொழுது நீதியின் பலியும், சர்வாங்க தகனப்பலியுங் காணிக்கைகளும் உமக்கு ஏற்கையாகும்.—அப்பொழுதே உமது பீடத்தின்மேல் நவசுகாரியப் பலிகளைக் கொடுப்பார்கள்.—ஒரு திரி.

## DOMINE, EXAUDI.

## 5-வது. 101-ம் சங்கீதம்.

¶ இந்தச் சங்கீதம்; தீர்க்கதரிசியாகிய தாவீது என்கிறவரைப்போல அவரவர் தங்கள் தங்கள் பாவத்தின்மேல் மனஸ்தாபப்பட்டுப் பாவத்தின் ஆக்கினையாகிய துன்பங்களில் சர்வேசுரனை மன்றாடுகிறதற்கு மகா உதவியுமாய்த் திருச்சபைக்கு மகா உசிதமான செபமுமாய்ப் பாடியிருக்கின்றது.

ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும். என் அபயசத்தம் உமது சந்நிதிமட்டும் வரக்கடவது.—எனக்கு உமது திருமுகத்தைத் திருப்பிக்கொள்ளாதேயும்; நான் துன்பப்படும் எந்தெந்த நாளிலும் என் வேண்டுதலுக்குக் காதுசாய்த்துக் கொடுத்தருளும்.—நான் எந்தெந்த நாளிலும் உம்மை மன்றாடினாலும் என் மன்றாட்டைத் தீவிரமாய்க் கேட்டருளும்.—ஏனெனில் என்னு

டைய நாட்கள் புகைபோல் மறைந்துபோயிற்று. என் எலும்புகள் அடுப்பின் விறகைப் போலே துவண்டுபோயிற்று.—என் ஆகாரத்தைப் புசிக்க மறந்துவிட்டதனால் என் இருதயங் காய்ந்து வெய்யிலில் அடிபட்ட புல்லைப்போல் உலர்ந்தேன்.—என் பிரலாபப் பெருமூச்சின் பேரொலியால் எனது தோலோடு என் அஸ்திகள் ஒட்டிப்போயிற்று.—வனாந்தரத்தில் தனித்திருக்கும் *பெலிக்கான் போலவுந் தனிவனத்தில் தங்கின ஆந்தைபோலவுமானேன். கண்ணுறக்கமற்றேன். தனிப்பட்டுக் கூரைமேற் குந்தின குருவிபோலானேன்.—என் சத்துருக்கள் என்னை நாள்முழுதும் தூஷணஞ் செய்கிறார்கள். என்னைப் புகழ்ந்தவர்கள் எனக்கு எதிராய்ச் சபதம் கூறுகிறார்கள்.—அதேனென்றால் நான் சாப்பாடாகச் சாம்பலை அருந்தித் தண்ணீரோடு என் கண்ணீரைப் பானம் பண்ணினேன்.—உமது சினத்தையுங் கோபாக்கினியையும் பற்றி இவ்விதஞ் செய்தேன்; ஏனென்றால், நீர் என்னை உயர்த்திப் பின்பு கீழேவிழ அடித்து நொறுக்கினீர்.—என்னுடைய நாட்கள் நிழ

* ஓர் பட்சி.



லைப்போல் சாய்ந்துபோயிற்று; நானோ புல்லைப்போல் உலர்ந்தேன்.—ஆனால் ஆண்டவரே! நீர் சதா காலங்களும் இருக்கின்றவர்; உமது திருநாமத்தின் ஸ்மரணமோவெனில் அனவரதகாலமும் நிலைத்து நிற்கும்.—சீயோன் என்ற மாநகருக்குக் கிருபைபுரியுங் காலம் வந்து நேரிட்டமையால் தேவரீர் எழுந்தருளி அதன்மேல் இரக்கஞ்செய்தருளும். அதேனென்றால் உம்முடைய அடியார் அந்த நகரத்தின் தகர்ந்த கல்லுக்களின் மேல் பிரீதியாகி அதன் மண்ணின்மேலும் இரக்கமாயினார்கள்.—ஆண்டவரே! சமஸ்த சனங்களும் உமது திருநாமத்துக்குஞ் சகல மண்டலேஸ்வரரும் உமது அர்ச்சிய மகிமைக்கும் அஞ்சுவார்கள்.—அதேனெனில், சீயோன் என்ற நகரத்தை ஆண்டவர் கட்டுவித்துத் தமது மகிமைப் பிரதாபத்திற் காணப்படுவார்.—அவர் தாழ்ச்சி உள்ளவர்களுடைய வேண்டுதலுக்குத் திரும்பிச் செவி தந்ததல்லாமல் அவர்களுடைய மன்றாட்டைப் புறக்கணித்ததில்லை.—இனிவருஞ் சந்ததிக்கு இதுகள் எழுதப்பட்டிருக்கட்டும்; இனிமேல் உண்டாகுஞ் ஜனம் ஆண்டவரை ஸ்துதிக்கும்.—ஏனென்றால்; ஆண்டவர் தமது

அர்ச். ஸ்தலத்தின் உன்னதத்திலிருந்து திருக்கண்ணோக்கினார்.—விலங்கிற் கிடக்கிறவர்களுடைய பிரலாபத்தைக் கேட்கவுங் கொலையுண்டு போனவர்களுடைய பிள்ளைகளைக் கட்டவிழ்த்து விடுவிக்கவும்.—இப்படி விடுதலான ஜனங்களும் இராஜாக்களும் ஆண்டவருக்குத் திருப்பணி புரியக்கூடும்பொழுது சீயோன் பட்டணத்தில் ஆண்டவருடைய திருநாமத்தைக் கொண்டாடிச் செருசலேம் நகரில் அவருடைய திருப்புகழைப் பாடத் தக்கதாகவும் பரலோகத்தில் நின்று பூலோகத்தைப் பார்த்தருளினார்.—அடியான் தன் சத்துவத்தின் மத்தியில் அவருக்குச் சொன்னதாவது: என் ஆயுசினுடைய சொற்பத்தை எனக்குக் காட்டியருளும். என் ஆயுசு நடுவில் என்னை அழைத்துக்கொள்ளாதேயும்.—உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக நிற்கின்றது.—சுவாமீ! தேவரீர் தாமே ஆதியிலே பூமண்டலத்துக்கு அஸ்திவாரமிட்டீர்.—வானமண்டலங்கள் உமது கைத்தொழிலாமே.—இதுகள் சிதைந்துபோம்; நீரோ நிரந்தரம் இருக்கிறவராமே.—உடுத்த உடைபோல் இவையெல்லாம் பழசாய்ப்போம்; ஆடை மாற்றுகிறதுபோலத்



தேவரீர் அதுகளை மாற்றுவீர்; அதுகளும் மாறுபட்டுப்போம்.—நீரோவெனில் எக்காலமும் ஒரே சீராயிருக்கிறவர். உம்முடைய வருஷங்கள் ஒழிவதில்லை.—உம்முடைய அடியார்களின் பிள்ளைகள் உம்மோடு வாசஞ் செய்வார்கள். அவர்களுடைய சந்ததியும் என்றென்றும் நன்னெறியில் நடத்தப்படுவதாமே.—ஒரு திரி.

## DE PROFUNDIS.

## 6-வது. 129-ம் சங்கீதம்.

¶ பாவப்பொறுத்தல் அடையச் சர்வேசுரனை மன்றாட வேண்டிய உருக்கத்தின் மாதிரிகையாகப் பாடியிருக்கின்றது.

சுவாமீ! பாதாளத்திலே நின்று உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; சுவாமீ, என் சத்தத்தைக் கேட்டருளும்.—எனது விண்ணப்பத்தின் பேரொலியை உமது செவி தந்து கேட்டருளும். ஆண்டவரே! நீர் எங்கள் பாவங்களைப் பாராட்டுவீராகில் உமக்கு முன்பாக நிருவாகஞ் செய்கிறவனார்?—ஆனால் தேவரீடத்தில் தயாளமான மன்னிப்பிருக்கிறபடியாலும், உமது வேத முறைமையைப்பற்றியுஞ் சுவாமீ, உம்மை நம்பிக் காத்

இருக்கிறேன்.—என் ஆத்துமம் ஆண்டவருடைய திருவசனத்தின்மேல் ஊன்றிக் காத்திருக்கின்றது, என் ஆத்துமம் ஆண்டவரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறது.—உதயசாமக்காவல் கோர்துவக்கி இராவுபரியந்தம் இஸ்ராயேல் ஜனம் ஆண்டவரை நம்பிக் காத்திருக்கக்கடவது.—ஏனென்றால், சுவாமி தயையுள்ளவர்; அவரிடத்தில் இரட்சண்ணியம் ஏராளமாய் இருக்கின்றது.—அவரே இஸ்ராயேல் ஜனத்தை அதின் சகல பாவங்களில் நின்று இரட்சித்தருளுவார்.—ஒரு திரி.

## DOMINE, EXAUDI.

## 7-வது. 142-ம் சங்கீதம்.

¶ *தீர்க்கதரிசியாகிய தாவீது என்கிறவர் தாம் படுகிற உபத்திரவங்களில் தேவ கிருபையை இரந்து கேட்டுச் சர்வேசுரன் தமது நீதியின் உக்கிரத்திற்கு ஒத்தவண்ணம் நடப்பியாமல் தயையோடு நடப்பித்தருளவேணுமென்று சர்வேசுரனை மன்றாடிப் பாடியிருக்கின்றார்.*

சுவாமீ! என் வேண்டுதலைக் கேட்டருளும்; உமது சத்தியத்தின்படி என் விண்ணப்பத்திற்குக் காதுகொடுத்தருளும்.—உமது நீதியின்படி என் மன்றாட்டை யேற்றுக்கொள்ளும். "குற்றம் பாராட்டி உம்முடைய அடியானைத் தீர்வையிடப் பிரவேசியாதேயும். ஏனெனில் சீவனுள்ளவரில் எவனும் உமக்கு முன்பாகப் பரிசுத்தனாகத் தோன்ற மாட்டான்.—என் சத்துராதி என் ஆத்துமத்தை உபத்திரவப்படுத்தி என்னுயிரை வதைத்துப் பூமியில் சிறுமைப்படுத்தினான்.—முற்காலத்தில் மாண்டுபோனவர்களைப் போல என் சத்துரு என்னை இருட்டில் குடிகொண்டிருக்கச் செய்தான், என்னைக் குறித்து என் புத்தி அலமந்து துக்கத்தில் அமிழ்ந்தி, என் இருதயங் கலங்கிப்போயிற்று.—நான் பூர்வகாலங்களை நினைத்து உமது செயலெல்லாம் யோசித்து எண்ணினேன்; உம்முடைய திருக்கரங்களின் செய்கைகளின்மேல் தியானஞ் செய்தேன்.—உம்மை நோக்கி என் கைகளை விரித்தேன். நீரில்லா நிலம்போல் என் ஆத்துமம் வறண்டு உம்மைத் தாவுகிறது.—ஆண்டவரே! என் ஆவி சோர்ந்து போகின்றது. என் வேண்டுதலைத் தீவிரமாய்க் கேட்டருளும்.—உமது திரு முகத்தைத் திருப்பிக்கொள்ளாதேயும்; திருப்பிக்கொள்வீராகில் குழியிலிறங்கிப் போகிறவர்களுக்குச் சமானமாவேன்.—நான் உம்மை நம்பியிருக்கின்றமையால், அதிகாலமே நான்

உமது தயை மொழியைக் கேட்கச்செய்தரு
ளும்.—என் ஆத்துமம் உம்மை நோக்கி எழுந்
தபடியால், நான் நடக்கவேண்டிய வழியை
எனக்குப் படிப்பித்தருளும். நான் உம்மைத்
தஞ்சமென்று ஓடிவந்ததினால், என் சத்து
ருக்கள் இடத்தில் நின்று என்னைத் தற்காத்
தருளும். தேவரீர் என் தேவனாகையால்,
நான் உமது சித்தத்தின்படியே செல்லக்
கற்பித்தருளும்.—உம்முடைய நல்ல இஸ்பிரீத்
தானவர் என்னை நன்மார்க்கத்திலே நடப்பிப்
பாராக; சுவாமீ, உமது திருநாமத்தின்
கீர்த்தியைக் குறித்து உமது நீதிக்கு ஒத்த
படி என்னைச் சீவிக்கச் செய்வீராக.—உபத்
திரவத்திலே நின்று என் ஆத்துமத்தை விடு
தலாக்கி உமது தயவினால் என் சத்துருக்க
ளைச் சங்கரித்துப் போடுவீராக.—நான் உம்
முடைய அடியானாதலால் என் ஆத்துமத்தை
உபாதிக்கிறவர்கள் எல்லாரையும் நிர்மூலஞ்
செய்தருளும்.—ஒரு திரி.

சுவாமீ! எங்கள் பாவங்களையும் எங்களை
ஈன்றவர்களுடைய பாவங்களையும் ஸ்மரணம்
பண்ணாதேயும். எங்கள் பாவங்களுக்காகப்
பழிவாங்கத் திருவுளமாகாதேயும்.

---



## அர்ச். கன்னிமரியாயின் ஏழு வியாகுலங்களைக் குறித்து செபம்.

1. வியாகுலமாதாவே, உமது ஆத்துமத்
திலே வியாகுலவாள் ஊடுருவப்படுமென்று
சிமியோன் தீர்க்கதரிசனம் சொன்னதைக்
கேட்டு மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த
வியாகுலத்தைப்பார்த்து நான் இவ்வுலக
சீவியத்தைச் சட்டைபண்ணாமல் பரலோக
சீவியத்தை அடையும்படி உம்முடைய திருக்
குமாரனை வேண்டிக்கொள்ள உம்மை மன்
றாடுகிறேன். பிரி.

2. வியாகுலமாதாவே, நீர் ஏரோதே
சென்பவனுக்கு பயந்து உமது திருக் குமா
ரனை எடுத்துக்கொண்டு எஜிப்து தேசத்

திக்கு ஓடிப்போகிறபோது நீர் மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் பசாசின் தந்திரங்களுக்குத் தப்பிப் பரலோகவழி தவறாமல் நடக்க உம்மை மன்றாடுகிறேன். பிரி.

3. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரன் பன்னிரண்டு வயதில் மூன்று நாள் காணமற்போனதால் வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப்பார்த்து நான் பாவத்தினால் அவரை இழந்துபோகாதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன். பிரி.

4. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரன் பாரமான சிலுவையைச் சுமந்துகொண்டு போகிறதைக் கண்டு நீர் மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து பாவத்தினால் எனக்கு வருகிற கஸ்திகளை இம்மையில் நான் பொறுமையோடு சகிக்கவும், மறுமையில் ஈடேற்றம் அடையவும் உம்மை மன்றாடுகிறேன். பிரி.

5. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரன் எண்ணிக்கையில்லாத கஸ்தி வேதனைப்பட்டுச் சிலுவையிலே மரணம் அடைந்ததைக் கண்டு நீர் மிகுந்த வியாகுலம் அனுப



வித்தீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து அவருடைய திருப் பாடுகளையும் வேதனைகளையும் நான் நினைத்து நல்ல மரணமடைய உம்மை மன்றாடுகிறேன். பிரி.

6. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரனுடைய திருச் சரீரத்தை உமது திருக்கரங்களில் வளர்த்தி அதைக் கட்டி மினவிக்கொண்டபோது மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து அவருடைய மரண நினைவு என்னிருதயத்தில் பதிந்திருக்கவும், நான் என் பாவங்களுக்காக மாறாமல் கண்ணீர் சொரிந்து அழவும் உம்மை மன்றாடுகிறேன். பிரி.

7. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரனுடைய திருச் சரீரத்தைக் கல்லறையில் அடக்கினபிற்பாடு நீர் மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப்பார்த்து நான் ஒருபோதும் சர்வேசுரனை விட்டுப் பிரிந்து தனிமையாயிராதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன். பிரி.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக.

மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே, தேவரீர் பாடுபடும் வேளையில் உமது திருமாதாவின் ஆத்துமம் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டதே. அந்தத் தாயாராகிய பரிசுத்த கன்னிமரியாயி எப்போதும் எங்கள் மரணநேரத்திலும் உமது இரக்கத்தினிடமாக எங்களுக்காக மனுப்பேசும்படி அனுக்கிரகம் செய்தருளவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலம் சீவியராய் இராச்சிய பரிபாலனம் செய்துவரும் உலக இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துவே, இந்த மன்றாட்டை எங்களுக்குத் தந்தருளும். ஆமென் சேசு.

(300-நாட் பலன்.)

---

## அர்ச். வியாகுலமாதா செபமாலை.

பரிசுத்த கன்னிமரியாயி தமது திருக்குமாரன் பாடுகள் நிமித்தமாக அநுபவித்த எழு வியாகுலங்களைத் தியானிப்போமாக.



### முதலாம் வியாகுலம்.

இந்த முதல் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயிக்குச் சிமியோன் சொன்ன தீர்க்கதரிசனத்தால் தமது திருக் குமாரனுடைய மரணத்தையும் மனுஷருடைய சேதத்தையும் அறிந்து, அவள் தமது இருதயத்தில் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டாளென்று தியானிப்போமாக.—1-பா. 7-பிரி. 1-திரி.

### இரண்டாம் வியாகுலம்.

இந்த இரண்டாம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக் குமாரனை எரோதென்பவன் கொல்லத் தேடுகிறதை அறிந்து, அவரை எடுத்துக்கொண்டு எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போய் எழு வருஷமளவும் மகா துக்கம் அநுபவித்தாளென்று தியானிப்போமாக.—1-பா. 7-பிரி. 1-திரி.

### மூன்றாம் வியாகுலம்.

இந்த மூன்றாம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக் குமாரனோடு தேவாலயத்துக்குப் போனவிடத்தில் மூன்று நாள் அவரைத் தேடியுங் காணாதே போனபடியினாலே தமது ஆத்துமத்தில் மிகுந்த

வியாகுலப்பட்டாளென்று தியானிப்போமாக.—1-பர. 7-பிரி. 1-திரி.

### நான்காம் வியாகுலம்.

இந்த நான்காம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரன் கபால மலையில் மரணமடையச் சிலுவை சுமந்து போகையில், அவரை எதிர்கொண்டு மிள வினபோது வாக்குக்கெட்டாத வியாகுலம் அனுபவித்தாளென்று தியானிப்போமாக.— 1-பர. 7-பிரி. 1-திரி.

### ஐந்தாம் வியாகுலம்.

இந்த ஐந்தாம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரன் சிலுவையில் அறையுண்டு அவர் சகலராலுங் கைவிடப்பட்டு ஓர் ஆறுதலுமில்லாமல் மரணமடைகிறதைக்கண்டு துக்கசாகரத்தில் அமிழ்ந்தி மனோவாக்குக்கெட்டாத வியாகுலப்பட்டாளென்று தியானிப்போமாக.— 1-பர. 7-பிரி. 1-திரி.

### ஆறாம் வியாகுலம்.

இந்த ஆறாம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரனுடைய



திருச் சரீரத்தைச் சிலுவையினின்று இறக்கித் தமது மடிமேல் வளர்த்தி அதிலுள்ள காயங்களை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கையில் சொல்லக்கூடாத வியாகுலம் அனுபவித்தாளென்று தியானிப்போமாக.—1-பர. 7-பிரி. 1-திரி.

### ஏழாம் வியாகுலம்.

இந்த ஏழாம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரனுடைய சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணின பின்பு அவருடைய மரணத்தையும் திருப்பாடுகளையும் தமது தனிமையையும் நினைத்து மட்டில்லாத கிலேசம் அநுபவித்தாளென்று தியானிப்போமாக.—1-பர. 7-பிரி. 1-திரி.

### தேவமாதா சிந்தின கண்ணீர்களுக்கிரங்கி மூன்று பிரியதத்த மந்திரஞ் சொல்லும் வகையாவது:

மிகவும் வியாகுலம் நிறைந்த கன்னிகையே! உமது திருக்குமாரனுடைய சீவியத்திலும், மரணத்திலும் நீர் அழுத கண்ணீரைப் பார்த்து நாங்கள் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபமாயிருந்து உமக்கு ஆறுதல் வருமளவும்

நீங்கள் பிரலாபித்தழ உம்மை மன்றாடுகி றோம். 3-பிரி. மந்திரம் சொல்லவும்.

---

## அர்ச். வியாகுலமாதாவின் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்......மற்றதும்.

அர்ச்சியசிஷ்ட மரியாயே,—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,-எங்.

கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,—எங்க...

உபாதனையடைந்த மாதாவே,—எங்க...

வியாகுலமாதாவே,—எங்க...

கண்ணீர் சொரிந்த மாதாவே,—எங்க...

துயரமடைந்த மாதாவே,—எங்க...

கைவிடப்பட்ட மாதாவே,—எங்க...

ஆறுதலற்ற மாதாவே,—எங்க...

குமாரனை இழந்த மாதாவே,—எங்க...

வாளால் ஊடுருவப்பட்ட மாதாவே,-எங்..

சஞ்சலத்தில் அமிழ்ந்திய மாதாவே,-எங்.

இருதயத்திலே சிலுவையை ஊன்றின மாதாவே,—எங்களுக்...

மகா துக்கமுள்ள மாதாவே,—எங்களு...

கண்ணீர்ச் சுனையே,—எங்களுச்...



பாடுகளின் திரளே,—எங்க...

பொறுமையின் கண்ணாடியே,—எங்க...

உறுதி நிலைமையின் குன்றே,—எங்க...

நம்பிக்கையின் பெட்டகமே,—எங்க...

கைவிடப்பட்டோர்களுக்கு அடைக்கலமே —எங்க...

உபத்திரவப்படுகிறவர்களுக்குக் கேடய மே,—எங்க...

அவிசுவாசிகளின் ஜெயசீலியே,—எங்க...

நிர்ப்பாக்கியர்களுக்கு ஆதரவே,—எங்க...

வியாதிஸ்தர்களுக்கு அவுழ்தமே,—எங்க..

மெலிந்தவர்களுக்குத் திடனே,—எங்க...

யாத்திரையில் அவதிப்படுகிறவர்களுக்குத் துறைமுகமே,—எங்க...

பெரும்புசலைத் தணித்தவளே,—எங்க...

துன்பப்படுகிறவர்களுக்குத் தஞ்சமே,-எ..

துஷ்டர்களுக்கு அச்சமே,—எங்க...

விசுவாசிகளின் பொக்கிஷமே,—எங்க...

தீர்க்கதரிசிகளின் நேத்திரமே,—எங்க...

அப்போஸ்தலர்களின் உதவியே,—எங்...

வேதசாட்சிகளின் கிரீடமே,—எங்க..

ஸ்துதியர்களின் ஒளியே,—எங்க...

கன்னியாஸ்திரிகளின் ஆரமே,—எங்க...

கைம்பெண்களின் தேற்றரவே,—எங்க...

சகல அர்ச்சியசிஷ்டவர்களின் ஆனந்தமே—எங்க...

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின்...மற்றதும்—எங்கள் பிரார்த்தனையை கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின்...மற்றதும்.—எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமி.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக,

து.—மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே,—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சுவாமீ, தேவரீர் சிமியோன் தீர்க்கதரிசனஞ் சொன்னபடியே பாடுபட்டபொழுது மகிமைப்பிரதாபமுள்ள கன்னித்தாயான மரியாயின் மகா மதுரமான ஆத்துமம் வியாகுல வாளால் ஊடுருவப்பட்டதாமே. அவள்



வியாகுலத்தையும் வேதனையையும் வணங்கி ஆராதிக்கிற நாங்கள், அவருடைய சிலுவையைச் சமுத்திவாயாய் நேசித்த சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மகிமையுள்ள பேறுகளினாலும் மன்றாட்டுகளினாலும் உமது திருப்பாடுகளின் பலனை அடையும்படி தயைபுரிந்தருளும். ஆமென் சேசு. 1-பா. 1-பிரி.

வியாகுலமும் நேசமும் இரக்கமுமுள்ள மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (300-நாள் பலன்.)

---

## நல்ல ஆலோசனை மாதாவை நோக்கிச் சொல்லத்தகும் செபம்.

மாங்கிஷ அவதாரமான திவ்விய வார்த்தையின் மாதாவாயிருக்க நித்திய ஆலோசனையால் தெரிந்துகொள்ளப்பட்ட மிகவும் மகிமைப் பிரதாபமுள்ள கன்னிகையே, தேவ இஷ்டப்பிரசாதத்தின் பொக்கிஷமே, பாவிகளின் தஞ்சமே, உமது ஊழியர்களில் மிகவும் அபாத்திரவானாகிய அடியேனுக்குத் தேவரீர் இந்தக் கண்ணீர்க்கணவாயில் ஒரு ஆலோசனை மாதாவாகவும், வழித்துணையாகவும்

இருக்கவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். உமது திருக் குமாரனுடைய மிகவும் விலையேறப்பெற்ற திரு இரத்தத்தைக்கொண்டு என் பாவங்களுக்கு மன்னிப்பையும், என் ஆத்தும இரக்ஷணியத்தையும், இதைப் பெறுவிக்க அவசரமான வழிகளையும் எனக்காகக் கேட்டுத் தந்தருளும். கத்தோலிக்குத் திருச்சபையானது தன் சத்துருக்களை வென்று ஜெயமடையவும் சேசுக்கிறீஸ்துவின் இராச்சியம் பூலோகமெங்கும் பரம்பவும் கிருபை செய்தருளும் தாயே. ஆமென்சேசு.

(100-நாட் பலன்.)

---

## பாவியின் அடைக்கலச் செபம்.

பரலோக பூலோக இராக்கினியே! பாவிகளுக்கடைக்கலமே! இதோ நான் நாலாபக்கத்திலும் துன்பப்பட்டு அண்டவோர் ஆதரவின்றி மோட்ச நெறியை விட்டுப் பாவச் சேற்றில் அமிழ்ந்தி நிற்கிறேன். குரூ கொண்ட பசாசு ஓர் பக்கத்தில் தொந்தரவு பண்ணுகிறது. பெரிய பூலோகந் தன் மாய்கையால் என்னை அலைக்கழிக்கின்றது. விஷமேறிய சரீரமே! என்னை எந்நேரமுஞ் சஞ்



சலப்படுத்துகின்றது. நான் உமது திருக் குமாரனுக்கு என் பாவத்தால் விரோதியானதால் என் இருதயத்தில் பயங்கரமுண்டாயிற்று. புத்தியில் கிலேசமுண்டாயிற்று. இப்படிப்பட்ட வேளையில் நான் எங்கே ஆதரவடைவேன்? என் பாவக் கொடுமையின் காற்றாலிழுக்கப்பட்ட தூசிபோலானேன். அரவின்வாய்த் தேரைபோலானேன். ஆலைவாய்க் கரும்புபோலானேன். அன்னையில்லாப் பிள்ளைபோலானேன். புலியின் கைப்பட்ட பாலகனானேன். நான் பாதாளத்தில் ஒளிந்தாலும், அங்கேயும் ஆண்டவர் என் குற்றத்தைக் காண்கிறாரே; பூமியில் எந்த மூலையிற் போனாலும் என் பாவம் என்னைத் தொடர்வதால், எனக்குத் திகிலும் கிலேசமுமின்றி வேறென்னவுண்டு? சர்வேசுரனுடைய நீதிக்குப் பயப்படுகிறேன். நீர் சர்வேசுரனுடைய தாயும் மனுக்குலத்துக்கு அரசியுமானதால் உமது அடைக்கலத்தில் ஓடிவந்தேன். என் பாவத்துக்காக அழுது வியாகுலப்பட்ட தாயே! என்பேரிலிரங்கி நான் படுந் துயரை மாற்றி எனக்காக உம்முடைய திருக்குமாரனை மன்றாடும். எனக்குப் பூமியும் அதின் செல்வ சுகங்களும்

வேண்டாம். மகிமையும் உலக மாட்சிமை
யும் வேண்டாம். சரீர இன்ப சுகமும், புகை
போல் மறையும் பேர் கீர்த்தியும் வேண்டாம்.
என் ஆண்டவரும், அவர் இராச்சியபாரமும்
எனக்ககப்பட்டாலே போதும். அப்பாக்கி
யத்தை நினைந்து நினைந்து அனலில் விழுந்த
புழுப்போல் நொடிக்கிறேன். அம்பு தைத்த
மான்போல் அலறுகிறேன். காட்டில் இராக்
காலத்தில் அகப்பட்ட பிள்ளையைப்போல்
திகைத்து நிற்கிறேன்.

நீர் சகல புண்ணியங்களைக் கொண்ட
ஆண்டவருமாய் இரக்கம் நிறைந்த என் தாயு
மாகையால், அக்கினி பற்றி வேகும் வீட்டில்
அகப்பட்ட பிள்ளைக்குக் கை கொடுப்பார்
போல நீர் எனக்கு இந்தத் தருணத்தில் கை
கொடும். கடலில் நீந்தி அமிழ்ந்தித் திரிப
வர்க்குக் கப்பற்காரர் உதவுமாப்போல், நீர்
எனக்கு இந்த ஆபத்தான வேளையில் உதவ
வாரும். சீக்கிரமாக வாரும். தயையோடும்
இரக்கத்தோடும் வாரும். நான் தெய்வத்
துக்கேற்ற பாதகனென்றாலும், நான் உம்மை
நோக்கி நீட்டிய கை பதறுவதைப் பாரும்.
நீர் பாவிகளுக்குத் தஞ்சமென்று எல்லோ
ரும் சொல்லுகிறீர்களே; உம்மையண்டி ஆதர



வடையாமற் போனவர்களில்லையே, ஆகை
யால் பாவிகளிற் பாவியாகிய என்மேலிரக்கம்
வைத்து, என்னையும் ஆதரிக்கச் சீக்கிரமாய்
வாரும். தாமதம் பண்ணாதேயும், வேதஞ்
சொல்லுவதெல்லாம் முழுமனதோடு விசுவ
சிக்கிறேன். என் நம்பிக்கையையெல்லாம்
ஆண்டவருக்குப்பின் உமதுபேரிலே வைக்கி
றேன்; உமது திருநாட்களையெல்லாம் உத்தம
பிரகாரம் அனுசரிக்கிறேன்; அற்பப் பாவத்
தை முதலாய்க் கட்டிக்கொள்ள மனதில்லை;
எந்நேரமும் உமது திருக்குமாரனுமாய் எனது
அன்புள்ள இரட்சகருமாயிருக்கிற சேசுநாத
ருக்கு அப்பிரியப்படுவேனோவென்கிற பயமே
யன்றி எனக்கு வேறே பயமில்லை. சுந்தரத்
தாயே! உமது தஞ்சமென்று ஓடிவந்த
என்னைத் தைரியமுள்ளவனாக்கி உலக காரி
யங்களில் எனக்குப் பெரிய கசப்புண்டாக்கி
உல்லாசமான ஆனந்த ஞானக்கடலில் மூழ்க
அனுக்கிரகம் பண்ணியருளும். ஆமென் சேசு.



## அர்ச். லூர்துமாதாவை நோக்கி ஜெபம்.

அமலோற்பவ கன்னிமாதாவே, சொல்லொண்ணு சோதிக்கதிர்வீச, சூரியன் ஒளி தங்கிய சுத்த வெள்ளை உடை அணிந்து, தெய்வீக வடிவு அலங்காரத்தோடு அன்று எழுந்தருளிவந்து, தன்னந் தனிமையான லூர்துமலைக் கெபியில் காட்சிதரக் கருணை புரிந்த உமது கிருபாகடாட்சத்தை நினைத் தருளும். உமது திருக்குமாரன் உமக்குக் கட்டளையிட்டிருக்கிற மட்டற்ற வல்லமை



யையும் நினைவுகூர்ந்தருளும். புதுமையில் பிரபலியமான லூர்துமலை மாதாவே, உமது பேறுபலன்களின்மீது நிறைந்த நம்பிக்கை வைத்து, உமது தயவு ஆதரவை அடைய இதோ ஓடிவந்தோம். உமது தரிசன வரலாறுகளின் உண்மையை உணர்ந்து ஸ்திரப் படுத்தின அர்ச். பாப்பானவரை பாதுகாத்து நடத்தியருளும். எவராலும் எதிர்த்துத் தடுக்கமுடியாத உமது திருக்கர வல்லபத்தால் அவரைத் தற்காத்தருளும். தேவ இரக்க நேச மனோகரம் அடங்கிய இரட்சணிய பொக்கிஷங்களைத் திறந்து அவைகளை எங்கள்மீது பொழிந்தருளும். உம்மை மன்றாடிக் கேட்கும் எங்கள் விண்ணப்பம் எதுவும் வியர்த்தமாய்ப் போகவிடாதேயும். மாசற்ற கன்னிகையான லூர்துமலை மாதாவே, தேவரீர் எங்கள் தாயாராகையால், எங்கள் மன்றாட்டுக்களைத் தயவாய்க் கேட்டுத் தந்தருளும். ஆமென் சேசு.

எங்கள் லூர்து ஆண்டவளே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்,

## அர்ச். லூர்துமாதாவின் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

திவ்விய இரட்சகரை எங்களுக்கு அளித்த அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தேவ கிருபையின் அதிசயத்துக்குரிய எத்தனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

லூர்துமலைக் கெபியில் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

உலகத்தை வெறுத்தல் அவசியம் என்று காண்பிக்க, ஏகாந்த ஸ்தலத்தில் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்...

மோட்ச பிரதாபத்தின் பிருதியைக் காண்பிக்க பூங்கதிர்கள் அணிந்த திருமேனியுடன் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

ஞான சௌந்தரியத்துக்கு மிஞ்சின சௌந்தரியம் இல்லையென்று காண்பிக்க அழகின் அவதாரம்போல் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

ஆத்தும சுத்தத்துக்கு மேலான சுத்தம் இல்லையென்று காண்பிக்கச் சுத்த வெண்



ணுடையை உடுத்தியவளாய்த் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

கற்பென்பது வானோருக்கு அடுத்த புண்ணியம் என்று காண்பிக்க மேகமற்ற வானம் போன்ற நீலக்கச்சையைக் கட்டிக்கொண்டவளாய்த் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

கற்புக்குக் காவல் அடக்க ஒடுக்கம் என்று காண்பிக்க நெடு முக்காட்டைப் போர்த்திக்கொண்டவளாய்த் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

நாங்கள் நாடவேண்டிய கெதி மோட்சம் என்று காண்பிக்க வானத்தை அண்ணாந்தவளாய்த் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

ஐம்பத்து மூன்று மணி ஜெபத்தை அடிக்கடி சொல்லுதல் உத்தம பத்திக்கிருத்தியம் என்று காண்பிக்க ஜெபமாலையைத் திருக்கரத்தில் ஏந்தினவளாய்த் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

கல்லும் முள்ளும் நிறைந்த வனமாகிய இந்த உலகத்தில் தேவரீரே எங்களுக்குத் துணை என்று காண்பிக்கக் கற்பாறையில்

படர்ந்த முன்று ரோஜாச் செடியைக் காலாலே மிதிக்கிறவளாய்த் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

தாழ்ச்சியுந் தரித்திரமும் உள்ளவர்கள் பேரில் தேவரீர் மிகுந்த பட்சமாயிருக்கிறீர் என்று காண்பிக்க ஒரு ஏழையான சிறு பெண்ணுக்குத் தெரிசனமான அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

தேவரீரை நேசித்து நம்பிக்கொண்டிருப்பவர்களுக்கு அசாத்தியமானது ஒன்றுமில்லை என்று காண்பிக்க அந்தச் சிறு பெண் மூலமாக ஒரு நீரூற்றைப் பிறப்பித்தருளிய அமலோற்பவ மாதாவே,—எங்களுக்காக...

தேவரீருடைய வல்லமையுங் கிருபையும் அளவிட்டுச் சொல்லமுடியாது என்று காண்பிக்க அந்த நீரூற்று தாராளமாய்ச் சுரந்து வழிந்தோடவும் கணக்கற்ற வியாதிஸ்தருக்கு ஆரோக்கியத்தை அளிக்கவும் செய்தருளிய அமலோற்பவ மாதாவே,—எங்க...

பாவிகளை நன்னெறியில் திருப்புகின்ற லூர்து நாயகியே,—எங்க...

சீமான்களை ஸ்திரப்படுத்துகின்ற லூர்து நாயகியே,—எங்க...



செத்தவர்களுக்கு உயிரைக் கொடுக்கின்ற லூர்து நாயகியே,—எங்க...

குருடருக்கு பார்வை அளிக்கின்ற லூர்து நாயகியே,—எங்க...

செவிடருக்குச் செவியைத் தருகின்ற லூர்து நாயகியே,—எங்க...

சப்பாணிகளை நடக்கச்செய்கின்ற லூர்து நாயகியே,—எங்க...

நோவாளிகளைக் குணமாக்குகின்ற லூர்து நாயகியே,—எங்க...

கஸ்தியாயிருக்கிறவர்களைத் தேற்றுகின்ற லூர்து நாயகியே,—எங்க...

சகல அவசரங்களிலும் உதவியாயிருக்கின்ற லூர்து நாயகியே,—எங்...

மென்மேலும் மன்றாடப்படுகின்ற லூர்து நாயகியே,—எங்க...

லூர்தென்னுந் திரு ஸ்தலத்திற்கு கணக்கற்ற ஜனங்களை வரச்செய்கின்ற லூர்து நாயகியே,—எங்க...

எங்கள் தாயாகிய திருச்சபைக்காகவும், உம்மை மன்றாடுகிறோம் லூர்துமலை மாதாவே,—எங்க...

அர்ச். பாப்பானவருக்காகவும், உம்மை மன்றாடுகிறோம் லூர்துமலை மாதாவே,—எங்க...

பல தண்டனைகளுக்குப் பாத்திரமாயிருக்கிற எங்களுக்காகவும், உம்மை மன்றாடுகிறோம் லூர்துமலை மாதாவே,—எங்க...

எங்கள் உற்றார் பெற்றார் புத்திரர் மித்திரர்களுக்காகவும், உம்மை மன்றாடுகிறோம் லூர்துமலை மாதாவே,—எங்க...

எங்கள் விரோதிகளுக்காகவும், உம்மை மன்றாடுகிறோம் லூர்துமலை மாதாவே,—எங்க.

சகல பாவிகள், பதிதர், துலுக்கர், அஞ்ஞானிகளுக்காகவும், உம்மை மன்றாடுகிறோம் லூர்துமலை மாதாவே,—எங்க...

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

மு.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக,

து.—பரிசுத்த லூர்துமலை மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரசுவாமி! முழுமனதோடே தெண்டனாக விழுந்துகிடக்கிற எங்களைப் பார்த்து, அமலோற்பவ லூர்து நாயகியுடைய வேண்டுதலினாலே நாங்கள் பாவ வழியை விட்டுப் புண்ணிய நெறியைப் பற்றிக்கொள்



ளவும், தேவ இஷ்டப்பிரசாதத்தோடே மரணித்து மோட்ச பேரின்பத்தை அடையவும், எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தை நோக்கித் தயைசெய்தருளும்,

ஆமென்சேசு.

---

### மூன்று பிரியதத்த மந்திரம்.

அர்ச். தேவமாதாவுக்கு சர்வேசுரனால் அளித்த ஞானம், வல்லமை, இரக்கம், என்னும் மூன்று வரங்களைக் குறித்து அநுதினம் காலையிலும், மாலையிலும் மூன்று பிரியதத்த மந்திரம் சொல்லி; மரியாயே, என் நல்ல தாயே! இன்றைக்குச் சாவான பாவத்திலிருந்து என்னைக் காத்துக்கொள்ளும் என்ற செபத்தை செபிப்பதைவிட அதிக லேசானதும், யாவராலும் எளிதாய் அநுசரிக்கக்கூடியதுமான பத்திமுயற்சி வேறில்லை. இந்தப் பத்தியை கடைசிபரியந்தம் புண்ணியத்தில் நிலைகொள்ளுவதற்கும், நல்ல மரணம் அடைவதற்கும் இப்பத்திமுயற்சி தக்க ஓர் வழியென்று தேவதாயார் தாமே 'அர்ச். மெல்தில்தம்மாளுக்கு வெளிப்படுத்தியிருக்கிறாள். 13-ம் சிங்கராயர் (200-நாள் பலன்.)

## தேவமாதாவுக்குத் தன்னைமுழுதும் ஒப்புக்கொடுக்கும் செபம்.

என் ஆண்டவளே! என் தாயாரே! இதோ என்னை முழுமையும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீர் பேரில் அடியேன் வைத்த பத்தியைக் காண்பிக்கத்தக்கதாக, இன்றைக்கு என் கண் காதுகளையும், வாய் இருதயத்தையும், என்னை முழுமையும் தேவரீருக்குச் சாணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். என் நல்ல தாயாரே, நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிறபடியினாலே, என்னை உம்முடைய உடைமையாகவும், சுதந்தரப் பொருளாகவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும். (100-நாட் பலன்.)

என் ஆண்டவளே! என் தாயாரே! நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிறேனென்று நினைத்துக்கொள்ளும். என்னை உம்முடைய உடைமையாகவும் சுதந்தரப் பொருளாகவும், ஆதரித்துக் காப்பாற்றியருளும். ஆமென் சேசு. (40-நாட் பலன்.)



## அர்ச். பேர்நர்து தேவமாதாவை நோக்கி வேண்டின செபம்.

மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது அடைக்கலமாக ஓடிவந்து, உம்முடைய உபகார சகாயங்களை இரந்து, உம்முடைய மன்றாட்டுக்களின் உதவியைக் கேட்ட ஒருவனாகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகத்தில் சொல்லக் கேள்விப்பட்டதில்லையென்று நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே தயையுள்ள தாயே, இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உம்முடைய திருப் பாதத்தை அண்டிவருகிறேன். பெருமூச்செறிந்து அழுது பாவியாகிய நான் உமது தயாளத்துக்குக் காத்துக்கொண்டு உமது சமுகத்திலே நிற்கிறேன். அவதரித்த வார்த்தையின் தாயே, என் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய்க் கேட்டுத் தந்தருளும். ஆமென் சேசு. (300-நாட் பலன்.)

ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே! பாவிகளுக்கு அடைக்கலமே! இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடிவந்தோம், எங்கள்பேரில் இரக்கமாயிரு

ந்து எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். பிரி. மும்முறை செபிக்க.

---

## தேவமாதாவை நோக்கி அநுக்கிரகம் வேண்டிக்கொள்ளுஞ் செபம்.

சம்மனசுக்களுடைய இராக்கினியே! மனுஷர்களுடைய சரணமே! சர்வலோகத்துக்கும் நாயகியே! நாங்கள் எல்லாரும் உம்முடைய பிள்ளைகளாய் இருக்கிறோம், எப்படியாகிலும் எங்களை இரட்சிக்கவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தாயாரே! மாதாவே! ஆண்டவளே! உம்மை நம்பினோம், உம்மை நம்பினோம், எங்களைக் கைவிடாதேயும். விசேஷமாய் நாங்கள் சாகும்போது பசாசினுடைய தந்திரங்களையெல்லாம் தள்ளிப்போட்டு, உம்முடைய திருக்குமாரன் சேசுநாதருடைய அண்டைக்கு நாங்கள் வந்து சேருமட்டும் தேவரீர் துணையாயிரும், இது நிமித்தமாக உம்முடைய திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து உம்முடைய பரிபூரண ஆசீர்வாதத்தைக் கேட்கிறோம். அதை அடியோர்களுக்கு இரக்கத்



தோடே கட்டளை பண்ணியருளுந் தாயாரே! மாதாவே! ஆண்டவளே! ஆமென் சேசு.

---

## அர்ச். ஜெர்த்துருத்தம்மாளுக்கு தேவமாதா படிப்பித்த செபம்.

மகிமையில் இலங்கி என்றென்றைக்கும் சமாதானத்தில் வீற்றிருக்கும் தமதிரித்துவத்தின் வெண்மையான லீலியே, மோட்சவாசிகளுக்கு ஆனந்தமாகிய சிறந்த ரோசாப் பூவே! வாழ்க, பரலோக இராஜா உம்மிடத்தில் பிறந்தருளவும், உமது கொங்கைகளின் பாலூட்டி அவரை வளர்க்கவும் பாக்கியம் பெற்றவளே! உமது தெய்வீகமான வரங்களின் இரசத்தை எங்கள் ஆத்துமங்களிற் பொழிந்து அவைகளுக்கு அது அன்னபோசனமாகச் செய்தருளுந் தாயே. ஆமென் சேசு.

---

## அர்ச். தேவமாதா சுவாமியைப் புகழ்ந்து வசனித்த பத்து வாக்கியங்கள்.

என் ஆத்துமமானது ஆண்டவரை வணங்கி தோத்திரம்பண்ணுகிறது.

என் இரட்சண்யமாகிய சர்வேசுரனிடத்தில் என் ஆத்துமம் ஆனந்தமாய் எழும்பி மனமகிழ்கின்றது.

தமது அடிமையானவளுடைய நீசத்தனத்தைக் கிருபாகடாட்சத்தால் பார்த்தபடியினாலே, இதோ எல்லாரும் இக்காலமுதல் தலைமுறை தலைமுறையாக என்னைப் பாக்கியமுள்ளவள் என்பார்கள்.

வல்லபமிக்கவர் தம்முடைய பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார். மேலும் அவருடைய நாமமானது அர்ச்சியசிஷ்ட நாமந்தானே.

தமக்குப் பயந்து இருக்கிறவர்களுக்கே தலைமுறை தலைமுறையாகத் தமது கிருபையைச் செய்வார்.

தம்முடைய கையின் பலத்தைக்காட்டித் தங்கள் இருதயத்தின் விசாரத்தினாலே கர்வமுள்ள பேர்களைச் சிதறப் பண்ணினார்.

பலமுடைத்தானவர்களை ஆசனத்திலே நின்று தள்ளி தாழ்ந்தவர்களை உயர்த்தினார்.

பசித்திருக்கிறவர்களைத் தம்முடைய நன்மையினாலே நிரப்பித் தனமுள்ள பேர்களை வறுமையுள்ளவர்களாக்கினார்.



அபிரகாமென்பவருக்கும் ஊழியுள்ளகாலம் அவருடைய சுத பரம்பரையாகிய எங்கள் பிதாப்பிதாக்களுக்கும், சர்வேசுரன் திருவுளம்பற்றினபடியே,

தமது கிருபையை நினைத்துத் தம்முடைய தாசராகிய இஸ்ராயேல் ஜனங்களைப் பரிக்கிரகம் பண்ணினார்.

பிதாவுக்கும், சுதனுக்கும்.....மற்றதும்.

---

## சம்மனசுக்களின் இராக்கினியான அர்ச். தேவமாதா படிப்பித்த செபம்.

ஓ! பிரதாப நிறைந்த மோட்ச இராக்கினியே! சம்மனசுக்களின் அதி உந்நத ஆண்டவளே ஆதி காலமுதல் பசாசின் தலையை நசுக்கும்படியான வல்லமையும் அலுவலும், சர்வேசுரன் உமக்குத் தந்தருளினாரே! தேவரீர் தயவுசெய்து உமது இராணுவ சேனைகளை இப்பூமியில் அனுப்பி, அவர்கள் உமது வல்லமையின் பெலத்தாலும், அதிகார ஏவலாலும், பசாசுக்களை எங்கும் எதிர்த்துத் தாக்கி, பின்தொடர்ந்து துரத்தி, அவர்களுடைய ஆணவ

கர்வத்தை அடக்கி, நரக பாதாளத்துக்குத் திரும்பவும் அவர்களை விரட்டி ஓட்டும்படி கிருபை செய்வீராக.

பரிசுத்த சம்மனசுக்களே! அதிதூதர்களே! எங்களைக் காப்பாற்றி ஆதரிப்பீர்களாக.— ஆமென்சேசு.

---

## AVE MARIS STELLA.

சமுத்திரத்தின் நட்சத்திரமே, சர்வேசுரனுடைய பூசிக்கப்பட்ட மாதாவே, நித்திய கன்னிகையே, பரலோகத்தின் பாக்கியமான வாசலே, வாழ்க.

கபிரியேல் என்கிற சம்மனசினுடைய வாக்கிலே நின்று புறப்பட்ட மங்கள வார்த்தையைக் கேட்டு, ஏவையின் பெயரை மாற்றி எங்களைச் சமாதானத்தில் நிலைநிறுத்தும்.

ஆக்கினைக்குப் பாத்திரமானவர்களுடைய கட்டுக்களையவிழும், குருடருக்குப் பிரகாசத்தைக் கொடும், எங்கள் பொல்லாப்புகளைத் தள்ளும்; சகல நன்மைகளும் எங்களுக்கு வர மன்றாடும்.



நீர் எங்களுக்குத் தாயாராயிருக்கிறீரென்று காண்பியும், எங்களுக்காக அவதரித்த உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் உம்மாலே எங்கள் வேண்டுதலைக் கேட்கக்கடவாராக.

உத்தம கன்னிகையே, எல்லாத்திலுஞ் சாந்தமே, நாங்கள் பாவங்களினின்று விடப்பட்டவர்களாகிச் சாதுக்களாகவும் கற்புடையவர்களாகவுஞ் செய்தருளும்.

நாங்கள் சேசுநாதரைத் தரிசித்து நிரந்தரங் களிகூர்ந்திருக்கச் சுத்த நடக்கையைத் தந்து பயமில்லாத வழியிற் கூட்டிக்கொண்டு போக அநுக்கிரகஞ் செய்தருளும்.

சர்வேசுரனாகிய பிதாவுக்குத் தோத்திரம். உத்த கிறீஸ்துவுக்குப் பூசை, இஸ்பிரீத்து சாந்துவுக்கு மங்களம், இந்த மூன்றாட்களுக்கும் ஒரே உத்தம தேவாராதனை உண்டாகக் கடவது, ஆமென்சேசு.

எங்கள் நம்பிக்கையான மரியே, எங்கள் மேல் இரக்கமாயிரும். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

---



**அமலோற்பவ கன்னிமரியாயின் திரு இருதயத்திற்கு நிந்தைப் பரிகாரச் செபம்.**

அர்ச். கன்னிமரியாயின் திரு இருதயமே, திவ்விய கர்த்தருக்கு உகந்ததும் அவரோடு அன்னியோன்னிய ஐக்கிய மமைந்ததுமான உமது திரு இருதய கமலத்தை வணங்கி நமஸ்கரிக்கிறேன். அன்பிற்சிறந்த அன்னையர்க் கன்னையின் இருதயமாக உம்மை நேசித்து, உமது மகிமைப் பிரதாப இலட்சணங்களின் மீதும் மனமகிழ்ந்து, உம்மை வாழ்த்தி ஸ்துதிக்கிறேன். அடியேனும் மற்றும் சகல மனிதர்களாலும் தேவரீருக்கு வந்த நிந்தை தூஷணை அவமானங்களுக்குப் பரிகாரமாக, இதோ! உமது சமுகத்தில் சாஷ்டாங்கமாக



விழுந்து தாழ்ச்சியுடனே இந்தப் பரிகார முயற்சியை ஒப்புக்கொடுக்கிறேன். உமக்கு மிகவும் நன்றிகெட்டதனங் காண்பித்து பல தரம் நான் குற்றவாளியாய் நடந்தது உண்மைதானென்று தாழ்ச்சியோடு இப்போது வெளிப்படுத்துகிறேன். ஆகிலும் தேவ கிருபையும் மன்னிப்பும் உம்மாலே எனக்கு அநேகவிசை உண்டாயிற்றென்று உணர்ந்து, தேவரீர் என்னை ஒருபோதும் கைவிடமாட்டீரென்று உறுதியாக நம்பியிருக்கிறேன். இந்த மனோகரமான நம்பிக்கையால் திடப்பட்டு உமது பேரில் இனி அதிக பத்தி உருக்கம் பிரமாணிக்கமுள்ளவனாய் நடக்க ஆசையாயிருக்கிறேன். இனி நான் உமது தோத்திரத்திற்காக செய்யத் தீர்மானித்திருக்கிற சுகிர்த கிரியைகளெல்லாம் தயவாய்க் கையேற்றுக்கொண்டு அவைகளை உமது திருக்குமாரன் சேசுநாதர்சுவாமிக்கு ஒப்புக்கொடுத்து, உம்மாலே அந்த அன்புள்ள திவ்விய கர்த்தர் என் பேரிலும் என் இனத்தார்பேரிலும் இரங்கி, தமது வரப்பிரசாதங்களைத் தாராளமாய்ப் பொழிந்தருளும்படி தேவரீர் மனுப்பேசவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். ஆமென் சேசு.

## நற்படிப்புகளுக்குப் பாதுகாவலாகிய தேவதாயின் ஜெபம்.

உலகத்தின் நித்திய ஒளியும் எங்கள் இரட்சகருமாகிய சேசுநாதரைப் பெற்றெடுத்த மகா பரிசுத்த கன்னிகையே! அறிவீனமும் அக்ஞானமும் நிறைந்த மனதில், உமது பரிசுத்த மன்றாட்டினால், அறிவிலும் பக்தியிலும் ஆச்சரியத்துக்குரிய அபிவிர்த்தியை அநேகநேக முறை கொடுத்தருளிய தேவஞானத்தின் தாயே! அடியேன் தேவரீரை என்னை ஆதரிப்பவளாகவும், என் படிப்புக்குப் பாதுகாவலாகவுந் தெரிந்துகொள்ளுகிறேன்.

ஓ பாக்கியம்பெற்ற ஆண்டவளே! நற்படிப்புகளுக்குப் பாதுகாவலே! உமது மன்றாட்டைக் கேட்டு, திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் எனக்குப் பூரண வெளிச்சத்தையும், பலத்தையும், விவேகத்தையும், தாழ்ச்சியையும் தந்தருள்வாராக. எனக்கு நேர்மையான மனதையும், போதுமான புத்தி ஞாபகம், வல்லமைகளையும் அளித்து, முக்கியமாய் நான் சகலத்திலும் தேவ ஞானத்தின் திருவுளப்படி நடப்பதற்கு வேண்டிய



மன இருதயக் கீழ்ப்படிதலையும் கொடுத்தருள்வாராக.

என் நல்ல தாயே! ஆங்காரம், தற்பெருமை, வீண் விநோதப்பிரியம், யோசனையற்றதனம் இவைகளினின்று என்னைக் காப்பாற்றும். என் விசுவாசத்தையாவது இருதய பரிசுத்ததனத்தையாவது ஆத்தும சமாதானத்தையாவது குறைக்கக்கூடிய எந்தக் காரியத்தினின்றும் தற்காத்து, சகல துர்மாதிரிகை, தப்பறைகளினின்றும் என்னைப் பாதுகாத்தருளும். •

ஓ மரியாயே! நான் உமது பாதுகாவலின் உதவியால், தாயாகிய பரிசுத்த திருச்சபையின் போதனைக்கும் நடத்துதலுக்கும் எப்போதும் கீழ்ப்படிந்து, சத்திய நெறியிலும் புண்ணிய வழியிலும் தவறாமல் தைரியத்தோடும் விடாமுயற்சியோடும் நடந்து, கடைசியாய் உமது திருக் குமாரனும் எங்கள் ஆண்டவருமான சேசுக்கிறீஸ்துநாதரை அறிந்து நேசித்து எக்காலமும் அடைந்து சுகித்திருக்கும்படி கிருபை செய்தருளும். ஆமென் சேசு.

(100-நாள் பலன்.)

## முப்பத்து மூன்றுமணிச் ஜெபமாலை.

சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரா சுவாமீ! நீச மனுஷருமாய் நன்றியறியாத பாவிகளுமாயிருக்கிற அடியோர்கள் மட்டில்லாத மகிமைப்பிரதாபத்தைக் கொண்டிருக்கிற தேவரீருடைய சந்நிதியிலேயிருந்து செபம்பண்ணப் பாத்திரமாகாதவர்களாயிருந்தாலுந் தேவரீருடைய அளவறுக்கப்படாத கிருபாகடாட்சத்தை நம்பிக்கொண்டு சேசுநாதருக்குத் தோத்திரமாக முப்பத்து மூன்று மணிச்செபம் பண்ண ஆசையாயிருக்கிறோம்; இந்தச் செபத்தைப் பத்தியோடே செய்து பராக்கில்லாமல் முடிக்கத் தேவரீருடைய ஒத்தாசை கட்டளை பண்ணியருளுஞ் சுவாமி, சகலமான புண்ணியங்களுக்கும் விசுவாசமென்கிற புண்ணியம் அஸ்திவாரமாயிருக்கிறபடியினாலே முந்த முந்த விசுவாச மந்திரஞ் சொல்லுகிறது.

மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமொன்றாயிருக்கிற சேசுநாதசுவாமியுடைய மூன்று பிரதான மகிமைகளைக் குறித்து மூன்று புண்ணியங்களைக் கேட்கிறது:



மெய்யான சர்வேசுரனாயிருக்கிற எங்களாண்டவரே! எங்களிடத்திலே தேவ விசுவாசமென்கிற புண்ணியமுண்டாகிப் பலனளிக்கும்படிக்கு அனுக்கிரகம் பண்ணியருளும்.—ஒரு பர.

மெய்யான மனுஷனாயிருக்கிற எங்களாண்டவரே! எங்களிடத்திலே தேவ நம்பிக்கையென்கிற புண்ணியமுண்டாகி வளரும்படிக்கு அனுக்கிரகம் பண்ணியருளும்.—ஒரு பர.

மெய்யான இரட்சகருமாயிருக்கிற எங்களாண்டவரே! எங்களிடத்திலே தேவசிநேகமென்கிற புண்ணியமுண்டாகி அதிகரிக்கும்படிக்கு அனுக்கிரகம் பண்ணியருளும்.—ஒரு பர.

பிதாவுக்குஞ் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது.—ஆதியிலேயும் இப்போதுமெப்போதும் அநாதி சதாகாலமுமிருக்கும்படியே.—ஆமென்சேசு.

பரிசுத்த கன்னியாஸ்திரீயாயிருக்கிற அர்ச். தேவமாதாவுக்குக் கபிரியேலென்கிற சம்மனசானவர் மங்களவார்த்தை சொன்ன பிரியதத்த மந்திரஞ் சொல்லுகிறது.

## முதலாவது.—மன்றாட்டு.

*சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரா சுவாமீ!* தேவரீர் அருளிச்செய்த திவ்விய கற்பனைகளுக்கு விரோதமான குற்றங்களைச் செய்தோமே, அவைகளையெல்லாம் தேவரீர் உம்முடைய மட்டில்லாத கிருபையினாலே பொறுத்துக்கொண்டு இனிமேல் அடியோர்கள் சுமுத்திரையாய் நடக்கவும், தேவரீருடைய தோத்திரம் விக்கின்மின்றி எங்கும் பரம்பவும், உத்தரிக்கிற ஸ்தலத்திலேயிருக்கிற ஆத்துமாக்கள் அவதியில் இளைப்பாற்றி அடைந்து மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவும் கிருபைபண்ணியருளும் சுவாமீ.—பத்து பர. ஒரு திரி.

பரலோகத்துக்கு இராக்கினியாயிருக்கிற அர்ச். தேவமாதாவே! பாவிகளாயிருக்கிற நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்து மணி ஜெபத்தையும் உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டி உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் திருப்பாதத்திலே பாதகாணிக்கையாக வைக்க உம்மை மன்றாடுகிறோம்.—ஒரு பிரி.



## 2-வது.—மன்றாட்டு.

*சர்வத்துக்கும்வல்ல சர்வேசுரா சுவாமீ!* நாங்கள் சுபாவமாய் மகா பலவீனருமாய்த் தந்திரங்களால் இழுக்கப்பட்டவர்களுமாய் இருக்கிறபடியினாலே உலகம், பசாசு, சரீரமென்னப்படுகிற ஞான சத்துருக்களை நாங்கள் ஜெயித்து, நாங்கள் பாசவழி போகாமலும், பஞ்சேந்திரியங்களுடைய அலைக்கழிப்புக்கு இணங்காமலும் ஒறுத்தல் உபவாசத்தால் உமது வேத வழிப்பட்டுச் சுமுத்திரையாய் நடக்கவும் கிருபை பண்ணியருளும் சுவாமீ.—பத்து பர. ஒரு திரி.

பூலோகத்துக்கு ஆண்டவளாயிருக்கிற அர்ச். தேவமாதாவே! பாவிகளாயிருக்கிற நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்து மணி ஜெபத்தையும் உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டி உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் திருப்பாதத்திலே பாதகாணிக்கையாக வைக்க உம்மை மன்றாடுகிறோம்.—ஒரு பிரி.

## 3-வது.—மன்றாட்டு.

*சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரா சுவாமீ!* நாங்கள் பிரதான புண்ணியங்களாகிய விசு

வாசம்;' நம்பிக்கை, தேவசிநேகத்தில் உயர்வும், இஸ்பிரீத்துசாந்துவின் ஞானவொளி கொண்டு பேரின்பத்தின் பாதையைப் பிடிக்கவும், உலகத்தில் உத்தியோகத் தொழிற்களைச் செய்கையில் எங்கள் மனது உம்மையும், உம்முடைய நித்திய இராச்சியத்தையுமாத்திரம் நாடி நிற்கவும், எல்லாக் கிரியைகளையும் உமக்காகவே செய்யவும் கிருபை பண்ணியருளும் சுவாமி.—பத்து பர. ஒரு திரி.

விடியற்காலத்தின் நட்சத்திரமாயிருக்கிற அர்ச். தேவமாதாவே! பாவிகளாயிருக்கிற நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த முப்பத்து மூன்றுமணி ஜெபத்தையும் உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டி உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் திருப்பாதத்திலே பாதகாணிக்கையாக வைக்க உம்மை மன்றாடுகிறோம்.—ஒரு பிரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

அவதரித்த தேவனுமாய்க் கிருபை நிறைந்த கர்த்தருமாய் மதுரமுள்ள இரட்சகருமாயிருக்கிற அன்புக்குரிய சேசுவே! தேவரீர் இவ்வுலகத்தில் வாசம்பண்ணின முப்பத்து மூன்று வருஷகாலம் மனிதர்களுக்குத் திவ்



விய மாதிரிகையாகச் செய்துவந்த, சுகிர்த புண்ணியங்களை அடியோர்கள் அநுசரிக்கவும், தேவரீர் எங்களை இரட்சிக்கத்தக்கதாக உம்முடைய திரு இரத்தமெல்லாஞ் சிந்தி அடைந்த கடின மரணத்தின் பலனாலே நாங்கள் மோட்சத்தின் பேரின்ப பாக்கியத்தைப் பெற்று உம்மை என்றென்றைக்கும் தரிசித்துச் சிநேகித்து ஸ்துதிக்கவுங் கிருபைசெய்தருளும் சுவாமீ.—ஆமென் சேசு.





## அர்ச். சூசையப்பரைக் குறித்து ஜெபம்.

மகா பாக்கியம்பெற்ற அர்ச். சூசையப்பரே! எங்களுடைய துன்பவேளையில் உமது பரிசுத்த பத்தினியின் உதவியை இரந்து மன்றாடினபின்பு, உமது பாதுகாவலையும் நம்பிக்கையோடு தேடிவருகிறோம். தேவ தாயா



ரான ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். கன்னிமரியாயிடத்தில் உமக்குள்ள சிநேகத்தின்பேராலும், திவ்விய குழந்தை சேசுநாதருக்கு நீர் காண்பித்த தந்தையின் அன்பைக்குறித்தும், உம்மிடத்தில் நாங்கள் கேட்கும் மன்றாட்டு ஏதென்றால், சேசுக்கிறீஸ்துநாதர் தமது இரத்தத்தால் நமக்காகச் சம்பாதித்த சுதந்தரத்தை தேவரீர் கிருபையாய்ப் பார்க்கவும் எங்கள் இக்கட்டிலே உமது பலமுள்ள ஒத்தாசையால் துணையாயிருக்கவும் மன்றாடுகிறோம்.

ஓ! திவ்விய குடும்பத்தை உத்தம ஞானத்தோடு நடத்திவந்த கைத்தாதையே சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடையவர்களாகத் தெரிந்துகொண்ட ஜனங்களைப் பராமரித்தருளும். ஓ! மிகவும் அன்பு நிறைந்த எங்கள் தகப்பனே! நாங்கள் எவ்வித தப்பிதத்திலும் கேட்டிலும் விழாதபடி எங்களைக் காப்பாற்றும். ஓ! எங்களைப் பாதுகாத்தருளும்படி மேலான வல்லமையுள்ளவரே! நரகசத்துருக்களோடு நாங்கள் செய்யும் யுத்தத்திலே நீர் மோட்ச சிம்மாசனத்திலிருந்து கிருபையாய் எங்களைப் பார்த்துத் துணையாய் வருவீராக. திவ்விய பாலகன் முன்னாள் சா

வின் ஆபத்துக்குத் தப்பித்துக்கொள்ளும்படி தேவரீர் எவ்விதம் ஏதுவாயிருந்தீரோ, அவ்விதமே சர்வேசுரனுடைய திருச்சபையையும் பசாசின் வலையிலும், எவ்வித ஆபத்திலுமிருந்து பாதுகாத்தருளும். உமது பாதுகாவல் இடைவிடாமல் என்றும் இருக்கக்கடவது. உமது புண்ணிய மாதிரிகையாலும், உம்முடைய உதவியின் துணையாலும் நாங்கள் எல்லோரும் பரிசுத்தமாய்ச் ஜீவித்துப் பத்தியாய் மரித்துப் பரகதியின் முடிவில்லாப் பாக்கியம் பெற்று வாழும்படி கிருபை செய்ய உம்மை மன்றாடுகிறோம். ஆமென் சேசு.

இந்த ஜெபத்தைப் பத்தியோடு சொல்லுகிறவர்களுக்கு ஒவ்வொருவிசையும் 7-வருஷம் 7-மண்டலப் பலனும், அர்ச். பாப்பானவர் கொடுத்திருக்கிறார்.

---

## அர்ச். சூசையப்பருக்குத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கும் ஜெபம்.

மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! தேவமாதாவுக்குப் பரிசுத்த பத்தாவானவரே, சேசுக்கிறீஸ்துநாதரை வளர்த்த தகப்பனாரே, தேவரீரை நம்பினவர்களுக்குத் தப்பாத அடைக்கலமே, நன் மரணத்துக்கு மாதிரிகையுந் தஞ்சமுமானவரே, தேவரீருடைய தாசராயிருக்கிற நாங்கள் எங்களை முழுதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். உமது சிம்மாசனத்தண்டையில் சாஷ்டாங்கமாக விழுந்து ஏக திரித்துவமான சர்வேசுரனுடைய சமுகத்திலேயும் உமது திவ்விய குமாரனான சேசுநாதருடையவும், உமது பரிசுத்த பத்தினியாகிய தேவமாதாவினுடையவுஞ் சகல மோட்சவாசிகளுடையவும் அண்டையிலேயும் மிகுந்த வணக்கத்துடனே தேவரீரை எங்களுக்குத் தகப்பனாராகவும், ஆண்டவராகவும், அடைக்கலமாகவும் தெரிந்துகொள்ளுகிறோம். தேவரீருக்கு எங்களுடைய ஆத்துமத்தையும், அவயவங்களையும், சக்திகளையும், உடைமை யுற்பத்திகளையும், எங்களுடைய மற்ற யாவற்றையும் ஒப்புக்கொடுக்கிறோம். உமது மகிமையைக் கொண்டாட உமக்குரிய வணக்கத்தைப் பிரசித்தம்பண்ணி ஒரு நாளாவது உமக்கு ஸ்துதியையும் வேண்டுதலையுஞ் செலுத்தாமல் இருக்கப்போகிறதில்லை. தேவரீரும் இடைவிடாமல் எங்களை நினைத்து எங்களுடைய இக்கட்டுகளை நிவர்த்திபண்ணி எங்களைப் புண்ணிய நெறியிலே வழுவாமல் நடப்பித்தருளும். சேசுநாதருடையவுந்

தேவமாதாவினுடையவும் திருக் கரங்களில் பாக்கியமான மரணத்தையடைந்த தேவரீர், நாங்கள் மரிக்கும்போது இஷ்டப்பிரசாதத்தோடே செத்து மோட்ச பேரின்ப பாக்கியத்தை அடைந்து, உம்முடனே என்றென்றைக்கும் வாழப்பண்ணியருளும். உமது பிள்ளைகளாயிருக்கிற எங்களைக் கைவிடாதேயும் தகப்பனாரே, ஆமென் சேசு.

---

## 13-ம் சிங்கராயரென்னும் பாப்பானவர் அர்ச். சூசையப்பர்பேரில் செய்த ஜெபம்.

அர்ச். சூசையப்பரே! எங்களுடைய துன்பதுயரங்களில் உமது சரணமாக ஓடிவந்தோம். உமது பரிசுத்த பத்தினியின் உதவியை இரந்து மன்றாடினபின் உமது அடைக்கலத்தை அடைய நம்பிக்கையோடே பிரார்த்திக்கிறோம். தேவ தாயாரான அமலோற்பவ கன்னிமாதாவின்பேரில் நீர் வைத்திருந்த அன்பின் ஐக்கியத்தைப் பார்த்து, திவ்விய பாலனான சேசுவை அன்போடு அரவணைத்து வளர்த்த தன்மைக்குரிய உமது நேசத்தைப் பார்த்து, அத்திவ்விய கர்த்தர் தமது திரு இரத்தத்தால் மீட்டிரட்சித்த



மனுக்குலத்தைக் கிருபாகடாட்சமாய்ப் பார்த்தருளி, எங்கள் அவசரங்களில் உமது செல்வாக்குள்ள மன்றாட்டினால் எங்களுக்கு உதவி செய்யவேணுமென்று மன்றாடுகிறோம். திருக்குடும்பத்தைக் காத்து நடத்தின விவேக காவலனே! சேசுக்கிறீஸ்துவின் பிரசைகளை ஆதரித்தருளும். அதிமிக உருக்க நேசம் அமைந்த பிதாப்பிதாவே! சகல பாவ மாசுகளினின்றும் எங்களைத் தற்காத்தருளும். வல்லமைபொருந்திய பாதுகாவலனே! எங்கள் சத்துருக்களோடே நாங்கள் நடத்தும் போராட்டத்தில் எங்களைப் பாதுகாத்தருளும். மரண ஆபத்தினின்று திவ்விய பாலனைத் தேவரீர் அன்று மீட்டிரட்சித்தது போல இப்போது எங்கள் சத்துருக்களின் சகல தந்திரங்களில் நின்றும் இக்கட்டு இடையூறுகளில் நின்றும் திருச்சபையைப் பாதுகாத்தருளும். உமது தயவு ஆதரவால் நாங்கள் தற்காக்கப்பட்டு உமது திவ்விய மாதிரிகையைப் பின்சென்று பரிசுத்தமாய்ச் சீவித்துப் பத்தியாய் மரித்துப் பரகதியின் ஆனந்தத்தில் வந்து சேரத்தக்கதாகத் தேவரீருடைய இடைவிடாத உதவி ஒத்தாசையை எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென் சேசு.

## அர்ச். சூசையப்பரைக் குறித்து ஞகிர்த மன்றாட்டு.

கிருபைதயாள நிறைந்தவருமாய், எங்கள் நேச வணக்கத்துக்கு உரியவருமாய் இருக்கிற பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! தேவரீரை மன்றாடி, தேவரீருடைய அடைக்கலத்தைத் தேடி உம்மிடத்தில் தாமிரந்து கேட்டதை அடையாமற் போனதில்லையென்று அர்ச். தெரோசம்மாள் நிச்சயித்ததை நினைத்தருளும். என் அன்புள்ள தகப்பனாரே! இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு, நான் உம்முடைய திருப்பாதத்தை அண்டிவருகிறேன். பெருமூச்செறிந்தழுது பாவியாயிருக்கிற நான் உமது தயாளத்துக்குக் காத்துக்கொண்டு, உமது சமுகத்தில் சாஷ்டாங்கமாக விழுகிறேன். மிகவும் இரக்கமுள்ள பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! சொற்பமும் அயோக்கியமுமாயிருக்கிற என் மன்றாட்டைப் பிறக்கணியாமல் தயாபரராய்க் கேட்டுக் கிருபைபுரிந்தருளும். ஆமென் சேசு.

---



## அர்ச். சூசையப்பரின் ஏழு வியாகுலங்களையும் ஏழு சந்தோஷங்களையும் குறித்துக் கேட்கும் மன்றாட்டு.

1-வது. அர்ச். சூசையப்பரே! நீர் கன்னிமரியாயின் கெற்பத்துக்குக் காரணமறியாமல் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் காரணத்தை சம்மனசுவினாலறிந்து நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூறுகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர் அநுபவித்த இந்தத் துக்கத்தையுஞ் சந்தோஷத்தையும் பார்த்து எங்களுக்காக மனுப் பேசியருளும். (அல்லது அவனவன் தனக்கு வேண்டியதைக் கேட்கிறது.) பர. பிரி. திரி.

2-வது. அர்ச். சூசையப்பரே! சேசுநாதர் மாட்டுக்கொட்டிலிற் பிறந்ததைக் கண்டு நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவர் சம்மனசுக்களாலும் மனிதர்களாலும் ஆராதிக்கப்பட்டதைக் கண்டு நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூறுகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர்...பர. பிரி. திரி.

3-வது. அர்ச். சூசையப்பரே! திவ்விய குழந்தை விருத்தசேதனப்பட்டதைக்கண்டு

நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவருக்கு சேசுவென்னுந் திருநாமந் தரிக்கப்படுவதைக்கண்டு நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர்...பர. பிரி. திரி.

4-வது. அர்ச். சூசையப்பரே! திவ்விய குமாரனுடைய பாடுகளையும் அவர் திருத்தாயாருடைய வியாகுலங்களையும் சிமியோன் முன்னறிவிக்கக் கேட்டு, நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் மனுக்குலத்தின் இரட்சண்யத்தை அவர் முன்னறிவிக்கக்கேட்டு நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர்...பர. பிரி. திரி.

5-வது. அர்ச். சூசையப்பரே! நீர் எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போனதைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் நீர் திவ்விய இரட்சகரைக் காப்பாற்றினதைப்பற்றி களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர்... பர. பிரி. திரி.

6-வது. அர்ச். சூசையப்பரே! எஜிப்து தேசத்தினின்று திரும்பி வருகையில், நீர்



பட்ட பயத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் சம்மனசுவின் காட்சியால் தேறுதல் அடைந்ததைப்பற்றி களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர்...பர. பிரி. திரி.

7-வது. அர்ச். சூசையப்பரே! சேசுநாதர் காணாமற் போனதினால் நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவரை மறுபடியுங் கண்டு நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றி களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர்...பர. பிரி. திரி.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக,

து.—அர்ச். சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி! உம்முடைய மிகவும் அர்ச். திருமாதாவுக்கு பரிசுத்த பத்தாவாக முத்தனான சூசையப்பரை மனோவாக்குக் கெட்டாத பராமரிப்பால் தெரிந்துகொள்ளத் திருவுளமானீரே. பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று, எங்களால் வணங்கப்படுகிற அவர் பரலோகத்தில் எங்களுக்

காக மனுப்பேசுகிறவராய் இருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக தேவரீர் அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். பிதாவோடும், இஸ்பிரீத்து சாந்துவோடுஞ் சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்சேசு.

---

நல்ல மரணமடைவதற்கு
அர்ச். சூசையப்பரைப் ப்ரார்த்து
வேண்டிக்கொள்ளுகிற ஜெபம்.

தேவ வரங்களால் நிறைந்த சூசையப்பரே! வாழ்க, கர்த்தரும் கர்த்தருடைய திருத்தாயாரும் உம்முடனே, மனிதர்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவரும் நீரே, உம்முடைய திருக்கன்னிப் பத்தினியினுடைய கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே. கன்னித்தாயாருடைய பரிசுத்த பத்தாவாகிய அர்ச். சூசையப்பரே! உம்முடைய ஊழியரும் பிள்ளைகளுமாயிருக்கிற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். சேசுக்கிறீஸ்துநாதருடையவும் கன்னிமரியம்மாளுடையவும் திருக் கரங்களில் மரணத்தை அடைந்தவர் நீரே, எங்க



ளுக்கு எப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் ஒத்தாசையாயிரும். ஆமென்சேசு.

---

அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,

அர்ச். சூசையப்பரே,

தாவீது இராஜாவின் கீர்த்திபெற்ற புத்திரனே,

பிதாப்பிதாக்களின் மகிமையே,

தேவதாயாரின் பத்தாவே,

கன்னிமரியாயின் கற்புள்ள காவலனே,

தேவ குமாரனை வளர்த்த தகப்பனே,

கிறீஸ்துநாதரை உற்சாகப் பற்றுதலுடன் காப்பாற்றினவரே,

திருக்குடும்பத்தின் தலைமையானவரே,

உத்தம நீதிமானான அர்ச். சூசையப்பரே,

உத்தம விரத்தரான அர்ச். சூசையப்பரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உத்தம விவேகமுடைத்தான அர்ச். சூசையப்பரே,
உத்தம தைரியசாலியான அர்ச். சூசையப்பரே,
உத்தம கீழ்ப்படிதலுள்ளவரான அர்ச். சூசையப்பரே,
உத்தம பிரமாணிக்கமுள்ளவரான அர்ச். சூசையப்பரே,
பொறுமையின் கண்ணாடியே,
தரித்திரத்தின் அன்பனே,
தொழிலாளிகளுக்கு மாதிரிகையே,
சமுசார வாழ்க்கையின் ஆபரணமே,
கன்னிகைகளின் காவலனே,
குடும்பங்களுக்கு ஆதாரமே,
கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே,
வியாதிக்காரர்களுக்கு நம்பிக்கையே,
மரிக்கிறவர்களுக்குப் பாதுகாவலே,
பசாசுகளை நடுநடுங்கச் செய்பவரே,
பரிசுத்த திருச்சபையின் பரிபாலனே,
உலகத்தின் பாவங்களை. மற்றதும்...

மு.—கர்த்தர் அவரைத் தமது வீட்டுக்கு எஜமானாக ஏற்படுத்தினார்.

தி.—அவருடைய உடைமைகளையெல்லாம் நடப்பிக்கவும் ஏற்படுத்தினார்.



## பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி, உம்முடைய மகா அர்ச்சியஷ்ட திருமாதாவின் பரிசுத்த பத்தாவாக முத்தனான் சூசையப்பரை மனோவாக்குக்கெட்டாத பராமரிக்கையால் தெரிந்துகொள்ளத் திருவுளமானீரே. பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று எங்களால் வணங்கப்படுகிற அவர் பரலோகத்தில் எங்களுக்காக மனுப்பேசுகிறவராயிருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்கள் ஆகத்தக்கதாக தேவரீர் அனுக்கிரகம் செய்தருளவேணுமென்று மன்றாடுகிறோம். பிதாவோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் சதாகாலம் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே,—ஆமென்சேசு.

1909-ம் ஆண்டு மார்ச்சு-மீ 18-உ பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதர் என்னும் அர்ச். பாப்பானவர் இத்தப் பிரார்த்தனையைப் பத்தியோடு சொல்லுகிறவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு விசை 300-நாள் பலனைக் கட்டளையிட்டிருக்கிறார். இந்தப் பலன்களை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்குச் செலுத்தலாம்.

சேசுவின் மகா பரிசுத்த இருதயத்தை நேசிக்கிறவர்களுக்குப் பாதுகாவலும் முன் மாதிரிகையுமான அர்ச். சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

அர்ச். சூசையப்பரே! எங்கள் ஆண்டரான சேசுக்கிறீஸ்துநாதரை வளர்த்த தகப்பனே, கன்னிமரியாயின் மெய்யான பத்தாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (300-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

திரு இருதயத்தின் சிநேகிதராகிய அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.)

அர்ச். சூசையப்பரே! நாங்கள் பரிசுத்தமாகச் சீவிக்கச்செய்தருளும்; எங்கள் சீவியம் உமது பாதுகாவலின்கீழ் க்ஷேமமாயிருப்பதாக. (300-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

---



## திருக்குடும்பத்தை நோக்கி ஜெபம்.

சேசுவின் திரு இருதயமே! அமலோற்பவ கன்னிமாதாவின் திரு இருதயமே! ஓ! மிகுந்த மகிமைப்பிரதாபம் பொருந்திய அர்ச். சூசையப்பரே! உங்கள் அடைக்கலமாக ஓடிவந்து உங்கள் உபகார சகாயங்களை இரந்து மன்றாடிக் கேட்ட எவனும் அந்த மன்றாட்டுக்களை அடையாமற்போனதில்லையென்று நினைத்தருளுங்கள். இப்பேர்ப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு என் பாவச் சுமை

யோர்டே உங்கள் பாத சந்நிதானத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து பிரார்த்திக்கிறேன்.

இரக்கமுள்ள சேசுவின் திரு இருதயமே! அமலோற்பவ கன்னிமாதாவின் திரு இருதயமே! ஓ! மகிமைப்பிரதாபம் பொருந்திய அர்ச். சூசையப்பரே, அடியேனுடைய மன்றாட்டுக்களை புறக்கணியாமல் தயவாய்க் கேட்டுத் தந்தருளுங்கள். ஆமென் சேசு.

---

### திருக்குடும்பத்தின் பிரார்த்தனை

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ தயையாயிரும்.—மற்றதும்.

அவதரித்த தேவ வார்த்தையின் திருக்குடும்பமே,

பூவுலகத்தில் அர்ச். தமதிரித்துவத்தின் படிவமாகிய திருக்குடும்பமே,

பரம தேவபிதா அத்தியந்த பிரியத்துடனே நேசித்த திருக்குடும்பமே,

சகல வரப்பிரசாதங்களாலும் நிறைந்தலங்கரிக்கப்பட்ட திருக்குடும்பமே, ..



எல்லாப் புண்ணியங்களுக்கும் உத்தம மாதிரிகையே,

எல்லா இருதயங்களின் நேசத்துக்குப் பாத்திரமான திருக்குடும்பமே,

மோட்சத்துக்கு நியமிக்கப்பட்டவர்களுடைய ஞான பொக்கிஷமே,

பரலோகத்தின் பேரின்பமே,

சகல சம்மனசுக்களாலும் வணங்கப்பட்ட திருக்குடும்பமே,

மனிதர்களால் நிந்திக்கப்பட்டிருந்தாலும் தேவசமுகத்தில் உன்னத மாட்சிமை பொருந்தின திருக்குடும்பமே,

பெத்திலே மூரார்களால் புறக்கணிக்கப்பட்டு ஒரு மாட்டுக்கொட்டாயில் ஒதுங்கிப்போக அவசரப்பட்ட திருக்குடும்பமே,

திவ்விய இரட்சகர் பிறந்த சமயத்தில் இடையர்களால் சந்திக்கப்பட்ட திருக்குடும்பமே,

பிறந்த திவ்விய குழந்தைக்குத் தோத்திரமாக சம்மனசுக்கள் பாடின சங்கீதங்களைக்கேட்ட திருக்குடும்பமே,

மூன்றிராசாக்களால் வணங்கிப் பாத காணிக்கை ஒப்புக்கொடுக்கப்பட்ட திருக் குடும்பமே,

தேவாலயத்தில் திவ்விய பாலனை யேசுவை சிமையோனென்கிற மகாத்துமாவானவர் அவனைக்குறித்துச் சொல்லிய ஸ்துதிகளையுந் தீர்க்கதரிசனங்களையுங் கேட்டுச் சந்தோஷமுந் துயரமும் பட்ட திருக்குடும்பமே,

எண்ணிறந்த ஆபத்துக்குள்ளே எஜிப்து தேசத்துக் கோடிப்போகக் கட்டளையிட்ட சம்மனசுவின் வாக்கியத்துக்குத் தாமதமின்றி கீழ்ப்படிந்த திருக்குடும்பமே,

எரோதென்கிற இராசாவின் கொடுமைக்குத் தப்பித்துக்கொள்ள அந்தேசத்துக்கு ஓடிப்போகக் கட்டாயப்பட்ட திருக் குடும்பமே,

அந்நியதேசத்தில் பரதேசியான திருக் குடும்பமே,

பூலோகத்துக்குத் தெரியப்படாமல் மறைந்த தன்மையாய்ச் சீவித்துவந்த திருக்குடும்பமே,

எங்களை இரட்சித்துக்கொள்ளும்.



சரித்திரமும் உழைப்புந் தவமுமுள்ள சீவியமாய்ச் சீவித்த திருக்குடும்பமே,

நெற்றி வேர்த்து அன்னஞ் சம்பாதித்துக்கொண்ட திருக்குடும்பமே,

பிரபஞ்ச நன்மை வறுமையும் பரலோக நன்மை மிகுதியுங்கொண்டிருந்த திருக் குடும்பமே,

பிற சிநேகத்துக்குஞ் சமாதான ஒற்றுமைக்கும் மாதிரிகையான திருக்குடும்பமே,

நினைப்பினாலும் மனப்பற்றுதலினாலும் முழுதும் பரலோகத்திற் சஞ்சரித்திருந்த திருக்குடும்பமே,

உமது ஆயுள்முழுமையும் இடைவிடாத ஜெபமுமாய் ஞான யோகமுமாயிருந்த திருக்குடும்பமே,

துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலும், உம்மை மன்றாடுகிறவர்களின் நம்பிக்கையும் எல்லாக் கிறீஸ்துவர்களின் குடும்பங்களுக்குச் சகிர்த மாதிரிகையுமாகிய திருக் குடும்பமே,

எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களை.—மற்றதும்.

மூத.—சேசுவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

அனை.—சேசுவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்களாண்டவருஞ் சர்வேசுரனுடைய ஏக குமாரனுமாகிய திவ்விய சேசுவே! எங்கள் பேரில் தயை நேசத்தைப்பற்றிக் குழந்தையாய்ப் பிறந்து உம்முடைய திரு மாதாவாகிய அர்ச். கன்னிமரியம்மாளுக்கும் அர்ச். சூசையப்பருக்குந் தாழ்ச்சியாய்க் கீழ்ப்படிந்து முப்பது வருஷகாலம் பூலோகத்துக்கு மறைந்த தரித்திர சீவியமாய்ச் சஞ்சரிக்கத் திருவுளமானீரே, அடியோர்கள் பரலோகத்தில் உமது மகிமைக்குப் பங்காளிகளாகத்தக்கதாக இவ்வுலகத்தில் உமது ஆழ்ந்த தாழ்ச்சியைக் கண்டுபாவிக்க எங்களுக்கு அனுக்கிரகஞ் செய்தருளும். அநவரத சதாகாலமும் பிதாவோடும் இஸ்பிரீத்து சாந்துவோடுஞ் சயஞ்சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிற ஆண்டவரே.—ஆமென் சேசு.



## அர்ச். மிக்கேல் சம்மனசானவரை நோக்கி ஜெபம்.

வானுலகச் சேனைத்தளங்களின் அதிபதியே! சதாஜீவ அரூபிகளில் மகிமைப்பிரதாப நிறைந்த சம்மனசானவரே! அவர்

களிலும் உத்தமமானவரே! உந்நத கடவுளின் மந்திராலோசனை நிர்ணயப் பெட்டகமே! தேவ சிம்மாசனத்தருகே நிற்கப் பேறு பெற்ற பிரபுவே! தேவ கட்டளைப்படியே பரலோக வாசலைத் திறக்கவும் பூட்டவும் அதிகாரமுடைய வானவனே! தேவநீதி சிம்மாசனத்தண்டையில் எங்கள் ஆத்துமங்களைச் சேர்ப்பிக்கும் அதாதி தூதனே! மரண அவஸ்தைப்படுகிறவர்களுக்கு உதவி செய்யத் தீவரித்தோடிவரும் உபகாரியே! மரித்தவர்களின் ஆத்துமங்களை அழைத்துக்கொண்டு போய் திவ்விய கர்த்தரின் சந்நிதியில் சேர்க்கும் காவலனே! பலவீனனும் நிர்ப்பாக்கியனுமாகிய அடியேனைக் கிருபாகடாட்சமாறப் பார்த்து, என் சீவியகால முற்றிலும், விசேஷமாய் என் மரணத்தறுவாயிலும், எனக்கு உமது தயை நேச உதவிபுரிந்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். ஆமென் சேசு.

மனவல்லய ஜெபம்.

அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மனசானவரே! பயங்கரமான தீர்வை நாளில் நாங்கள் மோசம் போகாதபடிக்கு எங்கள் ஞான யுத்தத்தில் எங்களைத் தற்காத்தருளும். ஆமென் சேசு. (100-நாட் பலன்.)



காவல் சம்மனசை நோக்கி ஒப்புக் கொடுக்கும் ஜெபம்.

அதிமிக பிரமாணிக்கம் அமைந்த காவலனே! அடியேனுக்குப் பிரியாத துணைவராக சர்வேசுரனால் நியமிக்கப்பட்டு எப்போதும் என்னண்டையிலிருந்து என்னை ஆண்டு நடத்திவரும் சம்மனசானவரே! இன்று (பேர்) ஆகிய நான் உம்மை என் பாதுகாவல

ராகவும் அடைக்கலமாகவும் தெரிந்துகொண்டு என்றென்றைக்கும் என்னை முழுதும் உமது பராமரிப்பில் வைத்துவிடுகிறேன். மேலும் நான் உமது மகிமைப் பிரதாபத்துக்கு விரோதமான எவ்வித வார்த்தைகளினாலும் கிரிகைகளினாலும் உம்மை விட்டுப் பிரியாமலிருப்பதுமன்றி எனக்குக் கீழ்ப்பட்ட மற்றவர்களும் தேவரீருக்கு விரோதமாய் ஏதாவது சொல்லவும் செய்யவும் விடுகிறதில்லையென்றும் பிரதிக்கினை பண்ணுகிறேன். ஆதலால் இன்று முதல் என் மரண பரியந்தம் உமது ஊழியனாக என்னை ஏற்றுக்கொள்ளும். நான் செய்யும் சகல கிரிகைகளிலும் எனக்கு ஒத்தாசை செய்து விசேஷமாய் என் மரண நேரத்தில் என்னைக் கைவிடாமல் காத்து இரட்சித்தருளும். ஆமென் சேசு.

---

## மனவல்லய ஜெபம்.

எனக்குக் காவலாயிருக்கிற சர்வேசுரனுடைய சம்மனசானவரே, தெய்வீகக் கிருபையால் உம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்ட எனக்கு ஞான வெளிச்சங் கொடுத்து என்னைக் காத்து நடத்தி ஆண்டருளும். ஆமென் சேசு.

(100-நாட் பலன்.)



## அர்ச். காவலான சம்மனசின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

சம்மனசுக்களுடைய இராக்கினியாகிய அர்ச். மரியாயே,

அர்ச். மிக்கயேலே,

அர்ச். கபிரியேலே,

அர்ச். இரபயேலே,

எங்களுக்குக் காவலாயிருக்கிற அர்ச். சம்மனசானவரே,

எங்களைக் காக்கிறதிலே மிகவும் பிரமாணிக்கராகிய சம்மனசானவரே,

எங்களை ஆதரிக்க எந்நேரமுங் கவனிக்கிறவராகிய சம்மனசானவரே,

மிகுந்த மகிமைப் பிரதாப வல்லமையுள்ள காவலாகிய சம்மனசானவரே,

தவறாத சத்திய சாட்சியாகிய சம்மனசானவரே,

எங்களுக்குப் பிரியாத துணையாகிய சம்மனசானவரே,

இப்பரதேசத்தில் ஆத்துமத்துக்கு ஆறுதலாகிய சம்மனசானவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மிகுந்த ஞான விவேகத்தோடே நடப்பிக்கிறவராகிய சம்மனசானவரோ,

பரிசுத்த கற்புள்ள நேசராகிய சம்மனசானவரோ,

தலைநிறைந்த ஆயனாகிய சம்மனசானவரோ,

பரிசுத்ததனத்தைக் காக்கிறவராகிய சம்மனசானவரோ,

உத்தம ஆலோசனையை ஏவுகிறவராகிய சம்மனசானவரோ,

சாந்தந் தயவோடே புத்திமதி சொல்லுகிறவராகிய சம்மனசானவரோ,

இருதயத்தைப் பிரகாசிப்பிக்கிறவராகிய சம்மனசானவரோ,

ஏகாந்தத்தில் ஞானக்கதிர் வீசுகிறவராகிய சம்மனசானவரோ,

காணப்படாதவராயிருந்தாலும் வழிகாட்டியாகிய சம்மனசானவரோ,

எந்தக் காரியங்களையும் ஒழுங்கோடே நடத்துகிறவராகிய சம்மனசானவரோ,

பலவீனத்தில் எங்கள் தஞ்சமாகிய சம்மனசானவரோ,

எங்களுக்காகச் சர்வேசுரனிடத்தில் மிகவும் ஏற்கத்தக்க மனுப்பேசுகிறவராகிய சம்மனசானவரோ,



தேவ கிருபைச் சிம்மாசனத்தில் எங்கள் ஜெபங்களைச் செலுத்துகிறவராகிய சம்மனசானவரோ,

பலத்த உதவியாகிய சம்மனசானவரோ,

எங்கள் சத்துருக்களோடே யுத்தஞ் செய்கிறதிலே ஒருபோதுந் தோர்வைப்படாதவராகிய சம்மனசானவரோ,

பசாசுகளுக்குப் பயங்கரமான சாட்டையாகிய சம்மனசானவரோ,

குற்றஞ் செய்கிறவர்களைக் கண்டிக்கிறவராகிய சம்மனசானவரோ,

திடனற்ற சமயத்தில் ஸ்திரப்படுத்துகிறவராகிய சம்மனசானவரோ,

வியாதியில் உதவியாயிருக்கிற சம்மனசானவரோ,

துயரத்தில் ஆறுதலாகிய சம்மனசானவரோ,

மரண அவஸ்தையில் தேற்றரவாகிய சம்மனசானவரோ,

ஞான யுத்தத்தில் தைரியம் வருவிக்கிறவராகிய சம்மனசானவரோ,

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத் தேவ கிருபையால் முடி சூட்டுகிறவராகிய சம்மனசானவரோ,

பரிசுத்த ஆத்துமாக்களை கைக்கொள்ளுகிறவராகிய சம்மனசானவரே, ஏது. செஜஸ்.

யுத்த சபையின் வச்சிரத் தூண்களாகிய காவலான சம்மனசுக்களே,

நவிலாச சபையாயிருக்கிற சகல பரிசுத்த சம்மனசுக்களே,

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

மு.—நடுநடுக்கமான தீர்வைநாளில் நாங்கள் நித்திய சாபத்துக்குள்ளாகாதபடிக்கு,

து.—எங்கள் காவலாகிய பரிசுத்த சம்மனசானவரே, ஞான யுத்தத்தில் எங்களைக் காத்தருளும்.

## பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமீ! மனோவாக்குக்கெட்டாத உமது கிருபையுள்ள பராமரிக்கையால் எங்களைக் காக்கத் தேவரீருடைய பரிசுத்த சம்மனசுக்களை நியமித்தனுப்பச் சித்தமானீரே, உம்மை மன்றாடுகிற நாங்கள் அவர்



கள் ஆதரவில் எப்பொழுதுங் காப்பாற்றப்படவும் நித்தியமாய் அவர்களுடைய பேரின்ப ஐக்கியத்தில் வாழ்ந்திருக்கவும் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் திருமுகத்தைப் பார்த்து அனுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ. ஆமென்சேசு.



## அர்ச். இஞ்ஞாசியார் திருநாளுக்கு முன் நவநாட் ஜெபம்.

சேசு சபையை உண்டாக்கினவருமாய் தேவமாதாவினுடைய பிரிய தாசனுமாயிருக்கிற அர்ச். இஞ்ஞாசியாரைக்குறித்து ஒன்பது மன்றாட்டுக்களைக் கேட்கிறது.

1. அர்ச். இஞ்ஞாசியாரே! தேவரீர் சேசுநாதருடைய மகிமை உலகமெங்கும் விளங்கவும், கோடாகோடி ஜனங்கள் கரையேறவும், இந்த அர்ச். சபையை உண்டாக்கவும் அதிலே மிகுந்த பிரயாசப்பட்டீரே. அப்படியே தேவரீர் தெரிந்துகொண்ட சபையானது உலகமெங்கும் விக்கினமில்லாமல் பரம்பவும், ஆண்டவருடைய ஸ்தோத்திரமானது பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலே பூமியிலெங்கும் செய்யப்படுவதாக உம்மை மன்றாடுகிறோம்.—பர. பிரி. திரி.

2. சேசுநாதருடைய பிரிய சேனாபதியாயிருக்கிற அர்ச். இஞ்ஞாசியாரே! தேவரீர் பசாசினுடைய பலத்தைக்கெடுக்கவும் முழுதுந் தாழ்த்தவும் வல்லமையைக் கொண்டிருக்கிறீரே, அப்படியே இந்த இராச்சியத்திலுள்ள பசாசின் இராஜாங்கம் முழுதும் விழுந்து சேசுநாதருடைய திருநாமம் தடையின்றி விளங்கும்படிக்கு உம்மை மன்றாடுகிறோம்.—பர. பிரி. திரி.

3. ஆத்துமங்களை இரட்சிக்கிறதிலே மிகுந்த கருத்தும் மகா சூட்சிமையும் கொண்டிருக்கிற அர்ச். இஞ்ஞாசியாரே! அப்படியே திருச்சபைக்கு உதவிசெய்கிறவர்களுக்கும், குருமார் உபதேசிகளுக்கும் பெரியவர்களுக்கும் வேண்டிய கருத்தும் மேலான சூட்சிமையும் தந்தருளவேணுமென்று உம்மைப் பிரார்த்திக்கிறோம்.—பர. பிரி. திரி.

4 சேசுநாதருடைய பிரிய புத்திரனாயிருக்கிற அர்ச். இஞ்ஞாசியாரே! தேவரீர் பதிதரை அழிக்கும் சம்மட்டியென்கிற விருதை விசேஷமாய் உம்மிடத்திலே விளங்கச்செய்தீரே. அப்படியே பல பல இராச்சியங்களிலேயும், விசேஷமாய் இந்நாட்டிலுமுள்ள பதிதரும் அவர்கள் படிப்பிக்கிற துர்

ம்தங்களும் முழுதும் விழவேணுமென்று மன்றாட உம்மை மன்றாடுகிறோம்.—பா. பிரி. கிரி.

5. திரும்பாத மனதுடைய பாவிகளின் மனதைத் திருப்புகிறதற்குத் தேவரீருடைய சரீர ஒறுத்தலையும் கடின தபசையுங்கொண்டு திருப்பின அர்ச். இஞ்ஞாசியாரே! அப்படியே சாவான பாவத்தில் நிலைக்கொண்டவர்கள் மனது திரும்பவும், விசுவாசமில்லாமல் கெடுகிறவர்கள் முறண்டு தீர்ந்து உறுதியான விசுவாசத்தைக் கைக்கொள்ளவும் வேணுமென்று சர்வேசுரனிடத்தில் மன்றாட உம்மைப் பிரார்த்திக்கிறோம்.—பா. பிரி. கிரி.

6. அர்ச். இஞ்ஞாசியாரே! தேவரீர் சமுத்திரத்திலேயும், பூமியிலேயும் வாதிக்கப்படுகிறவர்களுடைய சகலமான இக்கட்டுகளையும் விலக்கி இரட்சித்துக்கொண்டு வந்தீரே. அப்படியே இந்த இராச்சியத்திலுள்ள பஞ்சம், படை, பெருவாரிக்காய்ச்சல் துன்பதுரிதங்களிலே அவதிப்படுகிறவர்களுடைய பொல்லாப்பு நீங்கவேணுமென்று மன்றாட உம்மையே மன்றாடுகிறோம்.—பா. பிரி. கிரி.

7. அர்ச். இஞ்ஞாசியாரே! தேவரீர் தேவ பத்தியினுடைய மிகுதியினாலே சர்வேசுரனுடைய அளவறுக்கப்படாத நன்மைத்தனங்களைத் தெளிவோடே தியானித்து அதின் வழியாய் அறிந்ததினாலே மனுஷரெல்லாரும் கரையேறவேணுமென்கிற ஆசை பரிபூரணமாய்க் கொண்டிருந்தீரே! அப்படியே இந்த இராச்சியத்திலுள்ள அக்கியானிகள் சத்திய வேதத்தை அறியவும், கிறீஸ்துவர்கள் எல்லோரும் விசுவாசத்திலே உறுதியுள்ளவர்களாகவும், தேவ பத்தி அதிகமாய் வருத்திக்கவும் மன்றாட உம்மை மன்றாடுகிறோம்.—பா. பிரி. கிரி.



8. அர்ச். இஞ்ஞாசியாரே! தேவரீருக்கு உண்டான சிரவணத்தினாலே குறையற்ற பிரகாரமாகக் கீழ்ப்படிந்த சுபாவத்தைக் காட்டி நடந்ததுமல்லாமல் மற்றவர்கள் எல்லோரும் இந்தப் புண்ணியத்திலே வர்த்திக்கவும் மகா பிரயாசப்பட்டீரே! அப்படியே நாங்களெல்லோரும் இப்படிக்கொத்த கீழ்ப்படிகிற புண்ணியத்தை என்றாலும் கைக்கொண்டிருக்கவேணுமென்று மன்றாட உம்மையே மன்றாடுகிறோம்.—பா. பிரி. கிரி.

9. அர்ச். இஞ்ஞாசியாரே! தேவரீர் இந்த உலகத்திலே ஜீவித்திருந்தபோது கர்த்தரு

க்கு ஸ்தோத்திரமுண்டாகவும், ஆத்துமாக்கள் ஈடேறவும்பட்ட பிரயாசம் பலிக்கும் பொருட்டாக இப்போது மோட்ச இராச்சியத்திலே ஆண்டவரிடமாக மன்றாடி, நாங்கள் எல்லோரும் விசுவாசம் பத்தி நம்பிக்கையிலே வர்த்தித்துக்கொண்டு வரவும், மெய்யான பச்சாத்தாபத்தோடே பாவமில்லாமல் நல்ல மரணமடையவும் மன்றாட உம்மையே பிரார்த்திக்கிறோம்.—பர. பிரி. திரி.

அர்ச். இஞ்ஞாசியாரே! பாவிகளாயிருக்கிற நாங்கள் பண்ணின இந்த ஒன்பது பரமண்டல மந்திரமும் ஒன்பது பிரியதத்த மந்திரமும் உம்முடைய திருப் பாதத்திலே பாதகாணிக்கையாக வைக்கிறோம். தேவரீர் உம்முடைய புண்ணியங்களோடுகூட சேசுநாதருடைய திருப் பாதத்திலே பாதகாணிக்கையாக வைத்து, இந்த ஒன்பது நாளும் நாங்கள் கேட்கிற பல பல மன்றாட்டுகளையும் வேறே எங்களுக்கு வேண்டிய விசேஷ மன்றாட்டுக்களையும் சர்வேசுரன் உம்முடைய முகாந்தரமாக எங்களுக்குக் கட்டளையிட வேணுமென்று மன்றாட உம்மையே மன்றாடுகிறோம். ஆமென்சேசு.

---



## அர்ச். இஞ்ஞாசியாரை நோக்கி ஜெபம்.

தேவ ஸ்தோத்திரத்தை இப்பூவுலகில் பரம்பச் செய்வதற்கும், எண்ணிக்கையில்லாத ஆத்துமங்களைப் பரகதியில் சேர்ப்பதற்கும் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட அர்ச். இஞ்ஞாசியாரே! அடியேன் எவ்வளவு அபாத்திரவானாயினும், தேவரீர் பேரிலுள்ள நம்பிக்கையாலும் உமது செல்வாக்கு வல்லபத்தாலும் ஏவப்பட்டு உமது சரணமாய் ஓடி வந்தேன். தேவரீர் என் பரிபாலன காவலனாயிருந்து என் ஆத்துமத்தைப் பாதுகாத்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். ஏனெனில் என் ஜீவனை உமக்கே கையளிக்கிறேன். என் மரண காலத்தையும் உமக்கே ஒப்படைத்துவிடுகிறேன். சோதனை வேளையில் எனக்கு ஆதரவாயிரும். தேவ சன்னிதியில் என் மத்தியஸ்தராயிருந்து மனுப்பேசி என் குறைகளைப் போக்கியருளும். விசேஷமாய் என் கிரியைகளையெல்லாம் அர்ச்சித்துப் பேறுபலனுள்ளதாக்கி நித்திய மோட்ச சம்பாவனையை நிச்சயப்படுத்தும் சக்தியுடையதாகிய உத்தம தேவ சிநேகத்தை எனக்காகக் கேட்டுத் தந்தருளும். ஆமென்சேசு.

---

## விசுவேசியமகல அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நோக்கி ஜெபம்.

மாட்சிமை தங்கிய பிதாப் பிதாவாகிய அர்ச். இஞ்ஞாசியாரே! பரலோகத்துக்கு ஆக்கினையாகச் சர்வேசுரன் மனிதருக்கு விதிக்கிற தண்டனைகளில் ஒன்றாகிய மரண அபாய வியாதியினின்றும், விசேஷமாய் ஆத்துமத்துக்குக் கொடிய பொல்லாப்பான பாவத்தினின்றும் எங்களை மீட்டிரட்சிக்கத் தேவ சந்நிதியில் மனுப்பேசக் கிருபை புரிந்தருளும். நாங்கள் உமது புண்ணிய மாதிரிகையைப் பின்சென்று சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காகவும், பிறனுடைய ஆத்தும இரட்சணியத்துக்காகவும், வருத்தி உழைக்க அதிரமான ஆசைப்பற்றுதலை எங்களுக்குத் தந்தருளும். அடியோர் சேசுக்கிறீஸ்துநாதரின் திரு இருதயமான அன்பின் பேரில் இரங்கி, சகலத்துக்கும் கடவுளை யபாரமான சுகிர்த சிநேகம் வரத்தையும், மோக்ஷானந்தத்தையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளத் தேவரீர் தயவோ பிரார்த்திக்கவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென் சேசு. (200-நாட் பலன்.)

---



## அர்ச். இஞ்ஞாசியார் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். இஞ்ஞாசியாரே,

பிதாவாகிய சர்வேசுரனுடைய ஞான புத்திரனே,

அவதரித்த சுதனாகிய சர்வேசுரனைப் பின்சென்றவரே,

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுடைய வரத்தை அனுசரித்தவரே,

தேவமாதாவுக்கு எப்போதும் உகந்த தாசனானவரே,

அப்போஸ்தல ஸ்தானத்துக்கு மிகவும் பிரியமானவரே,

சேசுசபையை உண்டாக்கினவரே,

அர்ச்சியசிஷ்டவர்களுக்குள்ளே உத்தம ஞானியே,

அதிசேஷ்ட முனிவர்களுக்குள்ளே உத்தம அர்ச்சியசிஷ்டவரே,

தேவ தோத்திரத்துக்காக மிகவும் பிரயாசப்பட்டவரே,

ஆத்துமாக்களுடைய ஈடேற்றத்துக்காக உத்தம ஆசையுள்ளவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரத்தின் வர்சிப்பினால் அர்ச்சியசிஷ்டவராக ஏற்பட்டவரே,

அநேகமுறை திவ்விய தரிசனங்களைக் கண்டவரே,

ஞான யுத்தத்தின் அரசானவரே,

சேசுநாதருடைய திருச்சபைக்கு அழியாத சலாக்கியமே,

சேசுநாதருடைய திருச்சபையை விளங்கப்பண்ணுகிறவரே,

தேவ ஆராதனையை வர்த்திக்கப் பண்ணுகிறவரே,

ஞான ஒடுக்கமுறையை உண்டுபண்ணினவரே,

ஆத்துமாக்களை இரட்சிக்கிறதிலே உத்தம சற்குணமுள்ளவரே,

குணுகுணங்களை நன்றாய்க் கண்டுபிடிப்பவரே,

பரலோக நன்மைகளைக் கொண்டிருக்கிற பொக்கிஷமே,

திவ்வியநற்கருணைக்குப் பூச்சியமான பாத்திரமே,

சுவிசேஷத்தின் புத்திமதிகளைக் குறையற அநுசரித்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



குறையற்ற தருமத்தின் உத்தம மாதிரிகையே,

மெய்யான பத்தியின் சுரூபியானவரே,

தேவ ஊழியத்துக்கு அத்தியந்த பத்தி பற்றுதலுள்ளவரே,

பூலோகத்தை நிந்தித்தவரே,

குருத்துவத்தின் பூச்சியமான அலங்காரமே,

மெய்யான செபத்தின் அடையாளமே,

மாசில்லா நடக்கையின் மாதிரிகையே,

மாசில்லாத சத்தியத்தின் பிரமாணிக்கமே,

வாலர்களை தரும வழியில் நடப்பிக்கப் படிப்பித்தவரே,

மிகவும் உத்தம இடத்தின் பதனமே,

உபவாசத்தின் சூத்திரமே,

உலக வெகுமானத்தை ஜெயித்தவரே,

மனதினுள் பட்சத்தை இடைவிடாமல் அர்ச்சிக்கப் பார்த்துக்கொண்டிருந்தவரே,

சகல இச்சைகளை நிக்கிரகம் பண்ணின

குற்றங்களைப் பொறுக்கிறவரே,

தப்புள்ள கிரிகைகளையும், சிந்தனைகளையும் கண்டிப்பாய் நீக்கி விலக்கினவரே,

தடின தபசின் கண்ணாடியே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சன்னியாசத்தைச் சிநேகித்தவரே,
தாழ்ச்சியினுடைய சிகரமே,
பொறுமையின் நிலையே,
மன தரித்திரத்தில் அத்தியந்த சந்தோஷங்கொண்டவரே,
மௌனத்தை விதிமாக ஸ்தாபித்தவரே,
சம்மனசுகளுக்குரிய கற்பை மகா தாற்பரியமாய் அநுசரித்தவரே,
உம்மை நம்பினவர்களை உத்தம விதமாய்ப் பாதுகாக்கிறவரே,
பாவங்களுடைய வேரைப் பிடுங்குகிறவரே,
பதிதத்தனங்களை ஜாக்கிரதையாய் மறுத்து அகற்றினவரே,
பசாசுகளை பயங்கரப்படுத்தி ஓட்டுகிறவரே,
ஏழைகளுக்குச் சலுகையே,
தரித்திரருடைய காரிய கர்த்தாவே,
பசித்தவர்களைப் போஷித்தவரே,
சேசுக்கிறீஸ்துவை மிகவும் நேசித்தவரே,
சர்வேசுரனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியாதவர்களைச் சகிக்காதவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



திரளான பாவிகளை நன்னெறியில் திருப்பினவரே,
பாவிகளுக்கு அடைக்கலமே,
ஆபத்திலுள்ள ஸ்திரீகளுக்கு அநேக மடங்களை ஸ்தாபித்தவரே,
தபசிகளுக்குத் தலையானவரே,
ஒத்திராத விரோதிகளுக்குச் சமாதானமே,
யாவர்க்கும் விவேக வித்தியாபாரகரே,
விசுவாசிகளை ஆதரிக்கிறவரே,
அக்கியானிகளைத் திருப்புகிறவரே,
சம்மனசுக்களுடைய பத்தாரானவரே,
தீர்க்கதரிசிகளுடைய ஞானத்தைக் கொண்டிருக்கிறவரே,
அப்போஸ்தலருடைய பத்தி பற்றுதலின் சுவாலையானவரே,
திரளான வேதசாட்சிகளின் பிதாப்பிதாவானவரே,
வேதசாஸ்திரிகளுக்கு உத்தம வழி ஏற்படுத்தினவரே,
உத்தம ஸ்திரியர்களுடைய படிப்பினையே,
எண்ணிறந்த ஸ்திரியர்களுடைய தாதாவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உத்தமமாய் ஸ்துதிக்கிறவர்களுடைய பிரதிப் பாலையே,

கன்னியாஸ்திரிகளுடைய துணையே,

சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேரின்ப பாக்கியத்துக்குப் பங்காளியாக பாத்திரமானவரே,

உலகத்தின் பாவங்களை ...மற்றதும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி! தேவரீருடைய திருநாமத்தின் தோத்திரம் உத்தம மேலாயாய் பரம்பத்தக்கதாக முத்திப்பேறுபெற்ற அர்ச். இஞ்ஞாசியாரைக்கொண்டு யுத்தம் பண்ணுகிற உமது திருச்சபையை நவமான படையினாலே திடப்படுத்தினீரே, அவருடைய மன்றாட்டின் ஒத்தாசையினாலேயும் சுகிர்த மாதிரிகையினாலேயும் நாங்கள் பரலோகத்திலே பேறுபெற்று நித்திய ஆனந்த பாக்கியத்தை அனுபவிக்கத்தக்கதாக எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருளும். சதாகாலஞ் சீவியருமாய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே. ஆமென்சேசு.



**அர்ச். சவேரியார் மூலமாய்க் கேட்கிற பத்து மன்றாட்டு.**

1. சத்திய வேதத்திற்கும் திருச்சபைக்கும் ஓர் அழியாத வச்சிரத்தூணாகிய அர்ச்.

சவேரியாரே! இச்சபையாரெல்லாருஞ் சத்திய வேதத்தில் நிலைக்கொண்டு அதின்படி சர்வேசுரனுக்கு ஏற்க புண்ணிய நெறியை அநுசரிக்கத்தக்கதாகவும், பரம கர்த்தர் சத்திய வேதத்தாரெல்லாருக்குஞ் சகல நன்மைகளையுங் கட்டளையிட்டருளத்தக்கதாகவும், தேவ கிருபைச் சிம்மாசனத்திலே மன்றாட வேணுமென்று உம்மை பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

2. சிந்து தேசத்தாராயிருக்கிற எங்களுக்குக் காவலுமாய் அன்புள்ள தகப்பனுமாயிருக்கிற அர்ச். சவேரியாரே! இந்த இராச்சியத்திலுண்டாகிய திருச்சபை எல்லாம் எப்பொழுதுஞ் சத்தியநெறி தவறாதிருக்கவும் சுற்றிலுமொய்த்திருக்கிற அஞ்ஞானமென்கிற இருளிற் பிரவேசியாமற் புண்ணிய பிரகாசத்தால் விளங்கவும், தேவகிருபாகடாட்சத்தால் நாளுக்கு நாள் வர்த்தித்துக்கொண்டு வரவும் வேணுமென்று சர்வேசுரனை மன்றாடும்படிக்கு உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

3. சிந்து தேசத்திற்கு உத்தம குருவான அர்ச். சவேரியாரே! நீர் அர்ச். இஞ்ஞாசி



யாருக்குப் பிரிய சீஷனாகி சத்திய வேதத்தால் ஏவப்பட்ட புண்ணிய சாங்கோபாங்கத்தை அநுசரித்துச் சகல புண்ணியங்களையுங் கடின தபசையுஞ் செய்துகொண்டு சகலருக்குஞ் சுகிர்தமாதிரியாய் விளங்கினீரே, அப்படியே உம்மால் நேசிக்கப்பட்ட சிந்து தேசத்தின் குருக்கள் எல்லாரும், உம்மைப் போலே சகல புண்ணியங்களினாலேயும் அலங்கரிக்கப்பட்டு தங்கள் சுகிர்த போதனையினாலும், உத்தம மாதிரிகையினாலுந் தரும வழியைக் காண்பித்துக்கொண்டு வரவும், சர்வேசுரன் அவர்களை ஆத்தும சரீர பொல்லாப்பின்றி கிருபையோடு காப்பாற்றவும், அவர்களுக்குவேண்டிய வரப்பிரசாதங்களையும், ஆரோக்கியத்தையுந் தந்தருளவும், இந்த இராச்சியத்திற்கு மென்மேலும் வேண்டிய சத்திய சற்குருக்கள் உண்டாகி, ஈடேற்ற நெறியில் எங்களை நடத்தவும் வேணுமென்று நீரே எங்களுக்காக பரம கர்த்தரை வேண்டிக் கொள்ளும்பொருட்டு உம்மை பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

4. சிந்து தேசத்திலுள்ள திருச்சபைக்கு உதவியுந் தஞ்சமுமாயிருக்கிற அர்ச். சவேரி

யாரோ! திருச்சபைக்கு உதவி உபகாரஞ் செய்கிறவர்களைச் சர்வேசுரன் ஆசீர்வதித்து அவர்களுக்குச் சகல நன்மைகளையுங் கட்டளையிட்டருளத்தக்கதாகவும், தேவ ஊழியத்திற்கு உதவியாக நியமிக்கப்பட்ட உபதேசிகள் முதலியவர்கள் தங்கள் கடமைகளைத் தக்கபடி செலுத்தி கர்த்தரிடத்தில் அத்தியந்த கிருபை பெறத்தக்கதாகவும், நீரே அவரை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

5. அஞ்ஞானத்தை முழுதுந் துவேஷித்து அதின் இருளை அநேகந் திசைகளில் நீக்கினவராகிய அர்ச். சவேரியாரோ! இத்தேச முதலிய இராச்சியங்களிற் பசாசின் இராச்சியபாரம் முறிந்து அதின் ஆராதனை ஒழியவுஞ் சத்திய வேதம் எங்கும் பரம்பவும் திருச்சபைக்கு விரோதஞ் செய்கிறவர்களுக்குச் சர்வேசுரன் நல்ல மனது கொடுத்தருளவும் வேணுமென்று அவரை மன்றாடும்படிக்கு உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.-பர. பிரி. திரி.

6. அநேக இலட்சம்பேருக்கு ஞானஸ்நானங்கொடுத்த அர்ச். சவேரியாரோ! அஞ்ஞானிகள் சத்திய வேதத்தை அறியத்தக்க



தாகவும், ஞானதீட்சை பெற்றுத் திருச்சபைக்குள்ளாகத்தக்கதாகவும் பரம கர்த்தரை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

7. கிறீஸ்துவர்களைச் சத்திய வேதத்தின்படியே நடப்பித்து ஈடேற்றவும் பாவிகளைப் புண்ணிய நெறியிலே திருப்பவும் வெகு பிரயாசப்பட்டவராகிய அர்ச். சவேரியாரோ! சத்திய வேதத்தை அறிந்தவர்கள் எல்லாரும் அதின் சுகிர்த நெறியை அநுசரித்து அஞ்ஞான முறைமை எல்லாம் விலக்கத்தக்கதாகவும், உலகம், பசாசு, சரீரம் என்ற மூன்று சத்துருக்களையும் ஜெயித்து ஈடேறத்தக்கதாகவும், நன்னெறி தவறின பதிதர் பாவிகள் முதலியவர்கள் மனந்திரும்பத்தக்கதாகவும் தேவகிருபையிடத்தில் மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

8 ஜனங்களுடைய இக்கட்டுகளை விலக்கி நீக்கவும், ஆபத்தினின்று அநேகரை இரட்சிக்கவும், ஆச்சரியமான அற்புதங்களைச் செய்தவராகிய அர்ச். சவேரியாரோ! சர்வேசுரன் கிருபைசெய்து, பஞ்சம், படை, நோய்

திர்மானவருமாய் அதிசயமான அற்புதங்களைச் செய்கிறவருமாகிய அர்ச். சவேரியாரே! எல்லாருடைய இரட்சண்ணியத்திற்காக உமக்குள்ள ஆசை பெருக்கத்தையுஞ் சிந்து தேசத்திலுள்ள ஆத்துமாக்களை ஈடேற்றுவதற்குப் பத்து வருஷமாக நீர் பட்ட அத்தியந்த பிரயாசை வருத்தங்களையும் பார்த்து, அஞ்ஞானிகள் சர்வேசுரனை அறியவும், பதிதர் பிரிவினைக்காரர் முதலிய சகலரும் நன்னெறியில் மறுபடி சேரவும், பாவிகள் மனந்திரும்பவும், நல்லவர்கள் தர்மவழியிலே சாங்கோபாங்கமாய் நடக்கவும், உத்தரிக்கிறஸ்தலத்திலே இருக்கிற ஆத்துமாக்களுடைய வேதனை குறைந்தொழியவும், சத்திய இராஜாக்களுக்குள் சமாதானம் உண்டாகவும், சத்திய வேதம் உலகமெங்கும் பரம்பவும் வேண்டிய அனுக்கிரகத்தைப் பரம கர்த்தர் செய்தருளும்படிக்கு அவர் சந்நிதியில் வேண்டிக்கொள்ளும். ஆமென் சேசு.

---

### அஞ்ஞானிகள் மனந்திரும்புவதற்காக அர்ச். சவேரியார் உண்டாக்கின ஜெபம்.

அநாதியுமாய்ச் சர்வத்தையும் படைத்தவருமாயிருக்கிற சர்வேசுரா! அஞ்ஞானி



களுடைய ஆத்துமங்கள் உம்மால் சிருஷ்டிக்கவும் தேவரீருடைய இலக்ஷணைச்சாயலாக ஏற்படுத்தவும் பட்டிருக்கிறதை நினைத்தருளும் சுவாமி. இதோ! தேவரீருடைய தோத்திரத்திற்கு விரோதமாய் நரகம் நிறைய அதன் பயங்கரமான பாதாளத்திலே அவர்கள் இரையாய் விழுந்து சேதமாய்ப் போகிறார்கள். ஆ! சுவாமி, உமக்கு ஏக குமாரனாகிய சேசுநாதர் அவர்களை இரட்சிக்கத்தக்கதாகத் தம்முடைய விலைமதியாத திரு இரத்தத்தைச் சிந்தி எண்ணப்படாத கஸ்தி நோவுகளை அநுபவித்து மகா கடினமான மரணத்தை அடைந்ததை நினைத்தருளும். ஆண்டவரே! சகலருடைய திவ்விய இரட்சகராகிய உம்முடைய திருக்குமாரனை அவர்கள் தங்கள் அக்கிரமங்களிலே மூர்க்கராய் நிந்திக்கவொட்டாமல் சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்றாட்டுக்களினாலும், உம்முடைய திருக்குமாரனின் பிரிய பத்தினியாகிய பரிசுத்த திருச்சபையின் வேண்டுதலினாலுந், தேவரீர் சித்தமிரங்கி அவர்களுடைய பாவ அக்கிரமங்களையுங் கீழ்ப்படியாமையையும் பாராமல் அவர்கள்மேல் கிருபை வைத்து, அவர்கள் இப்போதாகிலும் முழுதும் மனந்திரும்பி தேவ

ரீரால் அனுப்பப்பட்டவரும் எங்கள் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துநாதரை வணங்கச் செய்தருளும். எங்களை மீட்டிரட்சித்த அந்த திவ்விய கர்த்தருக்குந் தேவரீருக்கும் முடிவில்லாத காலமும் தோத்திரமுண்டாகக் கடவது. ஆமென்சேசு.

முத.—சேசுக்கிறீஸ்துநாதருடைய வாக்குத்தத்தங்களை நாங்கள் பேறுபெற்று அநுபவிக்கத்தக்கதாக.

து.—அர்ச். சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி! முத். அர்ச். சவேரியாருடைய ஞானப்போதகத்தினாலேயும் அவர் பண்ணின அற்புதங்களினாலேயும் இந்த தேசத்திலுள்ள ஜனங்களைத் தேவரீருடைய திருச்சபையிலே அழைத்துட்படுத்த சித்தமானீரே. அவருடைய பூச்சியமான புண்ணிய பலன்களைத் துதித்து வணங்குகிற நாங்கள் அவருடைய சுகிர்த மாதிரிகைகளை அநுசரிக்க அநுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் சேசுநாதருடைய திரு முகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு. (ஒவ்வொரு விசைக்கும் 300-நாட் பலன்.)



## நமது தேசத்தார் மனந்திரும்ப வேண்டிக் கொள்ளும் ஜெபம்.

நித்திய பிதாவே! சகல மனிதரையும் படைத்த கர்த்தாவே! எங்களைச் சுற்றி அஞ்ஞான இருளிலிருக்கும் எங்கள் தேசத்தாரைக் கிருபையோடு பார்த்தருளும். உம்முடைய திவ்விய குமாரன் சிலுவை மரத்தில் இவர்களுக்காகவும் பாடுபட்டு திரு இரத்தத்தைச் சிந்தியிருந்தும், இவர்கள் இந்த இரத்தத்தின் பலனை அடையாதவர்கள்போல் இருப்பதெப்படி? இத்தனைகோடி ஜனங்கள் பேரில் இரக்கமாய் உமது கண்ணைத் திருப்பி அவர்களுக்கும் இரட்சண்ணிய பாதையைத் திறந்தருளும்படி மன்றாடுகிறோம். உமது திருக்குமாரன் போதித்த சத்தியங்களை இவர்களும் அங்கீகரிக்கும்படி இவர்கள் ஆத்துமத்தை ஞான வெளிச்சத்தால் நிரப்பியருளும்படி கெஞ்சிக் கேட்கிறோம். இந்தத் தேசத்தாரெல்லோரும் தேவரீருக்குமட்டும் ஆராதனை செலுத்தி ஒரே மெய்ப்பனுக்குக் கீழ்ப்பட்டிருப்பதைப் பார்ப்பதெப்போ? கருணை நிறைந்த பிதாவே! இந்தத் தேசத்தாரின் பாவ தோஷத்தைப் பாராமல் பரிசுத்த திருச்சபையின் ஜெபங்களை நோக்கி

உமது கிருபையின் இரக்கத்தை அவர்கள் பேரில் பொழிந்தருள்வீராக. அவர்களையும் எங்களைப்போல் திருச்சபையின் பிள்ளைகளாக்கும்படி தேவரீரைக் கெஞ்சி மன்றாடுகிறோம், ஆண்டவரே, ஆமென்சேசு.

நித்திய பிதாவே! எங்களைச் சுற்றியிருக்கும் அஞ்ஞானிகளின்பேரில் இரக்கமாயிரும் சுவாமீ, இரக்கமாயிரும்.

எங்கள் இரட்சகராகிய சேசுவே! இந்த தேசத்தின் அஞ்ஞானிகளுக்கு உமது இரத்தத்தின் பலனை அளித்தருளும் சுவாமீ அளித்தருளும்.

திவ்விய இஸ்பிரீத்து சாந்துவே! அஞ்ஞான இருளிலிருக்கும் இந்த தேசத்தாருக்கு ஞான வெளிச்சத்தை அளித்தருளும் சுவாமீ அளித்தருளும்.

ஒவ்வொரு தடவைக்கும் 50-நாட் பலன்.

சேசுவின் தேவ இருதயமே! பாவிகளை மனந்திரும்பும், வியாதிஸ்தரைக் காப்பாற்றும், உத்தரிக்கிற ஸ்தலத்து பரிசுத்த ஆத்துமங்களை இரட்சியும். (300-நாள் பலன்) 10-ம் பத்திநாதர்.

---



## தவறாது அநுகூலந்தரும் அர்ச். சவேரியாருடைய நவநாள் ஜெபம்.

மிகவும் சங்கிக்கப்படத்தக்கவரும், தேவசிநேக மிகுதியால் நிறைந்தவருமான அர்ச். சவேரியாரே! உம்மோடுகூட சாஷ்டாங்கமாக திவ்விய சந்நிதானத்தை ஆராதிக்கிறேன். சர்வேசுரன் உம்மை இவ்வுலகத்தில் அநேக வரங்களாலும் மரணத்துக்குப் பிறகு நித்திய கிரீடத்தாலும் அலங்கரித்தாரென்கிற எண்ணமானது, எனக்கு மகா சந்தோஷம் வருவிக்கிறது. அதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, உமது வல்லபமுள்ள மன்றாட்டால் எனக்கு மகா அவசியமான வரமாகிய நல்ல ஜீவியமும், நல்ல மரணமும், அத்தோடுகூட சர்வேசுரன் சித்தத்துக்கும் மகிமைக்கும் ஒத்திருக்குமாகில், (அவரவர்களுக்கு வேண்டியதைக் கேட்கிறது) எனக்கு அடைந்தருளவேணுமென்று மன்றாடுகிறேன். (3-பா. 8-பிரி. 10-திரி.)

பிரார்த்திக்கக்கடவோம்...மற்றதும்.

(382-ம் பக்கம் காண்க.)

---

## அர்ச். சவேரியார் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே,

அர்ச். இஞ்ஞாசியாரே,

அர்ச். இஞ்ஞாசியாருக்கு சமயோக்கியமும் பிரியமுமுள்ள ஞான புத்திரனாகிய அர்ச். சவேரியாரே,

சிந்துதேசத்துக்கு அப்போஸ்தலரே,

அர்ச். பாப்பானவருடைய விசேஷ ஸ்தானாதிபதியே,

நித்திய சமாதானத்துக்குரிய சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவரே,

சர்வ நன்மையுள்ள சுவிசேஷத்தைப் போதித்தவரே,

அஞ்ஞான ஜனங்களுக்கும் இராஜாக்களுக்கும் சேசுநாதருடைய திருநாமமாகிய சுகந்தத்தைக் கொண்டுபோகத் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமே,

தேவ இஷ்டப்பிரசாதம் நிறைந்த பாத்திரமே,

சிந்துதேச சபையின் மேலான மகிமையே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



விசுவாசத்தைக் காப்பவரே,

அஞ்ஞானத்தை மிகவும் வெறுத்து நீக்குகிறவரே,

சுவிசேஷ சத்தியத்தின் உத்தம பிரசங்கியே,

பசாசினுடைய விக்கிரகங்களை அழித்தவரே,

தேவ தோத்திர வணக்கம் பரம்பச் செய்வதற்கு எத்தனமாக நித்திய பிதாவினாலே தெரிந்துகொள்ளப்பட்டவரே,

சேசுநாதரைக் கண்டுபாவித்துப் பிரமாணிக்கமாய்ப் பின்சென்றவரே,

இஸ்பிரீத்துசாந்துவின் தொனியுள்ள எக்காளமே,

சர்வேசுரனுடைய திருச்சபைக்கு வச்சிரத் தூணே,

அஞ்ஞானிகள் நன்னெறியில் திரும்புவதற்கு எத்தனமாகிய பிரகாசமே,

விசுவாசிகளின் போதகரான சற்குருவே,

சாங்கோபாங்கப் புண்ணிய நெறியில் தவறாத வழிகாட்டியே,

அப்போஸ்தலருக்குரிய ஞானத்துக்கும் அர்ச்சியஷ்டதனத்துக்கும் உத்தம மாதிரிகையே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

குருடருக்குப் பார்வை கொடுப்பவரே,
சப்பாணிகளின் ஊனந் தீர்ப்பவரே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பஞ்சம், படை, நோயில் ஆதரவே,
பசாசுகளை ஜெயித்து ஓட்டுபவரே,
சிலுவையால் சத்துருக்கள் படையைத் துரத்தினவரே,
மரித்தவர்களை உயிர்ப்பித்தவரே,
சமுத்திரத்தையும் புசலையுங் கீழ்ப்படுத்தி அடக்கும் வல்லபத்தைக்கொண்டவரே,
கடலும் மற்ற பூதியங்களும் உமது கட்டளைக்கடங்கிப் பணிவதால் பேர்பெற்றவரே,
அதிசயமான அற்புதங்களைச் செய்பவரே,
நல்ல மரணம் அடைவதற்கு உதவியாயிருப்பவரே,
தரித்திரருக்கு அடைக்கலமே,
கஸ்தி துன்பப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே,
சிந்துதேசத்தின் பிரகாசமே,
அட்சயமான ஆலயமே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



சேசுசபையின் சிறப்புள்ள அலங்காரமே,
மன விருப்பத்துடன் மிகவும் தரித்திரராய் இருந்தவரே,
மாறாத கற்புடைத்தானவரே,
குறையற்ற பொறுமை சிரவணமுள்ளவரே,
அத்தியந்த தாழ்ச்சியால் விளங்கினவரே,
ஆச்சரியமான தயையுள்ள பிரசன்னரானவரே,
சேசுநாதருடைய சிலுவைக்கும் பிரயாச வருத்தங்களுக்கும் மிகவும் ஆசைப்பட்டவரே,
பிறர் சிநேக சாங்கோபாங்கத்தை அடைந்தவரே,
புறத்தியார் ஈடேற்றத்துக்காக எந்நேரமுங் கவன விசாரமாயிருந்தவரே,
தேவதோத்திரத்துக்கும் மனிதர் ஆத்தும நன்மைக்கும் அத்தியந்த பற்றுதலையுஞ் சுறுசுறுப்பையுங் கொண்டவரே,
தேவ சிநேகத்தின் பொக்கிஷமே,
உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள ஆத்துமாக்களில் அநேகருடைய அவதியைத் தீர்க்க மிகவும் உதவியானவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சுகிர்த குணத்தினாலும் பரிசுத்த நடக்கையினாலுஞ் சம்மனசுபோல் தோன்றின வரே,

தேவ சிநேகத்தாலும் சர்வேசுரனுடைய திருச்சனத்தை நடத்தின பாராமரிக்கையாலும் பிதாப்பிதாவென்னத் தக்கவரே,

பெற்ற வரத்தாலும் ஞானத்தாலுந் தீர்க்கதரிசியே,

பேராலும் பேறுகளாலும் அப்போஸ்தலரே,

சகல பாஷைகளிலும் அஞ்ஞான ஜனங்களுக்குச் சத்தியந் தெளிவித்த வேத பாரகரே,

சேசுக்கிறீஸ்துவைப்பற்றி பிராணனைத் தாரத்துணிந்த தாற்பரியத்தால் வேதசாட்சியே,

சுகிர்த தவவொழுக்க நடக்கையால் ஸ்துதியரே,

ஆத்துமத்திலும் சரீரத்திலும் பரிசுத்த விரத்தரே,

தேவ கிருபாகடாக்ஷத்தைக்கொண்டு சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய புண்ணியங்களினால் அலங்கரிக்கப்பட்டவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,................மற்றதும்.

முதல்.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக,

துணை.—அர்ச். சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்

(382-ம் பக்கம் காண்க.)





## அர்ச். ஞானப்பிரகாசியார் மூலமாகக் கேட்கிற ஆறு மன்றாட்டு.

☞ அர்ச். ஞானப்பிரகாசியார் சந்நியாசிகள் மடத்தில் ஆறு வருஷம் இருந்ததைக்குறித்து ஆறு மன்றாட்டைக் கேட்டு 6 பர. பிரி. திரித்துவத்தின் தோத்திரமுஞ் சொல்லி வேண்டிக்கொள்ளுகிறது.

1. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் இந்தப் பூலோகத்திலே முழுதும் பிறக்கு முன்னேதானே தேவ இஷ்டப்பிரசாதத்தை அடைந்து அதை மரணபரியந்தம் இழந்து போகாமல் அதிலே நிலைக்கொண்டவராய் நடந்தீரோ; அப்படியே நாங்கள் தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கைக்கொண்டு, அதை மரணபரியந்தம் இழந்துபோகாமல் இருக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

2. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் புத்தியறிந்த ஏழு வயதிலே சர்வேசுரனை முழுமனதோடே நேசித்துப் புண்ணிய வழியிலே சாங்கோபாங்கமாக நடக்கத் துவக்கி, மென்மேலும் அதிகமதிகமாக மரணபரியந்தம் புண்ணியங்களிலே வர்த்தித்துக்கொண்டு வந்தீரோ; நாங்கள் இது வரைக்கும் சர்வேசுரனை சிநேகியாமல் அநேக பாவங்களைக் கட்டிக்கொண்டிருந்தாலும், இனியாகிலும் சர்வேசுரனை முழுமனதோடே நேசித்து, அவருக்கு ஏற்க நடந்து, புண்ணியங்களிலே அதிகரிக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

3. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் ஒன்பது வயதிலே தேவமாதாவிக்குத் தோத்திரமாக உமது கற்பை ஒப்புக்கொடுத்து, அதற்கு அற்பமாகிலும் மாசணுகாதபடிக்கு ஆச்சரியமான தபசுசெய்து புஞ்

சேந்திரியங்களைக் காக்கிறதிலே அதிசயமான எச்சரிக்கையோடே நடந்துவந்தீரே; நாங்கள் இதுவரைக்கும் கற்புக்குப் பழுதாக நடந்திருந்தாலும், இனிமேல் சரீரத்தை ஒறுத்து, ஆன தபசுகளினால் அதைக் கீழ்ப்படுத்தி, எச்சரிக்கையோடே பஞ்சேந்திரியங்களைக் காத்து, மரணபரியந்தம் பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருக்கிற தேவமாதாவுக்குத் தோத்திரமாகப் பழுதற்ற கற்போடே நடக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

4. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் இந்த உலக மகிமைத் துரைத்தன முதலான நன்மையெல்லாம் வெறுத்து, சர்வேசுரனுக்கு அதிக பிரியப்படுகிறதற்குச் சந்நியாசிகள் மடத்திலே சேர்ந்து, அங்கே பிரியாத மனதாய்ச் சம்மனசுபோல சர்வேசுரன் பேரில் எப்போதும் முழுக் கருத்தாயிருந்து ஆண்டவருக்குத் தோத்திரம் செய்துகொண்டு வந்தீரே; நாங்கள் இந்தப் பிரபஞ்ச நன்மைகளின் ஆசையினாலே எங்கள் ஆத்துமத்துக்குச் சேதம் வருத்திக்கொள்ளாமல், உத்தம கருத்தோடே ஆண்டவரைச்



சேவிக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

5. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் இந்தப் பூலோகத்திலே சஞ்சரித்த கொஞ்ச நாளுக்குள்ளே அநேக புண்ணியங்களைச் செய்து வெகு ஞானத்திரவியங்களைச் சம்பாதித்து மரணகாலத்திலே பலன் கைக்கொள்ளுகிற நேரம் வந்ததென்று விசாரித்து, உம்மாலே சிநேகிக்கப்பட்ட சர்வேசுரனைக் காணவேணுமென்று ஆசைப்பட்டு, இதோ மோட்ச பேரின்பத்தை அநுபவிக்கப் போகிறேனென்று சந்தோஷமாய்க் காலம் பண்ணினீரே; நாங்கள் புண்ணிய நெறியிலே சுறுசுறுப்போடே நடந்து, மரணசமயத்திலே பயந்து தத்தளியாமல் அமரிக்கையோடே நல்ல மரணம் அடையத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

6. அர்ச். ஞானப்பிரகாசியாரே! அர்ச். மரியமதலேனம்மாளும் மகாத்துமாவாகிற அம்ரிசென்கிறவளும் தரிசனத்திலே கண்ட

படியே தேவரீர் மோட்சத்திலே மனோவாக்குக்கெட்டாத பாக்கியத்தை அநுபவித்து, இந்த பரதேசத்திலுள்ள மனுமக்களுக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்கிறதற்கு சர்வேசுரனாலே வரம் பெற்றிருக்கிறீரோ; பாவிகளாயிருக்கிற எங்கள் பேரிலே உம்முடைய தயாபமுள்ள கண்களைத் திருப்பி ஆத்தும சரீரத்துக்குவேண்டிய அவசரங்களிலே உதவிசெய்து காப்பாற்றி, மோட்ச இராச்சியத்திலே உம்மோடேகூட முடிவில்லாத பாக்கியத்தை அநுபவிக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

மூ.—கிறீஸ்து கொடுக்கிறோமென்று திருவுளம்பற்றின நன்மைகளுக்கு,

து.—நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக, அர்ச். ஞானப்பிரகாசியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

தேவவரப்பிரசாதங்களைத் தந்தருளுகிற சர்வேசுரா! அர்ச். ஞானப்பிரகாசியாரிடத்திலே அதிசயமான பரிசுத்த நடக்கையும் ஆச்சரியத்துக்குரிய தபசும் விளங்கப்பண்ணி



னீரே. அவருடைய மாசில்லாத நடக்கையைப் பார்த்து நடக்காத நாங்கள் அவருடைய புண்ணியங்களினாலேயும் வேண்டுதலினாலேயும் அவருடைய தபசைப் பின்செல்லத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்து எங்களுக்கு கிருபை செய்தருளும் சுவாமி. ஆமென் சேசு.

---

## அர்ச் ஞானப்பிரகாசியாரை நோக்கி கற்பென்கிற புண்ணியத்தைக் கேட்கும் ஜெபம்.

இவ்வுலகில் சம்மனசைப்போலே பரிசுத்தராய் நடந்த அர்ச். ஞானப்பிரகாசியாரே! உமது அபாத்திரனான ஊழியனாகிய அடியேன் விசேஷ பயபத்தியோடே என்னுடைய ஆத்தும சரீர கற்பை உமது அடைக்கலத்திலே வைக்கிறேன். அதை உமது பரிசுத்த கற்போடு ஒன்றாகக் கூட்டிச் செம்மறிக்குட்டியான சேசுக்கிறீஸ்துநாதருக்கும் கன்னிகைகளுக்கு இராக்கினியான பரிசுத்த தேவமாதாவுக்கும் ஏற்ற பாத காணிக்கையாக ஒப்புக்கொடுத்தருளும். அடியேன்

சர்வாரன பாவத்திலே விழாதபடிக்கும், யாதொரு துர்க்கந்த மோக பாவத்தைக் கட்டிக்கொள்ளாதபடிக்கும் என்னைக் காத்து, நான் சோதனையிலேயும் பாவச் சமயத்திலேயும் இருக்கிறபோது, தேவரீர் என் இருதயத்திலே நின்று அசுசியான நினைவுகளையும் ஆசைகளையும் அகற்றி, நித்திய மோட்ச பாக்கியத்தையும் நரக ஆக்கினைகளையும் எனக்காகச் சிலுவையில் அறையுண்டு மரித்த சேசுக்கிறீஸ்துநாதரையும் நினைப்பூட்டி, தேவபயத்தை என் இருதயத்தில் உறுதியாய்ப் பதியச்செய்து, நான் இவ்வுலகில் உம்மைக் கண்டுபாவித்தபின், உம்மோடேகூடப் பரகதியில் தேவ தரிசனை அடையும் பொருட்டு, தேவ சிநேகாக்கினியை என் இருதயத்திலே எரியப்பண்ணியருளும். ஆமென்சேசு.

பர. பிரி. திரி.

[செய்த பாவங்களுக்கு உத்தம மனஸ்தாபப்பட்டு பத்தியோடு இதைச் ஜெபிக்கும் ஒவ்வொரு விசைக்கும் அது காட்பலனை 7-ம் பத்திராதமொன்றும் அர்ச். பாப்பானவர் அளித்தருளினார்.]



## அர்ச். ஞானப்பிரகாசியார் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,

மாசில்லாத அர்ச். ஞானப்பிரகாசியாரே,

தேவமாதாவின் புதுமையினாலே பிறந்தவரே,

பூலோக ஆவியை உட்கொள்ளுமுன்னே சேசுக்கிறீஸ்துநாதருடைய ஞானப்புத்திரனானவரே,

முந்தின வார்த்தையாக சேசுமரியே என்று உச்சரித்தவரே,

புத்தியறிந்த க்ஷணமே உம்மை முழுவதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தவரே,

எற்கனவே தேவப்பிரசாதமடைந்தவரே,

தேவப்பிரசாதத்திலே நிலைக்கொண்ட அர்ச்சியசிஷ்டவரே,

நீர் அடைந்த தேவப்பிரசாதத்தை மிகவும் அர்ச்சிக்கப்பண்ணினவரே,

மேலாங்கிஷத்துக்குக் கீழாங்கிஷத்தை உத்தம மேரையாகக் கீழ்ப்படியப்பண்ணினவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஒ6:417 N24



ஒன்பது வயதிலேதானே உமது கற்பை தேவமாதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தவரோ,

உத்தம மனஸ்தாபத்தினாலே சோபமடைந்தவரோ,

போசனத்திலே ஆச்சரியமான ஒறுத்தல் செய்தவரோ,

கடின தபசினால் விளங்கினவரோ,

சரீரத்தை முழுதும் பகைத்தவரோ,

ஒருக்காலும் மோக விசாரப்படாத பரிசுத்தரோ,

கற்புக்கு விரோதமான சந்தோஷமணுகாதவரோ,

உள்ளிந்திரியங்களைத் தருமவொழுங்கிலே நிலைப்பித்தவரோ,

பஞ்சேந்திரியங்களை அடக்கி மகா எச்சரிக்கையோடே காத்தவரோ,

சரீரமுள்ள சம்மனசென்கிற பெயர் பெற்றவரோ,

சரீரமில்லாதவரென்று சொல்லப்பட்டவரோ,

தேவமாதாவினால் சேசுசபைக்கு அழைக்கப்பட்டவரோ,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



உமக்கு சொந்தமான தனாத்தனத்தை முனிந்தவரோ,

உலக மகிமை பாக்கியத்தை முழுதும் பிறக்கணித்தவரோ,

அரண்மனையிலுள்ளவர்களுக்கு தருமவொழுக்கம் படிப்பித்தவரோ,

வாலிபரை அறநெறியிற் செலுத்தி வழி காண்பித்தவரோ,

சுற்றத்தார் பேரிலே பற்றுதலற்றவரோ,

சிந்தின இரத்தத்தைக்கொண்டு தகப்பனுடைய மனதை இளகப்பண்ணி சந்நியாசியாக உத்தாரம் பெற்றவரோ,

அர்ச். இஞ்ஞாசியருக்குப் பிரியமுள்ள குமாரனானவரோ,

மடத்திலே ஆறு வருஷகாலம் பறக்கிற பட்சிக்கொத்த விரைவோடே ஞானக் காரியங்களில் வர்த்தித்தவரோ,

சேசுசபையின் கட்டளைகளைச் சாங்கோபாங்கமாகச் செலுத்தினவரோ,

மகா சிரவணமுள்ள அர்ச். ஞானப்பிரகாசியாரோ,

முழு தரித்திரத்தை அநுசரித்தவரோ,

கற்பனையினுடைய காந்தியே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

120868

தியானத்திலே நெடுநேரஞ் செல வழித்தவரே,

ஜெபத்திலே அற்ப பராக்கில்லாதவரே,

எப்போதும் எவ்விடத்திலும் பரவசமா யிருந்தவரே,

தேவ காரியங்களை எளிதாய் யோசித் தறிந்தவரே,

ஞான நினைவை விடுகிறதிலே கஷ்டப் பட்டவரே,

தீராத வர்ம மனஸ்தாபங்களைத் தீர்த்த வரே,

சமாதானத்தை வருத்துவிக்கிற அர்ச். ஞானப்பிரகாசியாரே,

தாழ்ச்சியிலே உயர்ந்தவரே,

மிகுந்த சாந்தகுணமுள்ளவரே,

ஆச்சரியமான பொறுமையுடைத்தான வரே,

புறத்தியார் பேரில் மகா சிநேகம் வைத்தவரே,

தேவசிநேக மிகுதியினாலே பத்தி சுவாலகருக்கொப்பானவரே,

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருக்காயங் களின்பேரில் வெகு பத்தி வைத்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



தேவநற்கருணைக்கு உத்தம ஆராதனை செய்தவரே,

தேவமாதாவினுடைய வியாகுலங்களின் பேரில் மிகுந்த இரக்கமுள்ளவரே,

சந்நியாசிகளுக்கு உன்னத படிப்பினை யானவரே,

அடுத்திருக்கிற மரணத்தை அறிந்து அகமகிழ்ந்தவரே,

பிறர் சிநேகத்தினாலே பிராணனைச் செலவழித்தவரே,

சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இருத யத் திருநாளிலே பாக்கியமான மரணத் தையடைந்த அர்ச்சியசிஷ்டவரே,

மாசில்லாததனத்தினாலே பரகதிக்குச் சென்றவரே,

ஆச்சரியமான தபசினாலே மிகுந்த மோக்ஷானந்தமடைந்தவரே,

தேவசிநேக மிகுதியினால் உயர்ந்த பத்தி ராசனத்திலிருக்கிறவரே,

பெலனும் உதாரமும் இரக்கமுமுள்ள அர்ச். ஞானப்பிரகாசியாரே,

எண்ணிக்கையில்லாத பாவிகளுடைய மனங்களைத் திருப்பினவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

வியாதிக்காரரைக் குணமாக்குகிற ஞான சஞ்சீவியே,

கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே,

இக்கட்டுகளை விலக்குகிறவரே,

மோகச் சேற்றினாலே அசுத்தப்பட்டவர்களைக் கற்பினாற் சுத்தமாக்குகிறவரே,

கற்பைக் காக்கிற அர்ச். ஞானப்பிரகாசியாரே,

இக்காலத்திலே எண்ணிக்கையில்லாத அதிசயங்களைச் செய்கிறவரே,

உம்மைப் பிரார்த்திக்கிற சகலருடைய மன்றாட்டுகளை அடையச் செய்கிற அர்ச். ஞானப்பிரகாசியாரே,

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

மு.த.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக,

து.—அர்ச். ஞானப்பிரகாசியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வாதி கர்த்தராகிய சர்வேசுரா! தேவரீர் அர்ச். ஞானப்பிரகாசியாரை சிறுபத்திலே



தானே தெரிந்துகொண்டு அவர் ஒரு அற்ப குற்றமுதலாயில்லாதிருக்கவும், எல்லாரும் ஆச்சரியப்படத்தக்க கடின தபசு பண்ணவும் பரிபூரண ஆசீர்வாதங் கொடுத்தருளினீரே. அவருடைய பேறு பலன்களையும் மன்றாட்டுகளையும் பார்த்து, நாங்கள் இதுவரைக்கும் பாவிகளாயிருந்தாலும், இனிமேலாகிலும் அவரைப்போலே பாவமில்லாதிருக்கவும், அவருடைய உத்தம தபசை நாங்கள் அநுசரித்து நடக்கவும், எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி. ஆமென் சேசு.

---

## அர்ச். ஸ்தனிஸ்லாசை நோக்கி ஜெபம்.

எனது பாதுகாவலரும் பரிபாலரும் பரிசுத்தமானவருமாகிய அர்ச். ஸ்தனிஸ்லாசே! உமக்குத் தந்தருளப்பட்டிருந்த கற்பென்னும் விசேஷ வரத்துக்காகவும், எப்போதும் நீர் காத்து அநுசரித்துவந்த இருதய பரிசுத்ததனத்துக்காகவும் சர்வேசுரனுக்கு

நான் நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறேன். நான் தேவ சமுகத்துக்கு உகந்தவனாகவும் தேவதாயாருக்குப் பிரியமுள்ளவனாகவும் இருக்கும்படிக்கு ஆத்தும சரீர பரிசுத்ததனமே ஏதுவாகையால், அப்புண்ணியத்தை எள்ளளவும் பழுதின்றி நான் எப்போதும் எச்சரிக்கையோடே காப்பாற்றிக் கொண்டுவர எனக்கு நல்ல ஏவுதல் வரப்பிரசாதத்தைத் தந்தருளும். ஆமென் சேசு.

---

## அர்ச். பேர்க்மான்ஸ் அருளப்பரை நோக்கி ஜெபம்.

எனது பரிசுத்த காவலனாகிய அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரே! இஷ்டா! உமது திருப் பாதத்தண்டையில் சாஷ்டாங்கமாக விழுந்துகிடக்கும் அடியேனைக் கிருபாகடாட்சமாய் நோக்கியருளும். இன்று உம்மை என் பாதுகாவலராகவும் அடைக்கலமாகவும் தெரிந்துகொண்டு, என்றென்றைக்கும் என்னை முழுவதும் உமது பராமரிப்பில் வைத்துவிடுகிறேன். உமது அடைக்கலத்தில் என்னைத் தயவாய்க் கையேற்றுக்கொண்டு, பேயின் சகல தந்திரங்களிலும், விசேஷமாய் அனுபவமற்ற என் இளம் பிராயத்தின்மேல் வந்து



விழும் சோதனை ஆபத்துக்களிலும் என்னைக் காத்தருளும். எனது கற்பை முழுதும் உமது திருக் கரங்களில் ஒப்படைத்துவிடுகிறேன். இந்தப் பரிசுத்ததனத்துக்கு விரோதமாய் நான் ஒருபோதும் நடக்கவொட்டாதேயும். என் ஆத்துமத்தைக் கெடுக்கத் தேடுகிற கெட்ட தோழருடைய சகவாசத்தை முழுதும் வெறுத்துத் தள்ளவும், உம்மைப்போலே எப்போதும் பரிசுத்த கற்புள்ளவனாய்ச் சீவிக்கவும், போதுமான மனத்திடனை எனக்காகக் கேட்டுத்தந்தருளும். என் படிப்புகளில் எனக்கு ஒத்தாசைசெய்து, என் ஜீவிய அந்தஸ்தைத் தெரிந்துகொள்ள வழிகாண்பித்தருளும். என் ஜீவியகாலத்திலும் விசேஷமாய் என் மரணத்தறுவாயிலும் எனக்கு நேரிடும் இக்கட்டு இடைஞ்சல்களில் என்னைக் கைதூக்கி நடத்தியருளும். பரிசுத்த காவலனே! உம்மைப்போலே தேவமாதாவின்பேரில் உருக்க நேச பத்தியுள்ளவனாகி அந்த ஆண்டவளுக்கு உகந்த பிள்ளையாய் நடந்து பரகதியில் அவளுடைய புகழ்ச்சியை நான் பாடி ஸ்துதிக்கப் பேறுபெற்றவனாகும்படிக்கு எனக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென் சேசு.

## அர்ச். ஆரோக்கியநாதர் ஐந்து மன்றாட்டு.

*முந்தமுந்த உத்தம மனஸ்தாப மந்திரம் சொல்லுகிறது.*

1. மிகவும் மேன்மையுங் கனமும் பொருந்திய வங்கிஷத்திற் பிறந்து, மகா பரிசுத்தத்தனத்தை அநுசரித்துக்கொண்டுவந்த அர்ச். ஆரோக்கியநாதரே வாழ்க.—பர. பிரி. திரி.

2. மிகவும் அலங்காரமுள்ள அர்ச். திருச்சிலுவையின் ஆசீர்வாதத்தால் கொள்ளை நோய் கொண்ட அநேக ஜனங்களை இரட்சித்தாப்போலே எங்களை ஆசீர்வதித்து உமது கரத்தால் மறைத்துக்கொண்டு வருகிற அர்ச். ஆரோக்கியநாதரே வாழ்க.—பர. பிரி. திரி.

3. பொய்யான பிரபஞ்ச வாழ்வைச் சொற்பமாக எண்ணி அதை வெறுத்துத் தள்ளி மெய்யென்னும் ஞானத்தை உட்கொண்டு உலகத்தை விட்டுத் தபோதனராயிருந்த அர்ச். ஆரோக்கியநாதரே வாழ்க.—பர. பிரி. திரி.

4. நோய் கொண்டவர்களை அண்டித் தொட்டவுடனே அவர்கள் நல்ல ஆரோக்கியத்தை அடையத் தயைபெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே வாழ்க.—ப. பி. தி.



5. தேவ கிருபையோடு சம்மனசினால் அறிவிக்கப்பட்டுச் சகலவித கொள்ளைநோய்களையெல்லாம் அகற்றிவிட வரம்பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே வாழ்க.—பர. பிரி. திரி.

முதல்.—சேசுக்கிறிஸ்துவின் திருவாக்குத்தத்தங்களை நாங்கள் வாங்கிப் பேறுபெற்று அநுபவிக்கத்தக்கதாக,

துணை.—அர்ச். ஆரோக்கியநாதரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமீ, எந்தெந்தக் கொள்ளை நோய்களால் வருத்தப்பட்டுச் சாவுக்கு ஆயத்தப்படாதபடிக்குத் தேவரீருடைய சம்மனசானவனைக்கொண்டு அர்ச். ஆரோக்கியநாதருக்கு அறிவித்து அவருக்கு வேண்டிய வார்த்தைப்பாடு கொடுத்தீரே. ஆகையால் அவருடைய திரு நாமத்தை ஸ்துதித்துக் கொண்டாடுகிற நாங்கள் அவருடைய பேறுபெற்ற பலன்களினாலே எங்களுடைய ஆத்துமத்திற்குஞ் சரீரத்திற்கும் பொல்லாப்பாயிருக்கிற இந்த நோய்களிலே நின்று எங்களை இரட்சிக்கத் தேவரீரை மன்றாடுகிறோம்.

இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி. ஆமென்சேசு.

---

## அர்ச். ஆரோக்கியநாதரைப்பார்த்து வேண்டிக்கொள்ளும் ஜெபம்.

அர்ச். ஆரோக்கியநாதரே! வியாதியஸ்தரைச் சொஸ்தப்படுத்தத்தக்கதாக கொள்ளைநோய் பரம்பியிருந்த ஊர்களுக்குத் தேவரீர் தேவசிநேக உற்சாகத்தால் வருந்திப் பிரயாணஞ் செய்தீர். உமக்கே அந்த வியாதி நேரிட்டவிடத்தில் உமது நம்பிக்கைத் தோழனாயிருந்த துஷ்ட மிருகத்தால் தேற்றரவு அடைந்தீர். இத்துன்பகாலத்தில் தேவரீர் எங்கள்பேரில் இரங்கி எங்களுக்காக மன்றாடி உதவி புரிந்தருளும். இப்போது எங்கள்மேல் வந்திருக்கும் இந்தப் பயங்கரமான தேவ கோபாக்கினையை முழுதும் அகற்ற, இரக்கமுள்ள திவ்விய இரட்சகரிடத்தில் எங்களுக்காக மனுப்பேசியருளும். நிற்பாக்கியமான கொள்ளைநோய் பரம்பின இருண்ட ஸ்தலங்களில் தேவரீர் ஐந்து வருஷ காலம்



ஜீவித்த சுகிர்தத்தாலல்லோ, கொள்ளைநோய்களைச் சொஸ்தப்படுத்த அற்புத வரம் அடைந்தீர். “அர்ச். ஆரோக்கியநாதருடைய சலுகையை இரந்து மன்றாடுகிற நோயாளிகள் யாவரும் அந்தக் கொடிய வியாதியினின்று சொஸ்தமடைவார்கள்,” என்ற வாசக வாக்குறுதியடங்கிய சீட்டை ஒரு சம்மனசானவர் கொண்டுவந்து உமது திருப் பிரேதத்தின் மேல் வைத்ததைத் தேவரீர் தயவாய் நினைவுகூர்ந்தருளும்.

ஓ! இரக்கம் மிகுந்த அர்ச்சியசிஷ்டவரே! முழுமன நம்பிக்கையோடே நாங்கள் உமது சரணமாக ஓடிவந்தோம். எங்களைக் கைவிடாதேயும், காவலரே! ஆமென்சேசு.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக,

து.—அர்ச். ஆரோக்கியநாதரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமீ, அர்ச். ஆரோக்கியநாதருடைய உதவியை இரந்து மன்றாடுகிற யாவரும் கொள்ளைநோய் முதலிய கொடிய வியா

திகளால் எவ்வள்வேனும் பயப்படவேண்டியதில்லையென்று ஒரு சிம்மனசுவினால் அந்த அர்ச்சியசிஷ்டவருக்குத்தானே தெரியப்படுத்தத் திருவுளமானீரே. அந்த அர்ச்சியசிஷ்டவருடைய சுகிர்த மன்றாட்டினாலே ஆத்தும சரீர சகல ஆபத்துக்களினின்று நாங்கள் இரட்சிக்கப்படும்பொருட்டுக் கிருபைபுரிந்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென் சேசு.

---

## அர்ச். ஆரோக்கியநாதர் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

சம்மனசுகளுக்கு இராக்கினியான அர்ச். மரியாயே,

அர்ச். ஆரோக்கியநாதரே,

சேசுநாதருக்குந் தேவமாதாவுக்குஞ் செய்யப்பட்ட பத்தியுள்ள வேண்டுதலால் உற்பவித்த அர்ச். ஆரோக்கியநாதரே,

திரவிய சம்பன்னரான தாய்தகப்பனிடத்திலும் உயர்ந்த வங்கிஷத்திலும் பிறந்த அர்ச். ஆரோக்கியநாதரே,

எங். க. வேண். கொ.



தாயார் கெற்பத்தில்தானே உமது சரீரத்தில் அர்ச். சிலுவை பதியப்பட்டுப் பிறக்க வரம்பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

சிறுபத்தில்தானே புண்ணியத்தின் பேரிலே மிகுந்த பிரியத்தைக் காண்பித்துப் பன்னிரண்டாம் பிராயத்திலே உமது சரீரத்தைத் தவத்தினாலும் உபவாசத்தினாலும் ஒறுத்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

அரிய தவத்தினாலும் ஜெபத்தினாலும் ஆசாபாசத்தைக் கீழ்ப்படுத்தின அர்ச். ஆரோக்கியநாதரே,

உமது தாய்தகப்பன் இறந்தவுடனே, சகல ஆஸ்திகளையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துத் தகப்பன் காணியாட்சிகளை உமது நன்மாமன்வசம் ஒப்புவித்து உலகத்தை வெறுத்துத் துறந்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

ஜென்ம தேசத்தையுஞ் சிநேகிதரையும் பந்துக்களையும்விட்டு அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாம் சபையில் உட்பட்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உரோமாபுரியில் அர்ச். ஸ்தலங்களைச் சந்திக்கத் தரித்திர வேஷங்கொண்டு இத்தலி தேசத்திற்குப் போனவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

அந்தத் தேசத்திலே மிகவும் பரம்பியிருந்த கொள்ளைநோயில் நின்று சிலுவையின் அடையாளத்தால் திரளான ஜனங்களைக் குணமாக்கின அர்ச். ஆரோக்கியநாதரே,

இத்தலி தேசத்தைச்சேர்ந்த அநேக இராச்சியங்களிலே தொள்ளைநோயால் சாவுக்கு ஆயத்தப்பட்டவர்களுக்கு ஆரோக்கியந் தந்த அர்ச். ஆரோக்கிய, நாதரே,

சர்வேசுரன் உம்மைக்கொண்டு செய்து வந்த நவமான அதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்பட்ட ஜனங்களால் மிகவும் ஸ்துதிக்கப்பட்ட அர்ச். ஆரோக்கியநாதரே,

பின்னும் உமக்கு வந்த கொள்ளைநோய் முதலிய துன்ப துரிதங்களையெல்லாம் பொறுமையோடு அநுபவித்து மகிமையான மோட்சமுடியை உறுதிப்படுத்திக் கொண்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



ஆண்டவரால் வரப்பட்ட அகோரமான காய்ச்சல் உமக்கு வந்தபோது உமது பெருந்தொடையானது அம்பால் உருவப்பட்டாற்போலே கடும் இரணப்படப் பேறுபெற்ற அர்ச். ஆரோக்கியநாதரே,

அந்த நோக்காடுகளை மிகுந்த ஆச்சரியமான பொறுமையோடுஞ் சந்தோஷத்தோடும் அநுபவித்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

ஜென்ம தேசத்திற்கு வரும்போது வழியிலே மறுபடியும் வியாதியினால் அடிபட்டுச் சர்வேசுரனுடைய ஆதரவொழிய மனிதருடைய சகாயமின்றி காட்டிலே படுத்திருந்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

அந்தக் காட்டிலே வியாதியாயிருக்கும்போது சர்வேசுரனுடைய தயவால் நாயைக்கொண்டு உமது ஜீவனத்திற்கு அப்பங்கொண்டுவர வரம்பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உமது ஜென்மப் பட்டணத்தில் நுழைந்தவுடனே வேவுகாரனைப்போல பிடித்துச் சிறையில் அடைக்கப்பட்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அந்தப் பட்டணத்திற்கு உம்முடைய மாமன் அதிபதியாயிருந்தாலும் உம்மை இன்னாரென்று காண்பிக்க மனதில்லாதவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உம்முடைய சுய பிரஜைகளால் சேசுநாதரைப்பற்றி சகல நிற்பந்தங்களை அநுபவித்து மரணமடைய ஆசைகொண்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உமது சாவு கிட்டினதென்றறிந்து மிகுந்த பத்தியோடே தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று சாவுக்கு ஆயத்தஞ் செய்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

நீர் ஐந்து வருஷகாலமாய்ச் சிறையில் அடைபட்ட பிறகு கொள்ளைநோயில் இறக்க அஞ்சாத தைரியத்துடனே ஏக சர்வேசுரனைத் தியானித்தபிறகு அந்த வியாதியால் மரணமடைந்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

கொள்ளைநோயில் உம்மை மன்றாடினவர்கள் தின்மையின்றிக் காப்பாற்றப்படுவார்களென்று ஏக சர்வேசுரன் தமது சம்மனசைக்கொண்டு அறிவிக்க வரம் பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,



கொள்ளைநோய் கொண்டவர்கள் உம்மை மன்றாடினால் ஆரோக்கியமடைவார்களென்று உமது சரீரத்தின் பக்கத்தில் ஓர் சிறு பலகையில் எழுதப்பட வரம் பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உம்மை வேவுகாரனுமாய் குற்றவாளியுமாய் எண்ணின உமது மாமன் உம்மை இன்னாரென்று அறிந்தமாத்திரத்தில், அவனால் மிகுந்த கஸ்தி வியாகுலத்துடனே சந்திக்கப்பட்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உமது திருச்சரீரம் வெகு ஆடம்பரத்துடனேயும் வணக்கத்துடனேயும் அடுத்த கோவிலில் அவனால் நல்லடக்கஞ் செய்யப்பட்ட அர்ச். ஆரோக்கியநாதரே,

கொன்ஸ்தான்ஸ் என்கிற பட்டணத்தில் சாதாரண திருச்சங்கமாகக் கூடின மேற்றிராணிமார்கள் உமது அர்ச்சியசிஷ்டதனத்தை வெகு ஆடம்பரத்துடனே கொண்டாடினபோது அங்கேயிருந்த கொள்ளைநோய்களையெல்லாம் போக்கடித்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

வெனீஸ் என்ற பட்டணத்திலே விசேஷமாய் உமது சரீரம் வெகு வணக்கம்பெற்

திருக்கவும், அவரைச் சந்திக்கிறவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்யவும் வரம் பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்கள்பேரில் ஆண்டவர் கொண்டிருக்கும் தேவ கோபாக்கினைகளாகிய பஞ்சம், படை, நோய், கொள்ளை வியாதி, பெருவாரி இவைமுதலானதுகளில் நின்று எங்களை இரட்சிக்க எங்களுக்காக மன்றாடுகிறவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உலகத்தின் பாவங்களை ...மற்றதும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபமுள்ள சர்வேசுரசுவாமீ! கொள்ளைநோய், பஞ்சம், படை, பெருவாரிக்காய்ச்சல் இவை முதலான ஆபத்தில் துன்பப்படுகிற யாவரும் அர்ச். ஆரோக்கியநாதரை மன்றாடி வேண்டிக்கொண்டால் அவர்களுடைய பிணி தீர்ந்து குணப்படுவார்களென்று அவருடைய சரீரத்தின் பக்கத்தில் பதிந்ததுமன்றி, உம்முடைய சம்மனசானவரைக்கொண்டும் வார்த்தைப்பாடு கொடுத்தீரே. அவருடைய திருநாளைக் கொண்டாடுகிறவர்களும் அவருடைய வேண்டுதலின் உதவியைக் கேட்கிறவர்களுமாகிய



நாங்கள் அவருடைய உத்தம மன்றாட்டினாலே எங்களுடைய ஆத்தும சரீரத்தின் ஆபத்தான கொள்ளைநோயில் நின்று எங்களை மீட்டு இரட்சிக்கும்படிக்குத் தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி. ஆமென் சேசு.





## அர்ச். செபஸ்தியாருடைய ஏழு மன்றாட்டு.

1. பிதாவின் சித்தத்தினாலே உயர்ந்த வங்கிஷபதிகளான தாய் தகப்பனிடத்திலே பிறந்து எண்ணைப்படாத புண்ணிய நன்மைகளைச் செய்து வேதத்துக்காகத் துன்பப்பட்ட கிறீஸ்துவர்களுக்காக படையிற் சேவித்தவரான அர்ச். செபஸ்தியாரே, சத்



திய திருச்சபையாரெல்லாரையும், சகல பொல்லாப்புக்களிலேயும் நின்று, சர்வேசுரன் இரட்சித்தருளவேணுமென்று பரமகர்த்தர் சன்னிதியில், நீர் மன்றாடவேணுமென்று உம்மைப் பார்த்துப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

2. ஆச்சரியத்துக்குரிய ஞானத்தோடுந் தைரியத்தோடும் அநேக அஞ்ஞான இராஜாக்களுக்கும், பிரபுக்களுக்குஞ் சத்தியத்தைப் பிரசங்கித்து, புத்திமதி சொன்னவரான அர்ச். செபஸ்தியாரே, இத்தேச முதலிய இராச்சியங்களில் பசாசின் ஆராதனையொழிந்து எல்லாருஞ் சத்தியவேதமறிந்து ஞானதீட்சை பெற்று திருச்சபைக்குள்ளாகத்தக்கதாக, நீரே சர்வேசுரனை மன்றாடும்படிக்கு உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

3. அர்ச். பாப்பானவருக்கு மிகவும் இஷ்டமும் ஆறுதலும் அகமகிழ்ச்சியும், உரோமாபுரி முதலிய இராச்சியங்களில், விஷநோய் முதலானதுகளை நீக்கினவரான அர்ச். செபஸ்தியாரே, இத்தேசங்களில், கிறீஸ்துவர்களுக்குள்ளே பஞ்சம், படை,

கொள்ளைநோய், முதலான வியாதியில்லாமல் காப்பாற்றி இரட்சித்தருளவேணுமென்று, நீரே எங்களுக்காகப் பரம கர்த்தரை வேண்டிக்கொள்ளும்பொருட்டு உம்மைப் பார்த்து பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பா. பிரி. திரி.

4. சர்வேசுரனுக்குப் பிரியமாகவும், வேதத்துக்காக துன்பப்படுகிற விசுவாசிகளுக்கு உதவியாகவும், வியாதிக்காரருக்கு தேவ கிருபையால் ஆரோக்கியங்கொடுத்த அர்ச். செபஸ்தியாரே, கிறீஸ்தவர்களுக்கு விஷபேதி, வாந்தி, வைசூரி வியாதியில்லாமல் பரம கர்த்தர் தர்க்காத்து இரட்சித்தருளவேணுமென்று தேவகிருபை சிம்மாசனத்தில் மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பா. பிரி. திரி.

5. பூலோகமெங்குஞ் சுகிர்த நாமமுடைத்தானவருமாய், சத்திய திருச்சபைக்கு தஞ்சமுமாயிருந்த அர்ச். செபஸ்தியாரே, திருச்சபைக்கு விரோதஞ் செய்கிறவர்களுக்கு சர்வேசுரன் நல்ல மனது கொடுத்தருளத்தக்கதாகவும் இந்த இராச்சியத்துக்கு வேண்டிய சத்திய சற்குருக்க



ளுண்டாகி சுட்டற்ற நெறியில் எங்களை நடப்பிக்கத்தக்கதாகவும் சர்வேசுரனை மன்றாடும்படிக்கு உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பா. பிரி. திரி.

6. உலக மகிமை பெருமை ஆஸ்தி செல்வமெல்லாம் வெறுத்து சேசுநாதரைப்பற்றிப் பிராணனைத் தர, அத்தியந்த விசுவாசத்துடனே மார்க்கு, மர்செல்லினானுக்கு புத்தி சொல்லும்போது, ஏழு சம்மனசுக்களுடன் சேசுநாதர் வந்து உம்மை முத்திசெய்து நம் மோடிகூட இருப்பாரென்று சொல்லக் கேட்டு சந்தோஷத்தையடைந்த அர்ச். செபஸ்தியாரே, நாங்களெல்லோரும் பாவமில்லாமல் புண்ணிய வழியிலே சாங்கோபாங்கமாய் நடந்து பேரின்ப மோக்ஷ இராச்சியத்தில் சேர்ந்து கர்த்தரிடத்தில் அத்தியந்த கிருபை பெறத்தக்கதாக நீரே அவரை மன்றாடும்படிக்கு உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—பா. பிரி. திரி.

7. உரோமாபுரி தியோக்கிளேசியனென்ற இராயனால் அநேகம் அம்புகளால் எய்யவுஞ், சாட்டை, கசை, பெருந்தடிகளால் அடித்துக் கொல்லவும்பட்டு மோக்ஷ

இராச்சியத்தில் சர்வேசுரனால் அத்தியந்த சோதி மகிமையுள்ள வேதசாட்சி முடிசூட்டப்பட்டு, உமது திருச் சரீரத்தை அப்போஸ்தலரான அர்ச். இராயப்பர் சின்னப்பர் கல்லறைக்கருகே அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிற அர்ச். செபஸ்தியாரே, திருச்சபையாரெல்லாரும் சர்வேசுரனுடைய சித்தத்துக்கேற்க நடக்கத்தக்கதாகவும், சகல வியாதிகளிலும் எங்களை விலக்கி இரட்சிக்கத்தக்கதாகவும், உமது வேண்டுதலின் பலன் எங்களுக்கு எப்போதும் கிடைக்கத்தக்கதாகவும், நீரே சர்வேசுரனை மன்றாடும்படிக்கு உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—பர. பிரி. திரி.

முத.—சேசுக்கிறீஸ்துவின் திருவாக்குத்தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக,

துணை.—அர்ச். செபஸ்தியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

கிருபை தயாபம் நிறைந்த சர்வேசுர சுவாமி, உமது அதி உச்சிதமான மகிமை பெற்ற அர்ச். செபஸ்தியார் உமக்காகப்பட்ட



பிரயாசங்களை தேவரீர் பார்த்து, அவர் சிந்தின உதிரம் எங்கள் ஆத்தும சரீர நோய்களுக்குச் சரியான ஔஷதமாகத் திருவுளமானீரே, அவருடைய பேறுபலன்களைப் பார்த்து எங்கள் ஆத்தும வியாதியையும் சரீரத்தில் உண்டாகிற சகலவித வருத்தங்களிலும் வைசூரி, விஷபேதி முதலிய தொற்று வியாதிகளிலும் நின்று நிவாரணமாக்கியருள வேணுமென்று இந்த எழு மன்றாட்டுகளையும் குறித்து உம்மை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும் சுவாமி. ஆமென் சேசு.—பா.

---

## அர்ச். செபஸ்தியாரை நோக்கி ஜெபம்.

அஞ்ஞானிகளால் உபாதிக்கப்பட்ட கிறீஸ்துவர்களுக்கு ஆறுதல் செய்யவும், வேத சாட்சி முடிபெறவும் போர்ச் சேவகரான அர்ச். செபஸ்தியாரே! என்பேரில் இரக்கமாயிரும். ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், அவன் குணப்பட விரும்பிய சர்வேசுரன் பாவிகள் மனந்திரும்பவும், தர்மாத்து

மாக்கள் பரிசுத்தப்படவும், வைசூரி, பேதி பெருவாரிக்காய்ச்சல் இவை முதலிய வியாதிகளை அனுப்பினாலும் சிலவிசை முன் பாடுபட்டுப் பேரடைந்த அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதலாலே உபத்திரவப்படுகிறவர்களுடைய துன்ப நாளில் அவர்களுக்கு ஆறுதலைக் கட்டளையிடுகிறாரென்று நான் அறிந்திருக்கிறபடியால், இந்த வியாதியில் உமது சகாயத்தைக் கேட்டு மன்றாடுகிறேன். உரோமாபுரியில் உம்முடைய பேரால் பீடம் எழுப்பியபின்மாத்திரம் விஷக்காய்ச்சல் நீங்கினதென்று நான் அறிந்திருக்கிறேன்.

தியோக்கிளேசியன் அரசனுக்குப் பயப்படாமல் வலிய வேதசாட்சியான அர்ச். செபஸ்தியாரே! இந்த உபத்திரவமான வியாதியில் என்னைக் கைவிடாதேயும். என் பாவங்களுக்காக வந்த இந்த நோயை நான் பொறுமையோடே பொறுக்கவேண்டியது தான். சுவாமியின் கைபாரம் என்மேல் சுமத்தப்பட்டது. நானோ வெகு பெலவீனன், காற்றால் அடிக்கப்பட்ட சருகுபோலிருக்கிறேன், கடலில் கிடக்கும் துரும்புபோல் தத்தளிக்கிறேன். தேவனுடைய கோபத்தைத் தாங்க நான் வல்லவனல்லவே.



நான் குடிக்கவேணுமென்று சர்வேசுரன் மனதாயிருக்கிற இந்த உபத்திரவப் பாத்திரத்தை நான் வீரத்துவம் பொருந்திய பொறுமையோடு குடிக்க எனக்காக ஆண்டவரை வேண்டிக்கொள்ளும். என் கேட்டுக்காக அல்ல, என் நலத்திற்காகவே சர்வேசுரன் என்னைத் தண்டிக்கிறார். காயப்படுத்துகிறவரும் குணமாக்குகிறவரும் அவரே. நான் நல்ல நாளில் சர்வேசுரனைச் சிநேகிக்கிறதுபோலே, துன்ப நாளிலும் அவரைச் சிநேகிக்கக்கடவேன். நான் இந்த வியாதியில் அலையுண்டு கலங்காதபடிக்கு இந்தக் கசப்பான பாத்திரத்தைச் சந்தோஷமாய் அவர் திருக்கரத்திலிருந்து வாங்கிக் குடிக்க எனக்கு வேண்டிய தைரியத்தை வாங்கித் தந்தருளும்.

ஓர் ஸ்திரீ தன் பிள்ளையை மறந்தாலும் மனுமக்களை மறக்காத சர்வேசுரன் வைசூரி, பேதி, காய்ச்சல் முதலிய வியாதிகளையும், தரித்திரம், போர், பஞ்சம் முதலிய பெரிய துன்பங்களையும் பட்சத்தினால் வரவிடுகிறார் என்று நான் அறிந்திருந்தும், ஏன் அவர் பேரில் முறைப்படுவேன்? ஆகையால் அர்ச். செபஸ்தியாரே! இந்த வியாதி சீக்கி

ரம் குணமாக சர்வேசுரன் சித்தமாயிராவிட்டால், நான் அந்த நல்லமனதோடே பொறுக்க எனக்குத் தைரியத்தையாகிலுந் தரவேண்டும். என் பாவங்களின் பரிகாரத்துக்காக இன்னும் அதிக நோய்களும் துன்பங்களும் வரவேணுமென்று நான் ஆசிக்கவேண்டியது தான். அர்ச்சியசிஷ்டவர்களே துன்ப துரித நோய்களை ஆசித்திருக்கப் பாவியாகிய நான் நித்திய பாக்கியமடைய நோய் வருத்தங்களை ஆசிக்காமலிருக்கக்கூடுமோ? ஆனால் அர்ச். செபஸ்தியாரே, நான் மகா பெலவீனனும், புண்ணியத்தில் திடனற்றவனுமாயிருப்பதால், தேவரீர் என்மேல் இரங்கி இந்தத் துன்பங்களைப் பொறுமையோடாகிலும் நான் சகித்துக்கொள்ள எனக்காக ஆண்டவரை மன்றாடும்.—ஆமென் சேசு.

---

## அர்ச். செபஸ்தியார் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

வேதசாட்சிகளுக்கு இராக்கினியாகிய அர்ச். மரியாயே,—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். செபஸ்தியாரே, எங்...



உயர்ந்த கோத்திரத்தின் பிரதாப மகிமையான அர்ச். செபஸ்தியாரே,

உமது பிறப்பினால் நர்போன் என்கிற பட்டணத்தை முக்கியப்படுத்தினவரே,

இத்தாலி தேசத்தில் அதிசய புண்ணியப் பிரகாசத்தினால் விளங்கினவரே,

வேதத்துக்காகத் துன்பப்பட்ட விசுவாசிகளுக்கு ஆதரவாயிருக்கப் படையில் சேவித்தவரே,

அஞ்ஞான இருளில் ஞானக்கதிரால் பிரகாசித்தவரே,

தரித்திரர்களுக்கு உதார தகப்பனாயிருந்தவரே,

நிர்ப்பந்தங்களுக்குள் தத்தளித்த வேதசாட்சிகளைப் புத்திமதிசொல்லித் திடப்படுத்திப் பரகதியில் சேர்ப்பித்தவரே,

ஆச்சரியத்துக்குரிய ஞானத்தோடுந் தைரியத்தோடும் வேதசத்தியங்களைப் பிரசங்கித்தவரே,

அநேக அற்புதங்களால் சேசுக்கிறீஸ்துவினுடைய வேத விசுவாசத்தை விளங்கப்பண்ணினவரே,

வாக்கினாலுங் கிரியையினாலும் வல்லவராயிருந்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சத்தியத்துக்காக உபத்திரவப்பட்டவர்களுக்கு மிகுந்த தைரியத்தை வருத்துவித்தவரோ,

வேதசாக்ஷிகளுக்குத் தங்கள் வேதனைகளிலும் மரணவேளையிலும் பலமுந் தேற்றரவுமாயிருந்தவரோ,

அநேகர் வலிய வேதசாட்சிகளாவதற்கும் மோக்ஷ இராச்சியத்தை அடைவதற்கும் எத்தனமாயிருந்தவரோ,

திடமான விசுவாசத்தினாலுஞ் சுகிர்த ஒழுக்கத்தினாலும் யாவருக்கும் நல்ல மாதிரிகையாயிருந்தவரோ,

தருமக் கண்ணாடியானவரோ,

பத்திநிறைந்த வாக்கியங்களால் அநேகர் இருதயத்தில் தேவசிநேக அக்கினியை மூட்டி வளர்த்தவரோ,

அஞ்ஞானிகளான அநேகருக்குச் சத்தியத்தைத் தெளிவித்து ஞானதீட்சை பெறுவித்தவரோ,

பேர்பெற்ற பெரிய உத்தியோகஸ்தரை முதலாய் அஞ்ஞானத்தினின்று திருப்பிச் சத்திய திருச்சபையில் சேர்ப்பித்தவரோ,

அதிசயமான சகல புண்ணியங்களிலுந் தைரிய வீரசூரத்துவத்திலும் அதிகரித்தவரோ,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



விசுவாசிகளுக்கு உதவியாகச் சக்கரவர்த்தியான உரோமாபுரி இராயனிடத்தில் சேர்வைத் தலைவராகத் தேவ கிருபையால் உயர்த்தப்பட்டவரோ,

சர்வேசுரனுக்கும் மனிதர்களுக்கும் மிகவும் பிரியப்பட்டவரோ,

சத்திய திருச்சபைக்குத் தஞ்சமாயிருந்தவரோ,

அர்ச். பாப்பானவருக்கு மிகவும் இஷ்டமும் ஆறுதலும் அகமகிழ்ச்சியுமாயிருந்தவரோ,

சிலுவை அடையாளத்தால் திமிர்வாதத்தை நீக்கினவரோ,

ஊமையைப் பேசுவித்தவரோ,

அதிசயமாக அநேக வியாதிகளைத் தீர்த்து ஆரோக்கியங்கொடுத்த உத்தம வைத்தியரோ,

எண்ணப்படாத புண்ணிய நன்மை அற்புதங்களைச் செய்தவரோ,

பசாசுகளுக்குப் பயங்கரமான சாட்டையாயிருந்தவரோ,

உலகம் பசாசு சரீரத்தின் தந்திரங்களையெல்லாம் ஜெயித்தவரோ,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பாளையத்திலும் அழியாத கற்பினால் விளங்கினவரே,

அத்தியந்த விசுவாசத் திடனை உடைத்தானவரே,

இடைவிடாமல் தேவ சிநேக அக்கினியால் எரிந்த ஞானச் சூளையே,

உலக மகிமை பெருமை ஆஸ்தி சுகமெல்லாம் பிறக்கணித்தவரே,

சேசுநாதருடைய சிநேகத்தைப்பற்றி பூச்சக்கரவர்த்தியான இராயனுடைய சிநேகத்தையும், அவன் தந்த மேலான உத்தியோகங்களையும் இகழ்ந்தவரே,

சேசுநாதரைப்பற்றிப் பிராணனைத் தர மிகவும் அபேட்சித்தவரே,

சத்தியவேதத்தை அநுசரித்ததைப் பற்றி இராயனால் மரணத்தீர்வை இடப்பட்டவரே,

திரளான அம்புகளால் எய்யப்பட்டவரே,

அம்புகளால் ஊடுருவப்பட்டு மரித்தவராக எண்ணிவிடப்பட்டவரே,

உயிர்பிழைத்து மறுபடியும் அதிசய தைரியத்துடனே இராயன் முன்னிலையிற் போய் அவன் கிறீஸ்துவர்களை வாதித்த அநியாய குரூரத்தின்பேரில் கண்டித்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



குரூரமான அந்த இராயன் கட்டளையால் சாட்டைக் கசைகளையும் பெருந் தடிகளையுங்கொண்டு கொல்லப்பட்டவரே,

எந்த நிற்பந்தத்துக்கும் அஞ்சாதவராகிய வேதசாட்சியே,

விசுவாசத்தில் ஒருபோதுந் தத்தளியாத வேதசாட்சியே,

உமது இரத்தத்தால் கிறீஸ்துவேதத்தை மெய்ப்பித்த உத்தம வேதசாட்சியே,

அத்தியந்த தைரிய சந்தோஷத்துடனே வேதத்துக்காகப் பிராணனைத் தந்த வேதசாட்சியே,

தரிசனையில் ஏவுதலைப்பெற்ற ஒரு புண்ணிய தலைவியால் மிகுந்த பூச்சியத்துடன் அடக்கம்பண்ணப்பட்டவரே,

மோக்ஷவிராச்சியத்திற் சர்வேசுரனால் அத்தியந்த சோதி மகிமையுள்ள வேதசாட்சி முடி சூட்டப்பட்டவரே,

வேதசாட்சிகளுக்குள் விசேஷ மகிமைப்பிரதாபத்துடனே பிரகாசிக்கிறவரே,

உமது மன்றாட்டின் உதவியால் உரோமாபுரி முதலிய பட்டணங்களினின்று கொள்ளைநோய் பெருவாரிக்காய்ச்சல் நீங்கினதினால் மிகவும் பேர்பெற்றவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பூலோகமெங்கும் சுகிர்த வாசம் பரிமளிக்கிற நாமமுமுடைத்தானவரே,

சகல கிறீஸ்துவர்களுக்கும் தலைசிறந்த தகப்பனானவரே,

வைசூரி முதலிய வியாதி துன்பத்தில் ஆதரவும் அடைக்கலமுமாயிருக்கிறவரே,

எங். வேண்.

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

முத.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் திருவாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத்தக்கதாக,

துணை.—அர்ச். செபஸ்தியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபமுள்ள சர்வேசுரா சுவாமி! எங்கள் இக்கட்டுகளையும் பலவீனத்தையுங் கிருபையுடனே பார்த்து அடியோர்கள் செய்த பாவங்களின் கனத்தினால் எங்களுக்கு வந்திருக்கிற துன்பதுரித வருத்தங்களின் பேரில் சித்தமிரங்கி அர்ச். செபஸ்தியாருடைய மன்றாட்டினால் எங்களுக்கு வேண்டிய ஆறுதலும் ஆதரவுங் கிடைக்கும்படிக்குக் கிருபை செய்தருளவேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். ஆமென் சேசு.



## பதுவை. அர்ச். அந்தோனியாருடைய 13 மன்றாட்டு.

1. எல்லாத்திற்கும் ஆதிகாரணமான சர்வேசுரனுக்கு மகா பிரியமுள்ளவருமாய், சத்திய மறை நெறிக்குப் பொக்கிஷத் திரவியமுமாயிருக்கிற அர்ச். அந்தோனியாரே! சர்வேசுரனுடைய தயையையும் இரக்கமுள்ள பட்சத்தையும் நாங்கள் நாடி நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்யக் கிருபைசெய்தருளவேணுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

2. உடலை ஒறுத்து, தரித்திரத்தைப்போல வேஷம் எடுத்துக்கொண்டு மகா அற்புதங்களைச் செய்துகொண்டுவந்த அர்ச். அந்தோனியாரே! இந்த உலகத்தில் சத்துருக்களோடு யுத்தம்பண்ணித் தரித்திரத்தைக் கைக்கொண்டு புண்ணிய வழியிலே நாங்கள் பிரவேசிக்கும்படிக்குக் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

3. சத்திய மறையின் நெறியின்படியே வழுவாமல் நடந்து, உலக வெகுமான விரும்புதலையுஞ் சிற்றின்ப ஆசையையும் வெறுத்துச் சந்நியாச வஸ்திரம் உடுத்தி உலகத்தில் அநேக அற்புதங்களைச் செய்துகொண்டுவந்த அர்ச். அந்தோனியாரே! நாங்கள் உலக மகிமைகளையுந் துரோகமுள்ள துர்க்குணத்தையும் விட்டுத் திருச்சபைக் கற்பனையின்படியே நடந்து சர்வேசுரனுக்கு யோக்கியமுள்ளவர்களாய் இருக்கக் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

4. சர்வேசுரனுடைய மறையின் நெறியின்படியே நடந்து, விரத்தத்துவத்தில் உறுதிப்



பட்டுத் தவத்தையுந் தருமத்தையும் பின்தொடர்ந்த அர்ச். அந்தோனியாரே! உலகத்தில் எங்களுக்கு நல்ல மனதோடு உபகார சகாய தருமங்கள் செய்கிற பேர்களுக்கு நாங்கள் கீழ்ப்படிந்து தருமத்தைக் கொண்டிருக்கிற விசுவாசிகளாகத் தக்கதாகக் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

5. இஸ்பாஞ்ஞியா சீர்மைக்கு நவ நட்சத்திரமுமாய் ஒளியுமாய் வெகு அற்புதமுள்ளவருமான அர்ச். அந்தோனியாரே! திருச்சபையிலிருக்கிற நாங்கள் எங்கள் மரணத் தருவாயிலே நல்ல மனதோடு ஆத்தும சுத்திகரஞ் செய்து, தேவ இஷ்டப்பிரசாதத்தை அடையவும், எங்கள் ஆத்துமத்தில் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் நட்சத்திர ஒளிபோல் இறங்கி எங்கள் ஆத்துமத்தை மோட்சத்திற்குக் கூட்டிக்கொண்டு போகும்படி செய்யவுங் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

6. சத்திய வேதபாரகருக்குஞ் சுவிசேஷகருக்கும் நிர்ணயித்த மறைநெறியை விளக்கப்

படுத்தியிருக்கிற சுவிசேஷத்தை மகா உத்தமமாய் நிறைவேற்றித் திருச்சபையோர்களை ஆதரவோடு அரவணைத்துக்கொண்டு வருகிற அர்ச். அந்தோனியாரே! நாங்கள் எங்கள் அறியாமையில் எங்கள் பாப்பு மேற்றிராணிமார்கள் குருக்கள் உபதேச போதனைகளுக்கும் திருச்சபையினுடைய கற்பனைகளுக்குங் கீழ்ப்படிந்து நித்திய பரகதி அடையும்படி கிருபை செய்தருள வேணுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

7. சர்வேசுரனுடைய கற்பனைக்கும் அவருடைய திருச்சபைக்குங் கீழ்ப்படிந்து நடவாமல் தேவ துரோகத்தினாலேயுங் கர்மப் பாவத்தினாலேயுஞ் சுழன்று திரியுங் குருட்டாட்டமான அவிசுவாசிகளுக்கு மகா உக்கிரத்துடனே உபதேசித்து அவர்கள் மனம் இளகித் திடுக்கிட்டுக் கலங்கி அஞ்ஞான மதத்தைவிட்டு மெஞ்ஞான வழியைத் தேடும்படி செய்வித்த அர்ச். அந்தோனியாரே! உலகத்திலிருக்கிற பதிதர் அஞ்ஞானிகள் அஞ்ஞான மறைநெறியைவிட்டு மெஞ்ஞான வழியில் திரும்பவும், நாங்களும் எங்கள் பிள்ளைகள் சகோதரர்களும் நடக்கிற துர்



மார்க்கத்தை விட்டு நீர் எங்களுக்குப் படிப்பிக்கிற நல்ல வழியில் நடக்கத்தக்கதாகக் கிருபை செய்தருளவேணுமென்று உம்மைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிறோம்.

பர. பிரி. திரி

8. இடி பெருங்காற்று மழையில் ஒரு ஸ்திரீயானவள் மேனி நனையாமல் அவளுக்கு மகா அற்புதங்களைச் செய்த அர்ச். அந்தோனியாரே! நாங்கள் செய்த பாவத்தினாலே வருகிற இடி பெருங்காற்றான நரக தீவினையில் விழுந்து நனையாமல் சர்வேசுரன் எங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்குக் கிருபை செய்தருள வேணுமென்று உம்மைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிறோம்.

பர. பிரி. திரி.

9. வெந்நீரில் விழுந்து இறந்துபோன பெண்பிள்ளையைப் பன்னீரில் விளையாடுகிறாப் போல மகா அற்புதங்களைச் செய்த அர்ச். அந்தோனியாரே! எங்கள் மரண சமயத்திலே தேவ இஷ்டப்பிரசாதமில்லாமல் மரணத்தை அடைந்து வெந்நீரான நரகத் தீயில் விழாமல் சர்வேசுரனுடைய தயையின் காலத்தில்தானே எங்களுக்கு வேண்டிய

நன்மைகளைத் தந்து பன்னிரான மோட்ச இராச்சியத்திலே களிகூர்ந்திருக்கும்படிக்குக் கிருபை செய்தருள வேணுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

பர. பிரி. திரி.

10. சர்வேசுரனுடைய கற்பனைகளை மீறின பசாசுக்களை உமது உறுதியுள்ள விசுவாசக் கிரியையினாலே, ஜெயித்து அவைகளை நடுநடுங்கச் செய்து நரகக் குழியில் தள்ளின அர்ச். அந்தோனியாரே! எங்களுக்கு எதிராளியுமாய்ப் பசாசுக்கு அடிமைப்பட்டவர்களுமாய் இருக்கிற பதித சத்துராதிகளை ஜெயித்துச் சத்தியமறை நெறியின்படியே வழுவாமல் நடக்கும்படிக்குக் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

11. சத்தியமறை நெறியை அறிந்தவர்களும் அறியாதவர்களுமாயிருக்கிற அக்கிரமமான பாவிகளை நல்வழியில் திருப்பப் புத்தி சொல்ல அவர்கள் கேளாததினால் சமுத்திரத்தின் மச்சங்கள் உமது உபதேசத்தை மகா விருப்பத்துடனே கேட்க மகா அற்புதங்களைச் செய்த அர்ச். அந்தோனியாரே!



நாங்கள் உம்முடைய உபதேசத்தைப் பத்தியுடனே கேட்டுக் கீழ்ப்படிந்து நடக்கக் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

12. உலக ஆசையை வெறுத்து விசுவாசப் பற்றுதலால் மகா அற்புதமாக மரித்தவர்களை எழுப்பி இரட்சித்துத் திடமான விசுவாசத்தால் அவர்கள் மோட்சகதி அடையும்படிக்கு நலங்கள் செய்த அர்ச். அந்தோனியாரே! நாங்கள் பாவம் என்கிற மரணத்தைவிட்டுப் புண்ணியம் என்கிற மோட்சத்தை விரும்பித் தேடக் கிருபை செய்தருளும்படிக்கு எங்களுக்காக ஆண்டவரைப்பார்த்து வேண்டிக் கொள்ளவேணுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

13. சர்வேசுரனுடைய மகிமைப் பிரதாபத்திற்கும் உம்முடைய பழுதற்ற பத்தி சுவாலையுள்ள விசுவாசத்திற்கும் ஒருமித்திருக்கிற உமது நிறைஞ்சனமான நன்மைத்தனத்தைச் சேசுநாதர் கண்டு மிகுந்த ஆவலோடுந் தாற்பரியத்தோடுஞ் சிறு குழந்தையாக உம்முடைய கையில் எழுந்தருளின அற்புதங்களைப்பார்த்து எங்கள் மரணத்தறுவாயிலே

சேசுநாதர் எழுந்தருளிவந்து எங்களை இரட்சிக்கக் கிருபை செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடி வேண்டிக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

இஸ்பாஞ்ஞியா இராச்சியத்திற்கு நவநட்சத்திரமே! தரித்திரருடைய விலைமதிக்கப்படாத மாணிக்கமே! நிர்மல பரிசுத்தத்தின் உப்பரிகையே! தேவரீர் இத்தாலியா இராச்சியத்தின் தீபமுமாய்ப் பட்சத்தின் அடையாளங்களுடனே பதுவைப்பதியின் பிரகாசமான சூரியனைப்போல சத்தியங்களைப் போதித்தவருமாய் இருக்கிறீர்; முத்திப்பேறுபெற்ற அர்ச். அந்தோனியாரே! நமது கர்த்தாவான சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் யோக்கியவான்களாயிருக்க எங்களுக்காகப் பிரார்த்தித்துக்கொண்டு நாங்கள் கேட்கிற மன்றாட்டுகளைப் பெறுவிக்க அநுக்கிரகஞ் செய்தருளும்.

சர்வேசுரா சுவாமி! தேவரீரை வெளியரங்கமாய் ஸ்துதிக்கிற உம்முடைய திருச்சபையானது ஞான உதவிகளினாலே அலங்கரிக்



கப்பெற்று எங்கள் ஆதாரமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துவின் நித்திய சந்தோஷங்களை அநுபவிக்கப் பெற்றதுமாய் இருக்கக்கடவது.— ஆமென் சேசு.

---

## அர்ச். அந்தோனியார் ஜெபம்.

கற்பில் உத்றமமான லீலியென்கிற புஷ்பமுமாய் அட்சயமுள்ளவருமாய் இருக்கிற அர்ச். அந்தோனியாரே! எளிமைத்தனத்தின் ஆபரணமே, உபவாசத்தின் கண்ணாடியே, நிர்மலச் சுத்தத்தின் மாதிரிகையே, அர்ச்சியதத்துவத்தில் ஒளி விடுகிற நட்சத்திரமே, ஆசார முறைமைகளின் சோடினையே, மோட்ச வர்க்கத்தின் வடிவே, திருச்சபையின் தூணே, வரப்பிரசாதங்களின் பிரசங்கியே, காமாதுரலை அடக்குகிறவரே, புண்ணியங்களை விதைக்கிறவரே, கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கொடுக்கிறவரே, தேவரீருடைய திருக்கரங்களிலே சர்வேசுரனுடைய சுதனானவரைத் தாங்குகிறவராய்த் தேவசிநேகத்தின்பேரிலே மிகவும் எரிகிற அனலுமாய்ப் பச்சாத்தாபத்தின் சீவியமான சுவாலையுமாய்த் தேவரீருடைய பிரசங்கத்

தைக்கொண்டு பாவியானவர்களைத் தேவ பட்சத்தின் நெருப்பினாலே கொளுத்தி எரித்தவருமாய் இருக்கிறவரே, விருப்பமுள்ள வேதசாட்சியே, திவ்வியமான தீர்க்கதரிசனரே, பாவிகளைத் திருத்துகிறவரே, நரகத்துக்குப் பயங்கரத்தை விடுகிறவரே, எளிய பாவிகளாயிருக்கிற நாங்கள் உம்முடைய அடைக்கலத்திலும் மன்றாட்டிலும் இருக்க எங்களைக் கையேற்று நடப்பித்துக்கொள்ளும். பாவிகளான எங்களுக்கு மெய்யான உத்தம மனஸ்தாபமும்; அதினால் கண்ணீரும் உண்டாக வரப்பிரசாதத்தையும் ஞானமுள்ள தியானத்தையும் சர்வேசுரனவர் எங்களுக்குத் தந்தருளும்படிக்கு அவரை வேண்டிக்கொள்ளும். மிகவும் எரிகிற பட்சத்தின் அனலாயிருந்து பாவிகளான எங்களுடைய உலர்ந்த இருதயத்தைத் தேவ பட்சத்தினாலே கொளுத்தி எரிக்கச் சித்தமாய் இருக்கவேணுமென்று மிகுந்த தாழ்ச்சியுடனே உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென் சேசு.

---



## அர்ச். அந்தோனியார் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே,

கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,

பத்தி சுவாலகருக்கு ஒத்தவராகிய அர்ச். பிராஞ்சீஸ்குவே,

பதுவைப்பதியரான அர்ச். அந்தோனியாரே,

பரமண்டலத் திருவின் திருப்பெட்டியான அர்ச். அந்தோனியாரே,

மூப்பின் கிறமைச் சலுக்குக் கண்ணாடியான அர்ச். அந்தோனியாரே,

தபசின் பேருள்ள அர்ச். அந்தோனியாரே,

தர்மத்தை மிகவும் பின்தொடர்ந்தவரான அர்ச். அந்தோனியாரே,

அர்ச். சிலுவையை மிகவும் நேசித்தவரான அர்ச். அந்தோனியாரே,

தர்மநெறியில் மாறாத மனதை அபேட்சித்தவரான அர்ச். அந்தோனியாரே,

(எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.)

சிற்றின்ப ஆசையை ஜெயித்தவரான அர்ச். அந்தோனியாரே,

தூயதன்மையில் லீலியென்கிற புஷ்பமான அர்ச். அந்தோனியாரே,

இஸ்பானியா சீர்மைக்கு நவநட்சத்திரமான அர்ச். அந்தோனியாரே,

சுவிசேஷத்தை ஊக்கத்துடனே பிரசங்கித்து நடத்தினவரான அர்ச். அந்தோனியாரே,

சர்வேசுரனுடைய திரு வசனத்தின் தொனிச்சத்தமான அர்ச். அந்தோனியாரே,

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய படிப்பினைகளை விரும்பினவரான அர்ச். அந்தோனியாரே,

அவிசுவாசிகளுக்குப் பயங்கரமாக உபதேசித்தவரான அர்ச். அந்தோனியாரே,

பசாசுகளை நடுநடுங்கச் செய்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

புண்ணியவான்களுக்குக் குறையற்ற படிப்பினையான அர்ச். அந்தோனியாரே,

மீனோரென்கிற சந்நியாசிகளுக்குப் படிப்பினையான அர்ச். அந்தோனியாரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



அப்போஸ்தலருடைய கொழுந்தான அர்ச். அந்தோனியாரே,

பாவிகளுக்கு வெளிச்சங் கொடுக்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

வழிதப்பிப் போகிறவர்களுக்குத் துணையான அர்ச். அந்தோனியாரே,

ஆச்சரியங்களைச் செய்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

சலிப்புள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறவரான அர்ச். அந்தோனியாரே,

குற்றமில்லாத ஜனங்களுக்கு ஆறுதலும் பாதுகாவலுமான அர்ச். அந்தோனியாரே,

ஊமைகளைப் பேசச்செய்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

உண்மைகளைப் போதிக்கிற உபதேசியாரான அர்ச். அந்தோனியாரே,

பசாசுகளை மிரட்டி ஓட்டுகிறவரான அர்ச். அந்தோனியாரே,

அடிமைப்பட்டவர்களை மீட்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

வியாதிக்காரர்களைக் குணமாக்குகிறவரான அர்ச். அந்தோனியாரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மரணமடைந்தவர்களைச் சர்வேசுரனுடைய உதவியினாலே உயிர்ப்பித்தவரான அர்ச். அந்தோனியாரே,

பிறவிக் குருடருக்குக் கண் கொடுத்தவரான அர்ச். அந்தோனியாரே,

காணாமல் போனவைகளைக் காட்டிக் கொடுக்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

இழந்துபோன வஸ்துக்களைக் கண்டெடுக்கச் செய்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

வழக்காளிகளுடைய உண்மையைப் பாதுகாக்கிறவரான அர்ச். அந்தோனியாரே,

பரமண்டலத்திற்குச் சுதந்தரவாளியான அர்ச். அந்தோனியாரே,

தரித்திரருக்கு இரத்தினமான அர்ச். அந்தோனியாரே,

சமுத்திரத்தின் மச்சங்களுக்கு உபதேசித்தவரான அர்ச். அந்தோனியாரே,

அப்போஸ்தலருடைய குறையற்ற சுத்திகரத்தை நேசித்தவரான அர்ச். அந்தோனியாரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



நஞ்சிருக்கக் கண்ட போசனம் அருந்தினவரான அர்ச். அந்தோனியாரே;

புண்ணியமென்கிற ஞான வெள்ளாண்மையைப் பல நாடுகளில் விளைவித்தவரான அர்ச். அந்தோனியாரே,

உலகமென்கிற அபத்தத்தைப் புறக்கணித்தவரான அர்ச். அந்தோனியாரே,

சமுத்திரத்தில் உபத்திரவப்படுகிற பெயர்களை இரட்சித்தவரான அர்ச். அந்தோனியாரே,

உம்மைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அன்பரான அர்ச். அந்தோனியாரே,

தேவரீரை புகழுகிறவர்களுக்காக மன்றாடுகிறவரான அர்ச். அந்தோனியாரே,

எண்ணிறந்த ஆத்துமங்களைப் பரலோகத்தில் சேர்ப்பித்தவரான அர்ச். அந்தோனியாரே,

நன்றுக்கழியாத நற்றவரான அர்ச். அந்தோனியாரே,

ஐம்புலன் வென்றோர்களுடைய சபைக்கு அரணான அர்ச். அந்தோனியாரே,

சிறு குழந்தை ரூபத்தைக் கொண்டிருந்த கர்த்தரைக் கையில் ஏந்தினவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

அர்ச். அந்தோனியாரோ சூரத்தனமுள்ள மேய்ப்பரோ, கஸ்திப்படுகிறவர்களுக்குச் சந்தோஷம் வருவித்திருக்கிறவருமாய் பாவ அக்கினியுடைய காந்தியைச் சீக்கிரத்திலே அமர்த்துகிறவரும் உன்னதமான பரமண்டலங்களிலிருக்கிறவருமான பிதாவானவர் இம்மையிலுண்டாய் அவதிக்குப் பிற்பாடு எளியவர்களாயிருக்கிற எங்களுக்கு மோட்ச விருந்து தந்தருள மன்றாடுகிறோம்.

முதல்.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக,

துணை.—அர்ச். அந்தோனியாரோ, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

பிதாவாகிய சர்வேசுரா சுவாமி, உமது திருச்சபையானது அர்ச். அந்தோனியாருடைய ஞான உதவியினாலே உரம்பெற்றிருக்கவும், நித்திய ஆனந்தத்தை அனுபவிக்க நாங்கள் பாத்திரமாயிருக்கவும், உம்முடைய ஸ்துதியாகிய முத்திப்பேறுபெற்ற அர்ச். அந்தோனியாருடைய திரு நாமத்தைக்



கொண்டாடுகிற நாங்கள் அவருடைய புண்ணிய மாதிரிகையை அனுசரித்துக்கொண்டு பேரின்ப மோட்ச இராச்சியத்துக்குச் சேரவும் அனுக்கிரகஞ் செய்தருள உம்முடைய திருச்சபைக்குச் சந்தோஷம் வருத்துவிக்க வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

## பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரை நோக்கிச் செபம்.

நான் பேர்கொண்டிருக்கிற அர்ச்சியசிஷ்டவரோ!......உமது அடைக்கலத்தில் என்னை ஒப்படைத்துவிடுகிறேன். எனக்கு இடப்பட்டிருக்கும் திரு நாமதேயத்துக்கொத்த சுகிர்த நடக்கையுள்ளவனாய்ச் சீவிக்கவும், உம்மிடத்தில் விசேஷமாய் விளங்கிய புண்ணியங்களை நான் அனுசரிக்கவும், எனக்குத் தேவகிருபை வரப்பிரசாதம் கிடைக்கத்தக்கதாகப் பெலமாய் மனுப்பேசியருளும். என் சீவியகாலத்தில் எனக்கு நேரிடும் ஆபத்துக்களில் நின்று என்னைத் தற்காத்துப் பயங்கர

மான மரணவேளையில் என்னைக் கைவிடாமல் பாதுகாத்தருளும் காவலனே! ஆமென் சேசு.

---

## அர்ச். மார்கரீத் மரியம்மாளை நோக்கிச் செபம்.

ஓ! அர்ச்சியசிஷ்ட மார்கரீத்மரியே! திவ்விய கர்த்தரிட்த்தில் உமக்கிருந்த நேச ஐக்கியத்தை நினைவுகூர்ந்து நம்பிக்கையோடே உமதண்டையில் ஓடிவந்தோம். அந்த ஆண்டவருடைய திரு இருதயத்தில் உமக்கிருந்த செல்வாக்கு நலத்தை எங்கள்மீது காண்பிக்கத் தயைபுரியும். அத்திரு இருதயத்தின் இரக்கத்தை எங்கள்பேரில் வருவித்து, எங்கள் மன்றாட்டுகளுக்கு அனுகூல அனுக்கிரகம் கிடைக்கச் செய்தருளும்.

தேவரீர் இவ்வுலகில் சஞ்சரித்தபோது உமது ஜெபதபங்களைக்கொண்டு இரக்கம் நிறைந்த சேசுவின் திரு இருதயத்திலிருந்து திரளான வரப்பிரசாதங்களைப் பாவிகளுக்கு வருவித்துத் தந்தீரல்லோ. அப்படிப்பட்ட நேசப் பற்றுதல் இப்போது உம்மிடத்தில் குறைந்துபோனதல்லவே. ஆகையால் சேசு-



வின் திரு இருதயத்தில் உமக்கிருந்த செல்வாக்கு நலத்தை நாங்களும் சுகித்து அநுபவிக்கக் கிருபை செய்தருளும். ஆமென்சேசு.

---

## அர்ச். அன்னம்மாளை நோக்கிச் செபம்.

மகா பரிசுத்தமும் இரக்கமும் அநுக்கிரகமும் நிறைந்த அர்ச். அன்னம்மாளே! தேவமாதாவின் தாயே, நீர் எம்மாத்திரஞ் சர்வேசுரனால் சிநேகிக்கப்பட்டிருக்கிறீர்? நீர் கேட்கும் மன்றாட்டை அவர் தள்ளிப்போடுகிறதில்லையென்று அறிந்திருக்கிற நாங்களும் உமது திருப்பாதத்தை அண்டிவருகிறோம். உம்மால் உலகில் நடந்த புதுமைகளுக்குக் கணக்கில்லையே, வரப்பிரசாதத்தைத் தாராளமாய்க் கொண்ட அர்ச். அன்னையே, நாங்கள் மெய்யான சமுசாரிகளாய் நடந்து நீர்வாய்க்காலோரத்தில் நாட்டப்பட்ட மரம்போலச் சமுசாரத்தில் நற்கனி தந்து எங்கள் துன்பங்களில் ஆறுதலடைந்து பொறுமைகொண்டு எங்களுக்கு ஆண்டவர் தந்த பிள்ளைகளைச் சரிநெறியில் நடப்பிக்கும் வரத்தை நாங்கள் அடையப்பண்ணியருளும். நாங்கள் குடும்பஸ்திதியில் ஒருமனப்பட்டு அயல் வீட்டா

ரோடு சிநேகமாய் வாழப்பண்ணும். சங்கையும், நற்கீர்த்தியும், ஒருமைப்பாடும், சமுசாரத்தில் பயபத்தியும் ஒடுக்க வணக்கமும் நாங்கள் பெறச்செய்தருளும். எங்கள் பிள்ளைகள் தேவஸ்துதியைக்கூறவும், நாங்கள் அறிவிலுந் தேவ ஆசீர்வாதத்திலும் உயரவுஞ் செய்தருளும். அன்றன்றுள்ள அப்பத்தை நாங்கள் கொண்டு பசாசினாலும், பொல்லாத மனிதராலும் நாங்கள் வெல்லப்படாதிருக்கப் பண்ணியருளும், எங்கள் வீட்டையும் அதிலுள்ளதையும் அக்கினிக்கும் வெள்ளத்திற்குந் திருடருக்குந் தப்பித்துவிட ஆண்டவரை மன்றாடும். கர்த்தர் பட்டணத்தைக் காக்காவிடில் சாமக்காரன் விருதாவாய் விழித்திருப்பானல்லோ? தேவபத்தியும் உண்மையுங் கீழ்ப்படிதலுமுள்ள ஊழியர்களை நாங்கள் அடையவும், எங்கள் பிள்ளைகளுக்குச் சரியான சோடு சேரவும் எங்களுக்காக மன்றாடும். எங்கள் உபத்திரவங்கள் இலேசாகவும் நாங்கள் நித்தியமானவைகளை விரும்பவும், எல்லாத் தின்மைக்கும் வேராகிய பணவாசையில் நின்று நீங்கவும்பண்ணியருளும். மகா உச்சிதமான வரப்பிரசாதங்களை அடைந்த பரிசுத்த அன்னம்மாளே, நாங்



கள் தேவ வரத்துக்கே ஏங்கி நிற்கப்பண்ணியருளும். நாங்கள் தேவ காரியங்களை விரும்பி பாரிய புத்தியைக்கொண்டு வாழ மன்றாடும். நன்மைகளை எல்லாங் கொண்ட தேவனை நாங்கள் அண்டி அவரால் கீர்த்தி பெற்று உய்யப்பண்ணியருளும்.—

ஆமென்சேசு.

## அர்ச். பிலோமேனம்மாளை நோக்கிச் செபம்.

ஆண்டவரே, தனது அரிய கற்பினாலும், நீர் தந்த வல்லபத்தை நன்மார்க்கத்தில் உபயோகப்படுத்தினதாலும் உமக்கு எப்போதும் பிரியமுள்ளவளாயிருந்த கன்னியும் வேதசாட்சியுமான அர்ச். பிலோமேனம்மாளுடைய மன்றாட்டினால் எங்களுக்கு அனுக்கிரகஞ் செய்தருளும்படி தேவரீரைப் பிரார்த்திக்கின்றோம். இவை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

சேசுவினிடத்தில் நீர் வைத்த அன்பின் பெருக்கத்தால் கன்னிமையென்னும் மல்லா

அறிவொளி மங்காது காப்பாற்றிய மாசகன்ற அர்ச். பிலோமேனம்மாளே வாழ்க.

சேசுக்கிறீஸ்துநாதருடைய மெய்மறை செழித்தோங்க மிக்க தைரியத்துடன் உமது திரு இரத்தத்தைத் தந்து கீர்த்தி பெற்றிலங்கும் பிலோமேனம்மாளே, வாழ்க.

எங்கும் பெருநவங்களைப்புரிந்து இரட்சணியப் பெட்டகமாய்ச் சிறந்த பிலோமேனம்மாளே, வாழ்க.

---

## அர்ச். மரியமதலேனம்மாளை நோக்கி ஜெபம்.

அர்ச். மரியமதலேனாளே! சேசுக்கிறீஸ்துநாதருக்குப் பிரியப்பட்டவளே, உத்தம மனஸ்தாபத்தினுடையவும், தியானத்தினுடையவும் ஆசையுள்ள சிநேகத்தினுடையவும் பாத்திரமே, உமது கண்ணீரால் சேசுநாதருடைய பாதத்தைக் கழுவி அதிகமாய்ச் சிநேகித்ததினால் அவர் உம்மை மிகவும் நேசித்து மகிமையாலுஞ் சங்கையாலும் உமக்கு முடிதரித்ததினால் நான் உம்மை வாழ்த்துகிறேன். ஓ சேசுக்கிறீஸ்துநாதருடைய நேசகியே! உமது மன்றாட்டினால் இறந்துபோன உமது சகோதரனை லாசர்



என்பவர் எழுப்பப்பட வரமடைந்தீரே, நான் எப்போதும் பரிசுத்தமான ஜீவியத்தின் அலங்காரத்தில் உயரும்படி எனக்காக மன்றாடும். என் ஆத்தும விரதமாகிய பச்சாத்தாபத்தின் கண்ணீரை உம்மைப்போல அவருடைய பாதத்தில் சிந்தவும், உம்மைப்போல பாவப்பொறுத்தலின் வாக்கியத்தைப் பெறவுஞ் செய்தருளவேண்டுமென்று நீர் சேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் ஏராளமாய்ப் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதத்தைக்கொண்டு உம்மை மன்றாடுகிறேன். உமது வனவாசத்தாலும், நீர் அவரோடு செய்த ஆச்சரியமான சம்பாஷணையாலும் நான் தனிவாச ஆசையையும் பரிசுத்தத் தியானத்தின் இஸ்பிரீத்தையும் அடையச் செய்தருளும். மதுரமுள்ள மரியமதலேனாளே! உத்தம மனஸ்தாபப்படுபவர்களுடைய நம்பிக்கையே, உம்மைத் தெரிந்துகொண்டவர்களுடைய ஆனந்தமே, மோட்சத்தின் அலங்காரமே, சேசுக்கிறீஸ்துநாதருடைய நேசகியே, உமது புண்ணியங்களைக் கண்டுபாவிக்க எனக்கு வேண்டிய தைரியத்தை உமது வேண்டுதலினால் எனக்குப் பெற்றருளும். ஆமென்சேசு.

## முத்திப்பேறுபெற்ற குழந்தை சேசுவின் தெரேசம்மாள் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,

பரிசுத்த வெற்றி நாயகியே,

சர்வேசுரனுடைய ஊழியக்காரியாகிய முத். தெரேசம்மாளே,

சேசுநாதர்சுவாமியின் ஞானப் பத்தினியாகிய முத். தெரேசம்மாளே,

சர்வேசுரனுடைய கொடையாகிய முத். தெரேசம்மாளே,

பாலிய பருவத்திற்றானே விசேஷித்து விளங்கிய முத். தெரேசம்மாளே,

கீழ்ப்படிதலின் மாதிரிகையாகிய முத். தெரேசம்மாளே,

தேவ சித்தத்துக்கு முற்றாக உம்மைக் கையளித்து ஜீவித்த முத். தெரேசம்மாளே,

சமாதானத்தைச் சிநேகித்த முத். தெரேசம்மாளே,

பொறுமையைச் சிநேகித்த முத். தெரேசம்மாளே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



சாந்தகுணத்தைச் சிநேகித்த முத். தெரேசம்மாளே,

தற்பரித்தியாகக் கிருத்தியங்களில் வீரத்துவங்காண்பித்த முத். தெரேசம்மாளே,

பொறுதிகொடுப்பதில் உதாரகுணங் காண்பித்த முத். தெரேசம்மாளே,

வறியவர்களின் உபகாரியாகிய முத். தெரேசம்மாளே,

சேசுநாதர்சுவாமியில் விசேஷித்த அன்புவைத்த முத். தெரேசம்மாளே,

சேசுவின் திரு முகத்தை விசேஷ விதமாகப் பத்திசெய்த முத். தெரேசம்மாளே,

தேவ நேச அக்கினியால் தகனிக்கப்பட்ட முத். தெரேசம்மாளே,

எவராலும் கைவிடப்பட்டவர்களின் மத்தியஸ்தியாகிய முத். தெரேசம்மாளே,

ஜெபம் செய்வதில் கடைப்பிடியுள்ள முத். தெரேசம்மாளே,

சர்வேசுரனிடத்தில் மிகவும் வல்லபம் படைத்த மத்தியஸ்தியாகிய முத். தெரேசம்மாளே,

பரலோகத்திலிருந்து உரோசாமலர் மாரி பொழிகின்ற முத். தெரேசம்மாளே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தாரின் உபகாரியாகிய முத். தெரேசம்மாளே,

கேட்கும் மன்றாட்டுகளையெல்லாம் பெற்றுத்தரும் முத். தெரேசம்மாளே

பரிசுத்த கற்பைச் சிநேகித்த முத். தெரேசம்மாளே,

மனச்சம்மதமான தரித்திரத்தைச் சிநேகித்த முத். தெரேசம்மாளே,

கீழ்ப்படிதலைச் சிநேகித்த முத். தெரேசம்மாளே,

தேவ தோத்திர வாஞ்சையென்னும் அக்கினி மூண்டெரிந்துகொண்டிருந்த முத். தெரேசம்மாளே,

தேவ சிநேக அக்கினி சுடர்ந்து சுவாலித்துக்கொண்டிருந்த முத். தெரேசம்.,

தேவ ஆசீர்வாதத்தின் புத்திரியாகிய முத். தெரேசம்மாளே,

சர்வேசுரனை நம்பி நடப்பதில் மிகவும் விசேஷித்து விளங்கிய முத். தெரேசம்.,

அபூர்வ புத்தி சாதுரியம் விளங்கிய முத். தெரேசம்மாளே,

உம்மை மன்றாடுகிறவர்களுக்கு ஏதோ ஒரு பதில் கொடுக்க ஒருபோதும் தவறாத முத். தெரேசம்மாளே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



இரட்சணியத்தின் நிச்சயமான வழியைப் படிப்பிக்கிற முத். தெரேசம்மாளே,

தேவ அன்பின் பலியாகிய முத். தெரேசம்மாளே, எ. வே.

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

மு.—சேசுவின் சிறிய புஷ்பமே,

து.—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி, உமது ஊழியக்காரியாகிய குழந்தை சேசுவின் தெரேசம்மாளுடைய ஆத்துமத்திலே தேவ நேச அக்கினி மூண்டெரிந்துகொண்டிருக்கும்படி செய்தருளினீரே. நாங்களும் உம்மை நேசிக்கவும், மற்றவர்கள் உம்மை நேசிக்கும்படி செய்யவும் அனுக்கிரகம்பண்ணியருளும். ஆமென்சேசு.

---

## முத். குழந்தை சேசுவின் தெரேஸ் அம்மாளின் நவநாள் செபம்.

முத்திப்பேறுபெற்ற குழந்தை சேசுவின் தெரேஸ் அம்மாளே! சிறிய சுகந்த புஷ்பமே! தேவ சிநேகத்தினால் பற்றியெரிந்த கன்னிகாரத்னமே! துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலே! அண்டிவந்தவர்களைக் கைவிடாத பேருபகாரியே! அம்மா! பாவி நான் உம்மை

நம்பி வந்தேன், நான் கேட்கும் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயையுடன் சேசுவின் திரு இருதயத்தினின்று பெற்றுக் கொடுத்தருள்வீராக. ஆமென்சேசு.

3 பர. 3 பிரி. 3 திரி.

திவ்விய பாலனான சேசுவே! உம்முடைய திரு முகத்தைப் பார்த்து உம்முடைய நேசத் தெரோசாளுக்குக் கூடியசீக்கிரம் அர்ச்சியசிஷ்ட பட்டம் சொடுக்கும்படி கெஞ்சி மன்றாடுகிறோம்.

---

## சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ கிருபையாயிரும்,...மற்றதும்.
அர்ச். மரியாயே,
சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,
கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,
அர்ச். மிக்கேலே,
அர்ச். கபிரியேலே,
அர்ச். இரபேலே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
பூக்கொள்ளும்.



* தூதரும் அதிதூதருமாயிருக்கிற சகல சம்மனசுக்களே,
* நவவிலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுக்களே,
அர்ச். ஸ்நாபக அருளப்பரே,
அர்ச். சூசையப்பரே,
* பிரதான பிதாக்களும் தீர்க்கதரிசிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். இராயப்பரே,
அர்ச். சின்னப்பரே,
அர்ச். பெலவேந்திரரே,
அர்ச். யாகப்பரே,
அர்ச். அருளப்பரே,
அர்ச். தோமையாரே,
அர்ச். சின்ன யாகப்பரே,
அர்ச். பிலிப்புவே,
அர்ச். பார்த்தலோமையே,
அர்ச். மத்தேயுவே,
அர்ச். சிமோனே,
அர்ச். ததேயுவே,
அர்ச். மத்தியாசே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

---

* இக்குறியிட்டிருக்கிற வாக்கியங்களுக்கு "எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று சொல்லவும்.

அர்ச். பர்னபாவே,
அர்ச். லூக்காவே,
அர்ச். மாற்குவே,
* அப்போஸ்தலருஞ் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
* எங்கள் ஆண்டவருடைய சீஷர்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
* மாசில்லாத சகல அர்ச். குழந்தைகளே,
அர்ச். முடியப்பரோ,
அர்ச். செய்யப்பரோ,
அர்ச். வின்சேந்தியுவே,
அர்ச். அருளப்பரோ,
* சின்னப்பரும் அருளப்பரும் யாகப்பருமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* பபியானும் செபஸ்தியானுமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* அருளப்பருஞ் சின்னப்பருமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* கொஸ்மாவுந் தமியானுமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* செர்வாசியும் புரோத்தாசியுமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* வேதசாட்சிகளான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.



அர்ச். சில்வேஸ்திரியுவே,
அர்ச். கிறகோரியுவே,
அர்ச். அமிர்தநாதரோ,
அர்ச். அகுஸ்தீனுவே,
அர்ச். இயெரோனிமுவே,
அர்ச். மர்த்தீனுவே,
அர்ச். நிக்கொலாவே,
* மேற்றிராணிமார்களும் ஸ்துதியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
* வேத வித்தியாபாரகரான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். அந்தோணியாரோ,
அர்ச். ஆசீர்வாதப்பரோ,
அர்ச். பெர்நார்துவே,
அர்ச். சாமிநாதரோ,
அர்ச். பிரான்சீஸ்குவே,
அர்ச். இஞ்ஞாசியாரோ,
அர்ச். சவேரியாரோ,
அர்ச். பிரான்சீஸ்குவே,
அர்ச். அருளப்பரென்கிற பிரான்சீஸ்குவே,
அர்ச். பிரான்சீஸ்குவே,
அர்ச். இராயப்பரோ,
அர்ச். ஞானப்பிரகாசியாரோ,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

அர்ச். அருளப்பரே,
அர்ச். ஸ்தனிஸ்லாசே,
அர்ச். அல்போன்சே,

* குருக்களும் ஆசரியருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

* சந்நியாசிகளுந் தபோதனருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

அர்ச். மரியமுக்தலேனே,
அர்ச். ஆகத்தம்மாளே,
அர்ச். பிரகாசியம்மாளே,
அர்ச். அகினேசியே,
அர்ச். செசிலியே,
அர்ச். கத்தரினே,
அர்ச். அனஸ்தாசியே,

* கன்னியாஸ்திரிகளும் விதவை ஸ்திரிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

* ஆண்டவருடைய திருவடியார்களான ஸ்திரீ பூமான்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தயாபரராயிருந்து,—எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமி.

தயாபரராயிருந்து,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.



சகல பொல்லாப்புகளிலே நின்று,
சகல பாவங்களிலே நின்று,
உமது கோபத்திலே நின்று,
பூமி அதிர்ச்சியாகிய அகோர ஆக்கினையிலே நின்று,
அசுப்பில் வருகிற துர்மரணத்திலே நின்று,
பசாசினுடைய சகல தந்திரங்களிலே நின்று,
கோபம் பகை முதலான சகல துர்க்குணங்களிலே நின்று,
மோக அக்கினியிலே நின்று,
இடி பெருங்காற்றிலே நின்று,
நித்திய மரணத்திலே நின்று,
கொள்ளைநோய், பஞ்சம் சண்டையிலே நின்று,
தேவரீருடைய திரு மனுஷாவதாரத்தின் பரம இரகசியத்தைப் பார்த்து,
தேவரீருடைய ஆகமனத்தைப் பார்த்து,
தேவரீருடைய பிறப்பைப் பார்த்து,
தேவரீருடைய திவ்விய பாலத்துவத்தைப் பார்த்து,
தேவரீருடைய ஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,

எங்களை இரட்சித்துக்கொள்ளும் சுவாமி.

தேவரீருடைய சிலுவையையும் பாடுகளையும் பார்த்து,

தேவரீருடைய மரணத்தையும் அடக்கத்தையும் பார்த்து,

தேவரீருடைய திவ்விய உத்தானத்தைப் பார்த்து,

தேவரீருடைய திவ்விய ஆச்சரியமான ஆரோகணத்தைப் பார்த்து,

தேற்றரவு பண்ணுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தைப் பார்த்து,

நடுத்தீர்க்கிற நாளிலே,

எங்களை இரட்சித்தருளும் சுவாமி.

பாவிகளாயிருக்கிற நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் பாவங்களைப் போக்கியருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்களுக்குத் தயைபண்ணி இரட்சித்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

நாங்கள் மெய்யான தவம்புரிய உதவி செய்ய வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

தேவரீர் உமது அர்ச். சபையை ஆளவும் பாதுகாத்தருளவும் வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி.



அர்ச். பாப்பு முதலான அதிசிரேஷ்ட ஆசிரியரையும் ஆகம சபைகளிலுட்பட்ட சகல குருக்களையுஞ் சந்நியாசிகளையுஞ் சத்திய வேத முறைமைகளில் தற்காத்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

உமது அர்ச். சபையின் சத்துருக்களைக் கீழ்ப்படுத்தவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சத்தியவேத இராஜாக்களுக்கும் பிரபுக்களுக்குஞ் சமாதானத்தையுஞ் சரியான ஒருமையையுந் தந்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சமஸ்தமான கிறீஸ்துவர்களுக்குஞ் சமாதானத்தையும் ஒருமைப்பந்தனத்தையுங் கட்டளையிட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

தேவரீருடைய திருப்பணியிலே அடியோரைத் திடப்படுத்திக் காப்பாற்ற வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்

எங்கள் மனது பரலோக ஆசைகளைப் பற்றி உயர வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி.

எங்களுடைய உபகாரிகளுக்கு நித்திய நன்மையைப் பலனாகக் கட்டளையிட்டருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் ஆத்துமங்களையும், எங்களுடைய சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களையும் நித்திய நரக ஆக்கினையிலே நின்று இரட்சித்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

பூமியிலே நல்ல பயிர் விளைவின் பலன் தந்து காப்பாற்றவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

மரணத்தை அடைந்த சமஸ்த விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் வேண்டுதலை நன்றாகக் கேட்டருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சர்வேசுரனுடைய சுதனே! உம்மை மன்றாடுகிறோம்,

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமி.

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி.



எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.

எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

சேசுவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்,

சேசுவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்.—பர.

மூத.—இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும்,

துணை.—ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லவரான நித்திய சர்வேசுரா! சீவியர்கள் மேலும் மரித்தவர்கள் மேலுஞ் செங்கோன்மை செலுத்தி, விசுவாசத்தாலும் நற்கிரியைகளாலும் உமதுயட்சமாவார்களென்று தேவரீர் முன்தெரிந்த சமஸ்தருக்குந் தயையுள்ளவராயிருக்கிறீர். நாங்கள் யாரார ருக்காகச் செபித்து மன்றாடுகிறோமோ, அவர்

கனெல்லோரும், சரீர சம்பந்தத்தோடு இவ்
வுலகிலிருக்கின்றவர்களாயினுஞ் சரீரத்தை
விட்டு மறுவுலகிற் சென்றவர்களாயினுஞ்
சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுத
லாலும் உமது நன்மைப்பெருக்கத்தின் கிரு
பாகடாட்சத்தாலும், பாவப்பொறுத்தலை
அடையத்தக்கதாகத் தேவரீரைப் பிரார்த்
திக்கிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்
துவோடும் ஏக சர்வேசுரனாயிருந்து சதா
காலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலகரு
மாயிருக்கிற உம்முடைய திருச்சுதனாகிய
சேசுக்கிறீஸ்துவினுடைய திருமுகத்தைப்
பார்த்து இந்த மன்றாட்டைத் தந்தருளுஞ்
சுவாமீ.—ஆமென்சேசு.

மு.—சர்வ வல்லவரும் தயாபரருமாகிய
சர்வேசுரன் எங்கள் மன்றாட்டுக்குக் காது
கொடுத்தருளக்கடவாராக.

து.—ஆமென்சேசு.

மு.—மரித்த விசுவாசிகளின் ஆத்துமங்
கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமா
தானத்தில் இளைப்பாறக்கடவது.

ஆமென்சேசு.

---



## சிறுபிள்ளைகளின் ஜெபம்.

ஓ! சுவாமீ, நான் இருக்கிற பூலோகத்தை
யும், பார்க்கிற வானத்தையும் நீரோ செய்தீ
ரென்றும், உம்முடைய மனதுக்கு மீறிப்
பாவஞ்செய்தால் எப்போதும் நரகத்தின்
நெருப்பிலே வேகவேணுமென்றுந் தாய்தகப்
பன் எனக்குச் சொன்னார்களே; அதினாலே
எனக்குப் பயம்பிடித்திருக்கிறதே, சுவாமீ
உம்மைச் சரீரக் கண்ணினாலே காணக்கூடா
தென்றும் நான் கொஞ்சநாள் மாத்திரம்
பூலோகத்திலிருந்து செத்துப்போய்த் தேவ
ரீர் கிட்டே வரவேணுமென்றும், பூலோகத்
திலே சிலகாலமிருந்து அதையும் பசாசுக்க
ளுடைய தந்திரங்களையும் ஜெயித்து மோன்
னுக்குவருவது வெகு கஷ்டமென்றுங் கேள்
விப்பட்டேன்; இதனாலே எனக்கு விசன
மாச்சுதே சுவாமீ, இம்மாத்திரம் ஆபத்து
களை ஜெயித்துச் சிறுபிராயம், பாலியப்பிரா
யம், முதுமைப்பிராயம் இவைகளில் என்ன
மாய்ப் பாவமில்லாமல்நடந்து உமது கிட்டே
வருகிறதென்று அலைதரியப்படுகிறேன்
சுவாமீ. ஆகையால் நீர் தயவுசெய்து எனக்கு
நல்லபுத்தி கொடும், நல்ல அறிவு கொடும்,
உமது கட்டளையை நான் மீறாமல் நடக்கப்

பண்ணும், நல்ல படிப்புப் படித்துப் பூலோகத்தில் நான் செய்யவேண்டிய தொழிலை நன்றாய்ச் செய்யப்பண்ணுஞ் சுவாமீ. காலமே சாயந்திரம் ஜெபம்பண்ணி ஞாயிற்றுக்கிழமை தப்பாமல் பூசைகண்டு நான் செய்யுங் கிரியைகளைச் சரியாய்ச்செய்து உமக்குப் பிரியப்பட நடக்கப் பிரயாசப்படுவேன் சுவாமீ. கெட்ட நினைப்புக்கு இடங்கொடுக்கமாட்டேன்; என்னைச் சகலமான ஆபத்துகளில் நின்று இரட்சிப்பது உமதுபேரில்விழுந்த பாரஞ் சுவாமீ. —ஆமென்சேசு.

---

## வாலிபர் ஆத்தும சரீர பரிசுத்த கற்படைய மன்றாட்டு.

சர்வ வல்லவரும் எல்லாத்தையும் பார்க்கிறவருமாகிய சர்வேசுரா! என் ஆத்துமத்தை உமது திவ்விய இலட்சணைச் சாயலாக உண்டாக்கினீரே, அதை நான் அசுத்தப்படுத்தாதபடிக்கு எனக்கு அனுக்கிரகஞ் செய்தருளும். நமது தேவாலயத்தை யாதாமொருவன் அசுசிப்படுத்தினால் அவனைச் சிதைப்போமென்று திருவுளம்பற்றினீரே, சுவாமீ உமது வேத



மொழியின்படியே என் சரீரமே உமது தேவாலயமாயிற்று; இதிலே உமது இஷ்டப் பிரசாதத்தினால் தேவரீருடைய இஸ்பிரீத்துசாந்துவானவர் வாசஞ்செய்யச் சித்தமாயிருக்கிறதுமன்றி, அநேகமுறை உம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதருந் தேவநற்கருணைவழியாக எழுந்தருளிவந்து இதனை அர்ச்சித்தருளினார். ஆகையால் பரிசுத்தமுள்ள கர்த்தாவே! உமக்குச் சொந்தமாகிய இத்தேவாலயத்தில் தேவரீர் மிகுந்த அருவருப்புடனே வெறுக்கிற பாவ அக்கிரமங்களை வரவொட்டாதேயும். கற்புக்கு விரோதமான ஓர் அற்பமாசும் என் ஆத்துமத்திலாவது சரீரத்திலாவது உண்டாகாதபடி கிருபைசெய்தருளும்; என் திவ்விய இரட்சகரான சேசுவே! இந்த விலைமதியாத புண்ணியத்தை அனுசரிக்க உமது விசேஷமான அனுக்கிரகம் வேண்டியிருக்கிறதினால் கற்பை விரும்புகிறவருங் கன்னியாஸ்திரிகளுக்கு நிறைந்த தயவுள்ள இராஜாவுமாகிய தேவரீர் பாதத்தில் இந்தத் தூய்மையான புண்ணியத்தைக் கேட்கவருகிறேன். உம்முடைய வரப்பிரசாதத்தினால் எத்தனையோபேர்கள் இவ்வுலகத்தில் சம்மனசுக்களைப்போலப் பரிசுத்தமாய் நடந்தார்

கள்; அவர்களும் என்னைப்போலப் பலவீனர்களாகத்தானே இருந்தார்கள்; ஆகையால் என் பலவீனத்தால் நான் தைரியமற்றுப் போக நியாயமில்லை. மனத்திடங் கொடுக்கிறவராகிய கர்த்தாவே! தேவரீர் அவர்களை உறுதிப்படுத்தினதுபோல என்னையுந் தூய நெறியில் உறுதிப்படுத்தியருளும். அவர்களால் ஆனதுபோல் உம்மைக்கொண்டு என்னாலும் எல்லா நலமுமாகக்கூடும். உமது தோத்திரத்துக்கும் என் இரட்சணியத்துக்கும் விரோதியாகிய சத்துரு தன் சோதனையால் என்னை மயக்குவித்து ஜெயிக்காதபடிக்கு அடியேன் இடைவிடாமல் சுறுசுறுப்போடே வேண்டிக்கொள்ளவும், என்மேலே காவல்காத்து எச்சரிக்கையோடு நடக்கவுந் தயைபுரியும். நான் என் புத்தி நினைவைத் திடமாய் ஒழுங்குப்படுத்தி என் பொறிகள் ஐந்தினையும் எந்நேரமும் அடக்கிப் பாவ சமயங்களையெல்லாந் தைரியமாக விலக்கி என்னை அசுத்தப்படுத்துவதான எல்லாவற்றையும் மகா அருவருப்புடனே ஆலோசித்து ஓர் அற்பக் குற்றத்தின் சாயலுக்கு முதலாய் அஞ்சி நுணுக்கமான பத்தியுடன் சமுத்திரையாய் நடந்து மிகப் பூச்சியமும், மழுங்குதற்கு எளிதுமாகிய இந்



தப் புண்ணியத்தைப் பழுதில்லாமற் காப்பாற்ற அனுக்கிரகஞ்செய்தருளும்.

மகா பரிசுத்தமுள்ள மாதாவே, எனக்கு அடைக்கலமாயிரும். அடியேனுக்காக உம்முடைய திருக்குமாரனை மன்றாடி எனக்குப் பரிசுத்தமான இருதயத்தைக் கொடுப்பித்தருளும். எனக்குக் காவலான சம்மனசானவரே, சோதனையிலென்னைக் கைவிடாமற் காத்தருளும்.—ஆமென்சேசு.

---

## சீவியத்தின் நிலைமையைத் தெரிந்து கொள்ளச் செபம்.

ஓ! பிதாவே! நீர் அடியேன்பேரில் வைத்திருக்கிற உமது சித்தத்தின் நோக்கத்தையும், என்னாத்தும இரட்சணியத்துக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற உமது உத்தம அபேட்சையையுந் தெரிவியும். அடியேன் சுவிசேஷத்திற் சொல்லியிருக்கிற வாலிபனோடு இரட்சிக்கப்பட என்ன செய்யவேணுமென்று கேட்க உமது திவ்விய ஒளியை எனக்குக் கட்டளையிட்டருள உம்மைப்பார்த்து மன்றாடுகிறேன். சீவியத்தின் அநேக நிலைமைகள் என்முன்

இருக்கிறபடியால் எதைப் பின்பற்றுகிறதென்று கண்டுணராமல் இருமனமுற்று உமது திவ்விய கட்டளை வருகிறவரையிலும் எதிர்பார்த்திருக்கிறேன். ஓ! ஆண்டவரே, உமக்கு மிகுந்த தாழ்மையோடு தடையின்றி என்னை முழுதுங் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன்.

ஓ! பிதாவே, அடியேன் உமது திரு ஞான கற்பனைகளை மீறுமலும், உமது தயாள தெருட்சிக்கு உண்மையற்றவனாய் இராமலுஞ் சிருஷ்டிகருடைய சித்தத்துக்கு விரோதமாய் உலக வீணாசையில் உழலாமலும் நடப்பித்து அனுக்கிரகஞ் செய்தருளும். ஊழியக்காரன் நடக்கவேண்டிய வழியைத் தெரிவிப்பது எசமானின் கடமையாகையால் உமக்குப் பிரியமான பாதையில் அடியேன் நடந்து உமக்குப் பணிவிடைபுரிய எனக்குக் கற்பித்தருளும். என் பகுதி உமது திருக் கரங்களிலிருக்கின்றதே, ஆகையால் நீர் என்னை நடப்பிக்காவிடில் நானே என் நடக்கைகளுக்கு மத்தியஸ்தனாகி எனக்கு நேரிடுஞ் சோதனைகளைக் கண்டுபிடிக்கப் பார்வை போதாமல் குருடனாகியிருப்பேனல்லோ? நான் உமது கட்டளைக்கலையத் தடைசெய்யமாட்டேன்.



பிதாவே! நீர் சாமுவேலென்னும் வாலிபனோடு சம்பாஷித்ததுபோல என் ஆத்துமத்தோடுஞ் சம்பாஷித்தருளும். பிதாவே, அடியேன் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கிறபடியாலே அடியேனுடன் பேசியருளும். பிதாவே, என் மீதி நாட்களுக்கு என்னை உமக்குப் பலியாக்கிக்கொள்ள உமது மாட்சிமைக்குச் சித்தமாயிருந்தால் நான் உமக்காகவே பலியாக உமது திருப் பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து ஆயத்தமாயிருக்கிறேன்.

ஓ! என்னாண்டவரே, என் தாய்தந்தைகளுடைய அன்பை ஆண்டு அவர்களை உமது நித்திய ஞானத்தின் கருத்துக்கிசைந்தவிதமாய் நடத்தத் தயைசெய்தருளும். பிதாவே, சத்தியத்தின் உப்பரிகையே, உம்மோடு நான் கலந்துபேச மிகவாய் அபேட்சிக்கிறேன். நானும் அவர்களும் உமது நிபந்தனைகளுக்கு உகந்த மேனாயாய்க் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளக் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

## சிறுவர்கள் தாய்தந்தையருக்காக வேண்டிக் கொள்ளும் ஜெபம்.

சுவாமீ! என் தாய் தந்தைகளை உமது நேசத்தினுடையவும், வல்லமையினுடையவுஞ் சாயலாக உண்டாக்கி என்னை எல்லாவற்றிலும் அவர்களுக்குக் கீழ்ப்படியவும் அவர்களை நேசிக்கவுங் கட்டளையிட்டீரே, சர்வத்துக்கும் வல்லவரான சர்வேசுரா, உமது கற்பனையானதை ஆசையோடும் முழு இருதயத்தோடும் நான் கைப்பற்ற எனக்கு உமது வரப்பிரசாதத்தைத் தந்தருளும். நான் அன்போடு அவர்களை நேசிக்கவுங் கனஞ்செய்யவும், அவர்களுடைய கட்டளைகளுக்கு ஜாக்கிரதையுடன் கீழ்ப்படிந்து அவர்களுடைய இஷ்டத்துக்கு இணங்கிநடக்கவும், எல்லாவற்றிலும் அவர்களுடைய க்ஷேமத்தை விரும்பி அவர்களுடைய தண்டனைகளைத் தாழ்ச்சியோடும், பொறுமையோடுஞ் சகித்துக்கொள்ளவும் எனக்கு உதவிசெய்தருளும். ஓ தேவனே! அகங்காரத்திலும், கலகத்திலும், வைராக்கியத்திலும், பிடிவாதத்திலும், சோம்பலிலும், அசட்டைத்தனத்திலுமிருந்து என்னை விடுவியும். என் எல்லாப் படிப்பினைகளிலும் வேலைகளிலும் என்னைச் சுறுசுறுப்புடையவ



னாகவுஞ் சோதனைகளில் பொறுமையுடையவனாகவுஞ் செய்தருளும். நான் அப்படியே என் ஜீவியகாலமுழுதிலும் என் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதர் மூலமாக உமது பிள்ளையென்கிற பெயருக்குப் பாத்திரமுள்ளவனாயிருப்பேனாக.—ஆமென்சேசு.

---

## தாய்தந்தைகள் செய்யவேண்டிய ஜெபம்.

மனுமக்களின் தந்தையே, இந்தப் பிள்ளைகளை எனக்குங் கொடுத்து என்வசத்தில் வைத்து உமக்கேற்கையாய் நடத்தவும், அவர்களை நித்திய ஜீவியத்துக்குக் கொண்டுவரவுஞ் செய்தீரே, இந்தப் பரிசுத்த ஊழியத்தையும், உக்கிராணக் காரியத்தையும் நிறைவேற்ற எனக்கு உதவியாக உமது ஞான வரத்தைத் தந்தருளும். நான் அவர்களுக்கு எதைக் கொடுக்கவேண்டியதோ அதையும், எதை நிறுத்தவேண்டியதோ அதையும் கற்பியும். எப்போது கண்டிக்கவேண்டியதோ அப்போது கண்டிக்கவும், எப்போது அரவணைக்கவேண்டியதோ அப்போது அரவணைக்கவுஞ் செய்வீராக. இன்னமுஞ் சாந்தகுணத்தில்

என்னைப் பலப்படுத்தியருளும். அவர்கள் பேரில் கவலையும் ஜாக்கிரதையுமுள்ளவளா யிருக்கவும் அந்தப் பிள்ளைகளுக்கு இளக்காரங் கொடுக்கிறதிலும், அதிகமாய்த் தண்டிக்கிற மூடத்தனத்திலுமிருந்து என்னை விடுவித்தருளும். வார்த்தையாலும், நடத்தையாலும் அவர்களை ஞானத்திலும் பத்தியிலும் கூர்மையாய்நடத்த எனக்கு உதவி செய்யும். அதனால் மோட்சவீடாகிய பரமராச்சியத்தில் பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் இராச்சியபாரஞ்செய்து நாங்கள் அளவறுக்கப்படாத நித்திய பேரின்ப பாக்கியத்தை அனுபவிக்கச் சேர்த்துக்கொள்ளும்.

ஓ! மோட்சவாசிகளுடைய பிதாவே! என் பிள்ளைகளை உம்மிடத்தில் ஒப்பிக்கிறேன். நீர் அவர்களுடைய கடவுளாகவுந் தகப்பனாகவுமிரும். எனது இரட்சணியத்துக்கு வேண்டிய ஞான வரங்களைத் தந்தருளுவதுடன் என்வசத்தில் வைத்திருக்கும் பிள்ளைகள் இவ்வுலக தந்திரங்களை ஜெயிக்கவும் சத்துராதியின் உள்ளிந்திரிய வெளியிந்திரிய சோதனைகளை எதிர்க்கவும் பசாசின் கண்ணிகளினின்று அவர்களை விடுவிக்கவுந் தயைபுரியும். அவர்கள் இருதயத்தில் உமது வரப்பிரசாதத்தைப்



பொழிந்து இஸ்பிரீத்துவின் கொடைகளைக் கொடுத்தருளும். அந்த அருளினால் அவர்கள் எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் உயரவுங்கடவார்கள். அப்படியே அவர்கள் விசுவாசத்தோடு உமக்கு ஊழியஞ்செய்தபின் உம்மோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் இராச்சியபாரஞ்செய்கிற எங்களாண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய பேறுபலன்களின்மூலமாய் மோட்ச இராச்சியத்திலே உமது சமுகத்தில் வந்து ஆநந்த பாக்கியத்தை அடையக்கடவார்கள்.

—ஆமென்சேசு.

---

## புருஷன் பெண்ஜாதிகள் வேண்டுஞ் ஜெபம்.

சேசுக்கிறீஸ்துநாதருக்கும், திருச்சபைக்குமுள்ள நேச ஐக்கியத்தைப்போல உலக பரம்புதலுக்காகவும் அந்நியோந்நிய நேசத்துக்காகவும் பரிசுத்த மெய்விவாகத்தை அர்ச்சித்தருளின சர்வேசுரா, அதின் ஆசீர்வாதத்தின் வரத்தை இருவரும் வணக்கத்தோடு ஏற்றுக்கொண்டு அதன் கடமைகளை நடத்தக் கிருபைபுரியும். எங்களுடைய ஐக்கியத்தை இடை

விடாமல் ஆசீர்வதிக்கவும், அதனால் நாங்கள் இருவரும் எல்லாக் கடமைகளையுஞ் சமாதானத்தோடும், சிநேகத்தோடும், பிரமாணிக்கமாய் எங்களில் ஒருவருக்கொருவர் நடத்தவும் உம்மை மன்றாடுகிறேன். பிரிபடக்கூடாத கட்டினால் கட்டின அந்தப் பரிசுத்தக் கட்டைப் பலவீனப்படுத்தத்தக்க எவ்வித துஷ்டகுணத்திலுங் கெட்ட கிரியையிலுமிருந்து என்னை விடுவித்தருளும். எப்படியாகிலும் என் சுய இஷ்டத்தையும், பிரியத்தையும் எதிர்த்து உமக்குப் பிரியப்பட நடக்கச் சுறுசுறுப்புள்ளவளாகவும், ஆசையுள்ளவளாகவுஞ் செய்தருளும். இவ்வுலக சோதனை துன்பங்களினால் உமதுபேரில் முறுமுறுத்து எல்லாவற்றிற்குங் காரணரும், ஈகிறவருமாயிருக்கிற உம்மை பூலோக வாழ்வினால் மகிழ்ந்துபோய் மறவாதிருக்கச்செய்யும். பொறுமையாலும், சாந்தகுணத்தாலும், ஜெபத்தாலும், நன்றியறிதலாலும் உமக்குக் கீழ்ப்படிந்திருக்க என்னை ஆசீர்வதித்து உமக்குத் தகுந்தவளாயிருக்கவுஞ் செய்தருளும்.—ஆமென் சேசு.

---



## மனைவியின் ஜெபம்.

அர்ச். தேவமாதாவே! நீர் சூசையப்பரோடு வாசம்பண்ணும்போது அவரது மனங்கோணாமல் நடந்துகொண்டீரே, ஏவையினுடைய மாசுதாங்காத நீர் இப்படி நடக்க, உன் புருஷனுக்குக் கீழாயிருப்பாயென்று ஏவைக்கு விதித்த நியந்தனை என்பேரில் இருக்குதே, ஆகையால் நான் இராக்கேலைப்போலப் புருஷன் சிநேகத்துக்குரியவளாயும் இரபெக்காளைப்போலச் சமுசார தொந்தரைகளில் விவேகமுள்ளவளாகவும், சாராயி என்பவளைப்போல எல்லாத்திலும் பிரமாணிக்கமுள்ளவளாகவுமிருக்க உமது திருக்குமாரனை மன்றாடும். மேலும் என் மாமனார் மாமியார் முதலான பெரியவர்களாலே எனக்கு இப்புவியில் நேரிடுந் துன்பதுரிதங்களைப் பொறுமையோடு சகிக்கவும், பிள்ளைகளாலேயும், உறவின்முறையார்களாலேயும் வரப்பட்ட சஞ்சலங்களை ஒறுப்போடு பொறுக்கவும் வேண்டிய வரப்பிரசாதங்களை எனக்கு வாங்கித் தந்தருளும்.—ஆமென் சேசு.

---

## கர்ப்ப ஸ்திரீகள் செய்யத்தகுஞ் செபம்.

கன்னியுந் தாயுமான பரிசுத்த மரியாயே! நீர் சேசுநாதரை உமது திருவயிற்றில் தாங்கிக்கொண்டிருந்த நாளெல்லாம் ஆநந்த சந்தோஷத்தில் அமிழ்ந்திக் கடைசியாய்ப் பேறுகாலமானபோது வாக்குக்கெட்டாத உந்நத பரவசத்தில் பிரவேசித்துத் திவ்விய பாலகனைப் பெற்றீரே! அந்தப் புத்திக்கெட்டாத ஆநந்தத்தைப் பார்த்து என்பேரில் இருபையாயிரும். நானோ பாவத்திற் பிறந்து சகலமான உபத்திரவங்களுக்கும் உள்ளாயிருக்கிறேன். ஏவைக்கிட்ட ஆக்கினை என்பேரிலுமிருக்கிறது; ஆகையால் என் மிடிமையைப் பார்த்து என் பலவீனங்களின்பேரில் இரக்கமாயிருந்து என் வயிற்றிலிருக்கிற சிசுவுக்கு யாதொரு பொல்லாப்பின்றி கொஞ்சம் லேசான வருத்தத்தோடு பிரசவிக்க அனுக்கிரகஞ் செய்தருளும். மேலும் அந்தப் பாலகனுக்குப் புத்தி சித்தம் மேன்மையுள்ளதாகி உமது திருக் குமாரனுடையவும், உம்முடையவும் ஊழியத்திலே நிலைகொண்டு பேரின்ப பாக்கியத்தின் வழியிலே நடக்க உமது திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—

ஆமென்சேசு.



## கர்ப்ப வாதைப்படுகிறவர்களுக்காக வேண்டுதல்.

நீதியுந் தயையுமுள்ள சர்வேசுரா! ஆதித் தாயாகிய ஏவை உமது கற்பனையை மீறிச் செய்த பாவத்துக்காக, அவளாற் பலுகுகிற சகல ஸ்திரீ ஜனங்களும் கர்ப்ப வாதையோடு பிள்ளைபெறத் தீர்வையிட்டருளினீரே, அந்தத் தீர்வை பலித்து இந்த ஸ்திரீயும் இவள் வயிற்றிலே உமது கருணையால் உற்பவித்த பிள்ளையும் மகா வருத்தத்தை அனுபவிக்கிறதினாலே கருணா சமுத்திரமான பிதாவே! தேவரீர் தயாபாரக் கடாக்ஷத்தால் இவளை நோக்கி உம்முடைய திருக்குமாரனுடைய பரிசுத்த மாதா ஒரு வருத்தமுமில்லாமல் அற்புதமாய்ப் பிறவிநோக்க வரங்கொடுக்கத் திருவுளமானதுபோல, அந்த அமலோற்பவியான கன்னி மரியாயியுடைய பேறுகளினாலேயும், வேண்டுதலினாலேயும், இந்த ஸ்திரீயின்மேல் இரக்கம் வைத்து இவள் படுகிற கடின வாதையை நீக்கி இரட்சித்தருளுஞ் சுவாமீ. அப்படியே சுகமாய்ப் பிள்ளைபெற்று உம்மை ஸ்துதிக்கக் கோவிலுக்குச் செல்லவும், பெற்ற பிள்ளையை ஞானஸ்நானத்தினால் தேவரீருக்கே பிள்ளையாகச் செய்து அதை உமது திருப்

பணிவிடைக்கு வளர்க்கவுங் கிருபை செய்தருளும்.—ஆமென்சேசு.—ஒரு பரமண்டல மந்திரம்.

---

## விதவைகள் வேண்டிக்கொள்ளுஞ் செபம்.

எல்லாக் காரியங்களையுஞ் சர்வ வியாபகரா யிருந்து நடத்துகிற சர்வேசுரா, நீர் என்னை விதவையாயிருக்கச் சித்தமானீரோ, நான் எல்லாத் துன்பங்களையும் பொறுமையோடு அனுபவிக்கவும், அதின் பலனையும் அதின் பிரயோசனத்தையும் கிறீஸ்துநாதர் மறைக்குத் தக்க யூகித்தனமாய்ப் பிரயோகிக்க எனக்கு அருள்புரிந்தருளும். மெய்யான விதவையாயிருந்து உலக காரியங்களை வெறுத்துத்தள்ளி உம்மிடத்தில் என் நம்பிக்கையெல்லாம் வைக்கிறேன். பாக்கியமுள்ள சீவியத்துக்கு உதவுகிற நற்காலத்தை விர்த்தி செய்ய எனக்குக் கிருபைபுரியும். அன்றியும் நீர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தை நான் நன்றாய்ப் பிரயோகிக்கவும், நானிந்தப் பரதேசத்தில் வசிக்கும்போதே உமதிரக்கத்தைத் தேடிக்கொள்ளவும், நான் ஆவலோடு தேடித் திரிகிற நித்திய மோட்ச ஆனந்த பாக்கியத்



துக்கு என்னைப் பங்காளியாக்கிக்கொள்ளவும் என் காலத்தைப் பத்தியிலும் சிநேகத்திலும் தேவ ஊழியத்திலுஞ் செலவழிக்க எனக்கு வரமளித்தருளும். பூலோக விழலான காரியங்களை வெறுத்துத் தள்ளி முன் கடந்த பாவங்களையும், மூடத்தனத்தையும், ஊதாரிச் செலவையும் பரிகாரஞ் செய்யவும், இதுவரைக்கும் பூலோக காரியத்திலும், சோம்பேறித்தனத்திலும், கேடான முயற்சியிலும் நாள் கழித்ததற்குப் பதிலாக இனிமேல் ஒழிவான நேரத்தைச் செபத்திலும், நற்கிருத்தியங்களிலுஞ் செலவழிக்கவும், என் பாவத்தால் காயப்பட்டதற்குப் பிராயச்சித்தமாக என்னை நானே தண்டித்துக்கொள்ளவும், என்னுடைய முயற்சிகளையெல்லாம் நித்திய சீவியத்துக்கு வழிபடுத்த நான் கற்றுக் கொள்ளவும், நான் என் காலத்தை வீணிற் செலவழித்ததினால் அடைந்த நஷ்டத்தை நிவர்த்தி செய்யவும், உலக ஆறுதலைப் பார்க்கிலும் நான் உம்மிடத்தில் அதிக ஆறுதலடையவும், உம்முடைய வரப்பிரசாதத்தால் என்னுடைய பலவீனங்களையெல்லாம் போக்கிக் கொள்ளவும் எனக்கு அனுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

## வயது சென்றவர்கள் செபிக்கத்தக்க செபம்.

ஆண்டவரே! என் காலந்தனெல்லாம் என்னவகையாய்ப் போனதென்றறியேன்! இப்போதுதான் பிறந்து விளையாடிக் குடித்தனக் காரியங்களைச் செய்துகொண்டிருந்ததாக என் ஞாபகத்திலிருக்கின்றது. இந்தச் சொற்ப காலத்தில் எத்தனையோவிசை என் வாக்கினாலுங் கிரியைகளினாலும் வீணாசைகளினாலும் உமக்குத் துரோகம் பண்ணினேன். இப்போது எனக்குக் கல்லறை கிட்டி வருகிறது. பயங்கரமான நடுத்தீர்வையிலே என்ன சொல்லப்போகிறேனென்று பயப்படுகிறேன். நான் செய்த பாவங்களினாலே என் புத்தி சித்தமானது அழுக்கடைந்துபோயிருப்பதால் கடைசி காரியங்களைத் தெளிவாய்ச் சரியாய் யோசித்துத் தியானிக்கமுதலாய் அறியேன். ஆகையால் தேவரீர் என்பேரிற் கிருபைகூர்ந்து நான் சாகுமுன் என் பாவங்களை நினைத்தழுது பிரலாபித்து அதுகளுக்கான தபசுசெய்து உமது நீதிக்கு உத்தரித்து நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து அவஸ்தைப்பூசுதலைப் பெற்று நல்ல மரணமடைய அனுக்கிரகஞ் செய்தருள உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.



# அடக்கம் செய்யும் ஒழுங்கு.

## பிரேதம் எடுக்குமுன் செபம்.

சுவாமீ! இவனுக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தை கட்டளையிட்டருளும். நித்திய காலத்தின் பிரகாசம் இவனுக்குப் பிரகாசிக்கக்கடவது.—ஆமென்சேசு.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ இவன்மேல் தயையாயிரும். ஒருபர.

நரகவாசலிலே நின்று இவனுடைய ஆத்துமத்தைக் கைதூக்கி இரட்சித்துக்கொள்ளும் சுவாமீ. இவன் சமாதானத்தில் இளைப்பாறக்கடவானாக.

முதல்.—சுவாமீ! நாங்கள் இந்த ஸ்தலத்திலே இருந்து கூப்பிடுகிற சத்தம்,

துணை.—தேவரீருடைய சந்நிதி மட்டும் வரக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமீ! தேவரீருடைய அடியானாகிய இவனுடைய ஆத்துமத்தின் பாவ அசு

த்தத்தைப் போக்கி, உலகத்துக்கு இவன் செத்தவனாயிருந்தாலும், பரகதியில் உமக்குப் பிழைக்கிறவனாயிருக்கவும், சரீரத்தின் துர்ப்பலத்தினால் இவன் செய்த குற்றங்கள் உமது மட்டில்லாத கிருபாகடாட்சத்தால் பொறுக்கப்படவும், அநுக்கிரகம் செய்தருள வேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளுஞ் சுவாமீ. ஆமென்சேசு.

---

### கல்லறையில் சென்றவுடனே செபம்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ தயையாயிரும்.—பர.

சுவாமீ எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

சுவாமீ எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமீ! இரக்கம் புரிகிறதும், பொறுத்தல் அளிக்கிறதும், எப்பொழுதும்



உமது திருவுளத்தியல்பாமே. ஆதலால் இன்று இவ்வுலகத்தினின்று அழைக்கத் தேவரீர் திருவுளமாயின இந்த அடியானுடைய ஆத்துமத்தைச் சத்துருக்களின் வசமளிக்காமலுங் கடைசிபரியந்தம் அதைக் கைவிடாமலுமிருக்க உம்மைப் பிரார்த்திக்கிறோம். தேவரீரை அத்தியந்த விசுவாசத்தோடு நம்பியிருக்கிறபடியால் இந்த ஆத்துமம் பாதாளவாதனை அநுபவியாமல் நித்தியானந்தத்தை அடையும்படி பரிசுத்த தூதர் அதைக் கைப்பற்றிக் கொண்டுபோய் பரகதியாகிய நித்திய பேரின்ப நாட்டிற் சேர்த்தருளக் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ. இந்த மன்றாட்டுக்களையெல்லாஞ் சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும்.—ஆமென்சேசு.

---

### குழியில் வைக்குமுன் செபம்.

முதல்.—சுவாமீ! தேவரீர் நரக வேதனையிலேயும் சகல உபத்திரவங்களிலேயும் நின்று,

துணை.—உம்முடைய அடியானாகிய இவனுடைய ஆத்துமத்தை இரட்சித்தருளுஞ் சுவாமீ.

சுவாமீ! தேவரீர் ஏனோக் எலியாஸ் என்பவர்களைச் சாதாரணமான உலக சாவிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவனுடைய ஆத்துமத்தை இரட்சித்தருளுஞ் சுவாமீ.

சுவாமீ! தேவரீர் நோயனை ஜலப்பிரளயத்திலே நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் அபிராமென்பவனை ஊரொன்கிற பட்டணத்தின் அக்கினியானத்திலே நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் ஈசாக்கென்பவனைத் தன் தகப்பன் கையால் பலியாகிறதிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் லோத்தென்பவனைத் தரித்திரத்திலுந் துன்பத்திலும் நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் சோதோமென்கிற பட்டணத்திலும், அந்தப் பட்டணத்தைச் சுட்டெரித்த அக்கினியிலும் நின்று லோத்தென்பவனை இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.



சுவாமீ! தேவரீர் எஜிப்து தேசத்தின் இராஜனான பாரவோனிடத்தினின்று மோயிசனை இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் தாவீதென்கிறவனைக் கோலியாத்தென்கிற இராட்சதன் கையிலும், சவுல் என்கிற இராயன் கையிலும் நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் தனியேல் என்பவனைச் சிங்கங்களின் கெபியிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் இரக்கமற்ற அரசன் கையிலும் அவன் சூளைத் தீயிலும் நின்று மூன்று வாலனை இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் சூசானாள் என்கிற புண்ணியவதியை அவதூரிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! தேவரீர் அர்ச். இராயப்பனையும் சின்னப்பனையும் சிறைக்கூடத்திலும் விலங்கிலும் நின்று இரட்சித்ததுபோலே,—இவ. ஆத். இரட். சுவாமீ.

சுவாமீ! கன்னியாஸ்திரீயும் வேதசாட்சியுமாகிய தேக்ளாளென்பவளை மகா நிஷ்டூர ஆக்கினைகளிலே நின்று இரட்சித்ததுபோலே, —இவ. ஆத். இரட். சுவாமீ.

தேவரீருடைய அடியானாகிய இவனாத்துமத்தையும் இரச்சித்து, உமது மோட்ச இராச்சியத்தின் செல்வ பாக்கியங்களுக்கும் நித்தியானந்த சந்தோஷத்துக்கும் பங்காளியாயிருக்கக் கிருபை செய்தருளும்.

ஆமென்சேசு.

---

## குழியில் வைத்தவுடனே சொல்லுகிற செபம்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ தயையாயிரும்..................பர. தீர்த்தம் தெளிக்கவும்.

சுவாமீ! தேவ திருவுளத்தைப் பத்தியோடு அங்கிகரித்திருந்த இவன் தன் குற்றங்களுக்கேற்ற ஆக்கினை அனுபவியாமல் மன்னிப்பை அடையவும், வானோர்களோடுகூட மோட்ச இராச்சியத்தில் நிரந்தரமும் உம்மை ஸ்துதி புரியவும், மரித்த உம்முடைய அடி



யானாகிய இவனுக்குக் கிருபைகூர்ந்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

சுவாமீ! இவனுக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தைக் கட்டளையிட்டருளும். நித்தியகாலத்தின் பிரகாசம் இவனுக்குப் பிரகாசிக்கக்கடவது. ஆமென்சேசு.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ இவன்மேல் தயையாயிரும்.—பர. தீர்த்தம் தெளிக்கவும்.

---

## உத்தரிக்கிற ஆத்துமாக்களின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,—மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,—மரித்த விசுவாசிகளுக்காக வேண்.

கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,

அர்ச். மிக்கயேலே,

* தூதரும் அதிதூதருமாகிய சகல சம்மனசுகளே,

* நவவிலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுகளே,

அர்ச். ஸ்நாயகு அருளப்பரே,

அர்ச். சூசையப்பரே,

* பிதாப்பிதாக்களுந் தீர்க்கதரிசிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

அர்ச். இராயப்பரே,

அர்ச். சின்னப்பரே,

அர்ச். அருளப்பரே,

* அப்போஸ்தலருஞ் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

அர்ச். முடியப்பரே,

அர்ச். லவுரேஞ்சியாரே,

* வேதசாட்சிகளான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

அர்ச். கிறகோரியாரே,

நீங்க ளெங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்.

---

* இவ்வடையாளமிட்டிருக்கிற இடங்களிலெல்லாம் வேண்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லவும்.



அர்ச். அமிர்தநாதரே,

அர்ச். அகுஸ்தினுவே,

அர்ச். இயேரோனிமுவே,

* மேற்றிராணிமார்களும் ஸ்துதியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

* வேதவித்தியாபாரகரான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

* குருக்களும் ஆசீரியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

* சந்நியாசிகளுந் தபோதனர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

அர்ச். மரியமக்தலேனையே,

அர்ச். கத்தரீனுளே,

அர்ச். பார்பரம்மாளே,

* கன்னியாஸ்திரீகளும் விதவைகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

* ஆண்டவருடைய திருவடியார்களான ஸ்திரீபுமான்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

நீங்க ளெங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்.

தயாபரராயிருந்து,—அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

தயாபரராயிருந்து,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

சகல பொல்லாப்புகளிலே நின்று,
உமது கோபத்திலே நின்று,
உமது நீதி அகோரத்திலே நின்று,
பசாசின் வல்லமையிலே நின்று,
கடூர வியாகுலத்திலே நின்று,
கொடிய ஆக்கினையிலே நின்று,
மரணத்தின் பயங்கரமான இருளிலே நின்று,
அக்கினிச் சுவாலையிலே நின்று,
துயரமான அழுகையிலே நின்று,
உத்தரிக்கிற ஸ்தலத்துச் சிறைச்சாலையிலே நின்று,
தேவரீருடைய திரு மனுஷாவதாரத்தைப்பார்த்து,
தேவரீருடைய மாசில்லாத உற்பவத்தையும் பிறப்பையும் பார்த்து,
தேவரீருடைய மதுரமான நாமத்தைப் பார்த்து,
தேவரீருடைய பாலத்துவத்தைப்பார்த்து,
தேவரீருடைய ஞானஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,
தேவரீருடைய மிகுந்த தாழ்ச்சியைப் பார்த்து,

அவர்களை இரட்சித்துக்கொள்ளும் சுவாமி.



தேவரீருடைய சுறுசுறுப்பான கீழ்ப்படிதலைப் பார்த்து,
தேவரீருடைய கிருபையின் மிகுதியையும் அளவில்லாத சிநேகத்தையும் பார்த்து,
தேவரீருடைய கொடூர உபத்திரவங்களையும் நிர்ப்பந்தங்களையும் பார்த்து,
தேவரீருடைய இரத்த வேர்வையைப் பார்த்து,
தேவரீர் கட்டுண்ட கட்டுகளைப்பார்த்து,
தேவரீர் பட்ட அடிகளைப்பார்த்து,
தேவரீருடைய திரு முண்முடியைப் பார்த்து,
தேவரீருடைய திருச் சிலுவையைப் பார்த்து,
தேவரீருடைய கடூரமான மரணத்தைப் பார்த்து,
தேவரீருடைய ஐந்து திருக்காயங்களைப் பார்த்து,
எங்கள் மரணத்தை ஜெயித்தழித்த தேவரீருடைய அவமானமுள்ள மரணத்தைப் பார்த்து,
தேவரீருடைய விலைமதியாத திரு இரத்தத்தைப் பார்த்து,

அவர்களை இரட்சித்துக்கொள்ளும் சுவாமி.

தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,

தேவரீருடைய அதிசயமான ஆரோகணத்தைப் பார்த்து,

தேற்றரவு பண்ணுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தைப் பார்த்து,

நடுத்தீர்க்கிற நாளிலே,

பாவிகளாயிருக்கிற நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்,

பாவியாயிருந்த மக்தலேன் அம்மாளுக்குப் பாவ மன்னிப்புத் தந்தவரும் நல்ல கள்ளனுடைய மன்றாட்டைக் கேட்டவருமாகிய தேவரீரை மன்றாடுகிறோம்,

மரணத்தின் திறவுகோலையும் நரகத்தின் திறவுகோலையுங் கைக்கொண்டிருக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,

இரட்சண்ணியத்துக்கு உரியவர்களை இலவசமாய் இரட்சிக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களை உத்தரிக்கிற ஸ்தலத்திலே நின்று இரட்சித்தருளவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,



பூலோகத்தில் யாரும் நினையாத சகல ஆத்துமாக்களுக்குந் தயவுசெய்யவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

கிறீஸ்துநாதரிடத்தில் இளைப்பாறுகிற சகலருக்குங் குளிர்ச்சியும் பிரகாசமுஞ் சமாதானமுமுள்ள ஸ்தலத்தைக் கட்டளையிட்டருள தேவரீரை மன்றாடுகிறோம்,

பாவதோஷத்தால் அவர்களுக்கு உண்டாகிற ஆக்கினையைக் குறைக்கவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

அவர்கள் துயரத்தைச் சந்தோஷமாக மாற்றியருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,

அவர்களுடைய ஆசை நிறைவேறத் தயை புரியவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

அவர்கள் உம்மைப் புகழ்ந்து ஸ்துதி பலியை உமக்குச் செலுத்தும்படி செய்தருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,

உம்முடைய அர்ச்சியசிஷ்டவர்களின் கூட்டத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சர்வேசுரனுடைய குமாரனே, தேவரீரை மன்றாடுகிறோம்,

கிருபையின் ஊறணியே தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ தயையாயிரும்.—பர.

நரக வாசலில் நின்று,—அவர்களுடைய ஆத்துமங்களை மீட்டு இரட்சித்தருளும்.

சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக,—அப்படியாகக்கடவது.



முதல்.—சுவாமீ, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

துணை.—எங்கள் அபயசத்தம் தேவரீருடைய சந்நிதிமட்டும் வரக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சகல விசுவாசிகளுடைய சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய சர்வேசுரா, மரித்த உமது அடியார்களுக்காகச் செய்யப்படுகிற பத்தியுள்ள மன்றாட்டுக்களை அங்கீகரித்து, அவர்கள் மிகுந்த ஆவலோடே இச்சிக்கிற பாவ மன்னிப்பைக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். சதாகால முஞ் சீவியரான சர்வேசுரா, இந்த மன்றாட்டைத் தயவோடே கேட்டருளுஞ் சுவாமீ.

நித்திய பிதாவே! பெற்றோர், பந்துக்கள், சிநேகிதர், உபகாரிகள் முதலியவர்களைத் தக்க விதமாய் நேசித்து அவர்களுக்கு வேண்டிய நன்மை செய்யக் கற்பித்தருளினீரே. ஆகையால் எங்களைப் பெற்று அன்போடு வளர்த்து ஆதரித்தவர்களும் பற்பல உபகாரம் எங்களுக்குச் செய்தவர்களும் எங்கள் பந்துக்கள் சிநேகிதர் முதலானவர்களும் வேதனை நீங்கி நித்தியகாலம் உம்மைச் சந்

தோஷமாய்த் தரிசித்துக்கொண்டிருக்கத் தேவரீர் கிருபை செய்தருளவேணுமென்று மன்றாடுகிறோம்.

முதல்.—மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளுவோமாக.

துணை.—நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ ; முடிவில்லாத பிரகாசமும் அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

கிருபைதயாபத்து மந்திரம் (84-ம் பக்கம் காண்க.)

---

## உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள ஆத்துமங்களுக்கு செபம்.

திவ்விய சேசுவே! உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமங்கள்பேரில் இரக்கமாயிரும். தாவீது அரசனின் புத்திரனாகிய சேசுவே! சிலுவைப் பாரத்தால் அதிகரித்த உமது திருக் காயங்களின் கொடிய வேதனைகளைப் பார்த்து, உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்கள்பேரில் இரக்கமாயிரும். சுவாமீ தேவரீரன்று சிலுவைப் பீடத்தில் பலியாகும் நே-



ரம் பச்சாத்தாபக் கள்ளனுக்கு கிருபைபுரிந்ததுபோல, இந்த ஆத்துமங்களின்பேரில் இரக்கமாயிருந்து, அவர்களை உமது பிரத்தியட்ச தரிசனையின் பாக்கியத்தில் சேர்த்தருளும். அங்கே சகல அர்ச்சியசிஷ்டவர்களோடேயும் சம்மனசுக்களோடேயும் அவர்கள் சதா காலமும் தேவரீரை வாழ்த்தி ஸ்துதித்துக் கொண்டிருப்பார்கள். ஆமென்சேசு.

உன்னதத்தில் வீற்றிருக்கும் பிதாவே! உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமங்களுக்காக, திவ்விய சேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். சுவாமீ! பரிசுத்தரோ, சர்வ வல்லப பரிசுத்தரோ, அச்சயரான பரிசுத்தரோ, சுவாமீ! எங்கள்மேல் இரக்கமாயிரும். பாவிகளுக்குப் பொறுத்தலைத் தந்தருளும். மரித்த சகல விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். ஆமென்சேசு.

(நாள் 1-க்கு 300-நாள் பலன்.)

## காணிக்கை சேபம்.

மிகவும் பரிசுத்த கன்னிமரியாயே! உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்கள்பேரில் இரக்கமிகுந்த தேற்றரவு மாதாவே! அடியேன் இதோ உமது திருப் பாதத்தண்டையில் சாஷ்டாங்கமாய் விழுந்து பிரார்த்தித்து ஒப்புக்கொடுக்கும் காணிக்கை என்னவென்றால், என் அறுதினக் கிரிகையினாலே நான் அடையக்கூடிய பூரண பேறுபலன்களையும், என் மரணத்துக்குப்பின் எனக்காக ஒப்புக்கொடுக்கப்படும் ஜெப தப பலன்களையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். மரித்த விசுவாசிகளின் ஆத்துமங்களின் நன்மைக்காகத் தேவரீர் சித்தம்போல் அவைகளைப் பிரயோகிக்கக் கிருபைபுரிந்தருளும். தற்காலத்திலும் பிற்கால நித்தியத்திலும் எனக்கு வரக்கூடிய நன்மை பலன்களையெல்லாம் சுயநல நாட்டமின்றி தாயின் நேசமுள்ள உமது பராமரிப்பிலேயே முழுதும் ஒப்படைத்துவிடுகிறேன். உமது திருக் குமாரனாகிய ஆண்டவர் தமது கிருபை இரக்கத்துக்கு அல்லது நீதிக்கேற்றபடி உமது திருக் கரங்களின் வழியாய் அடியேனுக்கு நியமித்தனுப்பும் நன்மை தின்மைகளையெல்லாம் மனப்பூரணமான அமைதி



லோடு இப்போதே கையேற்றுக்கொள்ளுகிறேன். ஆமென்சேசு.

---

## பாலர் அடக்கம்.

இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும் சர்வேசுரனுடைய திரு நாமம் வாழ்த்தப்படக்கடவது.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ தயையாயிரும்........பர. தீர்த்தம் தெளிக்கவும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபமும் அளவற்ற தயாளமுமுள்ள சர்வேசுரா! ஞானஸ்நானத்தினாலே ஞானப் பிறப்பை அடைந்து, இந்தப் பரதேசத்தை விட்டு நீங்குகிற குழந்தைகளுக்குச் சொந்தப் புண்ணிய பேறுகள் ஒன்றுமில்லாதிருந்தாலும் தேவரீர் உடனே அவர்கள் எல்லாருக்கும் நித்திய பேரின்ப சீவியத்தைத் தந்தருளுகிறதுபோல, இந்தப் பிள்ளையின் ஆத்துமத்துக்கு இன்று தந்தருளினீர் என்று விசுவசிக்கிற அடியோர்கள் எப்பொழுதும் கன்னியாஸ்திரீயாயிருக்கிற அர்ச். மரியாயி

னுடைய மன்றாட்டினாலும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதலினாலும், இவ்வுலகத்தில் பரிசுத்த இருதயத்தோடு உம்மைச் சேவிக்கவும், பரகதியில் முத்தரான மாசில்லாத குழந்தைகளோடுகூடத் தேவரீரைச் சதாகாலமுந் தரிசிக்கவும், எங்களுக்குக் கிருபை செய்தருளுஞ் சுவாமி. இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுநாதருடைய திரு முகத்தைப் பார்த்துத் தந்தருளும்.

ஆமென்சேசு.

பின்பு அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை சொல்லவும். (80-ம் பக்கம் காண்க.)

---

## குழியில் வைத்தவுடனே சொல்லுகிற செபம்.

வாலருங் கன்னியரும் பாலரோடு விருத்தருஞ் சர்வேசுரனுடைய நாமத்தை ஸ்துதிக்கக்கடவார்கள்.

சுவாமி கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமி தயையாயிரும்..............பர.

மூத.—பாலர்களை நமதண்டையில் வர விடுங்கள்.



துணை.—ஏனெனில், மோட்ச இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வத்துக்கும் வல்லவருமாய் நித்திய ஜீவியருமாய் மாசற்ற கற்புடையோருக்குப் பிரசன்ன கருணையுள்ளவருமாயிருக்கிற சர்வேசுரா! தேவரீர் இந்தப் பாலனுடைய ஆத்துமத்தை இன்று மோட்ச இராச்சியத்துக்கு அழைத்தருளக் கிருபை செய்தீரே; அடியோர்களுக்குங் கிருபை செய்து நாங்கள் பாவதோஷமின்றிச் சீவித்து உம்முடைய உபத்திரவமான திருப்பாடுகளின் பலன்களினாலும், மோட்ச பாக்கிய சம்பன்னரான அர்ச். மரியாயிமுதல் சகல மோக்ஷவாசிகளுடைய வேண்டுதலினாலும், உம்மாலே தெரிந்துகொள்ளப்பட்ட சகல அறிவோர்களோடு முடிவில்லாத மோட்ச இராச்சியத்தில் களிகூர்ந்திருக்க அனுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

கிருபைதயாபத்து மந்திரம் (84-ம் பக்கம் காண்க.)

## காணிக்கைச் செபம்.

நித்திய பிதாவே! தேவரீருடைய மகா நேச குமாரனாகிய சேசுநாதர் தம்மை உமக்கு ஒப்புக்கொடுத்துச் சிலுவையில் செலுத்தினதும் இப்போது இப்பீடத்தில் புதுப்பிக்கிறதுமாகிய பலியை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உம்மை ஆராதிக்கவும், உம்முடைய மகத்துவத்துக்குச் சரியானபடி உம்மைத் துதிக்கவும், எண்ணிக்கையில் அடங்காத உம்முடைய உபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தவும், கணக்கிடப்படாத எங்கள் பாவங்களால் உமக்குண்டான கோபத்தைத் தணிக்கவும், தக்கபிரகாரமாய் அவைகளைப் பரிகாரம் பண்ணவும், எனக்காகவும், திருச்சபைக்காகவும், சமஸ்த உலகத்துக்காகவும், உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காகவும் உம்முடைய இரக்கத்தை மன்றாடவும் கோரிக்கொண்டு இந்தப் பலியையும், உலகமெங்குஞ் செய்யப்பட்ட பூசைகளையும், இனி செய்யப்படும் பூசைகளையும், படைப்புண்ட சகல வஸ்துக்கள்பேராலும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென் சேசு.

பூசை நேரத்தில் இந்தச் செபத்தை வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு 3-வருஷப் பலன்.



## கொள்ளைநோய் அல்லது விஷபேதி காலத்தில் ஜெபிக்கும் ஜெபம்.

மகிமைப்பிரதாபம் பொருந்திய அர்ச். ஆரோக்கியநாதரே! கொள்ளைநோய் விஷபேதி முதலிய கொடிய ஆக்கினைகள் எங்கள் மேல் வராதபடிக்கு, இரக்கமிகுந்த தேவ சிம்மாசனத்துக்கு முன்பாக உமது செல்வாக்குள்ள மன்றாட்டுக்களால் மனுப்பேசக் கிருபைபுரிந்தருளும்.

எங்களுக்கு நேரிடும் சரீரத்துக்கடுத்த சகல தொத்து நோய்களையும், விசேஷமாய் எங்கள் ஆத்துமத்துக்கு வரக்கூடிய எவ்வித மோசமான வியாதிகளையும் விலக்கி, எங்களை ஆதரித்து நடத்தவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென் சேசு.

---

## மழைக்காக வேண்டுஞ் செபம்.

தப்பில்லாத கிரமத்தோடு சகலத்தையும் நடப்பிக்கிற சர்வேசுரா, நாங்கள் பிழைக்கவும், நடக்கவும், இருக்கவுங் காரணரான கர்த்தாவே, எங்களுக்குப் போதுமானமட்டுந் தகிமாரி பெய்யவுந் தவச தானிய முதலான சம்பத்துகள் ஓங்கி அதிகரிக்கவுங் கிருபை செய்தருளும். நாங்கள் அதிக தாற்பரியத்

தோடு நன்றியறிந்து தர்ம நெறியில் நடந்து உமக்குத் திருப்பணிபுரிந்து மோட்ச சம்பத்தை நாடி அடைய அநுக்கிரகித்தருளுஞ் சுவாமீ. இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும்.—ஆமென்சேசு.

---

## கடைசி வேண்டுதல்.

மட்டில்லாத தயைசுரூபியாயிருக்கிற நித்திய சர்வேசுரா, உமக்கு மிகவும் பிரியமுள்ள திருக்குமாரன் மனோவாக்குக்கெட்டாத கொடிய வேதனைப்படவும், அவர் படும் வேதனையைக் கண்டு அவர் திருத்தாயார் சொல்லிலடங்காத வியாகுலப்படவும், எங்கள் பாவம் காரணமாகையால் நாங்கள் பாவத்தின் அகோரத்தைக்கண்டு அஞ்சி நடுங்கி மனஸ்தாபப்படவும், இனி ஒருநாளும் பாவத்தைச் செய்யாதிருக்க உறுதியான பிரதிக்கினை செய்யவும், செய்த பாவத்துக்குத் தபசு செய்யவும், எங்கள்மேல் உமக்குள்ள மட்டில்லாத சிநேகத்தைக்கண்டு எங்களால் ஆனமட்டும் உம்மை இவ்வுலகத்தில் சிநேகித்தபின் நித்தியத்தில் இடைவிடாமல் பழுதற சிநேகித்து வரவும், உமது சிநேகம் சகல மனிதர்



இருதயத்திலும் பற்றியெரியவும், அக்கியானங் குறையவும், சத்தியவேதம் பரம்பவும், சத்திய இராஜாக்கள் தங்களுக்குள்ளே சமாதானமாயிருக்கவும், பதிதர் துர்மதங்கள் அழியவும், திருச்சபையைவிட்டுப் பிரிந்தவர்கள் திரும்ப அதிற் பிரவேசிக்கவும், அர்ச். பாப்பு நினைத்த தர்மக்காரியங்கள் ஜெயமாகவும், பஞ்சம் படை நோய்கள் நீங்கவும், உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படுகிற ஆத்துமங்கள் அவதி குறையவும், நான் ஆராருக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமென்று தேவரீர் திருவுளமாயிருக்கிறீரோ அவர்களெல்லோரும் உமது விசேஷ நன்மையைக் கைக்கொள்ளவும், உமது திருக்குமாரன் எங்களுக்காகச் சிந்தின விலைமதியாத திருவிரத்தத்தையும், அவர் திருத் தாயாரனுபவித்த சொல்லிலடங்காத வியாகுலத்தையும், சிலுவையின் பேரடைந்த அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதலையுங் குறித்து அடியோர்கள் கேட்கிற மன்றாட்டுகளுக் கிரங்கிக் கிருபை செய்தருளவேண்டுமென்று தேவரீரையிரந்து மன்றாடிக்கொள்ளுகிறோம்.

இடைவிடாமல் ஸ்துதிக்கப்பட யோக்கியமுமாய் மிகுந்த மதுரமுள்ள பூசிதமுமா

யிருக்கிற பரம திவ்விய நற்கருணைக்கே அனவரதகாலமு முடியாத ஆராதனையும் ஸ்துதியுந் தோத்திரமுமுண்டாகக்கடவது. சென்மப்பாவமில்லாமல் சன்மித்து எப்பொழுதும் பரிசுத்த கன்னியாஸ்திரீயுமாய் நமதாண்டவளுமாய்க் கொண்டாடப்பட்டவளுமாயிருக்கிற அர்ச். தேவமாதாவினுடைய அமலோற்பவத்துக்குத் தோத்திரமுண்டாகக்கடவது. சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே, இதோ உம்முடைய சரணமாக ஓடிவந்தோம். எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பராமுகமாயிராதேயும், ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்சமுடையவளுமாயிருக்கிற நித்தியகன்னிகையே சகல ஆபத்துகளிலேயும் நின்றெங்களைத் தற்காத்துக்கொள்ளும். தேவப்பிரசாதத்தின் தாயே இரக்கத்துக்கு மாதாவே, அர்ச். மரியாயே, எங்கள் மாற்றானுடைய சோதனையிலேயும், மரண நேரத்திலேயும் உமது திருக்குமாரனை வேண்டி எங்களைக் காக்கவும் ஆளவும் கைக்கொண்டு நடத்தவும் வேண்டுமென்று உமது திருப்பாதத்தை முத்திசெய்து மன்றாடுகிறோம்.—ஆமென்சேசு.



## I. பின்வரும் ஜெபங்களை எத்தனைதடவை சொன்னாலும் அத்தனை தடவையும் பலனடையலாம்.

(Toties quoties.)

1. பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே ஆமென்சேசு. (50-நாள் பலன்.)

தீர்த்தந்தொட்டு சிலுவை வரைந்தால் (100-நாள் பலன்.) 9-ம் பத்திநாதர்.

2. என் தேவனே! என் சர்வமே! (50-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

3. நித்திய பிதாவே! சேசுக்கிறீஸ்துநாதருடைய விலைமதியாத திரு இரத்தத்தை என் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், திருச்சபையின் அவசரங்களுக்காகவும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். (100-நாள் பலன்.) 7-ம் பத்திநாதர்.

4. மகா மதுரம் பொருந்திய சேசுவே! என்னை நடுத்தீர்க்கிறவராயிராமல் என் இரட்சகராயிரும். (50-நாள் பலன்.)

9-ம் பத்திநாதர்.

5. என் சேசுவே! இரக்கமாயிரும். (100-நாள் பலன்.) 9-ம் பத்திநாதர்.

6. சேசுவே! (50-நாள் பலன்.)
13-ம் சாந்தப்பர்.

7. என் தேவனுகிய சேசுவே! எல்லாத்தையும் பார்க்க உம்மைச் சிநேகிக்கிறேன். (50-நாள் பலன்.) 9-ம் பத்திநாதர்.

8. இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளிவாரும்; உமது விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பி உமது நேசத்தின் அக்கினியை அவர்களிடத்தில் பற்றியெரியச்செய்தருளும். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

9. என் சேசுவின் மகா மதுரமான இருதயமே! நான் எப்போதும் மென்மேலும் உம்மை நேசிக்கச் செய்தருளும். (300-நாள் பலன்.)

(தினசரி சொல்லுகிறவர்களுக்கு மாதத்துக்கு ஒரு தடவை பரிபூரணபலன்.) 9-ம் பத்திநாதர்.

10. சேசுவின் திரு இருதயமே! என் நம்பிக்கையை உமதுபேரில் வைக்கிறேன். (300-நாள் பலன்.)

(தினசரி சொல்லுகிறவர்களுக்கு மாதத்துக்கு ஒரு தடவை பரிபூரணபலன்.) 10-ம் பத்திநாதர்.



11. சேசுவின் திரு இருதயமே, என்மட்டில் உமக்குள்ள சிநேகத்தை விசுவசிக்கிறேன். (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

12. இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே, என் இருதயத்தைத் தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும். (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

13. சேசுவின் மதுரமான இருதயமே! என் சிநேகமாயிரும். (300-நாள் பலன்.)
9-ம் பத்திநாதர்.

14. சேசுவின் திரு இருதயமே! உம்முடைய இராச்சியம் வருக. (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

15. சேசுவின் தேவ இருதயமே! பாவிகளை மனந்திரும்பவும், வியாதிஸ்தரைக் காப்பாற்றவும், உத்தரிக்கிற ஸ்தலத்து பரிசுத்த ஆத்துமங்களை இரட்சியும். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

16. ஆண்டவராகிய சேசுவே, எங்கள் பரிசுத்த பிதாவான பாப்பானவரை உமது திரு இருதய ஆதரவில் அணைத்தருளும்; அவருக்

குப், பிரகாசமும் பெலனும் ஆறுதலுமாயிருப்பீராக! (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

17. அமலோற்பவ மரியோடு ஒன்றித்த சேசுவின் அதிபரிசுத்தமும் சிநேகமும் பொருந்திய சற்பிரசாத இருதயத்தை ஆராதிப்போமாக, அதற்கு நன்றி செலுத்துவோமாக, அதை மன்றாடுவோமாக, அதற்கு ஆறுதல் வருவிப்போமாக. (200-நாள் பலன்.)

10-ம் பத்திநாதர்.

18. எங்கள் நேசத்தால் பற்றியெரியும் சேசுவின் சற்பிரசாத இருதயமே, உமது நேசத்தால் எங்கள் இருதயங்கள் பற்றியெரியச் செய்தருளும். (200-நாள் பலன்.)

13-ம் சிங்கராயர்.

19. சேசுவின் சற்பிரசாதத் திரு இருதயம் ஆசீர்வதிக்கப்படக்கடவது. (300-நாள் பலன்.)

10-ம் பத்திநாதர்.

20. சேசுவின் சற்பிரசாத இருதயமே! குருக்களுடைய இருதயங்களுக்கு மாதிரிகையே! எங்கள்பேரில் இரக்கமாயிரும்.

(300-நாள் பலன்.)

(விசேஷமாய் குருக்கள் சொல்லவேண்டிய ஜெபம்.)

10-ம் பத்திநாதர்.



21. கருணாம்பர சேசுவே! ஆத்துமங்களை நேசிக்கிறவரே! தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலும் பட்ட அவஸ்தையையும், தேவரீருடைய மாசில்லாத திருத்தாயானவள் அநுபவித்த வியாகுலங்களையும் பார்த்து, இன்று தானே பூமியிலெங்கும் அவஸ்தையாய்க் கிடந்து சாகப்போகிற பாவிகளைத் தேவரீருடைய திரு இரத்தத்தினால் சுத்திபண்ணியருளும்.

அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயமே! மரிக்கிறவர்களின்பேரில் இரக்கமாயிரும். (100-நாள் பலன்.) 9-ம் பத்திநாதர்.

22. அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயமே! மரிக்கிறவர்களின்பேரில் இரக்கமாயிரும்.

(அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயச் சபையாருக்கு, 300-நாள் பலன்.)

10-ம் பத்திநாதர்.

23. தேவநற்கருணையில் இருக்கும் சேசுவே! எங்கள்மேல் இரக்கமாயிரும்.

(100-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

24. இரக்கமுள்ள மரியாயின் இருதயமே, கஸ்திப்படுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயச் சபையாருக்கு, 300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

25. சேசு, மரியே! (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

26. சேசு, மரி, சூசை.

(7 வருஷம் 7 மண்டலப்பலன். தினந்தோறும் சொல்லிவந்தால் மாசத்துக்கு ஒரு தடவை பரிபூரண பலன்.)
10-ம் பத்திநாதர்.

27. சேசு, மரி, சூசை என் இருதயத்தையும் என் ஆத்துமத்தையும் உங்களுக்கே கையளிக்கிறேன்.

சேசு, மரி, சூசை என்னுடைய கடைசி அவஸ்தையில் எனக்கு உதவி செய்தருளுங்கள்.

சேசு, மரி, சூசை உங்களுடைய அர்ச்சிய சிஷ்ட கூட்டத்தில் சமாதானமாய் மரிக்க உதவி செய்தருளுங்கள். (300-நாள் பலன்.)
7-ம் பத்திநாதர்.



28. சேசுவே, மரியே, ஓ! நல்ல சூசையப்பரே! எங்களை இப்போதும் எங்கள் மரண அவஸ்தையிலும் ஆசீர்வதித்தருளுங்கள். (50-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

29. எல்லாம் உமக்கே, சேசுவின் திரு இருதயமே! (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

30. சேசுவின் திரு இருதயமே! வாழ்க!
(300-நாள் பலன்.)

மரியாயின் மாசற்ற இருதயமே! வாழ்க!
(300-நாள் பலன்.)

(தினந்தோறும் சொல்லிவந்தால் மாசத்துக்கு ஒரு தடவை பரிபூரண பலன்.)

31. மரியாயின் மதுரமான இருதயமே! என் இரட்சண்ணியமாயிரும்.
(300-நாள் பலன்.)

(தினந்தோறும் சொல்லிவந்தால் மாசத்துக்கு ஒரு தடவை பரிபூரண பலன்.) 9-ம் பத்திநாதர்.

32. மரியே, இரக்கமுள்ள எங்கள் ஆண்டவளே, சமஸ்த கிறீஸ்துவர்களின் தாயே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(பிரிவினைக்காரர் மனந்திரும்பும்படி சொல்லத் தகும் செபம்.) (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

33. எங்கள் நம்பிக்கையான மரியே, எங்கள்மேல் இரக்கமாயிரும். (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

34. தேவதாயாரான மிகவும் பரிசுத்த கன்னிமரியாயின் அமலோற்பவம் ஸ்துதிக்கப்படக்கடவது. (300-நாள் பலன்.)
13-ம் சிங்கராயர்.

35. ஓ! மரியே! இடைவிடாமல் உமது நாமம் ஸ்துதிக்கப்படுகிற இந்த வீட்டை ஆசீர்வதித்தருளும். சகல பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளும், நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய தாயாரும், மோக்ஷத்தின் இராக்கினியுமான அமலோற்பவமரி என்றும் வாழ்க!

(கிறீஸ்துவக் குடும்பங்களிலும், மடங்களிலும் சொல்லத்தகும் செபம்.) (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

36. ஓ! கன்னிமரியே, மகா பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தின் எங்கள் ஆண்டவளே, கிறீஸ்துவ ஜனங்களின் மகிமையே, திருச்சபையின் சந்தோஷமே, உலகத்தின் இரட்சண்ணியமே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். விசுவாசிகள் அனைவரும் அநு



தினம் திவ்விய நன்மை வாங்கப் பாத்திரவான்களாகத்தக்கதாக அவர்களிடத்தில் பரிசுத்த தேவநற்கருணையின்பேரில் பத்தியை மூட்டுவீராக. (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

37. மகா பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தின் எங்கள் ஆண்டவளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தேவநற்கருணை பகிரங்கமாய் ஸ்தாபித்திருக்கும்போது சொல்லுகிறவர்களுக்கு 300-நாள் பலன். ஆனால் சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் தேவநற்கருணையிருக்கும் கோவிலில் எந்த வேளை சொன்னாலும் (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

38. திரு இருதயத்தின் ஆண்டவளே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

39. எங்கள் லூர்து ஆண்டவளே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

40. வியாகுலமும், நேசமும், இரக்கமுமுள்ள மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

41. என்னாண்டவளே, என் தாயாரே! நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிறேனென்று நினைத்துக்கொள்ளும். என்னை உம்முடைய உடைமையாகவும் சுதந்தரப் பொருளாகவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும்.
(40-நாள் பலன்.) 9-ம் பத்திநாதர்.

42. மரியே! (25-நாள் பலன்.)
13-ம் சாந்தப்பர்.

43. எனக்குக் காவலாயிருக்கிற சர்வேசுரனுடைய சம்மனசானவரே, தெய்வீக கிருபையால் உம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்ட எனக்கு ஞான வெளிச்சத்தைக் கொடுத்து என்னைக் காத்து நடத்தி ஆண்டருளும்.
(100-நாள் பலன்.)
(தினந்தோறும் சொல்லிவந்தால் மாசத்துக்கு ஒரு தடவை பரிபூரண பலன்.) 7-ம் பத்திநாதர்.

44. சிநேகப் பலியான சேசுவின் திரு இருதயமே, என்னைச் சர்வேசுரனுக்கு உகந்ததும் பரிசுத்தமானதும் உயிருள்ளதுமான பலிப்பொருளா[க] ஆக்கியருளும்.
(வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள் தங்கள் வார்த்தைப்பாட்டைப் புதுப்பிக்கிற கருத்தோடு இச்செபத்தைச் சொன்னால் 50-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்



45. நடுப்பூசையில் தேவநற்கருணை எழுந்தேற்றமாகும்போதென்கிலும் அல்லது பீடத்தின்மேல் தேவநற்கருணை ஸ்தாபகம் பண்ணியிருக்கும்போதென்கிலும் சற்பிரசாத ஆண்டவரைப் பத்தியுடன் உற்றுநோக்கி: "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று சொல்லுகிற ஒவ்வொரு தடவையும் 7-வருஷம் 7-மண்டலப்பலன்.

இது தவிர ஒரு வாரமாக தினந்தோறும் இச்செபத்தைச் சொல்லுகிறவர்கள் அந்த வாரத்தில் நன்மை வாங்குகிற ஒரு தினத்தில் பரிபூரண பலன் அடையலாம்.
10-ம் பத்திநாதர்.

### பதிதர் மனந்திரும்பச் செபம்.

46. ஆண்டவராயிருக்கிற சேசுவே! மகா கருணை நிறைந்த உலக இரட்சகரே! உம்முடைய திரு இருதயத்தைமுன்னிட்டு நாங்கள் தேவரீரிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறதென்னவெனில்: சிதறிப்போயிருக்கிற ஆடுகளெல்லாம் அவர்கள் ஆத்துமங்களின் மேய்ப்பனும் மேற்றிராணியாருமான தேவரீரிடம் வந்து சேரட்டும். பிதாவோடும் இஸ்பிரீத்து

சாந்துவோடும் சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென் சேசு.

(300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

### யூதர் மனந்திரும்பச் செபம்.

47. பிதாவே! இவர்களுக்கு மன்னித்தருளும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்.

(100-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

### மரித்தவர்களுக்குச் செபம்.

48. சுவாமீ! அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும், முடிவில்லாத ஒளி அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது. (50-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.



## II. ஒரு நாளில் ஒரு தடவைமாத்திரம் பலனடையக்கூடிய ஜெபங்கள்.

49. தளங்களுக்குக் கர்த்தராகிய தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், உம்முடைய மகிமை பூலோகமெங்கும் நிறைந்திருக்கின்றது. பிதாவுக்குத் தோத்திரம், சுதனுக்குத் தோத்திரம், இஸ்பிரீத்துசாந்துவுக்குத் தோத்திரம். (100-நாள் பலன்.)

(தினசரி சொல்லிவந்தால் மாசத்துக்கு ஒருவிசை பரிபூரண பலன்.) 14-ம் சாந்தப்பர்.

50. மகா நீதியும் உந்நதமும் நேசிக்கத்தக்கதுமான தேவசித்தம் சகலத்திலும் நிறைவேறி சதாகாலமும் புகழ்ச்சியும் மேன்மையும் பெறக்கடவது. (100-நாள் பலன்.)

7-ம் பத்திநாதர்.

51. என் சர்வேசுரா, இத்தினம் மரண அவஸ்தைப்பட்டு சாகப்போகிற பாவிகளுக்காக உலகமுழுவதும் இன்றைக்குச் செய்யப்படுகிற திவ்விய பலிப்பூசைகள் அனைத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். சேசு இரட்சகருடைய விலைமதிக்கப்படாத திரு

இரத்தம் அவர்களுக்கு இரக்கத்தை அடைந்து கொடுக்கக்கடவதாக! (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

52. என் சர்வேசுரா! ஆத்துமங்கள் சத்தியத்தில் ஐக்கியப்படவும், இருதயங்கள் சிநேகத்தில் ஒன்றுபடவும் செய்தருளுவீராக! (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

53. என் ஆண்டவரே, நானும்மை நேசிக்கச் செய்தருளும்; உம்மை மென்மேலும் நேசிப்பதே என் நேசத்தின் ஏக சம்பாவனையாயிருக்கக்கடவது! (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

54. என் ஆண்டவரே, என் ஏக நன்மையே! நீரே எனக்கு எல்லாமாயிருக்கிறீர். உமக்கே நான் எல்லாமாயிருக்கட்டும். (300-நாள் பலன்.)

(தினந்தோறும் சொன்னால் மாசத்துக்கு ஒருவிசை பரிபூரண பலன்.) 13-ம் சிங்கராயர்.

55. உலக இரட்சகரே! எங்கள்பேரில் இரக்கமாயிரும். (50-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.



56. தாவீதின் குமாரனாகிய சேசுவே! என்பேரில் இரக்கமாயிரும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

57. மகா மதுரம் பொருந்திய சேசுவே! என்னிடத்தில் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், சிநேகத்தையும் அதிகரித்து, நொறுங்கித் தாழ்ந்த இருதயத்தை எனக்குத் தந்தருளும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

58. சேசுவின் மகா பரிசுத்த இருதயம் எங்கும் நேசிக்கப்படுவதாக! (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

59. பரிசுத்த ப்ரம திவ்விய நற்கருணைக்கு எந்நேரமும் ஸ்துதியும் ஸ்தோத்திரமும் உண்டாகக்கடவது. (100-நாள் பலன்.) 6-ம் பத்திநாதர்.

60. நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடையவும் அவருடைய திருத்தாயாரான மகிமை பொருந்திய கன்னிமரியாயுடையவும் அன்புள்ள இருதயங்களும் மகா மதுரம்பொருந்திய நாமங்களும் என்றும் ஆசீர்வதிக்கப்படக்கடவதாக! (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

61. ஓ! மாசில்லாமல் உற்பவித்த மரியாயே! உம்மைத் தேடிவருகிற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.)
13-ம் சிங்கராயர்.

62. ஜென்மப்பாவத்தின் மாசினாலும், யாதொரு கர்மப் பாவத்தினாலும் கறைப்படாத கன்னித்தாயே! என் இருதயத்தின் பரிசுத்த தனத்தை உங்களிடம் கையளித்து ஒப்புக்கொடுக்கிறேன். (100-நாள் பலன்.)
9-ம் பத்திநாதர்.

63. இவ்வுலகத்தில் யாதொரு மாசணுகாமல் வந்த ஓ! மரியாயே! பாவமின்றி நான் இதைவிட்டுப் போகும்படியான வரத்தைச் சர்வேசுரனிடத்திலிருந்து எனக்குப் பெற்றுக் கொடுத்தருளுங்கள். (100-நாள் பலன்.)
9-ம் பத்திநாதர்.

64. பரிசுத்த கன்னிகையே! அமலோற்பவ மரியே! தேவமாதாவே! எங்கள் தாயே! உம்முடைய திருக்குமாரனும் எங்கள் சகோதரருமான சேசுவின் திரு இருதயத்தினிடம் எங்களுக்காக மனுப்பேசும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.



சபையார் சொல்லத்தகும் ஜெபம்.

65. ஓ! மரியாயே! உம்முடைய அமலோற்பவத்தின் மகிமைப் பிரதாப வெற்றிகளை முன்விட்டு இந்தப் பத்தியுள்ள சபைக்கும், எங்கள் குடும்பங்களுக்கும் உதவி புரியுங்கள். எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுங்கள். எங்களுக்கு ஆறுதலாயிருங்கள். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

66. நற்கல்வியின் எங்கள் ஆண்டவளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

67. அடிமைகளை மீட்கும் எங்கள் ஆண்டவளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (200-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

68. மரியே! சர்வேசுரனுடைய மாதாவே! இரக்கத்தின் தாயே! எங்களுக்காகவும் மரித்தவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

69. அர்ச். மரியாயே! சேசுவின் மாசில்லாத மாதாவே! இன்றைக்கு உலகத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் ஒரே ஒரு சாவான பாவத்தையென்கிலும் தடுக்கும்படியாக

உமது திவ்விய குமாரனுடைய திரு இரத்தத்தை நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடும்.
(100-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

70. சேசுவின் மகா பரிசுத்த இருதயத்தை நேசிக்கிறவர்களுக்குப் பாதுகாவலும் முன்மாதிரிகையுமான அர்ச். சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

71. அர்ச். சூசையப்பரே! எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதனை வளர்த்த தகப்பனே, கன்னிமரியாயின் மெய்யான பத்தாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (300-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

72. சூசையப்பரே, நாங்கள் பரிசுத்தமாகச் சீவிக்கச் செய்தருளும்; எங்கள் சீவியம் உமது பாதுகாவலின்கீழ் க்ஷேமமாயிருப்பதாக. (300-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

73. அதிதூதரான அர்ச். மிக்கேலே, பயங்கரமான தீர்வைநாளில் நாங்கள் மோசம்போகாதபடிக்கு எங்கள் ஞானயுத்தத்தில் எங்களைத் தற்காத்தருளும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

---



## சகலத்திற்கும் இராசாவாகிய கிறீஸ்துநாதருக்கு ஒப்புக்கொடுக்கும் செபம்.

ஓ சேசுக்கிறீஸ்துவே, தேவரீரை சகலத்திற்கும் இராசாவாக ஏற்றுக்கொள்ளுகிறேன். படைக்கப்பட்ட சகல வஸ்துக்களும் உமக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. என்பேரில் உமக்குள்ள சகல சுதந்தரங்களையும் பிரயோகித்து, என்னை ஆண்டு நடத்தியருளும்.

பசாசையும், அதனுடைய ஆரவாரங்களையும், அதனுடைய கிரிகைகளையும் விட்டுவிடுகிறதாக, நான் ஞானஸ்நானத்தில் கொடுத்த வார்த்தைப்பாட்டைப் புதிப்பிப்பதுடன், நல்ல கிறீஸ்துவனாகச் சீவிப்பேனென்றும் உறுதிமொழியளிக்கிறேன். இன்னும் விசே

ஷமாய், சர்வேசுரனுடைய சுதந்தரங்களும் திருச்சபையின் உரிமைகளும் நிலைபெற்றோங்கும்படிக்கு என்னால் இயன்றமட்டும் பிரயாசப்படுவேதாக தீர்ந்துகொள்ளுகிறேன்.

சேசுவின் திரு இருதயமே. சகல இருதயங்களும் உமது அர்ச்சிக்கப்பட்ட இராசரீகத்தை ஏற்றுக்கொள்ளும்படிக்கும், அதன் வழியாய் உலகம் ஒருங்கலும் உமது சமாதானத்தின் ஆளுகை ஸ்தாபிக்கப்படும்படிக்கும், அற்பமாகிய என் கிரிகைகளெல்லாம் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென்சேசு.

வழக்கமான பிரார்த்தனைகளை அநுசரித்தால் ஒவ்வொரு தினமும் பரிபூரண பலன் அடையலாம்.

*(Sacred Penitentiary, 21 Feb. '23.)*

---

# இலத்தீன் பாட்டுகள்.

## ஓ சாலுத்தாரிஸ் ஓஸ்தியா.

1. ஓ சாலுத்தாரிஸ் ஓஸ்தியா,
க்வே சேலி பாந்திஸ் ஓஸ்தியும்,
பெல்லா பிரேமுந்த் ஓஸ்தீலியா,
தா ரோபுர் fவெர் ஔக்ஸீலியும்.

2. ஊனி த்ரினோக்வே தோமினோ,
ஸித் செம்பித்தேர்னு க்லோரியா,
க்யி வீத்தாம் சீனே தேர்மினோ,
நோபிஸ் தோனெத் இன் பாத்ரியா.
ஆமென்.

## ஆவே மாரிஸ் ஸ்தெல்லா.

1. ஆவே மாரிஸ் ஸ்தெல்லா,
தேயி மாத்தெர் ஆல்மா,
ஆத்குவே ஸெம்ப்பெர் வீர்கோ,
fவேலிக்ஸ் ஸேலி போர்த்தா.

2. சூமென்ஸ் இல்லுத் ஆவே,
காப்ரியேலிஸ் ஓரே,
fவுந்தா நோஸ் இன் பாஸே,
மூத்தான்ஸ் எவே நோமென்.

3. ஸோல்வே விங்க்ளா ரேயிஸ்,
ப்ரோfவெர் லூமென் ஸேசிஸ்,

மாலா நோஸ்த்ரா பெல்லே,
போனு குங்த்தா பொஸ்ஸே.

4. மோன்ஸ்த்ரா தே எஸ்ஸே மாத்ரெம்,
ஸுமாத் பேர் தே ப்ரெசெஸ்,
க்யி புரோ நோபிஸ் நாத்துஸ்,
துலித் எஸ்ஸே துவுஸ்.

5. வீர்கோ ஸிங்குலாரிஸ்,
இந்தெர் ஓம்னெஸ் மித்திஸ்,
நோஸ் குல்ப்பிஸ் ஸொலுத்தோஸ்,
மீத்தெஸ் fவாக் எத் காஸ்தோஸ்.

6. வீத்தாம் ப்ரேஸ்தா ப்பூராம்,
ஈத்தெர் பாரா துத்தும்,
உத் விதெந்தெஸ் ஜேஸும்,
ஸெம்ப்பெர் கொல்லே தேமுர்.

7. ஸித் லௌஸ் தேயோ பாத்ரி,
சும்மோ க்ரீஸ்தோ தேக்குஸ்,
ஸ்பிரித்துயி சாங்த்தோ,
திரிபுஸ் ஹோனோர் உனுஸ், ஆமென்.

ஞ. ஓரா ப்ரோ நோபிஸ் சாங்த்தா தேயி ஜெனித்ரிக்ஸ்.

ஏ. உத் திக்னி எவ்fவீசியாமுர் ப்ரோமிசியோனிபுஸ் கிறிஸ்தி.



## தாந்தும் எர்கோ.

1. தாந்தும் எர்கோ சாக்ரமெந்தும்
வெனெரேமுர் செர்னுயி;
எத் அந்திக்கும் தோக்குமெந்தும்
நோவோ சேதாத் ரீத்துயி:
ப்ரேஸ்தெத் fவீதெஸ் ஸுப்லெமெந்தும்
ஸென்ஸுவும் தெfவெக்த்துயி.

2. ஜெனித்தோரி, ஜெனித்தோக்வே
லௌஸ் எத் ஜுபிலாசியோ;
சாலுஸ், ஓனோர், விர்த்துஸ் க்வோக்வே,
ஸித் எத் பெனதிக்ஸியோ:
ப்ரொசெதெந்தி ஆப் உத்ரோக்வே
கொம்பார் ஸித் லௌதாசியோ. ஆமென்.

ஞ.—பானெம் தே சேலோ பிரெஸ்திதிஸ்தி எயிஸ். (அல்லேலூயா.)

ஏ.—ஓம்னெ தெலெக்தமெந்தும் இன் செஹா பெர்தெம். (அல்லேலூயா.)

## லௌதாத்தே தோமினும்.

லௌதாத்தே தோமினும், ஓம்னெஸ் ஜெந்தெஸ்: லௌதாத்தே எயும், ஓம்னெஸ் போப்புலி;

கோனியாம் கொன்fவிர்மாத்தா எஸ்த் சப்பெர்னோஸ் மிஸெரிகோர்தியா ஏஜு¯ஸ் : எத் வெரித்தாஸ் தோமினி மானெத் இன் எத்தேர்னும்.

க்ளோரியா பாத்ரி, எத் fவீலியோ, எத் ஸ்பிரித்துயி சாங்தோ.

சிக்குத் எராத் இன் ப்ரின்சிப்பியோ, எத் நுங்க், எத் செம்ப்பெர், எத் இன் சேக்குலா சேக்குலோரும். ஆமென்.

### மாக்னிfவிக்காத்.

1. மாக்னிfவிக்காத் : அனிமா மேயா தோமினும்.

2. எத் எக்சுல்த்தாவித் ஸ்பீரீத்துஸ் மேயுஸ் : இன் தேயோ சாலுத்தாரி மேயோ.

3. குய்யா ரெஸ்பெக்சித் ஹு¯மிலித்தாத்தெம் ஆன்சில்லே சுவே : எக்சே எனிம் எக்ஸ் ஹோக், பேயாத்தாம் மே திசெந்த் ஓம்னெஸ் ஜெனராசியோனெஸ்.

4. குய்யா fவேசித் மீஹி மாக்னா க்யி போத்தென்ஸ் எஸ்த் : எத் சாங்த்தும் நோமென் ஏஜு¯ஸ்.



5. எத் மிசெரிக்கோர்தியா ஏஜு¯ஸ் ஆ ப்ரோ ஜேனியே இன் ப்ரோஜேனியெஸ் : திமென்திபுஸ் ஏயும்.

6. fவேசித் பொத்தென்சியாம் இன் ப்ராக்கியோ சுவோ : திஸ்பெர்சித் சுப்பெர்போஸ் மெந்தே கோர்திஸ் சுயி.

7. தேப்போசுயித் போத்தெந்தெஸ் தே சே தே : எத் எக்சால்தாவித் ஹு¯மிலெஸ்.

8. எசூரியெந்தெஸ் இம்ப்லேவித் போனிஸ் : எத் திவித்தெஸ் திமிசித் இனெனெஸ்.

9. சுஸ்சேப்பித் இஸ்ராயேல் பூவெரும் சுவும் : ரெக்கோர்தாத்துஸ் மிசெரிக்கோர்தியே சுவே.

10. சிக்குத் லொக்கூத்துஸ் எஸ்த் ஆத் பாத்ரெஸ் நோஸ்த்ரோஸ் : ஆப்ரஹாம், எத் செமினி ஏஜு¯ஸ் இன் சேக்குலா.

11. க்ளோரியா பாத்ரி, எத் fவீலியோ ; எத் ஸ்பிரீத்துயி சாந்த்தோ.

12. சிக்குத் எராத் இன் ப்ரின்சிப்பியோ, எத் நுங்க் எத் செம்ப்பெர் எத் இன் சேக்குலா சேக்குலோரும். ஆமென்.

## கோர், ஆர்க்கா.

1. கோர், ஆர்க்கா லேஜெம் கோந்தினென்ஸ்
நொன் செர்வித்தூத்திஸ் வேத்தெரிஸ்,
செத் க்ராசியே, செத் வேனியே,
செத் எத் மிஸெரிக்கோர்தியே.

2. கோர், சாங்த்துவாரியும் நோவி.
இந்தெமெராத்தும் fவேதெரிஸ்,
தெம்ப்லும் வெத்துஸ்தோ சாங்சியுஸ்,
வேலும்க்வே சிஸ்ஸோ உத்திலியுஸ்.

3. தே வுல்னெராத்தும் கிரித்தாஸ்
இக்த்து பாத்தெந்தி வோலுயித்
அமோரிஸ் இன்விசிபிலிஸ்
உத் வேனெரேமூர் வுல்னெரா.

4. ஹோக் சுப் ஆமொரிஸ் சிம்பொலோ
பாசுஸ் க்ருவெந்தா எத் மீஸ்திக்கா
உத்ரும்க்வே சாக்ரிfவீசியும்
க்ரீஸ்துஸ் சாசெர்தோஸ் ஒப்துலித்.

5. க்யிஸ் நொன் ஆமாந்தெம் ரெதாமெத்?
க்யிஸ் நொன் ரெதெம்துஸ் திலிகாத்?
எத் கோர்தே இன் இஸ்தோ செலிகாத்
எத்தெர்ன தாபர்னக்குலா?



6. தேக்குஸ் பாரொந்தி எத் fவீலியோ,
சாங்த்தோக்வே சித் ஸ்பிரித்துயி,
க்யிபுஸ் போத்தெஸ்தாஸ், க்ளோரியா,
ரெக்னும்க்வே இன் ஒம்னே எஸ்த் சேக்
குலும். ஆமென்.

## தே, ஜோசேப்.

1. தே, ஜோசெப், செலப்ரொந்த் ஆக்மினு
[சேலித்தும்,
தே குந்த்தி ரேசொனெந்த் க்ரிஸ்தியா
[னும்கொரி
க்யி க்லாருஸ் மேரித்திஸ், ஜூங்த்துஸ்
[எஸ் இன்க்லித்தே
காஸ்த்தோ fவேதெரே வீர்ஜினி.

2. ஆல்மோ கும் தூமிதாம் ஜேர்மினே
[கொன்ஜூஜெம்
அத்மீரான்ஸ், துபியோ தாஞ்ஜெரிஸ்
[ஆங்சியுஸ்,
அfவ்லாத்து சுப்பெரி fவ்லாமினிஸ்
[ஆஞ்ஜெலுஸ்
கொன்செப்த்தும் புவெரும் தோசெத்.

3. தா நாத்தும் தோமினும் ஸ்திரிஞ்ஜிஸ்,
[ஆத் எக்ஸ்தெராஸ்
எஜிப்தி ப்ரோfகூகும் தூ சேக்வேரிஸ்
[ப்லாகாஸ்;
அமிஸ்ஸும் சோலிமிஸ் க்வேரிஸ், எத்
[இன்வேனிஸ்.
மிஸ்சென்ஸ் கௌதியா fலேத்திபுஸ்.

4. போஸ்த் மோர்த்தெம் ரெலிக்வோஸ்
[மோர்ஸ் பியா கோன்செக்ராத்
பால்மாம்க்வே எமெரித்தோஸ் க்ளோரியா
[சுஸ்சிப்பித்;
தூ வீவென்ஸ், சூப்பெரிஸ் பார்,
fவ்ருயேரிஸ் தேயோ,
மீரா சோர்த்தே பெயாசியோர்.

5. நோபிஸ், சும்மா த்ரியாஸ், பார்செ
[ப்ரெக்காந்திபுஸ்,
தா ஜோசெப் மெரித்திஸ் சிதெரா
[ஸ்காந்தெரே:
உத் தாந்தெம் லீசெயாத் நோஸ் திபி
[யேர்ப்பெத்திம்
க்காத்தும் ப்ரோமெரே காந்திக்கும்.
ஆமென்.



## சேலித்தும், ஜோசேப், தேக்துஸ்.

1. சேலித்தும் ஜோசெப், தேக்குஸ் ஆத்க்வே
[நோஸ்த்ரோ
சேர்த்தா ஸ்பெஸ் வீத்தே,
[கொலுமென்க்வே மூந்தி,
க்வாஸ் திபி லேத்தி காணிமூஸ் பெனிக்
சூசிப்பே லவ்தெஸ். [னூஸ்

2. தே சாத்தோர் ரோரும் ஸ்தாத்துயித்
[புதிசே
வீர்ஜினிஸ் ஸ்போன்சும், வோலுயித்க்வே
[வேர்பி
தே பாத்ரெம் திசி, தேதித் எத் மினிஸ்த்
எஸ்சே சலூத்திஸ். [ரும்

3. சிந்த் திபி ப்லவ்சுஸ், திபி சிந்த் ஹொனோ
[ரெஸ்
த்ரீனுஸ் க்யி ரெக்னஸ் தேயுஸ், எத்
[கொரோனஸ்
அவ்ரெயாஸ் சேர்வோ த்ரீபுயிஸ் விfதேலி
ஓம்னே பேர் ஏவும்.

## தே தேயும்.

தே தேயும் லௌதாமுஸ், * தே தோமினும் கொன்fவித்தேமுர்.

தே எத்தேர்னும் பாத்ரெம், * ஓம்னிஸ் தெர்ரா வெனேராத்துர்.

தீபி ஓம்னெஸ் ஆஞ்ஜெலி, * தீபி சேலி எத் யுனிவேர்சே போத்தெஸ்தாத்தெஸ்,

தீபி கெருபிம் எத் செராfவிம், * இன்செஸ்சாபிலி வோசே ப்ரோக்லமாந்த் :

சாங்த்துஸ், சாங்த்துஸ், சாங்த்துஸ், * தோமினுஸ் தேயுஸ் சாபாவோத்.

ப்லேனி சுந்த் சேலி எத் தெர்ரா, * மாஜெஸ்த்தாத்திஸ் gக்லோரியே துவே.

தே gக்லோரியோசுஸ் * அப்போஸ்தொலோரும் கோருஸ்.

தே ப்ரோfவெத்தாரும் * லௌதாபிலிஸ் நுமெருஸ்.

தே மார்த்திரும் காந்தீதாத்துஸ் * லௌதாத் எக்சேர்சித்துஸ்.



தே பேர் ஓர்பெம் தெர்ராரும் * சாங்த்தா கொன்fவித்தேத்துர் எக்லேசியா.

பாத்ரெம் * இம்மென்சே மாஜெஸ்த்தாத்திஸ்.

வெனெராந்தும் துவும் வேரும், * எத் ஊனிக்கும் fவீலியும்.

சாங்த்தும் க்வோக்வே * பராக்லித்தும் ஸ்பீரித்தும்.

து ரெக்ஸ் gக்லோரியே, * க்ரிஸ்த்தே.

து பாத்ரிஸ் * செம்ப்பித்தேர்னுஸ் எஸ் fவீலியுஸ்.

து ஆத் லீபெராந்தும் சுஸ்செப்த்துருஸ் ஹோமினெம், * நொன் ஹொர்ருயிஸ்தி வீர்ஜினிஸ் ஊத்தெரும்.

து தெவிக்த்தோ மோர்த்திஸ் அக்குலெயோ, * அப்பெருயிஸ்தி க்ரெதெந்த்திபுஸ் ரெg-க்ஞ சேலோரும்.

து ஆத் தெக்ஸ்த்தெராம் தேயி செதெஸ், * இன் gக்லோரியா பாத்ரிஸ்.

ஜூதெக்ஸ் க்ரெதெரிஸ் * எஸ்செ வெந்த்துருஸ்.

[பின்வரும் அடிகளைப் பாடும்போது முழங்காலில் இருக்கவும்.]

† தே எர்கோ க்வேசூமுஸ், தாயிஸ் fவாமுலிஸ் சுப்வெனி : * க்வோஸ் பிரெசியோசோ சாங்குய்னே ரெதேமிஸ்த்தி.

எத்தெர்ணு fவாக் கும் சாங்த்திஸ் தாயிஸ், * இன் குளோரியா னுமெராரி.

சால்வும் fவாக் போப்புலும் தாவும், தோமினே, * எத் பெனெதிக் ஹெரெதித்தாத்தி தாவே.

எத் ரேஜெ ஏயோஸ், * எத் எக்ஸ்த்தொல்லே இல்லோஸ், உஸ்க்வே இன் எத்தேர்னும்.

பெர் சிங்குலோஸ் தியெஸ் * பெனெதிசிமுஸ் தே.

எத் லவ்தாமுஸ் நோமென் தாவும் இன் சேக்குலும், * எத் இன் சேக்குலும் சேக்குலி.

திக்னாரே, தோமினே, தியே இஸ்த்தோ, * சினே பெக்காத்தோ நோஸ் குஸ்த்தோதிரே.



மீசெரேரே நோஸ்த்ரி, தோமினே * மீசெரேரே நோஸ்த்ரி.

fவீயாத் மிசெரிக்கோர்தியா தாவா, தோமினே, சுப்பெர் நோஸ், * க்வெமாத்மோதும் ஸ்பெராவிமுஸ் இன் தே.

இன் தே, தோமினே, ஸ்பெராவி : * நொன் கொன்fவுந்தார் இன் எத்தேர்னும்.

கு. பெனெதிக்தூஸ் எஸ், தோமினே, தேயுஸ் பாத்ரும் நோஸ்த்ரோரும்.

சி. எத் லவ்தாபிலிஸ், எத் குளோரியோசுஸ் இன் சேக்குலா.

கு. பெனெதிக்காமுஸ் பாத்ரெம் எத் fவீலியும், கும் சாங்த்தோ ஸ்பீரித்து.

சி. லவ்தேமுஸ் எத் சுப்பெர்எக்ஸால்த்தேமுஸ் ஏயும் இன் சேக்குலா.

# தமிழ் பாட்டுகள்.

## சேசுவின் திரு இருதயமே, எங்கள் சிநேகமாயிரும்.

இராகம் - நீலாம்புரி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

சேசுவின் மதுர திரு இருதயமே
சிநேக அக்கினி மயமே
தினமும் நீர் எங்கள் ஸ்நேகமாயிருப்பீர்
தேவதயா நிதியே! (சேசு.)

மனிதனை மோட்ச கதியிலே சேர்க்க
மனுமகனாய்ப் பிறந்தாய்
மகிமைப்பிரதாபக் கடவுள் ஆனாலும்
மாபழி மேற்சுமந்தாய். (சேசு.)

கள்ளனைப்போலே கசடர்கள் உன்னைக்
கடுஞ்சிலுவையில் அறைந்தார்
கருணை ஆர் உந்தன் இருதய அன்பின்
கரை எவர் கண்டறிவார். (சேசு.)

உன் திரு இரத்தம் ஒரு துளி முதலாய்
உனக்கென்ன வைத்தாயோ
ஓய்வில்லா அன்பால் உன்னையே மறந்தாய்
ஓ திரு இருதயமே. (சேசு.)

என்றும் எம்மோடு இருந்தருள் ஈவாய்
இனியநல் உண வா வாயேன்
இவை எல்லாம் பாராதினர்கள் நாங்கள்
இகழ்ந்துன்னைப் பழித்தோமே. (சேசு.)

நன்மைமேல் நன்மை என்றும் நீ செய்வாய்
நாங்களோ தீமை செய்தோம்
நன்றி இல்லாமல் உன் தயை மறந்தோம்
நாணி இப்போதழுதோம். (சேசு.)

எங்களைப் பாரும் இடர்க் குறை தீரும்
இனிய நல் இருதயமே
எந்தெந்தப் பாவ தந்திரம் நின்று
இரட்சிப்ப துன்பொறுப்பே. (சேசு.)

தாய் மறந்தாலும் நீ மறப்பாயோ
தயை உனக் கியல்பாமே
தாழ்மையாய்ப் பணியும் பாலர்கள் நாங்கள்
தயை தயை தயை ஸ்வாமீ. (சேசு.)

அந்திய காலம் வந்திடுங்காலே
அவஸ்தையாய் நான் கிடந்தால்
அடைக்கலம் தஞ்சம் ஆக நீ இருப்பாய்
அன்புள்ள இருதயமே. (சேசு.)

## தேவதாயின்
## அமலோற்பவ மகிமை.

இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

ஜென்ம மாசற்பமேனும் இல்லாத—தூய
செல்வியாய் ஜென்மித்த மாமரியே.

அநுபல்லவி.

துன்மனக்கூளிதலை மிதித்தாய்—அதன்
தோஷ விஷமதனைப் பழித்தாய்
நன்மை நிறைந்தொளிருந் தாயாய்—எங்கள்
ராக்கினியாக ஜென்மித்தாயே. (ஜெ.)

சரணங்கள்.

ஆதாமின் பாவம் எங்கும் புகவே—ஐயா
அல்லல் வருத்துந்தொல்லை மிகவே
நீயோ மரி அம்மாளே தாயே—ஒளிர்
லீலிமலர்போல் ஜென்மிப்பாயே. (ஜெ.)

லீலியின் தூய்மை மங்கி எங்க—சந்திரன்
இடமுள்ள ஒளிகுன்றி நீங்க
சிலைகதிரோனென்ன இலங்க—இதோ
தேவ அரசி ஜென்மம் துலங்க. (ஜெ.)



வீணிலே கூளிமிக்க வெட்கி—தன்னுள்
விஷமதை இவள் முன்பு கக்க
சேனையர் கடவுள்கை தாழ்த்தி—செல்வ
திருத்தாயார் தம்மைக் காத்தார் வாழ்த்தி.

இருள் அடர் பவமே நீ ஓடு—இனி
இருப்பது உனக்கு நோக்காடு
அருள்பிரவாக உதயம்போல்—இதோ
அமலமாமரி உதிக்கின்றாள். (ஜெ.)

முட்கள் நடுவில் தோன்றும் லீலி—பவம்
முற்றுமில்லாத தூய சீலி
மிக்க அழகோடெழும் நூலி—ஜென்ம
முதிர்வினை சற்றுந் தீண்டா வேலி. (ஜெ.)

## அர்ச். சூசையப்பரின் மங்களம்.

இராகம் - இந்துஸ்தான் காப்பி - ஆதிதாளம்.

பல்லவி.

எங்கள் காவலாம் சூசை தந்தையின் [வோம்.
மங்களங்கள் எங்குஞ்சொல்லி இங்குபாடு

அநுபல்லவி.

செங்கை அதிலே தங்க புஷ்பம்
தங்குங்கோலை ஏந்திடும். (எங்கள்.)

## சரணங்கள்.

கன்னித் தாயாரின் பத்தா நீ அல்லோ
உன்னதமரர் பேறும் மாட்சி உற்றபாக்யனே
சென்னிமகுட முடிபுனைந்த
மன்னர் கோத்ர மாதவா. (எங்கள்.)

சேசுநாதரின் செல்வ தாதை நீ [மே
நேசபுத்ரர் இன்று ஸ்துத்யம் பாடவந்தோ
தேசம் ஒருங்கும் திசைகள் எங்கும்
ஆசைகொண்டு பாடவே. (எங்கள்.)

ஞானம் அன்புமார் தேவ ஆசையே
வானமுள்ளோர்க்கெல்லா மேலாம் மேன்மை
[பெற்றாயே
தேனார் பூங்கோல் ஏந்தும்பாக்யா
ஆனஸ்துத்யம் சொல்வோமே. (எங்கள்.)

தந்தை என்றுன்னை வந்துபாடினோம்
உந்தன் மைந்தர் சொந்தமென்று இன்று காத்
அந்தியகாலம் இந்தவேளை [திடாய்
வந்து உதவி தந்திடாய். (எங்கள்.)

---

# பொருள் அட்டவணை.


அர்ச். சிலுவை மந்திரம் ... ... 5
ஆறு இலக்ஷண மந்திரம் ... ... 5
பரமண்டல மந்திரம் ... ... 6
பிரியதத்த மந்திரம் ... ... ... 6
விசுவாச மந்திரம் ... ... ... 7
பத்துக்கற்பனை ... ... ... 8
திருச்சபைக் கற்பனைகள் ... ... 9
உத்தமமனஸ்தாப மந்திரம் ... ... 10
பாவசங்கீர்த்தன மந்திரம் ... ... 11
சின்ன குறிப்பிடம் ... ... ... 13
ஆத்தும சோதனை செய்யும் வகை ... 88
விடியற்கண் விழிக்கும்பொழுது ஓதுதல் 46
எழுந்திருக்கிறபொழுது ... ... 46
செப அப்போஸ்தல சபையார் காணிக்
கை செபம்: ... ... ... 46
திரிகாலச் செபம். ... ... ... 47
பாஸ்குக் காலத்தின் திரிகாலச் செபம். 49
தேவ சம்பந்தமான மூன்று புண்ணிய
முயற்சிகள் ... ... ... 50
காலைச் செபம் ... ... ... 51
சேசுநாதருடைய திரு இருதயத்தின்
ஜெபமாலை ... ... ... 57

சேசுநாதருடைய திரு நாமத்தின் பிரார்த்தனை ... ... ... 61
இராச் செபம் ... ... ... 68
இஸ்பிரீத்துசாந்துவின் மந்திரம் ... 68
நன்றியறிந்த தோத்திரம் ... ... 69
மேலான உத்தமமனஸ்தாப மந்திரம் ... 71
சேசுநாததசுவாமி பாடுபட்ட தியானம் . 73
ஐம்பத்து மூன்றுமணிச் செபம் ... 76
அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை ... 80
கிருபைதயாபத்து மந்திரம் ... ... 84
கடைசி வேண்டுதல் ... ... 85
சயன ஆராதனை ... ... ... 86
நித்திரை ஒழுக்கம் ... ... ... 87
பூசை காணும் வகை ... ... 89
திவ்விய பூசை காணச் சுருக்கமான வகை 117
பூசை மந்திரம் ... ... ... 126
திவ்வியநற்கருணை வாங்க ஆயத்தம் ... 148
திவ்வியநற்கருணை வாங்குமுன் செய்யத்தக்க முயற்சிகள் ... ... 151
திவ்வியநற்கருணை வாங்கினபின் செய்யத்தக்க முயற்சிகள் ... ... 154
அநுதினமும் திவ்வியநன்மை வாங்கும் பத்தியை மூட்ட கன்னிமரியாயினிடம் வேண்டும் ஜெபம் ... ... 157





திவ்வியநற்கருணை வாங்கினபின் பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்து ஜெபிக்கும் பரிபூரண பலனுள்ள செபம் ... 158
அர்ச். இஞ்ஞாசியார் செய்த செபம் ... 160
திவ்வியநற்கருணை ஸ்தாபித்திருக்கும்பொழுது சொல்லும் தேவ ஸ்துதிகள் ... ... ... ... 162
24 ஆராதனைப் பிரகரணம் ... ... 168
அநுதின நிந்தைப்பரிகாரச் செபம் ... 178
தேவநற்கருணையின் சந்நிதியில் வேண்டுதல் ... ... ... ... 178
திவ்விய சற்பிரசாதக் காதல் ... 182
திவ்விய சற்பிரசாதச் சந்நிதியில் காலமணித் தியானம் ... ... ... 184
திவ்விய சற்பிரசாதச் சந்நிதியில் காலைச் செபம் ... ... ... ... 192
திவ்விய சற்பிரசாதச்சந்நிதியில் மாலைச் செபம் ... ... ... ... 193
திவ்விய சற்பிரசாதத்திற்கு நிந்தைப் பரிகாரச் செபம் ... ... ... 194
சேசுநாதர்சுவாமி தமது திவ்விய இருதயத்தின்பேரில் பத்தியுள்ளவர்களுக்காக அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்குக் கொடுத்த வார்த்தைப்பாடுகள் . 196

சேசுவின் திரு இருதயத்துக்கு தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கும் ஜெபம். 198
சேசுவின் திரு இருதயத்துக்கு குடும்பங்களை ஒப்புக்கொடுக்குஞ் செபம். 201
சேசுவின் திரு இருதயத்துக்கு உலக முழுவதையும் ஒப்புக்கொடுக்கும்படி அர்ச். பாப்பு ஏற்படுத்திய ஜெபம்... 208
மரண அவஸ்தைப்பட்ட சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத்துக்குச் செலுத்தத்தகும் பலனுள்ள ஜெபம் ... ... ... ... 205
அர்ச். பாப்பானவரால் அங்கீகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதயத்தின் பிரார்த்தனை ... ... 206
சுருக்கமான சிலுவைப்பாதை ... 212
பெரிய சிலுவைப்பாதை ... ... 222
சுவாமி பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்துத் தியானிக்குஞ் செபம் ... 254
சிலுவையில் அறையுண்டிருக்கும் கர்த்தரை நோக்கிச் செபம் ... ... 265
கர்த்தருடைய ஐந்துகாய மந்திரம் ... 267
எழு தவச் சங்கீதம் ... ... ... 271
அர்ச். கன்னிமரியாயின் எழு வியாகுலங்களைக் குறித்து செபம் ... ... 289



அர்ச். வியாகுலமாதா செபமாலை ... 292
அர்ச். வியாகுலமாதாவின் பிரார்த்தனை 296
நல்ல ஆலோசனை மாதாவை நோக்கிச் சொல்லத்தகும் செபம் ... ... 299
பாவியின் அடைக்கலச் செபம் ... 300
அர்ச். லூர்துமாதாவை நோக்கி ஜெபம். 304
அர்ச். லூர்துமாதாவின் பிரார்த்தனை .. 306
மூன்று பிரியதத்த மந்திரம் ... ... 311
தேவமாதாவுக்குத் தன்னைமுழுதும் ஒப்புக்கொடுக்கும் செபம் ... ... 312
அர்ச். பெர்நார்து தேவமாதாவை நோக்கி வேண்டின செபம் ... ... 313
தேவமாதாவை நோக்கி அநுதினம் வேண்டிக்கொள்ளுஞ் செபம் ... 314
அர்ச். ஜெர்த்துருத்தம்மாளுக்கு தேவமாதா படிப்பித்த செபம் ... ... 315
அர்ச். தேவமாதா சுவாமியைப் புகழ்ந்து வசனித்த பத்து வாக்கியங்கள் ... 315
சம்மனசுக்களின் இராக்கினியான அர்ச். தேவமாதா படிப்பித்த செபம் ... 317
சமுத்திரத்தின் நட்சத்திரமே ... 318
அமலோற்பவ கன்னிமரியாயின் திரு இருதயத்திற்கு நிந்தைப்பரிகாரம்... 320

நற்படிப்புகளுக்குப் பாதுகாவலாகிய தேவதாயின் ஜெபம் ... ... 322
முப்பத்து மூன்றுமணி ஜெபமாலை ... 324
அர்ச். சூசையப்பரைக் குறித்து ஜெபம். 330
அர்ச். சூசையப்பருக்குத் தன்னைமுழுதும் ஒப்புக்கொடுக்கும் ஜெபம் ... 332
13-ம் சிங்கராயரென்னும் பாப்பானவர் அர்ச். சூசையப்பர்பேரில் செய்த ஜெபம் ... ... ... ... 334
அர்ச். சூசையப்பரைக்குறித்து சுகிர்த மன்றாட்டு ... ... ... 336
அர்ச். சூசையப்பரின் ஏழு வியாகுலங்களையும் ஏழு சந்தோஷங்களையும் குறித்துக் கேட்கும் மன்றாட்டு ... 337
நல்லமரணமடைவதற்கு அர்ச். சூசையப்பரைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிற ஜெபம் ... ... ... 340
அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை ... 341
திருக்குடும்பத்தை நோக்கி ஜெபம் ... 345
திருக்குடும்பத்தின் பிரார்த்தனை ... 346
அர்ச். மிக்கேல் சம்மனசானவரை நோக்கி ஜெபம் ... ... ... 351
காவல் சம்மனசை நோக்கி ஒப்புக்கொடுக்கும் ஜெபம் ... ... ... 353





அர்ச். காவலான சம்மனசின் பிரார்த்தனை 355
அர்ச். இஞ்ஞாசியார் திருநாளுக்குமுன் நவநாட் ஜெபம் ... ... ... 360
அர்ச். இஞ்ஞாசியாரை நோக்கி ஜெபம். 365
விஷபேதி யகல அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நோக்கி ஜெபம் ... 366
அர்ச். இஞ்ஞாசியார் பிரார்த்தனை ... 367
அர்ச். சவேரியார் மூலமாய்க் கேட்கிற பத்து மன்றாட்டு ... ... ... 373
அக்கியானிகள் மனந்திரும்புவதற்காக அர்ச். சவேரியார் உண்டாக்கின ஜெபம் ... ... ... ... 380
நமது தேசத்தார் மனந்திரும்ப வேண்டிக்கொள்ளும் ஜெபம் ... ... 383
தவறாது அநுகூலந்தரும் அர்ச். சவேரியாருடைய நவநாள் ஜெபம் ... 385
அர்ச். சவேரியார் பிரார்த்தனை ... 386
அர்ச். ஞானப்பிரகாசியார் மூலமாகக் கேட்கிற ஆறு மன்றாட்டு ... ... 392
அர்ச். ஞானப்பிரகாசியாரை நோக்கி கற்பென்கிற புண்ணியத்தைக் கேட்கும் ஜெபம் ... ... ... ... 397
அர்ச். ஞானப்பிரகாசியார் பிரார்த்தனை. 399
அர்ச். ஸ்தனிஸ்லாசை நோக்கி ஜெபம். 405

அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரை நோக்கி ஜெபம். ... ... ... 406
அர்ச். ஆரோக்கியநாதர் 5 மன்றாட்டு .. 408
அர்ச். ஆரோக்கியநாதரைப் பார்த்து வேண்டிக்கொள்ளும் ஜெபம் ... 410
அர்ச். ஆரோக்கியநாதர் பிரார்த்தனை... 412
அர்ச். செபஸ்தியாருடைய 7 மன்றாட்டு. 420
அர்ச். செபஸ்தியாரை நோக்கி ஜெபம். 425
அர்ச். செபஸ்தியார் பிரார்த்தனை ... 428
பதுவை அர்ச். அந்தோனியாருடைய 13 மன்றாட்டு ... ... ... 435
அர்ச். அந்தோனியார் ஜெபம் ... 443
அர்ச். அந்தோனியார் பிரார்த்தனை ... 445
பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரை நோக்கிச் செபம் ... ... ... 451
அர்ச். மார்கரீத் மரியம்மாளை நோக்கிச் செபம் ... ... ... 452
அர்ச். அன்னம்மாளை நோக்கிச் செபம். 453
அர்ச். பிலோமேனம்மாளை நோக்கிச் செபம் ... ... ... 455
அர்ச். மரியமதலேனம்மாளை நோக்கி ஜெபம் ... ... ... 456
மூத். குழந்தைசேசுவின் தெரேசம்மாள் பிரார்த்தனை ... ... ... 458





மூத். குழந்தை சேசுவின் தெரேசம்மாளின் நவநாள் செபம் ... ... 461
சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பிரார்த்தனை ... ... ... ... 462
சிறுபிள்ளைகளின் ஜெபம் ... ... 473
வாலிபர் ஆத்தும சரீர பரிசுத்த கற்படைய மன்றாட்டு ... ... 474
சிவியத்தின் நிலைமையைத் தெரிந்து கொள்ளச் செபம்... ... ... 477
சிறுவர்கள் தாய்தந்தையருக்காக வேண்டிக்கொள்ளும் ஜெபம் ... ... 480
தாய் தந்தைகள் செய்யவேண்டிய ஜெபம் ... ... ... ... 481
புருஷன் பெண்ஜாதிகள் வேண்டுஞ் செபம் ... ... ... ... 483
மனைவியின் ஜெபம் ... ... ... 485
கர்ப்ப ஸ்திரீகள் செய்யத்தகுஞ் ஜெபம். 486
கர்ப்ப வாதைப்படுகிறவர்களுக்காக வேண்டுதல் ... ... ... ... 487
விதவைகள் வேண்டிக்கொள்ளுஞ் செபம் ... ... ... ... 488
வயது சென்றவர்கள் செபிக்கத்தக்க செபம் ... ... ... ... 490
அடக்கம் செய்யும் ஒழுங்கு ... 491

Qb:417
N24


பிரேதம் எடுக்குமுன் செபம் ... 491
கல்லறையில் சென்றவுடனே செபம் ... 492
குழியில் வைக்குமுன் செபம் ... 493
குழியில் வைத்தவுடனே சொல்லுகிற செபம் ... ... ... ... 496
உத்தரிக்கிற ஆத்துமாக்களின் பிரார்த்தனை ... ... ... ... 497
உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு செபம். 506
காணிக்கை செபம் ... ... ... 508
பாலர் அடக்கம் ... ... ... 509
குழியில் வைத்தவுடனே சொல்லுகிற செபம் ... ... ... ... 510
காணிக்கைச் செபம் ... ... ... 512
கொள்ளைநோய் அல்லது விஷபேதிகாலத்தில் ஜெபிக்கும் ஜெபம் ... 513
மழைக்காக வேண்டுஞ் செபம் ... 513
கடைசி வேண்டுதல் ... .. ... 514
பலன்களின் [illegible]க்கிஷம் ... ... 517
சகலத்துக்கும் இராசாவாகிய கிறீஸ்துநாதருக்கு ஒப்புக்கொடுக்கும் செபம். 535
இலத்தீன் பாட்டுகள் ... ... 536
தமிழ் பாட்டுகள் ... ... 550

120868